உ

செந்திலாண்டவன் திருவடி துணை.

சூதசங்கிதா ஸாராம்ருத வசனம்

அன்பளிப்பு
கி. வா. ஜ.
'காந்தமலை'
சென்னை - 600 028.

இது

திரு. அ. சிவாநந்தசாகர யோகீசுவரர்

ஜேஷ்டகுமாரத்தி

2962

சௌ. பாலசரஸ்வதி தேவகுஞ்சரியம்மாளால்

இயற்றப்பட்டு

சென்னை, திருவல்லிக்கேணி,

ஸ்ரீ பாலசுப்பிரமணியன் கம்பெனியாரால்

சென்னை கோமளேஸ்வரன் பேட்டை,

சச்சிதானந்த அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

1912.

Registered Copyright.

Dr. U. V. S. IYER LIBRARY
22630
MADRAS-90

இதன் விலை] [ரூபா. 1.



உ

செந்திலாண்டவன் திருவடி துணை.

முகவுரை.

சிவபுராணங்கள் பத்தினுட் சிறந்தது ஸ்காந்தம். அது சங்கர சங்கிதை, சனற்குமார சங்கிதை, சூதசங்கிதை, விஷ்ணு சங்கிதை, பிரம சங்கிதை, சௌரசங்கிதை என ஆறுசங்கிதைகளையுள்ளது. அவற்றுள் சூதசங்கிதை மிகவுஞ் சிறந்தது. சூதசங்கிதை சிவமஹாத்மிய காண்டம், ஞானயோககாண்டம், முத்திகாண்டம, எக்ஞவைபவகாண்டம் எனநான்கு பகுதியாயுள்ளது. சிவமாஹாத்மிய காண்டத்தில பரமசிவனுடைய மகிமை, சிவபூஜை சக்தி சிவனடியார் பூசை, சிருஷ்டி பேதங்கள், ஜாதி பேதங்கள், சிவதீர்த்தமகிமை முதலியன கூறப்பட்டுள்ளன. இரண்டாவது ஞானயோக காண்டத்தில், வருணாசிரம தர்மங்கள், பிராயச் சித்தம், தானபலன், பாவபலன், சரீரோத்பத்தி, ஷடாதார நிலை, அஷ்டாங்கயோக முறை இவைகள் விரித்துரைக்கப்பட்டுள்ளன. மூன்றாவது முத்தி காண்டத்தில் முத்திநிலை, முத்திபெறுமுபாயம், ஸற்குரு இலக்கணம்; ஞானிபணிவிடையா லுண்டாகும் பயன் முதலிய விளக்கப்பட்டன. நான்காவதான எக்ஞவைபவ காண்டம் பிரமகீதை, சூதகீதை என இருபகுதியாய்ப் பரமாத்துவித சித்தாந்தோபநிஷத் தாத்பரியங்களையும், ஆத்மாநாத்ம விவேகத்தையுங் கூறி சத்தியஞானத்தை விளக்குகின்றது.

அத்துவித சித்தாந்த பரமாசாரியராகிய ஸ்ரீ சங்கரமுனி ராஜன், இந்தச் சூதசங்கிதையைப் பதினெட்டுமுறை படித்துச சிந்தித்துத் தெளிந்தபிறகு வேதாந்த சூத்திரத்திற்கு அத்துவித பாஷியம் செய்தருளினரென்று பெரியோர்கள் கூறுகின்றார்கள்.

ஸ்ரீ பகவத்பாத சங்கராசாரியரவர்கட்குப் பெரும் பயன் விளைத்த சூதசங்கிதையின் மகிமை சொல்லு மளவினதன்று. இப்படிப்பட்ட பெருமை வாய்ந்த புராணம் வடமொழியிலுள்ளது. இதனைத்தமிழில் செய்யுள்ரூபமாக ஒருமஹாபண்டிதர்

Dr. U.V.S. 226 MADRAS

இப்பற்றி இருக்கின்றா அது சுசடறக் கற்றவர்களுக் கேயன்றி
மற்றவர்களுக்குச் சிறிதும் பயன்படாது. இந்தப் புராணத்தைச்
சைவ மதஸ்தர்கள் எல்லாரும் படித்தறியவேண்டுவது இன்றி
யமையாதது. வடமொழி தென்மொழிகளிலுள்ள இவ்வரிய நூல
பெரும்பாலுமா…றியப்படாமலே யிருக்கின்றது. வடமொழிச்
சூதசங்கிதைக்கு வித்தியாரணியரென்று சிறப்புப்பெயர்பெற்ற
ஸ்ரீ மாதவாசாரிய சுவாமிகள் ஒரு வியாக்கியானமு மெழுதியிருக்
கின்றார். இந்தப் பெரிய நூல் தமிழ் நாட்டி லுள்ளவ ரெல்லாருக்
கும் பயன்படவேண்டிய தவசியமாயிருக்க, வடமொழிபயின்ற சில
ருக்கும், தென்மொழியிற் சிறந்த பண்டிதர்களா யுள்ளவர்களுக்
கு மாத்திரமே பயன்படுகின்றது. அதைத் தமிழில் எளிய வசன
நடையில் எழுதினால் இந்நாட்டிலுள்ளோ ரனைவர்க்கும்
பெரும்பயன் றருமென்பது பற்றியும், இக்காலத்தில் கல்வி பயி
லும் பெண்களுக்குப் பேருபகாரமா யிருக்குமென்பது கருதியும்,
ஸ்ரீ மாதவாசாரியார் வியாக்கியானத்தை அனுசரித்து, எம்பால்
கேட்டுணர்ந்தபடியே, எமது ஜேஷ்ட புத்திரி சௌ. ஸ்ரீபால
சரஸ்வதி தேவி குஞ்சரியம்மாள் எளிய தமிழ் நடையில் எழுதி
முடித்தனர். அது கண்டு அடங்கா மகிழ்ச்சி கொண்ட யாம்
இதனை அச்சிட்டு வெளியிடத் துணிந்தோம். ஆதலாற் கற்றுணர்
புலவரும், நற்றவ நெறியினரும் நீரபிரித்துப் பாலருந்தும் அன
னம்போல, இதிற்காணப்படும் குற்றங்களை யொழித்து நற்பொரு
ளை மாத்திரம் கிரகித்து மகிழுமாறு பிரார்த்திக்கின்றோம். இந்நூ
லில் சொற்குறை பொருட்குறை காணப்படுமாயின் அவற்றையும்
அவற்றைத் திருத்திக்கொள்ளும் முறைமையையும் எமக்குத்
தெரிவிப்பாராயின், அவற்றை வந்தனத்தோடு மேற்றுக்கொள்ளச்
சித்தமாயிருக்கின்றோம்.

இங்ஙனம்,

திரு. அ. சிவானந்த சாகரயோகி.

உ

செந்திலாண்டவன்

திருவடித்துணை.

அன்பளிப்பு
திருமதி: கி. வா. ஜ.
'காந்தமலை'
சென்னை-600 028.

சாற்றுக்கவிகள்.

சென்னை - ஹிந்து தியலாஜிகல் ஹைஸ்கூல் - தமிழ்ப்பண்டிதர்

ஸ்ரீமத். கோ. வடிவேலு செட்டியார்

இயற்றிய

அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

சீலமேலாங் குடிகொள்சிவா நந்தசா கரயோகி செல்வி யான
பாலசரஸ் வதிதேவ குஞ்சரிநற் பாக்யவதி பலுவ லாட்டி
சாலவியக்க கப்புலவா தகுந்தகுமென் றுவகைகொளத் தகுதி யாக
மாலகலச் சூதசங்கி தாஸாராம ருக்வசனம வகுத்தாள் மாதோ.

Dr. U. V. S. ... MADRAS 226

சிவானந்தசாகரயோகீசுவரா பிரதம மாணாக்கராகிய

தஞ்சாவூர் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்

ஆ. சேதுராமபாரதியா ரியற்றியது

சிவமலி புனித சூதசங்கிதைமாத தெய்வதவட மொழிநூலை, நவ்மலி தமிழி னெளிய நலவசன நடையினி லாய்ந்தெழு தினா ளெய்த, தவமலி பரமாத் துவிதநன் னெறிசேர் சாதக ரகங்களி துளும்பட, பவமொழி சிவஞா னுணர்ந்தவர் படித்து பேரின்ப மாகிடவே.

திரிசிர புரம்வாழ் மறையவர் குலத்தோன் சிவானந்த சாகர யோகி, புரிதரு தவத்தின வருமருமகளைய புண்ணியச செல்வி தேன் கடமயின், மருமல ரலங்கல புனைநெடுந் தடந்தோள் வல்லை லா ருடகடல படிந்த, திருமலி பால சரஸ்வதி சுகுணத் தேவகுஞ் சரிவராங் கனையே.

சிவாநந்தசாகர யோகீசர்மாணாக்கர்

நமச்சிவாயபிள்ளையவர்க ளியற்றியது.

அறுசீரடி யாசிரிய விருத்தம்.

பொன்னவிர்செஞ் சடையிலிள மதிதவழு மாதேவன் புகழ்சால் காந்தந், துன்னியசங் கிதையாறி னுபாசூத சங்கிதையைத் துகளிலாத, மன்னியசெந் தமிழின்சொ னயங்குலவ மதுரமிகு வசன மாக, வுன்னரிய சிறுவருமா ராய்ந்துணர மொழிபெயர்த்திங் குதவி னாரால்.

அருமறையா கமபொருளை பலகலையி னருமபொருளை யாய்ந்தோன் ஞான, மருவுசிவா நந்தசா கரயோகி யெனதுகுருமகி ழுஞ்செல்வி, திருமருவு பாலசரஸ் வதிதேவ குஞ்சரிநாச செந்தி நாத, னருளமுது பருகுமவாக கெனனுளது கைமமாறிங காற்று மாறே.

சிவாநந்த சாகரயோகீசர மாணாக்கர்

சிவசங்கர பண்டிதரியற்றியது.

தென்பொதிகைத் தமிழ்முனிவ னெனககலையின
கடன்மாந்திச செந்தி லீசன்
பொன்பொதியு மலர்த்தாளை யன்றிமெவா
தமையுமொரு பொருளாக் கொள்ளா
வெண்பரம தேசிகர்சி வாநந்த சாகரயோ
கீசர் செல்வி
யன்பரவு பாலசரஸ் வதிதெய்வ குஞ்சரிபொன்
மாதொப் பாரே.
மடைமைசெறி மகளிருந்தம குணந்திரிந்திவ்
வுலகறிந்து வாழ நலல
நடைபயிற்ற வவதரித்தோ ரெனுஞான்று
முருகனையே நவிறறு நாவாா
வடமொழியி னுளசூத சங்கிதையைத
தமிழ்மொழியில் வசன மாக
நடையழகு மினிமையுமபெற் றுலகமெலாம்
வியக்கும்வகை நல்கி னாரே.

குச் சொல்கிறேன் கேள். பிரமன் முதலாகவுள்ள யாவர்களுமெல்லாம் பசு எனப்படும். அந்தப் பசுக்களுக்கு நாம் தலைவனாகையால் நமக்குப் பசுபதி என்று பேர். அனாதி கருமத்துக்கு ஏற்றபடி ஜீவான்மாக்களுக்குத் தனுகரண புவன போகங்களை அசுத்த சுத்த மாயையில் உண்டாக்கிக் கொடுத்துப், பரிபாகம் பெற்ற உயிர்களுக்குப் பந்தத்தை ஒழிப்போம். ஜீவாத்மாக்களுக்குப் பந்தத்தைக் கொடுப்பவனும், அந்தப் பந்தத்தை ஒழிப்பவனும் நானே.

பிரமாண நூல்கள் எல்லாவற்றினும் வேதமே சிறந்த பிரமாணமாகும். அந்த வேதத்துக்கு நிகரானது, வேறு நூல்களாலாவது வாதையுண்டாவதில்லை. அந்த வேதத்தைத் தவிர பிரத்தியட்சம் முதலான சகல பிரமாணங்களுக்கும் மாயையால் வாதையுண்டாம். வேதத்துக்கு விரோதமில்லாத புராணங்களெல்லாம் பிரமாணங்களேயாம். வேதமூலமல்லாத மற்ற நூல்கள் சிறிதும் பிரமாணமாகா. அவைகள் அஞ்ஞானிகளுக்கே பிரமாணம். அவர்கள் முத்தி அடைவதரிது. அந்த நூல்களில் வேதவிரோதமாகாத பாகத்தைத் தழுவி நடப்பவர்கள் நெடுங்காலம் சென்று பின் முத்தி பெறுவார்கள். ஆனபடியால் வேதவிரோதமான நூல்களைத் தழுவி நடக்கக்கூடாது. வைதிக கருமம் செய்பவர்களுக்குச் சீக்கிரத்தில் நான் தோன்றுவேன். ஞானநிலையடைய முயல்வோர்களுக்கு அதிசீக்கிரத்தில் பிரத்தியட்சமாவேன். ஞானிகளிடத்தில் ஜோதியாய் எப்போதும் இருப்போம். மனோவாக்குகளுக்கு எட்டாத நிஷ்களமாகிய நாமே எல்லாச் சீவர்களுக்கும் முத்தியைக் கொடுப்போம். இதை நீ அறிந்துகொள் என்று சிவபிரான் கூறக்கேட்ட திருமால் மகிழ்ந்து சிவபெருமானைப் பல்வாறாகத் துதித்தார்.

என்று கூறிச் சூதபௌராணிகர் முனிவர்களை நோக்கி முனிவர்களே! இதனால் ஜீவான்மாக்களுக்குப் பந்தமொழித்து முத்தி தரும் மோசகன் ஈசனொருவனென்று தெரிந்துகொள்ளுங்கள். இன்னமும் ஒரு சரித்திரம் சொல்லுகிறேன் கேளுங்கள். பூர்வகாலத்தில் சாந்தஞானன் என்று ஒரு பிராமணன் இருந்தான். அவன் நற்கருமங்களையே செய்துகொண்டிருந்தான். பின் உலகவாழ்க்கையை வெறுத்து முத்திபெற உபாயந்தேடினான். அவன் அக்கினி தேவனை நோக்கித் தவம் செய்தான். அக்கினி பிரத்தியட்சமானபோது

அவனை நோக்கி எனக்கு மோட்சம் அளிக்கவேண்டும் என்றான். அக்கினிதேவன் நான் முத்தியளிக்கச் சக்தியுள்ளவனல்ல என்று சொல்லி மறைந்துபோனான். பிறகு சூரியனை நோக்கித் தவஞ்செய்தான். சூரியன் பிரத்தியட்சமானான். சூரியனை நோக்கி எனக்கு முத்தி தரவேண்டுமென்றான். சூரியனும் என்னாலாகாதென்று கூறிப் போய்விட்டான். பிரமதேவனை நோக்கித் தவம்புரிய அவனும் வந்து என்னால் முத்தியளிக்க முடியாதென்று கூறிப்போய்விட்டான். பிறகு திருமாலை நோக்கித் தவஞ்செய்தான். நாராயணர் வந்து, முத்திகொடுக்கும் முதல்வன் நானல்ல. சிவபெருமான் ஒருவரே முத்தியளிப்பவர். அவரை நோக்கித் தவஞ்செய் என்று கூறி மறைந்து போனார். பிறகு சாத்துக்குணன் பரமசிவனை நோக்கித் தவம் புரிந்து அவரை யாராதித்தான். அப்போது மஹாதேவன் வெளிப்பட்டு, அவனுக்கு மெய்ஞ்ஞானத்தையுந் தந்து முத்தியையும் அருளினார். ஆதலால் முனிவர்களே! சந்திரஜடாதர மூர்த்தியாகிய உமாகாந்தனே முத்தி தருபவர் முதல்வனென அறிந்து கொள்ளுங்கள் என்று சூதர் கூறினார்.

[illegible] அத்தியாயம்.

மோசகப்பிரதனை யுரைத்தல்

சூதர் உபாசகனையின் வணங்கி மோசகப்பிரதனை விளங்கக் [illegible] வேண்டுமென்று வேண்ட மறைதேவன் கூறுகிறார்: மெய்ஞ்ஞான சித்திபெற்று, எம்மைத் தனக்குள்ளே கண்டு தெரிசிப்பவனே மோசகப்பிரதனாகிய சற்குருவாகும். பிராமணகுலத்தில்பிறந்தவனே சிறந்த உத்தம ஆசாரியனாவான். க்ஷத்திரியர் குலத்திலுள்ளவன் மத்திமகுரு, வைசியர் குலத்தான் அதமகுரு சூத்திரர்களில் குருவில்லை. அதம குருவாகிய வைசியன் தன்குலத்தாருக்கும் சூத்திரருக்கும் உபதேசிக்கும் குரு ஆவான். மத்திமனான க்ஷத்திரியன் க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் மூவருக்கும் குருவாவான், பிராமணன், பிராமணர்முதல் நாலு வருணத்தாருக்கும் உபதேசிக்கும் குருவாவான். பிராமண குலத்தில் பிரமசாரி கிருகஸ்தன், வானப்பிரஸ்தன், சந்நியாசி, அதிவர்ணாச்சிரமி என்று ஐந்து வகை ஆசிரமத்தாருண்டு. இவர்களுள் பிரமசாரிமுதல் நால்வரும் ஒருவருக்கொருவர் குருவாகவிருந்து உபதேசிக்கலாம்.

உ

செந்திலாண்டவன்

திருவடி துணை.

ஸூதசங்கிதா சாராமிர்த

வசனம்.

முதலாவது

சிவமான்மியகாண்டம்.

காப்பு

தந்தி மாமுகன் றாள்பணிந் தீறிலா
விந்து சூடிய வீசனோ டென்னுளே
வந்த வானந்த வல்லியை வாழ்த்திமெய்ச்
செந்தி லாண்டவன் சேவடி போற்றுவாம்.

நூல்.

பூலோகத்தில் புண்ணிய வனங்களுக்குள்ளே சிறந்ததான நைமிசாரணியமென்றொரு வனமுண்டு. அது பலவகையான மரங்களாலும், செடி கொடிகளாலும் நிறைந்து, ஒப்பற்று விளங்கும். தேவர்களாலும், யட்ச கின்னராதியராலும் புகழ்ந்துகொண்டாடப்படுவது. அந்தவனத்தில் சௌனகரை முன்னிட்ட அநேகமாயிரம் முனீசுவரர்கள் தவஞ்செய்துகொண்டிருப்பார்கள். அந்த முனீசுவரர்கள் எல்லாரும் சேர்ந்து ஸத்திரம் என்னப்பட்ட ஒரு யாகஞ் செய்துகொண்டிருந்தார்கள். அப்போது

அதிவர்ணாச்சிரமிக்கு மாத்திரம் குருவாகமாட்டார்கள். அவன் தட்சிணாமூர்த்திபோல எல்லாருக்கும் குரு ஆவான்.

தங்கத்திலிருந்து குண்டலம், கடகம்முதலாகப்பல ஆபரணங்கள் உண்டானதுபோல மாயையிலிருந்து பலவிதமாக உலகம் உண்டாயிற்றென்றும், தேகேந்திரியங்களுடன் தாக்கற்றுச் சர்வசாட்சியாயிருக்கும் பொருளே நித்தியவஸ்து என்றும் உணர்ந்தவனும், எம்மோடு அத்துவிதபாவனையாகக் கலந்திருப்பவனும், வேதாந்த வாக்கியசிரவணத்தால் மெய்ஞ்ஞானமும் பெற்று எம்மை யிடையறாது சிந்தித்திருப்பவனும், மாயையாலுண்டான சரீரத்தில் கற்பிதமாயுள்ள வருணாச்சிரமங்கள் ஒன்றும் எனக்குக்கிடையாது என்று உண்மையை யுணர்ந்து கொண்டவனும், சூரியனுடைய சந்நிதியில் எல்லாப் பொருள்களும் விளங்குவது போலச் சிவசந்நிதியில் எல்லாம்தாமாகவே விளங்குமென்று தெரிந்துகொண்டவனும், மாயாமயமான மகதத்துவம் முதலான உலகமெல்லாம் பதியின் அருளிலே மூழ்கியிருக்கின்றன. அது சிவனிடத்தில் கற்பிதமாகக் காணப்படுகின்றன. உண்மையிலில்லை; கிளிஞ்சலில் வெள்ளி தோன்றுவதுபோல என்று அறிந்து கொண்டவனும், அளவில்லாத சரீரங்கள்தோறும் உயிர்க்குயிராய் வியாபகமாயிருக்குந் தெய்வமே முத்திக்கு மூலமானவன் என்று தெரிந்து கொண்டவனும் மெய்ஞ்ஞானியாவான். அப்படிப்பட்ட ஞானிக்கு உலகமயக்கம் இராது. அந்த ஞானிக்குக் கூட ஒவ்வொருசமையத்தில் உலக ஆசைமீண்டும் தோன்றும். அதினாலே மயங்காதிருப்பவனே மெய்ஞ்ஞானி. உலகமெல்லா வற்றையும் சொற்பனம் போலக் கண்டு கழிப்பவனும், எமது சோதி சொரூபத்தில் அழுந்தியிருப்பவனும், வருணாசிரம தர்மங்களைக் கடந்திருப்பவனும் மேன்மையுள்ள மெய்ஞ்ஞானியாவான். இவனே அதிவர்ணாசிரமி யென்று பேர்பெறுவான்.

அப்படிப்பட்ட அதிவர்ணாச்சிரமியான ஞானிக்குச் சமானமாவார் ஒருவருமில்லை. இவனுக்கு மாயாவாதனையில்லை. மாயாவாதனை யுள்ளவன்போலக் காணப்பட்டாலும், அது தோற்றமே தவிர உண்மையில் அவனுக்கில்லை. அவனது உண்மை நிலைமையை மாந்தர் அறியமாட்டார்கள். உலகத்தார் விழித்துக்கொண்டிருக்கிறதில் நித்திரை கொண்டிருப்பான். உலகத்தார் தூங்குவதில் விழித்துக்கொண்டிருப்பான். உலகத்தாரைப்போல விருப்பு

வெறுப்புகளில்லாதவனாயிருப்பன். எமது ஒளியில் கலந்திருப்பான். அப்படிப்பட்ட மெய்ஞ்ஞானியே மெய்யானகுரு ஆவான். அவன் வசிக்கிற விடம் சிவாலயமாகும். அவனுடைய புகழ்களெல்லாம் எமது புகழே. அவனை அண்டினவர்கள் எம்மை அண்டினவர்களாவார்கள். நாராயணா! இந்த அரிய விஷயத்தை அன்பனாகிய உனக்கு நான் சொல்லிவிட்டேனென்று சிவபெருமான் கூறியருளினார். முனிவர்களே! இதனால் குரு இன்னார் என்பதை நீங்கள் தெரிந்து கொள்ளுங்களென்று சூதர் சொன்னார்.

ஆறாவது அத்தியாயம்.

ஞானமுண்டாகாமைக்குக் காரணம் கூறியது.

திருமாலானவர் சிவபெருமான சேவடிகளிலே வணங்கி ஞானம் உண்டாகாமலிருப்பதற்குக் காரணம் கூறியருளவேண்டுமென்றுவேண்டத் தேவதேவரான மஹாதேவர் சொல்கிறார். திருமாலே! ஞானவுற்பத்தி யுண்டாகாமலிருப்பதற்குச் சிவத்துரோகமே முக்கிய காரணமாகச் சொல்லப்படுகிறது. சிவனடியார்க்குத் தீங்கு செய்வதும், ஞானநூல்களை வெறுப்பதும், விபூதி ருத்திராக்ஷம் தரியாமலிருப்பதும், பிற பொருள்களைக் கவர்வதும், வேதத்தை யிகழ்வதும், வேதம் ஓதாமையும், வேதம் ஓதினவர்களை அவமதிப்பதும், வேத நிந்தையைக் கேட்க விரும்புதலும், வேதமோதினவர்க்கு இடர்செய்வதும், ஆகமம், ஸ்மிருதி, புராணம் இவைகளினிடத்தில் அன்பு இல்லாமையும், பாஞ்சராத்திரம், வாமம் முதலிய ஆகமங்களைக் கொள்ளுதலும், பெரியோரோடு கூடாமையும், சிவபக்தர்களைப் பெரியோர்கள் என்று எண்ணாமலிருப்பதும், இழிந்தவருடன் கூடுதலும், காமம் குரோதம் மோகம் லோபம் மதம் மாற்சரியம் டம்பம் முதலிய குணங்களைத் தழுவுவதும், பாவ புண்ணியங்கள், தெய்வம் இவைகள் உண்டோ இல்லையோ என்கிற சந்தேகமும், மாதாபிதாக்களுக்குத் தீமையைச் செய்தலும், மழை வெய்யில் காற்று இவைகளால் நொந்து வந்தவர்களை உபசரியாமையும், திருடர்களாலும் பலவந்தர்களாலும் வருந்துகிறவர்களுக் குபகாரம் பண்ணாமலிருப்பதும், சாதுக்களுக்குத் துன்பம் செய்வதும், துஷ்டர்களைச் சிநேகம் செய்துகொள்வதும், பசுக்களுக்கு இடர் செய்வதும், வழிநடைப்பாதைகளைக்

கெடுப்பதும், ஆகருஷணம், வசியம் மோகனம் ஸ்தம்பனம் வித்து வேஷணம, மாரணம என்கிற ஷட்கர்மங்களைச் செய்வதும்,சூதாடுவதும், பெண்களாடும் நடனத்தில் பிரியம்வைத்துப பார்பபதும, நல்லொழுககத்தை விடலும, பொறுமையுள்ள பெரியோர சேவை செய்யாமையும, மனைவி மக்கள் முதலியவர்களிடத்தில் பெரிய பற்றுடைமையும, அநத அன்பு ஆசிரியனிடத்தில் இல்லா திருப்பதும், குருவை வணங்குகிறதறகு வெடகபபடுவதும், குருவுகருத் தீமையே செய்வதும், அவருக்குப பிரியமில்லாதவைகளைச செய்வதும, குரு இப்படிப்பட்டதன்மையை யுடையவரென்று மனதில் யோசிக்கிறதும, குரு நல்லொழுக்க மில்லாதவரென்று கருதுதலும்,குருநிநதையைக்கேட்பதும், குருவின் துன்பத்தைப் பார்த்துச் சகித்துக்கொண் டிருபபதும, குருவுக் கெதிரில் அடக்க மில்லாமலிருபபதும், குருவுக்கு முன் சிரிததுப் பரிகாசமசெய்து கொண்டு பேசுவதும், குருவினிடத்தில வீண் பேச்சுபபேசுவதும் குருமொழியை மறததலும, குறறமற்ற மனைவியை வெறுத்து நீககலும், அநநியமாதரை விருமபுவதும், அவாகளை அன்புடன் பார்பபதும, அநநியமாதரைப் புணரக் கருதுவதும், அவாகளுடைய அழகு முதலியவற்றைக்கேட்டு மகிழ்வதும், ஏழைகளுக்கு இரங்காமையும், பிறருடைய கல்வி செல்வங்களைக் கண்டு பொறாமைகொள்வதும், தன்னையே பெரியவனாக நினைப்பதும்," தீர்த்த யாத்திரை முதலியவற்றை வெறுப்பதும், சிவாலயதரிசனஞ் செய்யாமையும், பஞ்சாட்சரங்களைச் செபியாமையும் ஞானோற்பத்தியாகாமைககுக் காரணங்களாம என்று சிவபெருமான் திருமால் மகிழ்நது வணங்கித் தோத்திரஞ் செய்தார்.

ஏழாவது அத்தியாயம்.

ஞானிக்குப்பணிவிடைசெய்தலின் பலன்கூறியது.

சிவபெருமான் மீண்டுந்திருமாலை நோக்கி, ஞானிபணிவிடைப்பலனைக்கேள் என்று சொல்கிறார். முன்காலத்தில் பிராமணகுலத்தில் பாகயகஞன் என்று ஒருவன் இருந்தான். அவன் உத்தமன், யோகி; அவனுக்கு மஹாபாதகனான ஒரு புததிரன் பிறந்தான். அவனுக்குச சசிவர்ணன் என்று பெயர். மாதாபிதாககளின் சொல்லைக் கேட்கமாட்டான். கல்வி கற்கவிரும்பவில்லை. காமுகனாயிருந்தான். சநதியாவந்தனாதிகளை விட்டு விட்டான்.

பிராமணகுலாசாரங்கள் முழுமையும் விட்டு ஒழித்தான். ஜெபம் பண்ணுகிறவர்களையும், தபசு பண்ணுகிறவர்களையும் நிந்திப்பான். அநேக பெண்களின் கற்பை அழித்துவிட்டான். சொர்க்க நிந்தனை, தேவ நிந்தனை, சிவஞான நிந்தனைகளைச் சொல்வான். திருநீறு தரித்துக்கொள் என்று சொன்னவர்களைக் கொன்று விடுவான். கனவில் கூடச் சிவநாமம் சொல்லியறியான். சிற்றின்பானுபவத்திலேயே நாட்களைக் கழிப்பான். வீட்டுச் சொத்துக்களையெல்லாம் திருடிப் பரத்தையர்களுக்குக் கொடுப்பான். தாய் தந்தையரின் சுகதுக்கங்களைக் கவனிக்கவேமாட்டான். வீட்டுச் சொத்துகள் அழிந்துபோனபின் மறையவர்கள் வீடுகளில் திருடத் தொடங்கினன். திருடும்போது எதிர்ப்பவர்களைக் கொலை செய்வான். புறகிராமங்களிலும் போய்த் திருடுவான். அழிவழக்காடி அன்னியர் சொத்துக்களைக் கவர்வான். பிறகு தன் வீட்டை விட்டுப் பரத்தையர் சேரியிலிருந்துகொண்டு, அவர்கள் வீட்டிலேயே புசித்துக் கொண்டிருந்தான். அப்போது ஒரு பறைச்சி அவனுக்கு எதிர்ப்பட்டாள். அவளுடைய அழகைக்கண்டு மயங்கி அவளைக் கூடிக் கலந்திருந்தான்.

சசிவர்ணன் இப்படி மஹாபாதகங்களைச் செய்து கொண்டிருக்கும்போது அளவிலாத நோய்கள் அவனைப் பற்றிக்கொண்டன; பேயும் பிடித்துக்கொண்டது; பிரமஹத்தியும் பற்றிக்கொண்டது. இதனால் அவன் பட்ட துன்பத்துக்கு அளவில்லை. இப்படியிவன் பூலோகத்தில் வருந்தப்படுகையில் அவனுடைய பிதிர்க்களும் நரகத்தில் விழுந்து வருந்தினர்கள். சசிவர்ணனுடைய பிதா இதைக் கண்டு மனம் வருந்தினன். இவனுடைய கர்மத்தினாலே பிரமலோகத்திலிருந்த பிதிர்க்கள்கூட நரகத்தில் விழுந்து விட்டார்கள். சசிவர்ணனுடைய பிதா இதைக் கண்டு மனம் வருந்தி இவனுடைய பாவகர்மங்களுக்கு அளவில்லை. இதுக்கு நிவர்த்தியுமில்லை. ஆகையால் சிவபெருமானைத் தொழுவேன் என்று கருதி எம்மைத் துதித்தான். அப்போது தேவபக்தன் என்ற ஒரு முனிவர் பாகயக்ஞனிடம் வந்தார். அவனுடைய துக்கத்தைநோக்கி உனக்கு யாது மனவருத்தம் என்று கேட்டார். பாகயக்ஞன் அவரை வணங்கிச் சுவாமீ! எனக்கு ஒரு புத்திரன் இருக்கிறன். அவன் செய்த பாதகத்துக்கு அளவில்லை. அதை நினைந்து வருந்துகிறேன். நானும் என் புத்திரனும் நரகத்தையடையாத ஒரு நல்ல

மார்க்கத்தைச் சொல்லியருள வேண்டும் என்றான். தேவபக்த முனிவர் அவனை நோக்கி ஸ்ரீபரமேசுவரன் வசிக்கிற க்ஷேத்திரங்கள் அளவில்லை. அவைகள் எல்லாவற்றிலும் கோபர்வதம் சிறந்தது. அதில் சிவபெருமான் எழுந்தருளியிருக்கிறார். உமாதேவியார் பூசித்தபடியால் சத்தியீசன் என்று அவருக்குப் பேர். அவரைத் தரிசனம் செய்தவர்கள் புக்தி முக்திகளையும் நினைத்தகாரிய சித்தியையும் அடைவார். பிரமன், இந்திரன், முப்பத்து முக்கோடி தேவர்கள் இவர்கள் எல்லாரும் பூசித்து இஷ்டார்த்த சித்திகளைப் பெற்றார்கள். இன்னும் அநேகரும் பூசித்துப்பேறு பெற்றார்கள். அந்த க்ஷேத்திரத்தில் மஹாநந்தபராயணன் என்று ஒரு யோகியிருக்கிறார். நீர் உமது புத்திரனையும் அழைத்துக்கொண்டுபோய் அவரையடைந்து, அவருக்குப் பணிவிடைசெய்யும். உமது புத்திரன் செய்த பாவங்கள் நீங்கும் என்றார். அதைக்கேட்ட பாகயஞன் மகிழ்ந்து தேவபக்த முனிவரைவணங்கித் தன் மகனுடன் கோபர்வதத்தை யடைந்தான்.

அங்கே போய்ச் சத்தியீசரைப் பணிந்து, மஹாநந்தபராயண யோகியைக்கண்டு தரிசித்து வணங்கினான். யோகி யவனைப் பார்த்து நீயார்? உன்னுடன்கூட இருக்கிற இவன்யார்? உன் கருத்தென்ன என்று கேட்டார். நான் பிராமணன். என்பேர் பாகயஞன், இந்தப்பாவி எனது குமாரன். இவன் பேர் சசிவர்ணன். இவன் நெடுங்காலம் மஹாபாதகங்களைச் செய்து கொண்டிருந்தான். அதனால் இப்போது சொல்ல முடியாத துன்பத்தை அனுபவிக்கிறான். அவன் சுகப்படவும், நான் கடைத்தேறவும், என் பிதிர்க்கள் கரையேறும்படியும் அநுக்கிரகம் செய்யவேண்டும் என்றான். அதைக்கேட்டயோகி கருணையோடு சசிவர்ணன் முகத்தைப் பார்த்தார். உடனே அவனைப் பற்றியிருந்த வியாதிகளும் பேய்களும் நீங்கின. சசிவர்ணனுக்குக் கொஞ்சம் அறிவு தோன்றிற்று. அதனால் அவன் யோகியின் பாதங்களில் பணிந்தான். யோகி அவனைத் தமக்கு மாணாக்கனாகக் கொண்டு, தமது பணிவிடையில் நியமித்தார். சசிவர்ணன் சிவயோகிக்குப் பணிவிடை செய்ததனால் அவனுடைய பாதகங்கள் ஒழிந்தன. சிவயோகிக்குக் கந்தமூலபலங்கள், சமித்துக்கள் முதலிய கொண்டு வருவதாலும், அவரது பசுக்களுக்குப் புல் இடுவதாலும் அநேக பாவங்கள் ஒழிந்தன. அவருக்கு நீராதிகள் கொண்டு வருவதாலும், பசுக்களுக்

குப புல் இடுவதாலும், அநேக பாவங்கள் ஒழிந்தன. அவ ரது வஸ்திரங்களைத் தோய்ப்பதாலும், கோவணத்தைச் சுத்தம் பண்ணுவதாலும், படுக்கை போடுதலாலும், அவரது பாதங்களைப் பிடிபபத்தாலும், அவரைத் துதித்து வணங்குவதாலும் அநேக பாவங்கள் தீர்ந்தன. இப்படிப் பணிவிடை செய்கையில் சிவயோகி யானவர் அவனுக்குத் தமது எச்சில் இலையைக்கொடுத்தார். அவா புசித்த சேஷத்தைச சசிவர்ணன் அமிர்தம்போல மகிழ்ந்து வாங்கிக் கொண்டான். அதைப புசித்தவுடனே இசசசிவர்ண னுடையபாதகங்கள் அனைத்தும் நீங்கின பூர்வகன்மங்களும் எரிந் து போயின. சிவயோகியாருடைய பணிவிடைக் காரர்கள எல்லா ரிலும் இவன் முதன்மைபெறறு விளங்கினன். முன்வினையக்கழிந் து போன நாள்களுககாக வருந்தினன். இநத மஹானுபாவர் எப் பொழுது நமக்கு ஞானோபதேசம் செய்தருள் வாரென்று எண்ண மிட்டுக்கொண்டிருந்தான். பந்தத்தைக் கடககும எண்ணமே மிகுந் திருநதது. சசிவாணனுக்கு ஞானத்தைப் பெறுவதில உள்ள அதி தீவிரபகதியை உணர்ந்த சிவயோகியானவர் தமதுகையினலே திரு நீறறை யெடுத்து சசிவாணனுடைய நெற்றியில் இட்டருளினர். உடனே சசிவாணன் எழுநதிருநது யோகியாருடைய திருவடிக ளில் வணங்கித் துதித்து நின்றன். சிவயோகி அவனைப் பக்கத்தில் உட்காரவைத்துகக்கொண்டு தமது திருககண் மலர்ந்து அருட்பார் வையாகப பார்த்துத், திருக்கரத்தைச சிரசின்மேல் வைதது, அவ னுக்கு உபதேசித் தருளினர்.

அநாதி மலமுத்த சச்சிதானநத சொரூபியான பதி உண்மை யையும், அநேகனயுள்ள ஜீவ உண்மையையும், அநாதி மலத் தன் மையையும், அத்துவித முத்தி உண்மையையும் சசிவர்ணனுக்கு உபதேசித்தருளினர். மஹாவிஷ்ணுவே! சசிவர்ணன் உபதேசம பெற்றுச் சிநதிததுத் தெளிந்து களங்கம் அறற உள்ள முடை யவனுய், முத்திக்கு அருகனுயிருநதான். பாகயக்ஞனும் சிவயோகி பணிவிடைசெய்து முததிபெற்றன். ஆகையினல் சிவஞானி பணி விடைக்கு மேற்பட்ட முத்திசாதன மொன்றுமில்லை. சசிவர் ணன் பாசம் ஒழிந்து முத்தி பெற்றமையால் அவனைபபெற்ற மாதாவும் முததியை யடைநதாள். முன்னலே நரகத்தில் வீழ்ந் த பிதிர்க்களும் பிரமலோகம் சொர்க்கலோக முதலிய பதவிகளை யடைந்தார்கள். அவனுடைய சுறறத்தாரகளும் உயர்ந்த கதியை

அடைந்தார்கள். அவன் புணர்ந்த மங்கையரும் சுவர்க்கம் அடைந்தார்கள். அவன் வசித்த இடமும் எல்லாராலும் வணங்கப்பட்டது. திருமாலே! ஞானிகளின் பெருமையைக் குறித்து இன்னம் ஒரு இதிகாசம் சொல்கிறேன் கேள் என்று சிவபெருமான் சொல்கிறார்.

நாராயணா! பெண்களும் கண்டு காமுறும் அழகினையுடைய சுபகையென்னும் பேரையுடைய ஒரு ருத்திரகணிகையிருந்தாள் அவள் எவ்விடத்திலுமுள்ள தனவான்கள் எல்லாரையும் கைவசம் செய்துகொண்டு, அவர்களுடைய செல்வத்தை முற்றும் அபகரிக்க விருப்பம் கொண்டாள். தன்னுடைய நடையுடை சம பாஷணை சேஷ்டை முதலியவற்றால் கண்டவர்களை யெல்லாம் மயக்கித் தன்மோகவலையில் சிக்கவைத்தாள். ஒருவனிடத்தில் ஒருவருஷப்பணத்தை முன்னதாக வாங்கிக்கொண்டு, அன்றிரவிலேயே விஷமூட்டி அவனைக்கொன்று விடுவாள். இப்படி நாடோறும் பலகொலை புரிவாள். இப்படியாகக் கணக்கிறந்த திரவியம் சம்பாதித்தாள். சிலநாள் செல்ல அவளுக்குப் பலவகை வியாதிகளுண்டாயின. கொலைப்பாதகமும் சூழ்ந்துகொண்டது. பேய்பிசாசுகளும் பற்றிக்கொண்டன. அதனாலே அவளடைந்த துன்பங்களுக்கு அளவில்லை. அவளுடைய சரீரமும் கொடியதுர்க்கந்தம் வீசிற்று. அவளுடைய சுற்றத்தார்களும் தீராத துக்கத்தை அடைந்தார்கள். சுபகையும் பிழைத்திருப்பதைவிடச் சாவதுவே இனியதென்று கருதிப்புலம்பினாள். மணிமந்திர ஔஷதங்கள் ஒன்றும் பயன்படவில்லை. அவள் ஏங்கி இனி யென்ன செய்வதென்று கருதியிருக்கையில் அவளுடைய பூர்வ புண்ணியத்தின் பயனால் ஒரு சிவஞானி அவளுடைய வீட்டுக்கு வந்து சேர்ந்தார்.

அதை அறிந்த சுபகை எழுந்திருந்து சுற்றத்தாருடன் எதிர்கொண்டுபோய் அவர்பாதத்தில் வணங்கித் துதித்து, ஒரு பொன்னாசனத்தில்உட்காரவைத்து, கந்தபுஷ்பஅட்சதைகளால்பூசித்துப் போற்றினாள். அப்போது அந்தச் சிவஞானியும் திருவருணோக்கம் வைத்தார். உடனே அவளைப் பற்றியிருந்த வியாதிகளும் பேய்களும், பாவங்களும் தொலைந்தன. சுபகை அவருடைய திருவடிகளில் வணங்கி, "தம் வரவினால் நான் சுகப்பட்டேன். நீர் என்னை விட்டுப் பிரியாமல் என் வீட்டிலேயே வசித்து எனக்கு

அருள் புரியவேண்டுகிறேன் என்று பிரார்த்தித்தாள். என் வேண்டுகோளை மறுத்தால் நான்என் சுற்றத்தாருடன நீர போகிறஇடங்களுக்கு உம்மைத் தொடாந்து வருவேன் என்று மீண்டும் பணிந்தாள். யோகீசுவரும் சம்மதித்து அவள் வீட்டிலேயே வசித்தாா. சுபகை மனமகிழ்ச்சியுடன அவருடைய பணிவிடைகளை நாடோறும செய்துவந்தாள். இப்படி மூன்றுவருஷம் சிவஞானிக்குப் பணிவிடை செய்து பின்பு ஆசை ஒழிந்து ஞானம்பெற்று முத்தியை அடைந்தாள். அவளுடைய சுற்றத்தாரும முத்திபெற்றார்கள். பிறகு யோகி வேறிடம் போய்ச சேர்ந்தாா.

திருமாலே ஞானிகளுககு இப்படிப பணிவிடைபுரிந்து முத்தியடைந்தவர்களுககு அளவில்லை. ஞானிகளிருக்குமிடத்தில் நாம எபபோதும வசிபபோம். சகல தீரத்தங்களும் அஙகே வசிககும். ஞானிகள் வெகு தூரத்தில் வசித்தாலும் அவாகளைத் தரிசித்து வணங்குவதே நெறியாகும். ஞானியை எம்மைப்போலவே பாவிக்கவேண்டும. ஞானிக்குச செய்தவைகள எலலாம் எமக்குச செய்தவைகளேயாம். விரிந்த நூல்களைக குருவின் மூலமாகத தெரிந்து கொண்டு, சாரத்தை மாத்திரம எடுத்துக்கொண்டு மற்றவைகளைத் தள்ளிவிடவேண்டும். எமமை அறிந்த ஞானிக்கு நூல்களால் பயன் ஒன்றுமில்லை. உயர்குலத்திற் பிறந்து, நல்லொழுக்கமுடையவராய், ஞானத்தை யடைந்து உள்ளந் தெளியாதவர் எவ்வாறு முத்தியடைவார்கள். வானத்தைத் தோலபோல் சுருட்டக்கூடுமானால் ஞானம இன்றி முததி அடையக்கூடும். அந்த ஞானம பூர்வஜன்மங்களில செய்த புண்ணியத்தினால் கிடைக்கும். ஞானிகளு உடலுள்ளளவும் சஙகவாதனையு மிருக்கும. தேகாந்தத்தில அவன் நம் ஒளியேயாவான் என்று கூறத திருமால் மகிழ்ச்சியடைந்தாா. திருமாலுககு உபதேசம் புரிந்த சிவபெருமான் சிதம்பரத்தை அடைந்தார் என்று சூதர், முனிவர்களுக்குச சொன்னார்.

எட்டாவது அத்தியாயம்.

திருமாலாதியோர் ஞானம் பெற்றது.

சிவபிரானிட முபதேசமபெற்ற திருமால் சிவபிரான் வாராமையால் மனம் வருந்திபபரமசிவனைத்தோத்திரமபுரிந்து, இனிச

சிவபிரானைத் தரிசனம் செய்யாமல் வைகுந்தத்துக்குப் போகிற தில்லை என்று நிச்சயித்துக் கொண்டு, சிவபெருமான் கைலாய மலைக்குப் போயிருக்கமாட்டாரென்றும், அவர் போன திசையை ஊகித்துப்பார்த்தால சிற்றம்பலத்துக்கே போயிருக்கலாமென்றும் எண்ணிச் சிற்றம்பலத்தை நோக்கிச்சென்றார். அநேக வனங்கள், மலைகள், நதிகள், நதங்கள், நாடு நகரங்கள், கிராமங்கள் எல்லாவற்றையுமகடந்து, அங்கங்குள்ள சிவாலயங்களை வணங்கிக் கொண்டு போய்ச் சிதம்பரத்தை யடைந்து, ஆலயத்துக்குட்புகுந்தார். சந்நிதியில் பணிந்து, சிவகங்கையில் நீராடித், திருநீறு கண்மணிபூண்டு, பஞ்சாட்சர ஜபம் செய்து, பின்னர் சந்நிதியை அடைந்து பேரம்பலத்தை வணங்கிச சிற்சபைபோனார். ஆனந்த நடனம் செய்தருளும் சபாநாயகரைத் தரிசித்து நமஸ்கரித்துப் பலவாறாகத் தோத்திரம்புரிந்தார் திருமால். அப்போது ஆனந்த தாண்டவமூர்த்தி திருமாலிடம் அனுக்கிரகம உடையவராய் அவரைப்பார்த்து நீ வைகுண்டம போய், நாம உபதேசித்த உண்மைநெறியில நின்று உலகத்தைப பரிபாலனம் செய். பிறகு சாயுஜ்ய முத்தியருள்வோம் என்று கூற மஹாவிஷ்ணு விடைபெற்றுக்கொண்டு தம்முலக மடைந்தார்.

இவ்வாறு திருமால் வைகுந்தத்தில் இருக்கையில் பிரமன் இந்திரன் முதலிய தேவர்கள் வைகுந்தத்துக்குப போனார்கள். திருமாலைக்கண்டு தரிசித்துத் துதித்து வணங்கி அவரது உத்தரவின் மேல் உட்கார்ந்தார்கள். அதன்பின் விஷ்ணு அவர்களை நோக்கி நீங்கள் என்ன காரியத்தைக் கருதிவந்தீர்கள் என்று கேட்டார். பிரமா முதலான தேவர்கள் திருமாலை வணங்கித் தேவனே! நீர் கயிலை மலைபோய் நெடுங்காலம் தபசு செய்து சிவபெருமானிடத்தில் மெய்ஞ்ஞானோபதேசம் பெற்றுவந்திருக்கிறீர். அந்த ஞானத்தை எங்களுக்கும் உபதேசித்து நாங்கள் ஈடேறும்படி திருவருள் புரிய வேண்டுமென்று வேண்டினார்கள். அதைக்கேட்ட திருமால் அவர்களை நோக்கிச் சிவஞானத்தை முற்றும் உபதேசிக்க நான் வல்லவனல்ல. சிவபெருமான் ஒருவரேவல்லவர்; ஆனாலும நான சொல்லுகிறபடி செய்யுங்கள். விராட்புருஷனுக்கு இருதயஸ்தானமாகியும், தரிசனம் செய்தால் முத்தி தருவதாயும் வழிபடுவோர்க்குப் போக மோட்சங்களை யளிப்பதாயு முள்ளது புலியூர் என்னும் சிவக்ஷேத்திரம் ஒன்றுண்டு. நீங்கள் அந்த க்ஷேத்திரத்தை யடைந்து

சிவகங்கையில் மூழ்கித் திருநீறு கண்மணிதரித்துப், பஞ்சாட்சரங்களை ஜபித்து, பிரணவம் சோநத அந்த மந்திரத்தாலேயே ஆனந்தத் தாண்டவமூர்த்தியை அர்ச்சனைசெய்து, ஆனந்தத் தாண்டவத்தையும் தரிசித்துக்கொண்டு கொஞ்சநாள் அங்கே வாசம் பண்ணுங்கள். சிவபெருமான் வநது உபதேசிப்பார் என்று கூறினார். தேவர்கள் மகிழ்ந்து திருமால் பாதத்தில் வணங்கி விடைபெற்றுக் கொண்டு எல்லாரும் தில்லையை நோக்கி நடந்தார்கள்.

நாராயணமூர்தநி சொன்னபடியே சிவகங்கையில் நீராடித் திருநீறணிந்து, கண்மணிபூண்டு, பஞ்சாட்சர ஜபம் செய்து, பரசிவனைப்பூசித்து, விரதங்கள் செய்து, தரிசனம் செய்து கொண்டு பலநாள் வசித்தார்கள். இப்படித்தேவர்கள் தவம் செய்வதற்கு மகிழ்ந்து சிவபெருமான் பிரத்தியட்சமானார். தேவர்கள் எல்லாரும் உள்ளக்களிப்புடன் எழுந்திருந்து, சேவடிகளில் வணங்கி உமாசகாயா! பரமபதியே! சந்திரசேகரா! மிருத்தியுஞ்சயா! காமதகனா! காலகாலா! என்று துதித்தார்கள். அபபோது பரசிவன் அவர்களைப் பார்த்து உங்களுடைய விருப்பம் என்ன சொல்லுங்கள் என்றார். அவர்கள் எங்களுக்கு உண்மை ஞானத்தை உபதேசித்தருள வேண்டுமென்று பிரார்த்திக்க, அவர்களைத் தம் அருகில் உட்காரவைத்துககொண்டு உபதேசம் செய்தருளினார். ஆனந்த சொரூபியாய், மனதிகளுக்கெட்டாததாய்ச், சுயம் பிரகாசமாய், நிர்விகாரமாய், நித்தியமாய், நிர்மலமாயுள்ள பரபிரமம் யாமே. மாயை எம்முடைய சத்தி. எம்மால் தொழில் படுத்தப் படுவது. சொரூபஞானமில்லாதவரை மறைப்பது. சொரூபவிசாரமுள்ளவர்களை மறையாது. சங்காரகாலத்தில் எம்மிடம் ஒடுங்கும். ஜீவாத்துமாக்கள் அனுபவித்தது போகச் சேடமாயுள்ள சஞ்சிதகன்மமும் மாயையுடன் எம்மிடத்தொடுங்கி மறுசிருஷ்டிக்கு வித்தாயிருக்கும். இருவினை ஒப்பு உடையவராய்ப் பரிபாகம் பெற்றவர்களைப் பிறவிவேதனை யணுகாது. பூமியில் உயர்குலத்தில் உதித்து, மானத கருமங்களைப் புரிந்து, சன்மார்க்கத்தில் ஒழுகி நமது அருளால் முத்திபெறுவாருமுண்டு. கருமத்துக்கு ஏற்றபடி பலவகை ஜன்மங்களையும் எடுத்துழன்று, கடைசியில் மானிடஜன்மத்தை அடைந்து, நற்குலத்தில் பிறந்து, சற்கருமங்களைச் செய்து, சித்தசுத்தியுடையவராய்ச், சம்சாரத்தில் வெறுப்புத்தோன்றி முத்தி விருப்பமுண்டாய் நம்மருளால் சிவஞானம் பெற்று

சகல புராணங்களையும் வியாச முனிவரிடம் கற்றுணர்ந்த சூதபுராணிகர் அந்த ஏகருசாலைக்கு வந்தார். முனிவர்கள் அவரை யர்க்கிய பாத்திய ஆசமனாதிகளால் உபசரித்து, ஒரு சிறந்த ஆசனத்தில் உட்காரச்செய்து தாங்களும் அவரைச் சூழ்ந்து உட்கார்ந்துகொண்டார்கள். பிறகு ரிஷிகள் சூதமுனிவரைப் பார்த்து, வேதங்களை நான்காக வகுத்தருளிய வியாச மஹா ரிஷியினிடத்தில் சகல புராணங்களையும் கற்றுணர்ந்த முனிவரே! எங்களுக்கு ஒரு சிவ புராண கதை சொல்லவேண்டும்; நாங்கள் சிவகதை கேட்க விரும்புகிறோமெனச் சூதர் சொல்லுகிறார்.

இப்படிச் சாதகமான சிவகதைகளைக் கேட்க விரும்பும் நைமிச வாசிகளான தபோதனர்களே! முத்திக்கு வித்தாய்ச் சிறந்து விளங்கும் சூதசங்கிதையை யுங்களுக்குச் சொல்லுகிறேன். அதன் வரலாற்றைக் கேளுங்கள். வியாசமுனிவர் வேதங்களை நான்காக வகுத்தபின், அவற்றின் அர்த்தங்களை விளக்கும் உபப்பிருமமணங்களான பதினெண் புராணங்களையுஞ் செய்தருளினார். அந்தப் புராணங்களுட் சிறந்த ஸ்காந்தமென்பதொன்றுண்டு. அது சனற்குமார ஸம்ஹிதை, சங்கர ஸம்ஹிதை, சூத ஸம்ஹிதை விஷ்ணு ஸம்ஹிதை, பிரம ஸம்ஹிதை, ஸௌர ஸம்ஹிதை என்று ஆறுவகைப்படும். சூத ஸம்ஹிதையானது, வேதாந்தப் பொருளை நன்றாய் விளக்கிக்கூறும் ஞானசூரியன் போல்வது. பாபங்களை யொழித்துப் புண்ணியங்களை அபிவிருத்தி செய்வது; முக்தி சாதனமாயுள்ளது. அதனைச் சொல்லுகிறேன் கேளுங்களென்று, மங்களவல்லி பங்கிலமர்ந்த மஹாதேவனையும், தங் குருவான வியாசரையுந் துதித்துச் சொல்லுகிறார்.

முதலாவது
தேவர்கள் ஜகத்திற்குக் காரணப்பொருளை உணர்ந்துகொண்ட அத்தியாயம்.

பூர்வகாலத்தில் இலட்சுமிகாந்தனாகிய திருமாலும், பிரமதேவனும், தேவேந்திரனும், மற்றுமுள்ள தேவர்களும் ஓர் இடத்தில் கூடினார்கள். அப்போது இந்த ஜகத்துக்கு மூலகாரணனாயுள்ளவர் எவரென்று ஒரு கேள்வியுண்டாயிற்று. ஒருவருக்குந் தெரியவில்லை. பிறகு இவ்விடத்திலிருந்து யோசிப

முத்தி அடைவாருமுண்டு. ஞானத்தாலேயே முத்தியடைய வேண்டும். நற்கருமங்கள் அதற்குச் சாதனமாகும். சாந்தி தாந்தி முதலிய குணங்களை யுடையவராய்ச் சற்கருமங்களைச் செய்தால் அவர்கள் அந்தச்சென்மத்திலேயே முத்தியடைவதுமுண்டு. வாரணவாசி முதலிய சிவஸ்தலங்களில் வசித்து இறந்தவர்கள் நிச்சயமாகவே முத்தியடைவார்கள். தேவர்கள் எல்லாரிலும் நாமே சிறந்ததெய்வம். ஸ்தலங்களில் சிவஸ்தலமே சிறந்தன. அவைகளுக்குள்ளும் வாரணவாசி, காளத்தி, ஸ்ரீசைலம், விருத்தாசலம், சிதம்பரம், திருவாரூர், வேதாரணியம், முதலியவை உத்தமம். இவற்றுள்ளும காசி சிதம்பரம் இரண்டும் மிகச்சிறந்தன. தபோபலமுடையவர்களே யிவைகளை யடைவர். இந்த ஸ்தலங்களை அடைந்து எம்மை ஆராதித்தவர்கள் போகமோட்சம் இரண்டையும் பெறுவார்கள். தேவர்களே! நீங்கள் எம்மிடத்தில் பக்தியுள்ளவர்களாதலால் உங்களுக்கு இந்த உண்மையை உபதேசம் செய்தோம். நீங்கள் இதை உணர்ந்து ஜனனமரணமில்லாத பேரின்பமுத்தியை அடையுங்கள் என்றுகூறிச் சிவபெருமான் மறைந்தருளினர். முனிவர்களே! இவற்றைத் தெரிந்து கொள்ளுங்களென்று சூதமுனிவர் சொன்னர். அதைக்கேட்ட முனிவர்கள் அகமகிழ்ந்து சூதமுனிவரைப் புகழ்ந்தார்கள்.

ஒன்பதாவது அத்தியாயம்.

தில்லை நடனத்தைத்தரிசிக்க உபாயம் கூறியது.

முனிவர்கள் சூதரை வணங்கி நாங்கள் சிற்றம்பல நடனத்தைத் தரிசிக்க விரும்புகிறோம். அதற்கு ஒரு உபாயம் சொல்ல வேண்டுமென்று கேட்கச் சூதர் சொல்லுகிறார். முக்குற்றங்களையும் அகற்றி, யிந்திரியங்களை வென்ற சௌனகமுனிவர் சிவபெருமான் தில்லையில் நடித்தருளும் ஆனந்தத்தாண்டவத்தைத் தரிசிக்கவிரும்பினர். அதற்கு உபாயம் என்ன வென்று யோசித்தார். உடனே கயிலாயமலைக்குப்போனர். கயிலையங்கிரிக்குக்காவல் பூண்ட நந்தீசுவரரைக் கண்டு பணிந்தார். நந்திதேவர் முகமலர்ந்து கருணையால் அவர் முகத்தைப்பார்த்து ஒரு ஆசனத்தில் இருக்கச்செய்து, சௌனகரே! நீர் வந்தகாரியமென்ன என்று கேட்டார். சௌனகர், சிவபெருமான் தில்லைச்சிற்றம்பலத்தில் நடித்

தருளும் ஆனந்த நடனத்தைத் தரிசிக்கவிரும்பினேன். அதற்கு உபாயம் தெரியவில்லை. அதை உமமிடம் கேட்டுதெரிந்துகொள்ளவந்தேனென்று கூறினார். நந்திதேவர், சௌனகரே! இந்தக் கயிலாயமலையில் சிவபெருமான் உமாதேவி தரிசிக்கும்படி காலையும் மாலையும் ஆனந்தநடனம் செய்தருளுவார். அது உமாதேவியாருக்கு மாத்திரம் தெரியும். மற்றவர் அறியமாட்டார்கள். சிற்றம்பலத்தில் எல்லாருங் காணும்படி நடனஞ் செய்தருளுவார். சிவபெருமான் அருளைபெற்ற முனிவர்கள் எல்லாருந் தரிசிப்பார்கள். சௌனகரே! நீர் அந்தத் தில்லைச் சிற்றம்பலத்திற்குப்போய், மார்கழி மாதம் ஆதிரை நட்சத்திரத்தில் உதயத்திற்கு முன் சிவகங்கையில் ஸ்நானம் செய்து, விபூதி ருத்திராட்சம் தரித்து, மூலட்டானத்தை வணங்கிப் பஞ்சாட்சரத்தைப் பதினாயிரம் உருச்செபித்து அன்று உபவாச மிருந்து சிவார்ச்சனைசெய். இப்படி ஒருவருஷம் நோன்பு செய்தால் சிவபெருமான் மகிழ்ச்சி அடைவார். அவர் கருணையால் ஆனந்தத்தாண்டவத்தைத் தரிசிக்கலாம் என்றார். பூர்வகாலத்தில் தேவர்கள் கூட இப்படித்தவமிருந்து ஆனந்த நடனத்தைத் தரிசித்தார்கள். இஷ்டார்த்த சித்திகளையும் பெற்றார்கள் என்று நந்திதேவர் கூறி அருளினார்.

அதைக்கேட்ட சௌனகர் நான் வாழ்வுபெற்றேன் என்று மகிழ்ந்து, நந்திதேவரைப பணிந்து, உடனே தில்லையை நோக்கி நடந்தார். நந்திதேவர் சொன்னபடியே ஒருவருஷம் நோற்று ஆனந்த நடனத்தைக்கண்டு தரிசித்து ஆனந்தக்கடலில்முழுகினார். பரமசிவனைச் ஸ்தோத்திரம் செய்தார். சிவபெருமான் சௌனகரை நோக்கி இருக்குவேதத்தில் சாகல்யத்திற்கு நீ தலைவனாயிரு என்று வரம அளித்தார். அப்படியே சௌனகரும் அந்தச சாகல்யத்தை விளக்க அநேக நூல்களைச் செய்தார். சௌனகருடைய மாணுக்கரான ஆசுவிலாயன முனிவர் குருவின் கட்டளை பெற்று அதற்குச் சூத்திரம் முதலியவைகளைச் செய்தார். இன்னம் அநேகர் தில்லையில் நோற்று ஞானதிகளைப் பெற்று வாழ்வு அடைந்தார்கள். வியாதமுனிவர் இவைகளை எனக்குச் சொல்லியருளினார். அவர் சொன்னபடியே நான் உங்களுக்குச் சொன்னேன் என்றுகூறி, முனிவர்களே! தில்லைச் சிற்றம்பலம் அடைந்து நோற்றுப் பேரானந்த முத்தியை அடையுங்கள் என்று சூதர் கூறினார்? பிறகு சூதர் தமதுகுருவான வியாசமஹா முனிவரைச் சிந்தித்தார்.

உடனே தமது மாணாக்கர்களுடன் வியாச முனிவர் அங்கே எழுந்தருளினார். சூதமுனிவர் தமது குருவின் பாதபங்கயங்களில் பணிந்து விதிப்படி யருச்சித்துப் பூஜித்தார். உடனே வாதராயண முனிவர் தமது மாணாக்கர்களும், சூதரும் சூழ அங்குள்ள முனிவர்களையும் அழைத்துக்கொண்டு தில்லைக்கு எழுந்தருளினார்.

அவர்கள் எல்லாரும் தனுர்மாதம ஆதிரை நட்சத்திரத்தில் சிவகங்கையில் ஸ்நானம செய்து, விபூதி ருத்திராட்சம் அணிந்து மூலட்டானத்தைத் தரிசித்துச், சடாட்சரத்தால் பூசித்து உபவாசம் செய்தார்கள். சிவபெருமானுடைய கருணையைப் பெற்று ஆனந்த நடனத்தைத் தரிசித்து மகிழ்ந்தார்கள். அக்காலம் திருவிழாநாள். ஆகையால் சிவபெருமான் திருவோலக்கமாக வீதி வலம் வந்தார். தேவர், தானவர், சித்தர், வித்தியாதரர், உரகர், கின்னரர், பன்னகர், யட்சர், குஹ்யர், பைசாசர், மானிடர் எல்லாரும் தரிசித்து மகிழ்ந்தார்கள். சிவபெருமான் வீதியை வலமாக வந்து ஆலயத்துட்புகுந்தார். பிறகு சிவபெருமான் சிவகங்கையில் ஸ்நானமசெய்து எல்லாருக்குமதீர்த்தம்கொடுத்தார். திருமால்முதலான தேவர்களும் நீராடித்தாண்டவமூர்த்தியைத்துதித்துப்போற்றி அநேகவரங்களைப்பெற்றார்கள். அவர்கள் எல்லாரும் சிவபெருமானிடம் செலவு பெற்றுக்கொண்டு தத்தமிடம் போய்ச்சேர்ந்தார்கள். வியாசர் சூதர் முதலானவர்களும், மற்றும் அவருடன் வந்த முனிவர்களும் சிவகங்கையில் நீராடிச் சதருத்திரீயத்தினால் துதித்தார்கள். சிவபெருமானும் அவர்களுக்கு விடையளித்துச்சிற்றம்பலத்தில் இனிது வீற்றிருந்தருளினார்.

முத்தி காண்டம்

முற்றிற்று.

உ

சௌந்திலாண்டவன்

திருவடி துணை.

நான்காவது

எக்ஞவைபவகாண்டம்.

பூர்வபாகம்.

முதலாவது அத்தியாயம்

வேதார்த்தம் உரைத்தல்.

நைமிசாரணியத்தில் வசிக்கிற சௌனகர் முதலான முனிவர்கள் மஹாசத்திரயாகத்தைமுடித்தார்கள். அதன் முடிவில் அவர்கள் எல்லாரும் வியாச முனிவரது மாணாக்கராகிய சூதமுனிவரைச் சிந்தித்தார்கள். தில்லைச் சிற்றம்பலத்தில் சிவபெருமானைத் தரிசனம் செய்து கொண்டிருந்த சூதர் அதை ஞான திருஷ்டியால் தெரிந்து கொண்டு உடனே நைமிசாரணியத்துக்கு வந்து சேர்ந்தார். நைமிசமுனிவர்கள் சூதரைக்கண்டதும் மனம் மகிழ்ந்து எதிர்கொண்டு போய் அழைத்து வந்து ஒரு பொற்பீடத்தில் எழுந்தருளச்செய்து, தாங்களும் அவரைச்சூழ உட்கார்ந்தார்கள். பிறகு அவரது முகத்தை நோக்கிச் சூதமுனிவரே! வேதார்த்தத்தை விளங்கக்கூறுவதான எக்ஞவைபவகாண்டத்தை யெங்களுக்குச் சொல்லியருள வேண்டுமென்று கேட்டார்கள். சூதமுனிவர் விநாயகர் சிவபெருமான் உமாதேவியார், முருகக்கடவுள் இவர்களது திருவடிகளை வணங்கிச் சொல்லத்தொடங்கினார்.

முனிவர்களே! வேதார்த்தத்தைச் சொல்லுகிறேன். உள்ளன்போடுங் கேளுங்கள். உள்ளன்புடன் கேளாவிட்டால் பலன் இல்லை. பாவமுண்டாகும். வேதார்த்தமானது பரம் என்றும்

அபரமென்றும் இருவகைப்படும். பரமென்பது பரமசிவமேயாம். அபரம் என்பது தாமம் அதர்மம் என்று இருவகைபபடும. தருமம் என்பது யாகம் முதலிய எல்லாப்புண்ணிய கருமங்களுமாம். அது சிவத்தை அடைவதற்குச் சாதகமாகும். அதர்மம் என்பது கொலைமுதலிய பாவகர்மங்கள். இதைச் செய்யாமல் விலக்கும்படி வேதம் சொல்கிறது. கொடிய அதர்மம் ஒழிந்தால் தருமம் விருத்தியாகும். அந்தத்தருமத்தாலே பரம் என்று கூறின வேதப்பொருள் சித்திக்கும். சிவபெருமான் சோதி சொரூபராயிருந்தும் உலகத்தாருக்குத் தெரியாமலிருப்பது என்னகாரணம் என்றால், மாயையால் மறைப்புண்டிருக்கிற சீவர்களுக்குத் தோன்றுவதில்லை. தருமம் விருத்தியாலும் சிவஞானம் உதிக்கும். அந்த ஞானத்தால் மாயைநீங்கும். அந்தமாயையும் பிரமத்தினிடத்தில் தோன்றியதேயாம். மாயாநிவிருத்தியே சுத்த சைதன்னியத்தின் சொரூபம், அதுவே யின்பமயமாம். அந்த மாயையானது ஜீவான்மாக்களுக்குப் பின்னமாயுள்ளது. சைதன்னியமானது பரமார்த்தமாய்ச சத்தா யிருப்பதால் அதற்கு ஒருபோதும் நாசமில்லை. எல்லாவற்றிற்கும் அதிஷ்டானமாயுள்ள பரசிவப் பிரத்தியட்ச ஞானத்தினலே முத்தியுண்டாம். இந்த ஞானத்தைப் பரமஹம்சன் வேதாந்த சிரவணத்தினலே பெறுவர்ன். மற்றைய ஆச்சிரமிகள் கிரமமாக அடைவார்கள்.

இந்தத் தருமநெறியில் நின்ற வானப்பிரஸ்தன் பிரமலோகத்தை அடைவான். சந்நியாசி சிவஞானம் பெறுவான். குடீசகனுக்கு ஞான இடையூறாயிருப்பவைகளெல்லாம் வேதாந்த சிரவணத்தினல் நீங்கும். பகூதகன் சாந்தி தாந்தி முதலிய பெறுவான். ஹம்ஸனுக்கு வேதாந்தசிரவணத்தில் விருப்பம் உண்டாம். பரமஹம்ஸன் வேதாந்த சிரவணத்தினல் மெய்ஞ்ஞானத்தை அடைவான். அவன் கருமசந்நியாசி என்னப்படுவான். மற்றச் சந்நியாசிகளுக்குக் கர்மம் மிகுதியாதலால் பிட்சகர் என்னப்படுவார்கள். வேதாந்தத்தால்சொல்லப்படுகிறது அபரோட்சஞானம். குருவருளால் பெற்ற அந்த ஞானம் சகல பந்தங்களையும் ஒழிக்கும். ஆதலால் ஞானத்தைப் பெற விரும்புவோர் பரமஹம்ஸ நெறியை ஆசரிக்கவேண்டும். குடீசகன், பகூதகன், அம்ஸன் என்னும்நிலைமைகளை அடைய விரும்புகிறவர்கள் பிராஜாபத்திய இஷ்டிசெய்யவேண்டும். பரமஹம்ஸ நிலைமையை அடைய விரும்புகிறவன்

னுக்கினேய இஷ்டி செய்யவேண்டும். யாகம் செய்யாத பிராமணர்களுக்கு இந்த இஷ்டிகள் இல்லை. அவர்கள் விராஜா மந்திரத்தைக் கூறித் தங்களுடைய அக்கினியில் நெய் ஹோமம் செய்து, மிகுந்ததைத் தாம் அருந்திப், பிறகு நெய்யினுல் ஆகுதி கொடுத்து, அந்த அக்கினியை ஜீரண ஆக்கிராணம் செய்யவேண்டும். அதன் பின் பிரேஷ உச்சாரணம் செய்யவேண்டும். பிறகு சந்நியாசம் பெறவேண்டும். இதுசந்நியாசாசிரமத்தை அடையும்முறையாம். குருவினுல் கொடுக்கப்பட்ட காஷாயம். தண்டு கமண்டலம் பெற்றுக் குருவை வணங்கி, வேதாந்த சிரவணம் பண்ணவேண்டும். நிட்காமிய கர்மமே செய்யவேண்டும். காமிய கர்மத்தால் பயனில்லை பரமஹம்சன் பிரணவத்தைத் தவிர வேறு மந்திரத்தை ஜபிக்கக் கூடாது. அந்தப் பிரணவமே சமுசார சாகரத்தைக் கடக்கும் ஓடமாகும்.

அதன் பொருளைக் கேளுங்கள். அந்தப் பிரணவத்துக்குச் சிவபெருமானே பொருளாவார். பிரம விஷ்ணுக்களைப் பொருளாகக் கூறுவது இலக்கணையாலே யன்றி உண்மையில் இல்லை. சந்நியாசி ஞான சித்தி பெறுவதற்காக அவிமுத்தக்ஷேத்திரம் போய்ப் பரமசிவனை ஆராதிக்கவேண்டும். வேறு மார்க்கத்தால் மெய்ஞ் ஞானத்தைப் பெறமுடியாது. ஆகையால் சிவபெருமானைப் பூதங்களிலும் தன் சுயசொரூபத்திலும் கண்டு தரிசித்து வணங்க வேண்டும். பிரமசாரி, கிருகஸ்தன், வானப்பிரஸ்தன் இவர்கள் சதருத்ரீயத்தை ஜபிக்கவேண்டும். அதனுல் பாவம் தொலையும்; ஞானம் உண்டாம். பின் எளிதில் முத்தி பெறுவார். இதில் சந்தேகமில்லை. அந்தச் சதருத்திரத்தின் மத்தியில் பஞ்சாட்சர மிருக்கின்றது. அதன் மத்தியில் சிவபெருமான் வசித்தருளுவார். யாவுக்கும் மூலகாரணரான பரமசிவன் அதில் வசிப்பதால் சகல தேவர்களும் அதை ஆச்சிரயித்துக் கொண்டிருப்பார்கள்.

சிவ சம்பந்தமான மாயையானது சத்துவம், இராஜசம், தமசு என்கிற குணங்களால் ஜீவாத் மாக்களை மறைத்துக் கொண்டிருக்கும். அதனுல் பந்த முண்டாகும். சத்துவ குணத்தால் ஞானம், வைராக்கியம் வெண்மை யிவைகள் உண்டாகும். இராஜதத்தால் காமம், துக்கம், சிவப்பு இவைகள் உண்டாகும். தமோ குணத்தால் ஆலசியம், மோகம், பிராந்தி, கருமை யிவைகளுண்டாகும். சத்துவத்தில் உத்தம பதார்த்தங்கள் எல்லாம் உண்

டாகும். இராஜதத்தால் மத்திம பதார்த்தங்கள் எல்லாம் உண்டாகும். தாமதத்தால் அதமபதார்த்தங்கள் எல்லாம் உண்டாகும். இந்த முக்குணங்களுடன் கூடின மாயாசம்பந்தத்தால் சகல ஜீவர்களுக்கும் சமுசார பந்தம் உண்டாகும். இராத இந்தச் சமுசார பந்தம் சிவ ஞானத்தால் ஒழியும். ஆஸ்திகர்கள் ஞானயாகத்தால் சிவஞானம் பெறுவார்கள். யாகம் ஸ்தூலம் சூக்குமம் என்று இருவகைப்படும். கருமயாகமேஸ்தூலயாகம் என்னப்படும். ஞானயாகமே சூட்சுமயாகமாம். இவற்றுள் கருமயாகம் மூன்று வகைப்படும். அவையாவன, காயிகயாகம், வாசிகயாகம், மானசிகயாகம் எனமூவகையான கருமங்களாம். மந்திரஜபமேவாசிகமாகும். தெய்வத் தியானமே மானச யாகமாகும். காயிகயாகத்தைவிட வாசிகம் சிறந்தது. வாசிகத்தைவிட மானசிகம் உயர்ந்தது. மானதயாகம் உத்தமம் அதமமென இருவகைப்படும். உமாச காயனுகிய பரமசிவனைத் தியானிப்பதுவே உத்தமமாமென்று பெரியோர்கள்சொல்வார்கள். மற்றத்தேவர்களைத் தியானிப்பது அதமமாகும் மோட்சத்தை அடைய விரும்புகிறவாகள் சிவபெருமானையே தியானிக்க வேண்டும். வேதாந்தமும் இப்படியே சொல்கின்றன. திருமால் முதலான தேவர்களிடத்தில் பரமசிவன் வியாபகமா யிருக்கிறுர் என்று கருதி வணங்குகிறவர்கள் முத்தி பெறுவார்கள். விஷ்ணுவாதி தேவர்களையும் சிவநாமங்களாகிய சங்கரன், சம்பு, மஹாதேவன் முதலிய திருநாமங்களாலே துதிக்கிறவர்களும் முத்தி அடைவார்கள். விஷ்ணு வாதியர் நாமங்களினுலே பரமசிவனைத் துதிப்பவர் நரகத்தை அடைவார்கள்.

ஞானயோகத்துக்குச் சமானமாக எதையும் வேதம் சொல்லவில்லை. இதற்கு மேலானதும் ஒன்று மில்லை. மெய்ஞ் ஞானத்தை அடைய வுரியவனுக்குச் சிவபக்தி, சிவனடியார் பக்தி, திருநீறு கண்மணிகளில் நேசம், சாந்தி தாந்தி முதலியவைகள் இயற்கையாகவே யுண்டாகும். இந்த ஞானிக்கு விஷயவாஞ்சை பிரதி பந்தமாய்க் கெடுதிசெய்யும். ஆகையால் விஷயங்களில் வெறுப்புத் தோன்றினுல், சிவபக்தி முதலியவைகள் நிலைபெறும். ஞானயாகத்தின் மகிமை அளவிலடங்காது. சொல்ல முடியாதென்றுலும் கபிலர், சனுதர்முதலிய ரிஷீசுவரர்கள் கூடியமட்டும் கூறியிருக்கிறுர்கள். அவைகளெல்லாம் ஒன்றுக்கொன்று மாறுபாடுவதில்லை. என் குருவான வியாச முனிவரிடம் நான் ஞானத்தைப் பெற்றேன்.

இதை நான் உங்களுக்குச் சொன்னேன். அறிந்து கொள்ளுங்களென்று சூதர் கூறினார்.

இரண்டாவது அத்தியாயம்.

காயிக கருமயாகம் கூறியது.

காயிக கருமயாகமானது நித்தியம், நைமித்திகம, காமிகம் என்று மூவகைபபடும. நித்தியத்தினால் சத்துவகுண முண்டாகும்; சித்த சுத்தியுண்டாகும. நைமித்திகத்தினால் பாவங்கள் அழியும். காமிகத்தினால் சொாககாதி லோகங்களும் ஐசுவரியமும் சித்திக்கும். புத்தியிலலாதவர் காமிகயாகததைச் செய்வார்கள். அறிவுள்ளவர்கள் நித்தியநைமித்திக கருமங்களையேசெய்வார்கள். இவர்களுக்குக் கிரமமாக முத்தி கிட்டும். இவற்றை நிஷ்காமிகமாகச் செய்கிறவர்கள் மோட்சத்தை அடைவாாகள. சகல யாகங்களுக்கும் சிவபெருமானே தலைவா என்றுணர்ந்து செய்கிறவர்கள் முத்தியடைவார்கள்.மறறவர்கள்முத்தியடையமாட்டார்கள்.மஹாதேவன் என்னும் பெயரினாலும அதன் பொருளினாலும் உண்மையாகவே பெரியவனாக இருக்கிறவனே யாகங்களுக்குத் தலைவன். தக்கன் யாகத்தினாலே அதன் உண்மையைத் தெரிந்து கொள்ளுங்கள். உலகத்தில் கூறப்படும் கருமங்கள் எலலாவற்றையும் சிவபூசை யென்றே கொள்ளவேண்டும. அபபடிக் கொள்ளுதலுக்கு மஹாயாகம் என்று பெரியோர் சொல்வார்கள். சிவபிரான் திருவடிக்கு மெய்யன்புடையவர்கள் செய்கிற யாவையும் புண்ணியமாகும். சிவபிரானுக்கு அன்பில்லாதவர்கள் செய்கிற புண்ணியங்களும் பாபமாகும். வேதத்தை நம்புகிறவாகளுக்கும கருமயாகம் உபகாரமாயிருக்கும், ஞானத்துக்கும சாதகமாகும். ஒருவனிடத்தில் அனாசாரங்கள் இருநதால் அவனைசசோதித்து வெளிப்படுத்தாமலும் அவனோடு கூடாமலும் இருபபதுகூட ஒருவகை யாகம் என்று கூறுவார்கள். சார்வாகன், பௌத்தன், சமணன் இவர்களுடைய வசனங்களைச் செவிகொடுத்துக் கேளாமலும், அவரோடு சிநேகம் பண்ணாமலும் இருபபதும்ஒருவகை யாகமேயாம் என்று சொல்வார்கள். வேதவிதி, தாந்திரிகவிதிகளை அறியாமல் ஒரு கல்லைவைத்துத் தெய்வமென்று பாவித்துப் பூசித்தாலும் அதையும் ஒருயாகமென்று மேலோர்கூறுவார்கள். வேதாகமங்கள்கூறும்

நெறியை உணர்ந்து சிவபிரானைப் பக்திசெய்கிறவன் செய்கிற கருமயாகம் கெடுதி யடைவதில்லை. அவன் ஞானமோட்சங்களைப் பெறுவான் என்று காயிககர்மத்தை யுரைத்து முனிவர்களே! இதில் உயர்வு தாழ்வுகளிருந்தால் அவைகளை நீங்கள் ஊகித்துத் தெரிந்து கொள்ளுங்களென்று சூதர் சொன்னார்.

மூன்றாவது அத்தியாயம்.

வாசிக யாக முரைத்தல்.

சத்துச்சித்தானந்த நிட்கள சொரூபச் சிவத்தினிடமிருந்து சேதனமாய்ச் சோதியாயிருக்கிற விந்து என்று ஒன்று உண்டாயிற்று. அந்த விந்துவினின்று பரமசிவாம்சமாய்ப் பீசம் என்று கூறப்படுகிறதும், சித்சித்தின் அம்சமாய் நாதமென்று ஒன்றும் சித்தின் அம்சமாய் விந்துவென்பதும் உண்டாகும். அப்போது அகண்டாகாரமான ஒரு சப்தமுண்டாகும். அந்தச் சப்தமே ஆத்த விவரணத்துக்குக் காரணமான தொழிலை உண்டாக்கும். அது பிராணவாயுவுக்கு அதீனமாய் மூலாதாரத்தில் தோன்றிய பொன்போல விளங்கும். அந்த வாக்குக்குப் பரையென்றுபேர். அந்த வாக்கு நாபிஸ்தானத்தை அடைந்து தோன்றும் போது அதிகமாய் ஒளியுண்டாகும்.

அந்தவாக்குக்குப் பைசந்தியென்றுபேர். அது சூழுமுனைமார்க்கமாய் இதயத்தை அடைந்து இன்னுமதிகமாயும் நெருப்புப் போன்ற ஒளியுடனும் விளங்கும். அதை மத்திமையென்று சொல்வார்கள். அது பிரமரந்திரத்தையடைந்து சிவத்தையடைந்து அட்சர சொரூபமாகும். அந்த அட்சரசொரூபம் ஸ்தூலம் சூட்சுமம் என்று இருவகைப்படும். செவிப்புலனால் அறியப்படுவதாய் அகரமுதலான ஐம்பத்தோர் அட்சரங்களால் மந்திரசொரூபமாய் இருப்பது ஸ்தூலமாகும். சூட்சுமம் ஓம் என்கிற ஓரெழுத்தின் சொரூபமே சூட்சுமசொரூபமாம். அது பைசந்தி மத்திமைக்கு மேலுள்ள மூன்றாவது ஸ்தானமாகிய புருவமத்தியி லிருப்பதால் பரமாதாரமென்று பேர்பெறும். வைகரியின் பாகம் பூரணமாக அமையப் பெறுவதால் பூரகமென்று பேர்பெறும். எல்லா வற்றிற்கும் வியக்த ஸ்தானமாதலால் புண்ணியபாசனமென்று பேர்பெறும். பிரமரந்திர ஸ்தானத்தில் அஜபா மந்திரத்திற்கு அவயவங்களாகிற ஹம்ஸம்

என்கிற மந்திரம் இருக்கும். ஹகாரம் ஸகாரம் இரண்டும் ஒரே வடிவமாய் அமைந்திருக்கும். உமாதேவியோடு கூடி விளங்குகிற திருமேனியை யுடைய அர்த்த நாரீசுவரருக்கு ஹகாரம் புருஷ பாகமாம், ஸகாரம் உமைபாகமாகும். பரை புருஷ பாகத்துடன் கலக்கிறபோது "ஸோஹம" என்கிற பரமான்மாவின மந்திரம் தோன்றும். ஸோஹம் என்பதிலுள்ள ஸகாரத்தையும் ஹகாரத் தையும் தள்ளி விஞ்சியவற்றைச சேர்த்துப் பார்த்தால் பிரணவ மாக நிற்கும். அதன்மகிமை அளவி லடங்காது. எல்லாமந்திரங் களுக்கும் முதன்மையான ஹம்ஸமந்திரத்தால் பந்தமொழிந்து பய நீங்கும். ஆகையால அதனை மந்திரம் என்பார்கள். இந்தமந்திரத்தி னால் மயேச்வரி சொரூபமான மாதுருகா மந்திரம உண்டாகும். பிராணவாயுவால் உற்பத்தியாகிற நாதசொரூபமாகிற பிரணவத்தி லிருந்து, வைகரிசபதம் உண்டாகிறதற்கு, அப்போது உசுவாச நிசுவாச சொரூபமான பிராணவாயுவின் வியாபாரம் இல்லாமை யால் நாதமெப்படித் தோன்றும்; வைகரிவாககு எப்படியுண்டாகும் என்று கேட்டால் சொல்கிறேன்.

பிராணவாயுவானது அதோ முகமாய்ப் பூரக சொரூபமாயிருக் கும். அபானவாயு மேல்நோக்கி ரேசகரூபமாய் நிற்கும. மற்றொன் று பிராணவிருத்தி சொரூபமாய் அமைந்திருக்கும். பிராணவபா னங்கள் சந்திக்க கும்பக ரூபமாய் வியானவாயு விருத்தி சொரூப மாயிருக்கும். வியானவிருத்தி சொரூபமாய் விளங்குகிற பிராண வாயுவினால் நாதம் தோன்றி வைகரிவாக்கை உண்டாக்கும். இந்த மந்திரத்தைக் குருஅருளால் தெரிந்து கொள்ள வேண்டுமே யொ ழிய கல்வி கேள்விகளாலும் அறிவினாலும் அறியப்படாது. இந்த மந்திரம் பரசிவனையேபொருளாகவுடையது. ஆதலால் இதற்கு ஒப் பில்லை, சிஷ்யனுடைய பரிபாகத்தை மூன்றுவருஷம் அல்லது நாலு வருஷம் பரிசோதித்தறிந்து பின்பு இந்தமந்திரத்தை உபதேசிக்க வேண்டும். அபக்குவனுக்கு உபதேசித்தால் இருவருக்குந் துன்பம் நேரிடும். மந்திர மாதாவான மாதுருகை மத்திமைஸ்தானத்திலிருக் கும்போது, புத்தியில் பலபேதமான மஹாமந்திரசொரூபமாய், வேத ரூபமாய், சுபசத்தம், அபசத்தங்களின் சொரூபமாய், சத்தி சிவ சொரூபமாய் பரமசிவனைப் போலவே இரண்டு வடிவங்களையுடைய தாய் விளங்கும். அட்சர சொரூபமாகிய இந்த மாதுருகா மந்திரம் ஒரு சொரூபத்தினால் சத்திவாசகமாயும், மற்றொரு சொரூபத்தி

பதில பயனில்லையென்று தெரிந்துகொண்டு யாவரும் எழுந்திருந்து சிவலோகம் நோக்கிச் சென்றார்கள். அப்பொழுது ஸ்ரீபரமேசுவரன் அவர்களுக்குப் பிரத்தியட்சமானார். தேவர்கள் சிவபெருமானை அறிந்துகொள்ள மாட்டாமற்போய் நீர் யாவரென்று கேட்டார்கள். அஞ்ஞானத்தால் உண்மை தெரிந்துகொள்ளாத தேவர்களை நோக்கி மஹாதேவர் கூறுகின்றார். சர்வாண்ட சராசரங்களையும் படைத்துக்காத்து அழித்து மறைத்து அநுக்கிரகம் செய்யும் மூலகாரணன் யானே யென்று தெரிந்துகொள்ளுங்கள்; முப்பரம்பொருளுக்கும் முதல்வன் நானே; நானே உங்களுக்கும் சீவ ஜீவராசிகளுக்கும் இறைவனென்று கூறி அந்தர்த்தானமாய் விட்டார்.

இதைக்கண்ட தேவர்கள் "கைகெட்டினது வாய்க்கெட்டாமற் போனதுபோல' ஜகதீசுவரனாகிய உமாசகாயனைப் பிரத்தியட்சத்தில் கண்டும் தெரிந்துகொள்ளாமற் போனோமேயென்று மனம் வருந்திச் சிவபெருமானைத் தங்களுக்குத் தோன்றியபடிக் கெல்லாம் துதித்தார்கள். அப்பொழுது உமாகாந்தனது திருவருளால் அவர்களுக்கு ஒரு நல்ல எண்ணந் தோன்றியது. உடனே யெல்லாரும் சிவசின்னம் பூண்டவர்களாய் ஸ்ரீபஞ்சாட்சரத்தைச் சிந்தித்துக்கொண்டு அசைவற நின்றுவிட்டார்கள் தேவர்களெல்லாரும் பரமேசுவரன் பிரத்தியட்சமானதைக்கண்டு, அடியற்ற மரம்போலத் திருவடியில் விழுந்து நமஸ்காரம்பண்ணிப் பலவாறு ஸ்தோத்திரம் செய்தார்கள். அதனால் மகிழ்ச்சியடைந்த காமதகனன் அவர்களைப் பார்த்து, "உலககாரணன் நானே; வேதாந்தப் பொருளுணர்ந்து, உண்மையறிந்து, பிரபஞ்சவாசையை முற்றுமொழித்துத் தவம்புரிபவரே யென்னையறிந்து முத்தியின்பம் பெறுவார்கள். நீங்களும் அப்படியே பக்தி புரிந்து சதுர்வித புருஷார்த்தங்களையும் பெற்று வாழக்கடவீர்கள்" என்று அநுக்கிரகம்புரிந்து மங்கைபாகன் மறைந்துவிட்டார். தேவர்களும் சந்தேகமொழிந்து தத்தம் பதவிகளுக்குப் போய்ச்சேர்ந்து, அதுமுதல் மகாதேவனைப் பூசித்து மகிழ்ந்தார்கள். ஆதலால் "பரசிவப் பிரபுவின் மகிமை தேவர்களாலும் அறியப்படாதது. வேதங்களுக்குந் தெரியாதது" என்று சூதர் சௌனகாதி மஹாரிஷிகளுக்குச் சொன்னார்.

U. V. S. IYER

ஞல் சிவவாசகமாகவும் விளங்கும். இந்திரிய கோசரமாகிய சத்தமே பதமென்னப்படும். நின்மல சிவமே அபதம் என்னப்படும். இந்தப்பதமே பரமசிவனுடைய சொரூபத்தைக் காட்டும். இந்தப பத அபத விபாகங்களை அறிந்தவனே மெய்ஞ்ஞானி யாவான். மாதுருகாசொரூபமாகிற பதசசோதனை செய்கிறவன் சகலமந்திர சித்திகளையும் அடைந்தவனுவான். அவனுக்கு அரியது ஒன்றுமில்லை. பரை முதலாகக் கூறப்பட்ட நான்கு பதத்தில் ஒன்றுகிய வைகரிரூபமான சப்தம் ஒன்றாக இருந்தாலும், உயிர்களுக்கு உபகாரம் செய்யும் நிமித்தம் ஸ்தான பேதங்களால் அகாரம் பிசர்க்கும். வகைகளுமுள்ள உயிர் வர்க்கமாயும், கவவர்க்கம, சவவர்க்கம், டவவர்க்கம், தவ்வர்க்கம், பவ்வர்க்கம என்பனவும் யரலவ என்பனவும், சகாரமுதல் நாலும சேர்ந்து மெய்வாககமாயும் ஆக இரண்டு வகையாயிருக்கும். பதினறு உயிர்களும் சாநுநாசிகமென்றும், நிர் அநுநாசிகமென்றும இருவகையாய் முப்பத்திரண்டு அக்கரமாய் விளங்கும். கவவர்க்கம்முதல ஐவாக்கமும் இருபத்தைந்தெழுத்தும், யகாரமமுதல எட்டும்சேர்ந்து முப்பத்து மூன்று மெய்களாம். இநத இரண்டுவகை அட்சரங்களும் சுரம் வியஞ்சனமென்று இருவகையாம். இப்படி உலக உபகாரார்த்தமாய்ப் பலவடிவங்களைப்பெறும். ஒவ்வொரு அட்சரத்தாலும் ஒவவொரு சித்தியுண்டாகும. சிலர் வைதிக ஆகாரங்களையும், சிலர் ஆகம சொரூபங்களையும் சிலர் இலவுகிக சொரூபஙகளையும அநுஷ்டிபபார்கள். ஆதலால இந்தப் பதாக்கரஙகள சிவசத்திகளைப போலவே ஆசரிக்கபபடுகின்றன. பரை, பைசநதி, மத்திமையென்று முறையாகததோன்றிய மாதுருகை பேதங்களினுல வெளிப்படையான வைகரிரூபத்தை யடைகின்றது. மாதுருகை ஸ்தூலம் சூட்சுமம் அதிசூட்சுமம் என்று மூன்றுவகையாய்ச, சத்திசம்பந்தத்தால் பரமசிவனையே காரணப்பொருளாகக கூறுகின்றது. பரை பைசந்தி என்கிற அவஸ்தா பேதங்களை அடைவதற்கு முன்னுலே விந்துநாத சொரூபமாயிருந்த மாதுருகா சொரூபமே சூட்சுமமாகிய பரமசிவ சொரூபமாகும். எந்த மநதிரமும குருவருள் பெற்றுல்தான் சித்தியாம்; இல்லாவிட்டால் சித்தியாகாது.

நான்காவது அத்தியாயம்.

பிரணவ மந்திர மகிமை கூறியது.

சூதர் சௌனகாதியோரை நோக்கி முனிவர்களே! பிரணவம் பரமென்றும் அபரமென்றும் இருவகைப்படும். பரமென்பது சிதானந்த சொரூபராகிய சிவமேயாம். அபரப்பிரணவமானது மாயாமய சொரூபமான சததசொரூபமாம். இந்த மந்திரத்தால் சிவஞான சித்தியுண்டாம். பரசிவவாச்சியத்திற்கு வாசகமாகும். சிவத்தை யடைவதற்குக் காரணமாக இருக்கின்றது. முன்காலத்தில் பிரமதேவர் சிவசின்னமான திருநீறுகண்மணி தரித்துபஞ்சாட்சரஜபம் செய்து, இந்திரியநிக்கிரகம் பண்ணிப், பரமசிவனை நோக்கி மூன்று வருஷம் கொடிய தவஞ்செய்தான். பரமசிவனுடைய அநுக்கிரகத்தைப்பெற்றுச்சொர்க்கம் அந்தரம பூமி என்கிற மூன்றையும் படைத்தான், பிறகு தபாக்கினியால் அந்த மூன்றையும எரித்து விட்டான். அம்மூன்றினிடமிருந்து அக்கினி காற்று சூரியன் இவைகளுண்டாயின. அந்த மூன்றையும தபாக்கினியால் தகித்தான். அவற்றினின்று இருக்கு யஜுஸ் சாமம் என்கிற மூன்று வேதங்களும் உண்டாயின. அந்த வேதங்களையும் தகித்தான். அவற்றிலிருந்து மூன்று வியாகிருதிகள் உதித்தன. அவைகளையும் தகித்தான். அவற்றினின்று அகார, உகார, மகாரஙகள் தோன்றின. அந்த மூன்றையும் ஒன்றாகச சேர்த்துப பிரணவ மாக்கினன். இநதப பிரணவத்தில் பரசிவமே பிரதிபிம்ப ரூபமாய் விளங்குவர். அதனால் அந்தப்பிரணவத்தைச் சிவவாசகமென்று அறிஞர் கூறுவார்கள். பிரணவமும் சிவமும் இரும்பும் அதிற்கலந்த நெருபபையும் போல அபேதமாயிருக்கும். இதை ஜபித்தால் எல்லா மநதிரங்களையும ஜபித்தது போலாகும். இதற்குத்தெய்வம் பரசிவமே. அகர உகர மகரங்களாகிற மூன்றுக்கும் பிரமன் விண்டு உருத்திரன் என்கிற முத்தேவர்களும்; சிவப்பு வெளுப்புக் கறுப்பு என்கிற மூன்றுநிறமும், ஜாக்கிரகம், சொற்பனம், சுழுத்தி என்கிற மூன்றவத்தைகளும், பூமி அந்தரம் சொர்க்கம் என்கிற மூன்று ஸ்தானங்களும், உதாத்தம் அநுதாத்தம் சொரிதமென்கிற மூன்று சுரங்களும், இருக்கு யஜுஸ் சாமம்என்கிற வேதங்கள் மூன்றும்,காருகபத்தியம் ஆகவனீயம் தட்சிணாக்கினீயம் என்கிற மூன்று அக்கினிகளும், முக்குணங்களும், முத்தொழில்களும் ஆகும். இந்தமூன்றினாலும் மூன்றுவிரல் சந்துகளிலும் நியாசம் செய்தலாகிய அங்கநியாசத்தையும், உத்தி

இதயம், சிரசு, மூன்றிடத்தும் வைத்து அங்கநியாசம் செய்து இம்மந்திரத்தைப பத்துலடசம் செய்தால சகலசித்திகளு முண்டாகும். பரசிவன் அருளுண்டாகும. பாசம நீங்கும்; ஞானம் உதிக்கும், முத்தியும் சித்திக்கும.

ஐந்தாவது அத்தியாயம்.

காயத்திரியைக் கூறியது.

முனிவர்களே! காயத்திரி மஹாமந்திரத்தை அதன் அங்கத்தோடும் சொல்கிறேன் கேளுங்கள். காயத்திரியின் அங்கம் வியாகிருதிகள் ஏழுமாம அந்த வியாகிருதிகளுக்கு முறையே அத்திரி, பிருகு, குச்சர், வசிஷ்டர், கௌதமா, காசிபா, அங்கிரஸ் என்பவர்கள் ரிஷிகள். காயத்திரி உஷ்ணி அனுஷ்டுபு பிருகதி பங்தி, திருஷ்டுபு, ஜகதி இவ்வேழும் சந்தசு; அக்கினி, வாயு, சூரியன், குரு, வருணன், இந்திரன், விசுவேதேவர் இவர்கள் தேவர்கள். காயத்திரிக்கு விசுவாமித்திரர் ரிஷி; காயத்திரிச சந்தசு; சூரியன் தேவதை; பரமசிவன் அதிதேவதை; காயத்திரி சிரசுக்குப் பிரமதேவன் ரிஷி; சந்தசு அநுஷ்டுபு; பரமசிவனே தெய்வம. மூன்று பாதங்களும் ஆறு குட்சிகளும் ஐந்து சிரசுகளும, தீப்போன்ற நிறமுள்ள முகமும், வெண்ணிற மேனியும, வெண்டாமரை யிதழ் போன்ற கண்களும உடையவளாய் காயத்திரி விளங்குவாள். ஜபம் செய்யும்போது இப்படிச சொரூப தியானம் செய்யவேண்டும். ரிக்கு, யஜுஸ், சாமம் ஆகியமூன்று வேதங்களும் மூன்று பாதங்களாகும். கீழ்திசை முதலாவது வயிறு. தட்சணதிக்கு இரண்டாம் வயிறு. மேற்குத்திசை மூன்றுவது வயிறு. வடதிசை நாலாவது; ஊர்த்துவம் ஐந்தாவது;பாதாளம் ஆறுவதாம். பதினெட்டுப்புராணங்களும் நாபியாம்; பிரபஞ்சம் முழுமையும் சரீரமாம். ஆகாயமே வயிற்றி னுட்புறம். சந்தசுகளே ஸ்தனங்கள். தருமசாஸ்திரம் இருதயமாம். நியாயசாஸ்திரங்கள் புஜங்களாம். சாங்கியங்கள் இரண்டும் செவிகளாகும். சிட்சை, வியாகரணம், நிருத்தம் ஜோதிஷம், கற்பம் இவ்வைந்தும் சிரசுகளாகும். அக்கினியே முகம், மீமாம்சை இலக்கணமாகும். அதர்வணமே சேஷ்டையாம். பிரமதேவன் சென்னி! உருத்திரன் சிகை. விஷ்ணு இருதயம். இப்படிப்பட்ட காயத்திரி ஸ்தூலமாகும். வேதாந்த சாஸ்திரம்

சூட்சுமசரீரமாகும். சிவபிரான் அதற்கு அந்தரியாமி. இந்தக்காயி த்திரிமந்திர அக்கரங்களால் முறைப்படி நியாசம செய்து கொள்ள வேண்டும்.

காயத்திரியின் அங்கத்தைக கேளுங்கள். பாத அங்குஷ்டம் பரடு, கணைக்கால். முழங்கால், தொடை, குய்யம், அண்டம், இடுப்பு, நாபி,வயிறு,ஸ்தனங்கள்,இருதயம்,கழுத்து, முகம், கபோலம், மூக்கு,கண்கள்,புருவமத்தியம,நெறறி,பூர்வமுகம், தட்சிணமுகம், பச்சிமமுகம்,உத்தரமுகம,சிரசு,!இவ்விருபத்துநான்கும் அங்கங்கள்.•இந்தமந்திரத்தைத் தியானிக்கும்போது அதன் இருபத்துநாலு எழுத்துக்களுக்கும் நிறம் கூறுகிறேன் கேளுங்கள். முதலாவது சண்பகமலர். இரண்டாவது சாமளம். மூன்றுவது பிங்களவர்ணம். நாலாவது நீலமணிவண்ணம. ஐந்து ஆறு ஏழாவதாம் அக்கரங்கள் தீநிறமும், மின்னல் நிறமுமாகும் எட்டு ஒன்பது நட்சததிர நிறமாம். பத்தாவது முழுநீலம. பதினொன்றுவது சிவப்பு. பன்னிரண்டாவது சாமளம். பதின்மூன்று சுபபிரவாணம். பதினாலாவது மஞ்சள்வர்ணம். பதினைநதாவது சுப்பிரவர்ணம். பதினாறுவது பதுமராகநிறம். பதினேழாவது சந்திரவர்ணம. பதினெட்டாவது சுப்பிரவர்ணம்; பத்தொன்பதாவது இநதிரநீலம். இருபதாவது இரத்தவர்ணம. இருபத்தொன்றும் இருபத்திரண்டும் நீலோத்பல நிறமாம். இருபத்து மூன்றுவது சங்கம், முல்லை, சநதிரன் இவைகளைப்போன்ற நிறமாம், இருபததுநாலாவது தீபச்சுடர் வாணமாகும். இப்பொழுது சொன்ன நிறத்தின்படி யிருபத்துநாலு எழுத்துக்களையுந் தியானிக்கவேண்டும. இவ்வெழுத்துக்களுட் சில மஹாபாதகங்களைநீக்கும். சில உபபாதகங்களை நீக்கும். சிலமற்றப்பாவங்களை,ஒழிக்கும் அன்னதானத்துக்கு மேலான தானமில்லை. கொல்லாமைக்கு மேலான தவமில்லை. பரமசிவனுக்கு மேற்பட்ட தெய்வமில்லை;•இதைபபோலக் காயத்திரிக்கு மேற்பட்ட மந்திரமுமில்லை.

ஆகையினுல் இந்த மந்திரத்தைக் குரு முகத்தால் உணர்ந்துகொண்டு, தன்னுலியன்ற அளவு அவருக்குத் தட்சிணை யளித்து இந்த மந்திரத்தை இருபத்து நாலுலட்சம் செபித்து, நாலாயிரம், நெய்ஓமமும் செய்தால், அவன் செய்த மஹாபாதகங்க ளெல்லாம் ஒழியும. மந்திரசித்தியு முண்டாகும். எல்லாநன்மைகளும் சித்திக்கும். விடியுமுன் ஸ்நானம் செய்து தினந்தோறும் ஆயிரம் ஜபம் செய்தால் விருப்பமெல்லாம் நிறைவேறும். சூரியகிரண காலத்தில்

பசுவின் நெய்யில் கருங்காலிச் சமிதையால் ஹோமம் செய்தால் மிகுந்த திரவியமுண்டாகும். இந்த மந்திரத்தால் சூரியனுக்கு அர்க்கியம் கொடுத்தால் விரும்பின எல்லாம் கிடைக்கும். கோமயசூரணத்தை நெய்யினுல் ஆயிரம ஹோமம் செய்தால் பசுக்கள் மிகுதியாகக் கிடைக்கும. வெள்ளிய அரிசியால் ஓமம் செய்தால் அழகும் கற்புமுள்ள மனைவியை அடைவான். சந்தான பாக்கியமுண்டாகும். கலசத்தில்நிரப்பின நீரை எண்ணுயிரந்தரம் ஜபித்து ஸ்நானம் செய்தால் துர்க்கருக் கண்ட தோஷம் நீங்கும். பாலை அருந்தி விரதமிருந்து இலட்சம் ஜபமசெய்தால் அவமிருத்தியு நீங்கும். நெய்யை அருந்தி ஜபித்தால் விரும்பின கல்வியுண்டாம். நாபியளவு நீரில் நின்று கொண்டு இலட்சம ஜபித்தால் இராஜ்யம் கிடைக்கும். பலாசமலராமல் ஓமம செய்தால் மிகுநத செல்வ முண்டாம். வேதச்சமிதையால் ஓமம் செய்தால் மழைபொழியும். தேனுல் ஓமம் செய்தால் இராஜ்யம் கிடைக்கும். மீதனும் பாயசமும் கலந்து ஓமம் செய்தால பெண்கள் வசீகரமாவார்கள். நெய்யால் ஓமஞ்செய்தால சகல சித்திகளும் உண்டாகும. அன்னத்தால் ஓமம் செய்தால் தரித்திரம ஒழியும. பஞ்சகௌவியம அருந்தி இலட்சம ஜபம் செய்தால பூர்வஞான முண்டாகும். முழங்காலளவு தண்ணீரில் நின்றுகொண்டு கோடியுரு ஜபித்தால் ஜயமுண்டாகும். எருக்கம் சமிதையால் ஓமம் செய்தால் பிராமணர்கள் அல்லாத பகைவர் அழிவாகள். அவர் உருவத்தை மண்ணில் எழுதி அவருடைய பெயரை மார்பிலெழுதி அதன் தலையில் இருகாலையும வைதது நின்றுகொண்டு மனமொருமித்து ஜபித்தால் அந்தப்பகைவன் அழிவான். இதைக் குருமுகத்தாலுணர்ந்து செய்யவேண்டும். இல்லாவிடிற் கெடுதியுண்டாம். நெய், பால், எள்ளு, பஞ்சகவ்வியம் இவற்றால் ஓமம் செய்து உபஸம்ஹாரம் செய்யவேண்டும். மாவிலையா லோமஞ்செய்தால் சுரங்கணீங்கும். அரசின் சமித்தால் ஓமம் செய்தால் க்ஷயமுதலிய ரோகங்கள் தீரும். இந்தக்காயத்திரி ஜபத்தால் ஞானமுண்டாகும். ஓமத்தினுல் ஞானயாகம் சித்திக்கும். மோட்சமுண்டாகும் என்று சூதர் கூறினர்.

ஆறுவது அத்தியாயம்.

ஆத்மமந்திரங் கூறியது.

முனிவர்களே! ஆத்ம மந்திரத்தைச் சொல்கிறேன் கேளுங்களென்று சூதர் சொல்கிறார். இந்த மந்திரத்திற்கு பிரமா ரிஷி! காயத்திரி சந்தசு! பரமாத்மாவே தெய்வம்! சிவஞானமே சக்தி! பரமசிவமே பீஜம். இதனால் இந்த மந்திரம் சிவசக்திசொரூபமாம். களங்கமற்ற சித்தமுடையவர்களாய் இந்த மந்திரத்தைத் தியானிக்கும் போது அர்த்தநாரீசுவர முகூர்த்தமாகச் சிவபிரானைச் சிந்திக்கவேண்டும். ஒரு நாளைக்குப் பன்னீராயிரம் ஜபிக்கவேண்டும். அதனால் மஹாகொடிய பாவங்களெல்லாம அழிந்து போகும். இந்த மந்திரம் ஜீவாத்மாக்களுடைய சரீரத்திலுள்ள சகார அகார சொரூபமாம். ஆதலால் இதனைக் குரு முகத்தால் உபதேசம் பெற்று உணரவேண்டும. அறிந்து செய்த பாவங்களைக் கூட ஒழிக்கும் மகிமையுடையது. இந்த மந்திரத்திற்கு அசபாவித்தையென்று பேர். இதை உபதேசம் பெற்றவன் ஜபம செய்யாமலிருந்தாலும் ஜபம் செய்தவனே யாவான. அவனுக்குச்சகல சித்திகளுமுண்டாகும். தவிர இம்மந்திரம் ஜீவசிவவாசகமுமாகும். அகம என்னுமவாசகம் சிவனுக்குரியநாமம். "அம்" என்பதற்கு அர்த்தம் ஜீவாத்மாவேயாம். "ஸம்" என்பதற்குச் சிவபெருமானே அர்த்தமாம். பந்தமுடையவனாகத் தோன்றும சீவன் அநுபவப் பிரமாணத்தாலே சிவனேயாம்; இதிற்சந்தேகமில்லை. வேதங்களுமிப்படியே சொல்லும். இந்த இரகசியத்தைத் தெரிந்துகொள்ளுங்கள்.

பரமாத்மா சத்தியசொரூபன், பரிபூரணன், சிதசொரூபன், ஆனந்தரூபன். அகமஎன்னும்பதத்துக்கு அர்த்தமாகியஜீவாத்மா அழிவிருத்தியா யிருத்தலால் சத்தியசொரூபன். சனவாதி அவஸ்தைகளுக்குச் சாட்சியா யிருப்பதினாலேயும்,ஞாதம் அஞ்ஞாதமாம்பொருள்களை யுணர்தலாலேயும் கேவல சித்தென்று சிலர் சொல்வார்கள். அதுதகுதியல்ல. அவன் ஒருதிரவியமே;சேஷமானவன் அந்த ஆன்மா சடமோ,சித்தாருவனோ சேதனவுருவனோ என்றால் அவற்றிற்கெல்லாம் குற்றம் உண்டாதலால் ஆத்மா முக்கிய சித்துருவன் என்றே கொள்ளப்படுகிறான். பிரேமைக்கு ஆசிரயனாதலால் சுகசொரூபன். சர்வசாட்சியாயிருத்தலால் பூரணன். பூரணன் ஆதலால் ஞாதாஞ்ஞாதங்களை அவ்வப்படியே உணரமாட்டான். சத்துவப் பிரதான மாயோபாதிகனான சிவன் அசுத்த சம்சார

வர்ஜிதன். அகம்பதார்த்தமான சிவனும் சம்சாரவர்ஜிதன். ஏனென்றால், அதற்குச் சாட்சியாயிருப்பதினாலேயாம். குருமுகத்தினாலிதனை உபதேசம் பெற்று ஜீவபர பேதமற்று நிற்பவனே ஞானி. இந்தஞானத்தை அறியாதவருக்குச் சம்சாரம் ஒழியாது. ஹம்சம் என்னும் பேர்பெற்ற இந்த மந்திரத்தை உணராமல் முத்தியடைய முடியாது. இது எல்லாமந்திரங்களிலும் உத்தமமானது. சகல ஐசுவரியங்களையும் கொடுக்கும். இன்பத்தை எப்போதும் உண்டாக்கும். சிவபெருமான் கருணையை அடையச்செய்யும். ஜயம், கீர்த்தி, அருள் இவைகளை உண்டாக்கும். பிரமா விஷ்ணுக்களாலேயும் பூஜிக்கப்படுவது. இதை ஜபிக்கிறவன் உலகத்தில் ஒப்பற்றவனேயாம். இரேசக பூரகத்தைவிட்டுக், கும்பகம்மாத்திரமுள்ளவனாய் நாபிக்கந்தஸ்தானத்தில் பிராணாபான வாயுக்களைச்சமனாக்கித்திராவித்துச சந்திரமண்டல அமிர்தத்தை அருந்தி, இதயகமலத்திலே தீபச்சுடர்போல விளங்குகிற சிவபெருமானை அந்த அமிர்ததால் அபிஷேகம்செய்து, இந்த மந்திரத்தை ஜபித்தால் மூப்பு, பிணி, மரணம் இவைகளால் ஒருபோதும் பயமுண்டாகாது. தினந்தோறுமிவ்வாறு ஜபிக்கிறவன் அணிமாமுதலிய சித்திகளையிச்சித்தால் அவைகளை அடைவான். இந்த மந்திரத்தை யுணர்ந்து முத்திபெற்றவர்கள் அநேகர். இதை உபதேசிக்கிற குருவுக்குப் பயபக்தி விசுவாசத்துடன் பணிவிடை செய்யவேண்டும். குருவின் கருணையாலிதனை அறிந்துகொண்டு மெய்ஞ்ஞானத்தைப் பெறுவதால் சாதி முதலியவைகளும், வேத சாஸ்திரங்களும் தன்னை யறியாமல் ஒழிந்துபோய்விட்டாலும், குரு சேவையை மாத்திரம் விடக்கூடாது. பரமசிவனுடைய திருவடிக் கமலங்களைப் பெறுவதற்குரிய சாதனம் குருபக்தியேயாம். இது வேதத்தின் கருத்து. இதில் சந்தேகம் சிறிதுமில்லை.

ஏழாவது அத்தியாயம்.

பஞ்சாட்சரமகிமை கூறியது.

முனிவர்களே! பஞ்சாட்சர மந்திரமானது சகல போகங்களையுந் தரும். பந்தத்தை ஒழிக்கும். சிவஞானத்தைக் கொடுக்கும். இந்தப் பஞ்சாட்சரத்திற்கு முன் பிரணவத்தைச் சேர்த்தால் அதைச் சடாக்ஷரமென்று சொல்வார்கள். இதற்குப் பிரமாரிஷி

காயத்திரியே சந்தசு. பரமசிவனே தெய்வம். சிற்சக்தியே சக்தி. சிவசப்தமே பீஜம். அங்கநியாசம், கரநியாசம் செய்து முதலில் பிரணவத்தைச் சேர்த்து "நமசிவாய" என்று ஜபிக்கவேண்டும். இப்படி *ஜாபாலோபநிடதம் கூறுகின்றது. 'நம" என்பது நமஸ்காரம் என்று பொருள் தரும். "சிவ" என்பது பரமசிவனைக் குறிக்கும். சீவான்மா சிவனோடு அபேதமாயிருப்பதைக் கூறுகிறதே நமஸ்காரப்பொருளாம். இந்தப பஞ்சாட்சரத்தின் முடிந்த பொருள் சிவனுக்கு நமஸ்கரிக்கிறேன் என்பது. சிவசொரூபத்தை உணரவிரும்புகிற சீவர்களுக்கு அந்தச சிவத்தைத் தவிர வேறு பொருள் இல்லாமையால் பிரபஞ்சம் ஒன்றுமில்லை யென்பதே நகரத்திற் கருத்தமாகும்.மகாரத்திற்கு"மம" என்பது பொருள். பிரணவம்எல்லாப்பொருள்களையுமதரும். ஆதலால் இதுசிவவாசகமேயாம். சிவனுக் கந்நியமான வெல்லாம் பொய். விவகார தசையிலேயே பேதங்கள் எல்லாம் கூறப்படும். பரமார்த்தத்தில் கிடையாது. பிரத்தியட்சமா யுள்ள பிரபஞ்ச மில்லையென்பது எவ்வாறென்றால், சீவன் முத்தர் எல்லாம் சிவசொரூபம் என்பார்கள். அதனால் அஞ்ஞான தசையில் பிரபஞ்சம் உண்மையேயாம. ஞான தசையில் பிரபஞ்சம் பொய்யாகும். ஏனென்றால் அநத ஞானதிசையில் சிவம் ஒன்றே தோன்றும். பிரபஞசம தோன்றமாட்டாது. சகல கலைகளின் தாற்பரியங்கள் எல்லாம் இந்த மநதிரத்தில் அடங்கியிருக்கும்.

ஆயையால் *சற்குரு சேவைசெய்து இந்தச் சடாட்சர மந்திரத்தைப் பெற்றுக்கொண்டு தன்னால் கூடிய அளவு குருவுக்குத் தட்சிணை கொடுத்து, அவரிடம் செலவு பெற்றுக்கொண்டு மீண்டு முக்காலமும் ஸ்நானம்செய்து, திருநீறு கண்மணிதரித்து, கந்த மூல பலங்களையேனும், அவிசையேனும் ஆகாரமாகக் கொண்டு மலைச்சிகரம், நதிதீரம், சமுத்திரதீரம், சிவாலயம், மனிதசஞ்சாரமில்லாதவனம், இவைகளில் ஓரிடத்திலிருந்து கொண்டு, கிழக்கு, அல்லது வடக்குமுகமாய்ச் சுகாசனத்திலிருந்து கொண்டு, இந்திரியங்களை அடக்கிக் களங்கமற்ற மனமுடையவனாய், மூன்று பிராணாயாமஞ்செய்து, ரிஷி, சந்தசு, தெய்வம், சக்தி, பீஜம், காநியாசம், அங்கநியாசங்கள், தியானம் இவைகளைச் செய்து, இருதயத் தாமரை மத்தியில், பூர்வபாக தளத்துச்சியில், வலப்பாகக் கேசரத்தில், மேற்குப் புறப்பொகுட்டில் விளங்குகிற, சூரியசந்திர மண்

டலமத்தியில் மின்னலைப்போலப் பிரகாசிக்கிற பரசிவனைச் சிந்தித்து, இந்த மந்திரத்தை ஆறு இலட்சம் ஜபிக்கவேண்டும். பிறகு இலட்சம் தர்ப்பணம் செய்யவேண்டும். அதன்பின் நெய், பால், பலாசமலர் இவற்றில் எதனாலாவது ஓமஞ்செய்யவேண்டும். இப்படிச்செய்தால் மந்திரசித்தியாம். சகல போகங்களும் உண்டாகும். முத்தியும் சித்திக்கும். ஸ்ரீ பரமேசுவரனுடைய சொரூபத்தைச் சிந்தித்தாவது, சிவத்தினோடு அபேதபாவனை செய்தாவது இம் மந்திரத்தைச் செபிக்கவேண்டும்.

எப்போதும் பன்னீராயிரம் தடவை பக்தியுடன் ஜபிக்கிறவன் சிவஞானத்தைப்பெற்று பந்தமொழிவான். முத்திசேர்வான் உபதேசம்பெற்றநாள் முதலாக நாள் ஒன்றிற்கு ஐந்நூறு ஜபிக்கிறவன் மகேசுவர சாரூபம்பெறுவான். நூறுஜபம செய்கிறவன் ருத்திர சாரூபம் பெறுவான. எண்பது ஜபம்பண்ணுகிறவன் விஷ்ணு ஆவான். அறுபதுஜபம செய்தால் பிரமபதத்தைப் பெற்று வாழ்வான். நாற்பது ஜபமசெய்தால் வரம் கொடுக்கும் சக்தியை யடைவான். இருபது ஜபம்பண்ணினால் தீர்க்காயுசு பெறுவான். பத்து ஜபம் பண்ணினால் அறுதொழிலும் சித்திக்கும். இருதயகமலத்தில பரமசிவனை யிம்மந்திரத்தினாலே பூஜிக்கவேண்டும். சூரியமண்டலத்திலாவது, சந்திர மண்டலத்திலாவது, அக்கினிமண்டலத்திலாவது, விக்கிரக சொரூபங்களிலாவது பூஜைசெய்ய வேண்டும். இந்தச சடாக்ஷர மந்திரத்தினாலேயே சோடசோபசாரங்களும் செய்து பூஜிக்கவேண்டும். இப்படிப் பூஜிப்பவர்களுக்குச சகல சித்திகளு முண்டாகும். போக மோட்சங்களும் உண்டாகும்.

எட்டாவது அத்தியாயம்.

மானத யாக முறைமை கூறியது.

விக்கிரமாமைகளுக்கு அதிகமாய், உபாதிகடந்து நிற்பதாலும் அந்தக்கரண விருத்திக்கு விஷய மாகாமையாலும, காரணாதிகளுக்குப் பிரத்தியக் ஷதமா யிருப்பதாலும், சர்வசாட்சியா யிருப்பதாலும், சிவசொரூபம சிந்திப்பதற்கு அரியதாகும். ஆகையால் நிஷ்கள சொரூபத்தை விட்டுச சகள சொரூபத்தியானமே செய்யவேண்டும். வெண்மை நிறமுடையவராய், உமாதேவியாரை பாகத்தில் உடையவராய், சந்திர சேகரராய், நீலகண்ட முடையவராய், பிர

சன்னமான முகமுடையவராய், திரிநேத்திர முள்ளவராய், வரதாபயகரமுமுள்ளவராய், விசித்திரமான மகுடம் பூண்டவராய், சர்வாபரணங்களும் அணிந்தவராய், சகல இலக்கணங்களும் உள்ளவராய், திருநீறு புனைந்தவராய், சதுர்ப்புஜ முள்ளவராய், மான் மழு தரித்தவராய்,பிரகாசிக்கிற சிவபெருமானது திவ்விய சொரூபத்தைச் சிந்தித்தால் அவர்களுக்குப் போகம் மோட்சம் இரண்டும் உண்டாகும். அந்தக்காண விருத்தி, தமப்பரிணாம அந்தக்காணவிருத்தி, மாயை, அவித்தையென்கிற உபாதிகள் இல்லாமலிருக்கிற சிவசொரூபத்தைச் சுவப்பிரதானம், அசுவப் பிரதானம் சமப்பிரதானம் என்பனவைகளில் ஒன்றைத் தியானிக்கவேண்டும். சுத்தமான மனம் உடையவன் சுவபபிரதான தியானஞ்செய்வான். அழுக்குவன் அசுவப்பிரதான தியானம் செய்வான். மத்திமனுயுள்ளவன் சமப்பிரதான தியானம் செய்வான். இவற்றுள் தனகிசைந்த ஒன்றைத் தியானிககவேண்டும். பரமசிவனுடைய சத்தியினிடத்தில் உற்பத்தியான சத்துவம், இராஜசம், தாமசம் என்கிற முக்குணவடிவினரான ருத்திரன், விஷ்ணு, பிரமன் இவர்களையும் தக்கபடி தியானிக்க வேண்டும். சூரிய சந்திரர்களையும், மற்றத் தேவர்களையும் தகுந்தபடி தியானிக்க வேண்டும். சகல அண்டசராசரங்களையும் சிவசொரூப மாகவே கருதித் தியானிக்க வேண்டும். அசுவமேதம் முதலிய யாகங்களும் இந்த மானச யாகத்துக்கு ஒப்பாக மாட்டாது. இவனுக்குலகில் ஒப்பில்லை.

ஒன்பதாவது அத்தியாயம்.

ஞானமகிமை கூறியது.

முனிவர்களே! ஞானயாகத்துக்கு ஒப்பாக ஒன்றும் கிடையாது. அந்த ஞானம் பலவகையாகச் சொல்லப்படுகின்றது. சிவஞானம் ஒன்றாகவே யிருந்தாலும் மாயையாலும், மாயாகாரியங்களாலும் பலவிதமாகும். சிவசத்தி விசுத்த சத்துவ மாயா சொரூபமாய்ப பரிணமிக்கிறபோது, அந்த உபாதியோடு கூடியிருக்கிற சிவன் என்கிற ஞானம் சிறந்தது. அவித்தை யென்கிற மாயையோடு கூடியிருக்கிற சிவஞானம் சிவஞானமாம். அந்த ஞானம் அருத்தத்தால் பிரதீதி, அதனால் முக்கியம் என்று இருவகைப்படும். அவித்தையோடு கூடினது சிவஞானம், பரமார்த்தத்தினாலே

இரண்டாவது
மஹாவிஷ்ணு கருவமடங்கின
அத்தியாயம்.

நைமிசவாசிகளே! மலர்மகள் தழுவ க்ஷீராப்தியின்கண் அறிதுயிலமர்ந்த திருமால் அஞ்ஞான வசப்பட்டுத் தானே பிரமமென்று கருதி யிறுமாப்படைந்தார். தனக்கு மேலானவர் ஒருவரு மில்லையென்றும், தாமே சகல சராசரங்களுக்கு மிறைவனென்றும் கருதி மயங்கினார். அவருடைய அதிகாரத்துக்குட்பட்ட தேவர்களெல்லாரும் அதை மெய்யென்று நம்பி அவருக்கு அடங்கி அவரை வழிபட்டு வாழ்ந்தார்கள். சர்வாந்தரியாமியாகிய பன்னகாபரணன் திருமாலின் கருத்தை யுணர்ந்து, அவரிடத்துள்ள தமது அதிகார சக்தியை விலக்கிவிட்டார். திருமாலும் மற்றைய தேவர்களும் தங்களுடைய நிலைமைக்கு வருந்தித் துக்கித்தார்கள். அதுகண்ட காளகண்டமூர்த்தி நந்திதேவரைத் திருமாலிட மனுப்பினார். நந்திதேவர் வருவதை அறிந்த நாராயணமூர்த்தியானவர், அவரது திருவடிகளில் வணங்கி, ஒரு அழகிய பீடத்தின்மேலவரை உட்காரச்செய்து பூசித்துப் போற்றினார். நந்திதேவர் திருமாலைப்பார்த்து இலட்சுமிகாந்தா! நீர் உம்மையே பிரமப்பொருளென்று கருதி யிறுமாந்து கயிலைநாயகனை மறந்துவிட்டீர். இப்பொழுது உமது நிலைமை என்னமாயிற்றுப் பார்த்தீரா? நீங்கள் பூர்வஜன்மங்களிற் செய்துள்ள சிவபூஜா பலத்தினால் அல்லவோ இப்படிப்பட்ட பெரும்பதவிகளைப் பெற்றீர்கள்? ஸ்ரீமஹாதேவனே பரப்பிரமமென்பதற்கு வேதங்களே சாக்ஷியாம். சர்வப்பிரபஞ்சமும் அந்தப் பரசிவனுடைய சந்நிதியில் தோன்றி நின்றழியும். இதனை நீர் அஞ்ஞானத்தினாலே மறந்துவிட்டீர். இனி உமது கருவத்தைவிட்டு மஹாதேவனைப் பூஜித்து அவர் கருணைக்குப் பாத்திரராய் வாழக்கடவீர்'' என்று உபதேசித்து நந்திதேவர் கைலைக்கு எழுந்தருளினார்.

நந்திதேவர் போனபிறகு, ஸ்ரீமஹாவிஷ்ணுவானவர் அகங்காரம் நீங்கி, சிவபெருமானை முறைப்படி பூசனைசெய்து பக்தரானார். இப்படித் திருமால் நெடுங்காலம் பக்திபுரிகையிலொரு நாள், ஸ்ரீ பரமேசுவரன் காளகண்ட திரிநேத்திரம் விளங்க மான்மழு தாரியாய், ஹிமாசல புத்திரியாகிய உமாதேவியுடன் விருஷப வாகனத்தின்மேலெழுந்தருளினார். தேவர்கள் மலர்மாரி பெய்தார்கள். முனிகணங்கள் வாழ்த்தித் துதித்தார்கள். சிவ

முக்கியஞானம் என்று சொல்லப்படும்; அவித்தியா காரியமாகிய ஸ்தூல, சூட்சும சரீரங்களோடு கூடியிருக்கிற அந்தச் சிவ சைதன்னியமே அப்பிரதிதியினால் முக்கியமென்று சொல்லப்படும். அந்தக் காரணத்தோடு அபேதமாகக் கொள்ளப்படுகிற அத்தியாசத்தினாலே, அந்தக்கரண சம்பந்தியான சிவன் சைதன்னியம் ஞாதுரு முதலிய பேதங்களை அடைகின்றது.

அந்தக்கரணம் காலத்தாலும் கருமத்தாலும் பிரமாணம், பிராந்தி, சந்தேகம் என்று பலவிதமாகத்தோன்றுகின்றது. இந்திரியங்களினால் அறியப்படுகிற ஞானம் பிரமாணம். ஒரு வஸ்துவை மற்றொரு வஸ்துவாகக் காணுதல் பிராந்தி ஒரு பொருளினிடத்தில் மாறுபட்ட இருகுணங்களா லுண்டாகும் மயக்கம் சந்தேகமாம். இப்படியே, இதுவே யென்கிற புரணம் நிச்சய ஞானமாம். இந்தப் புரணஞான சம்பந்தமே பிராமாணியமாம். பிரமாணஞான காரணக்கூட்டம் அறுவகையாம். மனதுக்குத் தெரிந்த பாவ ஞான காரணக்கூட்டம், ஒன்றால் அளந்து அறியும் பாவஞானக் காரணக்கூட்டம், அனுபலத்தியால் உணரும் ஞானம், அபாவ ஞானமென்னப்படும். இந்திரியங்களால் உணரப்படுவது பிரத்தியட்சஞானமாம். வியாத்தி ஞானத்தால் அறியப்படுவது அனுமானமாம். சமானஉணர்ச்சியால் அறியப்படும் ஞானம் உபசமான ஞானமாகும். உபபத்தியா லுண்டாவது அருத்தாபத்தியாம். தாற்பரியமுள்ள சத்தத்தால் (சொல்லால்) உணரப்படுவது சப்தஞானமாம். சப்தஞானம், அட்சரம, பதம், வாக்கியம் என்று மூன்று வகைப்படும். அட்சரங்களே வாக்கியங்கள் என்று சிலர் கூறுவார்கள். சிலர் பதங்களே வாசகமென்று கூறுவார்கள். வாக்கியங்களே அருத்த வாக்கியங்களென்றும், அட்சரங்களே பதங்களாயுமிருக்கும். அட்சரங்கள் இணைந்த பதங்களாயும் இருக்கும். பதங்களின் கூட்டம் வாக்கியங்களாம். அந்த வாக்கியம் பிரதான வாக்கியம், குணவாக்கியம் என்று இருவகைப்படும். முதலாவது மஹாவாக்கியம் என்று சொல்லப்படும். மற்றதை அவாந்தர வாக்கியம் என்பர். இந்த இரண்டு வாக்கியங்களும் ஒரு பொருளையே உடையனவாதலால் ஏகவாக்கியமாம். பதங்கள் சத்தியாலே அருத்த வாக்கமாம். வாக்கியங்கள் தாற்பரியத்தாலே அருத்த போதங்கள் என்னப்படும். தாற்பரியம் ஆகாதாற்பரியம், அவாந்தர தாற்பரியம் என்று இருவகையாம். முதலாவதின் சேஷமே அவாந்தர

தாற்பரியமாம். வாக்கியங்கள் நிஷேதவாக்கியம், விதிவாக்கியம், சித்தார்த்த போதக வாக்கியங்கள் என்று மூவகைப்படும். விதி நிஷேதவாக்கியங்கள் கர்த்தவ்யம் (செய்தல்), அகர்த்தவ்யம் (விலக்கல்) என்றவிஷயமாம். சித்தார்த்தபோதக வாக்கியம் இலௌகிகம் வைதிகமென இரண்டுவிதமாகும். இவைகளும் நிவர்த்தம், நிவர்த்தகம் என இரண்டாகும். பிரத்தியக்ஷமுதலான ஐந்தும், நிஷேத விதிவாக்கியங்களும் சிவசொரூபத்தை விளக்கா. சிற்சொரூபமான பரமாத்மா பிரமாண கோசர விஷயங்களுக்கு வேறாயிருத்தலால் அவைகளால் அறியப்படுவதல்ல. வைதிகமான சித்தார்த்த வாக்கியத்தினாலே மாத்திரம் பரசிவனது உண்மைச்சொரூபம் அறியப்படும். இந்த வேதாந்தவாக்கியமே நிரதிசயானந்த சிவசொரூபப் பிராப்திக்குச் சாதனமாகும்; பந்தத்தை ஒழிக்கும். பந்தமியல்பானது என்றால் எத்தனை ஜன்மம் எடுத்தாலும் அது ஒழியாது. எது எந்தப் பொருளுக்குச் சுபாவகுணமோ அந்தக் குணம் அந்தப்பொருள் நாசமானால்தான் தானும் நாசமாகும். ஆகையால் பந்தம் இயல்பென்பது பொருந்தாது. பிராந்தியினால் கற்பிக்கப்பட்டதேயாம். ஆத்மாபலவாகக் காணப்படுவதும், சீவான்மா பரமான்மா என்கிறபேதமும் உபாதியினாலேயே அல்லாமல் சுபாவத்தில் இல்லை. எப்படியென்றால் கடமுதலியவற்றின் சம்பந்தத்தால் ஆகாயம் பேதப்படுவது போலவாம். வேதாந்த வாக்கியங்களெல்லாம் பரமசிவன் ஏகனே என்று கூறுகின்றன. சித்துருவத்தாலாவது சைத்திய உருவத்தாலாவது பேதம் கற்பிக்கப்படவேண்டும். அது சம்பவியாது; சித்துக்குச் சித்து ரூபத்தால் வேறுபாடு உண்டாவதில்லை. சைத்தியத்திற்குச் சைத்தியரூபத்தால் பேதம் வருமேயன்றிச் சித்துகருவருவதில்லை. பரசிவம சின்மாத்திரமேயன்றிச் சைத்தியம் அன்று. சிலர் பரான்மாவிற்குப் பேதம் கூறுவர்; அது சரியல்ல. பேதங்களுக்கு அந்த ஆன்மா சாதனமாய் அவற்றிற்குச் சாட்சியாயிருக்கும். ஆதலால் அசாதியான அந்த ஆன்மாவுக்குப் பேதமுண்டாக மாட்டாது. ஆதலால் ஆன்மாவினிடத்தில் காணப்படுகிற பேதம் பிராந்தியினாலேயாம் என்று உணர்ந்து கொள்ளுங்கள். ஒருபொருளுக்குச் சுபாவகுணத்திற்கு மாறாக அதனிடத்தில் காணப்படுவது எல்லாம் உபாதியாலேயன்றி வேறல்ல. எப்படியென்றால், வெண்மை நிறமுள்ள பளிங்கினிடத்தில் சம்பந்தத்தால் அன்றிச் செம்மை முதலிய நிறங்கள் காணப்படுவதில்லை. அது போல ஏகமான ஆன்மாவுக்குப் பேதம் பிரா

ந்தியாலேதான். கடாதி உருவங்களுக்குப் பேதங்கூறிப் பரமான் மாவிற்குப் பேதங் கூறப்படவில்லை. கடாதிகளுக்குப் பேதம் கூறு வதும் விவகார திசையிலேயே யன்றிப் பரமார்த்தத்தில் இல்லை. பரமார்த்த சத்தியமாயினதால் ஏன் கூடாது என்னில் அது ஒரு பொருளாகவும், குணமாகவும் கூறமுடியாமை யாலேதான். அன் றியும், அது ஒருவஸ்துவை அபேட்சித்தல்லாமல் தானே அறி விற்கு விஷயமாவதில்லை. ஆகையால் அதை உரு என்று சொல்லக் கூடாது. அன்னியமான வஸ்துவிற்கு, அன்னிய வஸ்துவுடன் பே தங் கூறப்படும். அப்போதுதான் அன்னியத்துவம் வரும். அன் றியில்லை. இப்படி ஒன்றோடொன்று கலந்திருத்தலால் அது சுபாவ குணம் ஆகமாட்டாது. இப்படியே வேதாந்த வாக்கியங்கள் எல் லாம் ஆத்மா ஏகனேயென்றும், துவிதம் மாயையால் உண்டாவ தென்றும், அந்த ஏகத்தன்மையை உணர்ந்தவனே பரமானந் தத்தை அடைவானென்றும் நிச்சயமாய்க் கூறுகின்றன. ஆகை யால் தர்க்கத்தாலும், மஹா வாக்கியங்களாலும், அனுபவத்தா லும், வஸ்துவை நிச்சயித்து அறிகிறவனுக்குச், சொப்பனம் பொ ய்யாவதுபோலப் பந்தமும் ஒழியும். பேதவழியிலிருந்து முத் தியை அடைவது கூடாது. தன்னிடத்தில் பல பூதங்களையும், பல பூதங்களினிடத்தில் தன்னையும் காண்பவனுக்குப் பந்த முண் டாகாது. அத்துவித ஞானத்தாலேயே அநேகர் முத்தியடைந்தா ராதலால் இப்படிப்பட்ட ஞானவேள்விக்கு ஒப்பானது வேறொன் றுமில்லை. உயர்வானதுமில்லை. இந்த ஞானயாகத்தைவிட்டுக் கரும யாகத்தை விரும்பிச் செய்கிறவர்கள் ஒளியைவிட்டு இருளை நாடு கிறவர்கள் போலாவார்கள். இது தேவர்களுக்கும் கிட்டாதது. சிவபக்தியுடையவர்கள் சிவன் அருளால் ஞானவேள்வியை அடை வார்கள். மற்றவர்களுக்கு அரிது. இந்த ஞானயாகத்தை அறிந்த வர்களுக்கு யாவும் பிரமமாய்த்தோன்றும். இந்த ஞான வேள்வி யின்மகிமையைச்சிவபெருமானை யன்றி மற்ற எவராலும் சொல்ல முடியாது.

பத்தாவது அத்தியாயம்.

ஞானம்அடையும் முறைகூறியது.

வேதம் ஸ்மிருதிமுதலிய உத்தமநூல்கள் பாவம் புண்ணி யம் அவைகளிற் ஆண்டாகும்பயன், சுவர்க்காதி புவனங்கள்

உண்டு என்றும், பூதப்பிரேதங்கள், எமன் எமதூதர்கள், யட்சர் கிருதா, இந்திரன் முதலான தேவர்கள் இவர்களும் உண்டு என்றும் கூறுகின்றனர். ஆஸ்திக புத்தியுள்ளவன் ஞானமுள்ளவன் என்று சொல்லப்படுவான். பஞ்ச பூதங்களுக்கும் தலைவர்களாயும், பௌதிக சிருஷ்டி முதலியவைகளுக்குக் காரணர்களாயும் உள்ள பிரமா, விஷ்ணு, உருத்திரன், மகேசன், சதாசிவன் என்னுமிவர்கள் முறையே, ஒருவருக்கு ஒருவர் உயர்ந்தவராவார். பிரமனைவிட விஷ்ணுமேலானவர். விஷ்ணுவைவிட உருத்திரன் உயர்ந்தவர். உருத்திரனைவிட ஈட்சணஉபாதி விசிஷ்டபரசிவசைதன்னியம் உயர்ந்தது. அதைவிடச் சாவகளுமுடைய சைதன்னியம் உயர்ந்தது. அதைவிட உபாதிச் சைதன்னியம் உயர்ந்தது. அதைவிட நிருபாதிக சச்சிதானந்த பரசிவம் மேலானதென்றும் அறிந்துகொண்டவன் ஞானத்தைப் பெறுவான். சீவன் உண்டு! அந்த ஜீவன் தேகத்துக்கும், பிராணன் இந்திரியங்களுக்கும் மனமாதிகட்கும் வேறானவன். ஜாக்கிர ஸ்வப்ன சுழுத்திகளுக்குச் சாட்சியாயிருப்பான். அந்தஜீவன் சத்துசித்தானந்த சொரூபன்; த்வம் அகம் என்னும் பதப்பொருளாயுள்ளவன். காரணவிருத்திக்குச் சாட்சியிருக்கிறவன். பந்தமில்லாத சைதன்னியமாவான் என்று ஒருவன் தெரிந்துகொண்டு, இந்த ஆத்ம சைதன்னியமும், பரசிவ சைதன்னியமும் ஆகிய இரண்டும் ஒன்றே. வேறல்லவென்றும் தாக்கத்தாலும், அளவைகளாலும், சுவானுபவத்தினாலும் எவன் தெரிந்துகொள்கிறானோ அவன் மெய்ஞ்ஞானத்தைப் பெறுவான். முனிவர்களே! இந்த இரகசியத்தைத் தெரிந்து கொள்ளுங்கள் என்று சூதர்சொன்னார்.

பதினோராவது அத்தியாயம்.

பிரபஞ்ச ஆரோபம் கூறியது.

KAHAMAHOPA DR. U.V.S. IYER BESANT NAGAR MA

சத்துச சித்தானந்த சொரூபமான பரபிரமம் எந்நாளும் ஏகமே. அது அனாதியாய், மாயா சம்பந்தத்தால் ஸ்வப்பிரகாசம் மழுங்கி ஒளியில்லாததுபோல்த் தோன்றும். சத்தாயிருந்தும் அசத்தைப்போலவும், ஏகமாயிருந்தும் அநேகம்போலவும், சமுசாரமில்லாதிருந்தும் சமுசாரிபோலவும் காணப்படுவன். அந்தப் பரமாத்மாவின் அகண்ட சொரூபத்தில் அதன் சத்தியால் சேதன

சேதன வேறுபாடு கற்பிக்கப்பட்டது. அந்தச் சேதன சொரூபத்தின் சர்வக்ஞசொரூபம் முதல் விருட்சாதிகள் வரைக்கும் உள்ள பேதங்கள் அந்தச்சத்தியால் உண்டானவைகளேயாம். அவற்றின் உயர்வு தாழ்வுகளு மப்படியேயாம். அந்த அசேதனத்தினின்றும் வாக்கு ஆகாசம் முதலானவைகளும் உண்டாம். இவைகளெல்லாம் விவகாரிகசத்தியாலே யுண்டாக்கப்பட்டன. வருணங்கள், ஆசிரமம் முதலாகக் கூறப்பட்டவைகளும, விதிவிலக்கு முதலியவெல்லாம் கற்பனையேயாம். சிவம் ஒன்றே சத்தியம் என்று அறிந்துகொள்ளுங்கள்.

பன்னிரண்டாவது அத்தியாயம்.

பராசத்தி விசாரம் உரைத்தது.

சின்மாத்திரத்தை ஆசரித்திருக்கிற மாயையினாலே சக்திசொரூபமாயிருக்கிற சம்விது வடிவான பராசத்தி பரசிவத்தைப் போலவே சின்மாத்திரமேயாம. ஆகையால் நிருவிகற்பமாயும் சுயம்பிரகாசமாயும சத்திய ஞானனந்த சொரூபமாயும், சம்சார பந்தத்தை ஒழிப்பதாயும, சிவத்துக்குவேறில்லாததாயும, சகல பிராணிகளுக்கும சுகத்தைககொடுப்பதாயும் இருக்கும். பரசிவம் காரணவுபாதி, சாவகளுத்துவ வுபாதிகளுடனும் ஈக்ஷண வுபாதியோடும் கூடியிருக்கிறபோதும், உருத்திரன், திருமால், பிரமன், மகேசன், சதாசிவன் என்பவர்களாயிருக்கும்போதும், இரணிய கர்ப்பனும் சூத்திராத்மாவாயும் இருக்கும்போதும், விராட்முதலாயும், திக்குப் பாலகராயும், தேவராயும், மனிதராயும், மற்ற பிராணிகளாயும், மரங்களாயும், நதி நதம் மலைகளாயும், கடலாயும், இருக்கிறகாலத்திலும் அவ்வம் மூர்த்திகளுக்கு உரியசத்திகளாக விளங்கும். அந்தச் சத்தியை இல்லாமல் சிவத்துக்கு யாதொரு தொழிலுமில்லை. சிவமின்றிச் சக்தியுமில்லை. சக்தியையின்றிச் சிவமுமில்லை. இப்படி அபேதமாகக்கருதுகிறவன் ஞானியாவான். பேதமாக நினைப்பவன் நரகத்தில் விழுவான்.

இந்தச் சிவமும் சக்தியும் சகல ஜீவாத்மாக்களுக்கும் தந்தையும் தாயுமாம். லோகமாதாவான அந்தச் சக்தியைத் துணையாகக்கொண்டு உபாசனை செய்கிறவர் இஷ்டகாமியார்த்தங்களைப் பெறுவார்கள். துன்பத்தை அடையமாட்டார்கள். பிரமா விஷ்ணு

முதலானவர்களும் இந்தச்சத்தியின் அனுக்கிரகத்தினாலேயே சகல போகங்களையும் பெற்று வாழ்கிறார்கள். சைவர், வைணவர்களும் பௌத்தர், சமணர்களும் இவர்கள் இந்தச் சத்தியை எப்படிக் கருதி வணங்குகிறார்களோ அம்மாதிரியாகவே அவர்களுக்குத் தோன்றி அனுக்கிரகிக்கும். இந்தச் சத்தியும் ஜடசத்தியாகிய மாயையும், சேர்ந்து பிரபஞ்சமும் அவற்றின் பேதங்களுமாம். அஸ்தி நாஸ்தி என்று சொல்வன எல்லாம சிவமேயென்று அறிபவன் சிவமேயாவான். பூரணசொரூபமே மாயையால் அபூர்ணமாய்த் தோன்றும். அந்தமாயையும் கூடபூரணமென்று உணர்கிறவன் பூரணனேயாவான். தான் என்கிற ஆன்மாவும், பல உலுகங்களும், சீவனும், ஈச்சுவரனும், மாயாசததியும் வேறல்ல. அபேதமேயாம். பந்தமுள்ளவனுக்கே விதிவிலக்குகள் எல்லாம். மண்சுத்தமான தாயிருந்தும் கட முதலியவையான போது சுத்தம் அசுத்தமென்று கூறப்படுவதுபோல் எல்லாம் சுத்தமாயும் சிவசொரூபமாயுமிருந்தும் மாயையால் சுத்தம் அசுத்தமென்று கூறப்படுகின்றன். ஆத்மஞானிக்கு விதிவிலக்குகள் என்கிற விவகாரங்களில்லை; ஆத்மஞானத்தை உரைக்க அரியது.

பதின்மூன்றவது அத்தியாயம்.

பஞ்சபிரம விசாரம் கூறியது.

சத்துச்சித்து ஆனந்தமே வடிவாய், விகாரமற்றதாய், ஏகமாயுள்ள அபரசிவம் தனது சிற்சத்தியாலே ஈசானம், தற்புருஷம், அகோரம், வாமதேவம், சத்தியோஜாதம் என்னும் ஐந்து பேதங்களாம். இவ்வைந்தும் சத்தம், பரிசம், இரசம், உருவம், கந்தம், என்று சொல்லப்படுகிற ஐந்தாய், பூமிமுதலான பூதங்களுக்குத் தெய்வமாய், சதாசிவன், மகேசன், உருத்திரன், விஷ்ணு, பிரமா என்கிற ஐந்து தேவர்களாய், ஆகாயம், வாயு, அக்கினி நீர், மண் என்கிற பூதம்ஐந்தாய், இவைகளுக்குத் தெய்வமாய், செவி, மூக்கு, கண், வாய், மெய் என்னும் இந்திரியங்களாய், திக்கு, மருத்து, அக்கினி, வருணன், பூமி என்கிற ஐந்து பேதங்களாய், இவற்றுக்குத் தெய்வமாய், வாக்கு, பாணி, பாதம், உபஸ்தம், பாயுர் என்கிற கருமேந்திரியங்கள் ஐந்தாய், அவற்றின் தெய்வங்களான விஷ்ணு இந்திரன் அக்கினி பிரமன் சூரியன் ஆகிய ஐவர்களாய்

புத்தி, சித்தம் அகங்காரம் என்னும் இவைகளுக்கு மூலமான அந்தக்கரணமாகிய ஐந்துமாய், அவற்றின் தெய்வமான சந்திரன் குரு உருத்திரன் உமை இரணியகருப்பன் என்கிற ஐவராய், பிராணன் அபானன் வியானன் உதானன் சமானன் ஆகிய வாயுக்கள் ஐந்தாய், அவற்றின் தெய்வமான சூத்திராத்மா காரணவாயு அக்கினி விசுவசிருஷ்டி விசுவயோனி என்கிற ஐவராய், இருக்கின்றன என்று அறிகிறவனே மெய்ஞ்ஞானியாவான்.

ஆகாசமுதலிய பஞ்ச பூதங்களினுமுள்ள சத்துவகுணம் சாந்தியாதீதகலை, சாந்திகலை வித்தியாகலை பிரதிஷ்டைகலை நிவர்த்திகலையாகிய ஐந்தாம்; இராஜதகுணம் சலனம் பரிசலனம் பிரக்கிரமம் பரிசிலனம் பிரசாரம என்னும் ஐந்துகிரியைகளாம்; தமோகுணம் சாதகம பாதகமஉத்தம் மோதகம பஞ்சகம்என்றுஐந்தாம். இவைகளும் ஈசானமுதலானஐந்துமாகும்என்று உணர்ந்துகொள்பவனே ஞானி. பரசிவன மாயைபால ஐந்து உருவமகொண்டான். அந்தமாயை அசாத்தியமான செய்கைகளைச்செய்யும்; அதனால ஜககாரணததுவம முதலானவைகள் எல்லாம அந்தப பரசிவத்துக்கு உண்டாயின. நானே அவன் அவனேநான் என்று வேதம் சொல்லும். இதையுணாநது மோகமறறு இருப்பவனே உத்தம ஞானி. அந்தப் பிரமத்தினிடத்தில் மோகமிராது, ஆகையால் இவை யெல்லாவற்றையும் விவேகத்தினாலே பரசிவமாகக் காண்பவனே ஞானியாவான். சம்சாரபந்தம் ஒழிவதற்கு இந்த வேதாந்த ஞானத்தையின்றி வேறுமார்க்கம் கிடையாது.

தன்னுடைய சிற்சத்திக்கு விரோதமாயிருக்கிற இராகத்துவேஷாதிகளைத் தொலைப்பதற்கு வேதாந்தஞானம் வஜ்ராயுதமாகும். சமுசாரமாகிற கோடையால் வாடினவர்களுக்குச் சிவஞானமாகிய அமிர்தம்தான் சாந்தியை உண்டாக்கும். தன்னாலே கற்பிக்கப்பட்டுள்ள எல்லாம் சுயசொரூபம் என்று தெரிந்துகொண்டால் அவைகளைத்தன்னிடத்தில் ஒடுக்கிக் கொள்ளலாமென்றுவேதாந்தம் கூறுகின்றது. சிலந்தி நூலை யுண்டாக்கி மீண்டுந் தன்னிடத்தில் ஒடுக்கிக் கொள்வதுபோலவும், விருட்சாதிகள் எல்லாம் மண்ணில்தோன்றி மீண்டும் அதில் ஒடுங்குவது போலவும், பரசிவம் பிரபஞ்சத்தைத்தன்னிடம்தோற்றுவித்து மீண்டும்ஒடுக்கிக்கொள்ளும். ஜாக்கிரம் உண்டானபோது சொற்பனஉலகம் ஒழிந்துபோவதுபோலச் சுயசொரூபஞானத்தால் பிரபஞ்சம் ஒழியும். உலகவாச

னையாலும், சாத்திரவாசனையாலும், தேகவாசனையாலும் பிரதிபந்தமுண்டாகும். சிலருக்குப் புண்ணிய விசேஷத்தினால் உண்டானாலும் பரசிவானுக்கிரகமில்லாவிட்டால் பிரதிபந்த முண்டாகும். பரசிவானுக்கிரகத்தால் பிரதிபந்த மில்லாமல தத்துவஞானத்தை யடையலாம். சிவபெருமான் ஒருவரே ஞானத்தை அளிப்பவர். விஷ்ணு பிர்மா முதலானவர்கள் ஞானத்தை அருளும் வல்லமையுடையவராகமாட்டார். பரிபாக முடையவர்களுக்கு ஞானசாதனமும், பெத்தருக்குப் போகங்களையும் கொடுப்பார்கள். ஆகையால் ஞானமளிப்பதற்குப் பரமசிவனே யுரியவன். அவன் கருணையை அடையாதவர்கள் புத்திமுத்திகளை அடையமாட்டார்கள். பரமசிவன் அருளால் குருகடாட்சமும் உண்டாகும். குருவின் கருணையினாலே வேதாந்தார்த்தம் விளங்கும். அதனாலே சிவபக்தி உண்டாகும். அதனாலே உண்டாகிற ஞானம் சூரியனைப்போல பல இருளை ஒழிக்கும். எல்லாம் சிவமேயென்று அறிகிறவன் சிறிதும பந்தமில்லாதவனாவான். அவனுடைய ஜனன மரணங்களும ஒழிந்துபோகும்.

பதினான்காவது அத்தியாயம்.

சத்தாவிசார முரைத்தது.

முனிவர்களே! கடம் படம் முதலானவைகளில் தோன்றும் சத்தை ஏகமாய் அவ்வஸ்து உருவமாகவே யிருக்கும். பேதவடிவங்களையுடைய கடாதிகளில் விசேஷ உருவத்தொடு பேதப்பட்டிருக்கும் என்று சிலர் கூறுவார்கள். அதுசரியல்ல. பேதமில்லாதபடியால் விசேட உருவமுமில்லை. விசேடவுருவம் சத்தையோடு பேதமாயிருக்குமென்றால் அது அசத்தேயாகும். அப்போது குற்றமுண்டாவதால சூனியம் போலாகிவிடும். அபேதமாமென்றால் சத்தையேயாகும். அந்த விசேஷ உருவமானது பின்னும்பின்னமாம் என்றாலும் முன்சொன்ன குற்றங்கள் நேரிடும். அதனால் சத்தைக்கு வேறான விசேடரூபம் ஆரோபிதமேயாம். ஏகமாயுள்ள அந்தச் சத்தையேபிரமமாம். அப்படியின்றிவேறாகச் சொன்னால் நரசிருங்கத்தைப்போல அசத்தாகிவிடும். பிரமமும் பிரபஞ்சமும் சத்தைக்கு வேறல்ல. வேதமும்இப்படியே சொல்லுகின்றன. ஞானிகளினுடைய அனுபவமும் இப்படியேயாகும். அந்தப்பிரமம் மண் கடாதி

பேதங்களானாற்போலப் பலசொரூபங்களாகத் தோன்றும். பிரமமானது பிரபஞ்சமாகத் தோன்றுவது சுத்தியில் வெள்ளியாகத் தோன்றுவது போலாகும். வேதமும் இப்படித்தான் சொல்லுகின்றது. வெளியில் இருளும் ஒளியுமிருப்பதுபோலப் பிரமத்தினிடத்தில் ஜடமும் அஜடமும்விளங்கும. பரமார்த்தத் திசையில் பஞ்சபூதங்களும் பிரமசொரூபமேயாம். எப்போதும் பரசிவன் ஒருவனே உளன்.

அவனே யாகங்களால் வணங்கப்படுகிறவன். தானங்களாலும் அடையப்படுகிறவன். மந்திரங்களால் ஜபிக்கபபடுகிறவன். அநேக வேதங்களாலும் தேடப்படுகிறவன். திருமால் பிரமன் இந்திரன் முதலானவர்களாலும் வந்தனைசெய்யப் படுகிறவன். முனிவர்கள் எல்லாரும் நல்ல தவங்களைச் செய்து தொழுவார்கள். இருதயகமலத்தில் வசிக்கிற அந்தச் சிவனைச் சந்நியாசிகள் குரு அருளால் உணாந்துகொண்டு முத்தராவார்கள். அந்தப் பரமசிவனைச் சர்வசொரூபனாக அறிந்தால் எல்லாம் சிவசொரூபமாகவேதோன்றும். வேறாகத் தோன்றாது. நெருப்பில் விழுந்த பஞ்சைப்போலச் சஞ்சிதகர்மங்கள் எரிந்து ஒழிந்துபோகும். தாமரையில்விழுந்த நீர்த்துளியைப்போல அவன் சகல கருமங்களுக்கும் வேறாவான். கயிறு அரவமாகத் தோன்றினாலும் ஆராய்ச்சியில் கயிறாகவே யிருப்பது போலச, சிவமே பிரபஞ்சமாகத் தோன்றினாலும், உண்மையை ஆராயும்போது சிவமாகவே யிருக்கும். என்கிறஞானம் உண்டானவர்களுக்குப் பிரப்ஞ்ச வாசனையில்லை. பத்தன் முத்தன் என்கிற அவஸ்தாபேதங்களும் கிடையாது. ஏனென்றால் எல்லாம் சிவசொரூபமாகத் தோன்றும்போது பந்தம் மோட்சம் என்பன நிலைபெறுதல் எவ்வாறு. இந்த வேதார்த்தம் விரோதமில்லாதது. ஆதலால் எல்லாருக்கும் சம்மதமாயுள்ளதாம். இதற்குவேறான விரோதநெறியைக் கருதுகிறவர்கள் கெட்ட இருளில் முழுகிக்கிடப்பார்கள்.

பதினைந்தாவது அத்தியாயம்.

மோட்சாபேட்சையுடையவ ரியல்புரைத்தது.

மோட்சாபேட்சையுள்ளவன் எப்போதும் சந்தோஷமாகவேயிருப்பான். மோட்சம்பெறுவதில் சந்தேகமில்லையென்று இட

மாய்க் கருதியிருப்பான்.பிரதிபந்தமொழியும்படி தேவர்களை யெப்போதும் ஆராதிப்பான். சூரியன், வருணன், எமன், பிருகஸ்பதி, திருமால், இவர்களும் இவர்களுக்கு அந்தரியாமியாகிய பரசிவனும் என் பிரதிபந்தத்தை விலக்கியருளவேண்டும் என்று உங்களை வணங்குகிறேன் என்றுகூறி அவர்களை வணங்கவேண்டும். சாத்திரங்களினுற் சொல்லப்படுகிற இதரார்த்தசங்கற்பம், சத்தியம் பிரமம் இவையெல்லாம் சூத்திரான்மாவே நீதான் என்றுநிச்சயமாக நினைத்து அன்பினுல உன்னைவணங்குகிறேன். உன்னைத் துதிக்கிற என்னையும் என் குருவையும் காத்தருள வேண்டுமென்று வணங்க வேண்டும். காமமாதி முக்குற்றங்களும் ஒழிவதற்காக சாந்தி மந்திரம் மூன்றுதரம் கூறிக் குருவை வணங்கி, வேதாந்தமந்திரோப தேசம் பெற்று பக்தியுடன் ஜபிக்கவேண்டும். பிரமசாரி, கிருகஸ்தன், வானப்பிரஸ்தன் இவர்கள் இந்த மந்திரத்தை யுச்சரித்து நெய் சரு முதலியவற்றுல் ஓமம்செய்ய வேண்டும். சந்நியாசி ஓமமந்திரத்தை மட்டும் ஜபிக்கவேண்டும். ஒருநாளைக்குப் பன்னிரண்டுதரம், அல்லது ஆறுதரம் அல்லது மூன்று தடவையாவது சாந்தியைக்கூறி குரு திருவடிவணங்கிப், பக்தியோடு வேதாந்தசிரவணம் செய்யவேண்டும். சலனமற்றசித்தத்துடனிருந்து அதைமனனம் பண்ணவேண்டும். சிவலிங்கத்தில் பரமசிவனைப் பூஜிக்கவேண்டும். சாந்தி,தாந்தி, விராகம் இவைகளை உடையவனு யிருக்கவேண்டும். வெப்பம் குளிர்ச்சி, சுகம் துக்கம் இவைகளில் சமசித்தமுடையவனு யிருக்கவேண்டும். குற்றமற்ற ருத்திராட்ச மாலையணிந்து, துர்ப்பொருளைத் தரிசித்தல், கோட்டாவிடுதல், தும்மல் இவைகள் உண்டாகும்போது, சடாட்சரத்தைத் தியானிக்கவேண்டும். அதைத் தியானிக்கும்போது ஒருவரோடு பேசாமலும், கவலையில்லாமலும் ஜபிக்கவேண்டும். நீசரோடு சம்பாஷணைசெய்தால் உடனே சடாட்சரதியானம் செய்ய வேண்டும். தன்சுயசாதி மதஆசாரங்களைவிட்டு சனமதாசாரங்களை அனுஷ்டிப்பவரிடத்தில் ஒருபோதும் பேசக்கூடாது. விரஜாக்கினி முதலியவற்றிலுண்டான திருநீற்றை அதற்குரிய மந்திரத்தால் அபிமந்திரித்துச், சிவத்தியானத்துடன் சருவாங்கமும் உத்தூளனம் செய்து கொள்ளவேண்டும். அதன்மேல் திரிபுண்டரம் தரித்தல்வேண்டும். சிவஸ்தலங்களைத் தரிசித்தல்வேண்டும். சிவ உற்சவங்களையும் தரிசிக்கவேண்டும். பரிசுத்தமான அன்னத்தைப்

கணங்கள் "ஹர! ஹர" வென்று தோத்திரஞ் செய்தார்கள். இவ்விதமாகக் காட்சிதந்த பரமேசுவரனை நாராயணமூர்த்தி கண்டு மனமகிழ்ந்து, அவரது திருவடிகளிலே சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து, கண்களில் ஆநந்தவெள்ளம் பெருக மனமுருகிச் சங்கரா! சம்போ! மஹாதேவா! காளகண்டா! திருநேத்ரா! காமதகனா! காலகாலா! கயிலைநாயகா! பன்னகாபரணா! வ்ருஷபாரூடா! அண்டநாயகா! அகிலநாயகா! அம்மைபங்காளா! ஆதிதேவா! அநாதிமுதல்வா! அமிர்தானந்த சொரூபா! அடியேன் உமது திருவடிக்கடைக்கலம்; கடைக்கணித்தாட்கொள்ள வேண்டுமென்று துதித்தார். பிநாகபாணியானவர் கருணைகூர்ந்து "ஏ இலட்சுமிபதி! உனக்கு யாது வரம் வேண்டு" மென நாராயணமூர்த்தி "உமது திருவடிக்கு அழியாத பக்திவிளங்கவும், ஆநந்தத்தாண்டவம் தரிசிக்கவும் அருள்புரிய வேண்டு" மென்று பிரார்த்தித்தார். உமாசகாயன் "அப்படியே தந்தோம்; நீ சிதம்பரத்துக்கு வா" என்று கூறி மறைந்தருளினார்.

பிறகு திருமாலானவர் இலட்சுமி சமேதராய்ப் பிரமா முதலிய தேவர்கள் சூழ்ந்துவரச் சென்று சிதம்பரத்தெல்லையையடைந்து வணங்கி, உள்ளே புகுந்து கோபுரவாயிலைக் கண்டு பணிந்து, சிவகங்கையில் ஸ்நானம்பண்ணி, விபூதி ருத்திராட்சமணிந்து, உள்ளங்கசிந்துருகும் உண்மையான பக்தியுடனே கனகசபைபோய்ச் சேர்ந்தார். சபாநாயகரது சந்நிதியையடைந்து, தேவ கந்தர்வ யட்ச கின்னரர் காண, தும்புரு நாரதர் பாட, பக்தர்கள் சித்தம் நெகிழ்ந்துருக, ரிஷிகணங்கள் வேதகீதம் படிக்க, சிவகாமியம்மையின் கண்கள் களிக்கச் சிவபெருமான் நடிக்கின்ற ஆனந்த தாண்டவத்தைத் தரிசித்துப் பரமானந்தமடைந்து, தன்னை மறந்து பரவசப்பட்டுச் சர்ப்பசயனன் பலவாறு ஸ்தோத்திரம்புரிந்தார். பின்னர் ஆநந்தத் தாண்டவமூர்த்தியின் கருணையை நிரம்பப்பெற்றுத் திருமால் மலர்மகளோடு வைகுண்டம்போய் யாதொரு குறைவுமில்லாமல் தம்மரசு செலுத்திக் கொண்டு சுகமாக வாழ்ந்திருந்தார்.

மூன்றவது
சிவபூஜைசெய்தவர் மகிமையுரைத்த அத்தியாயம்.

உலக வாழ்வினை யடைய விரும்புவோர்களும், முக்தியை யடைய இச்சிப்போர்களும் சிவபூஜை செய்யவேண்டும். சிவபூஜை

புசித்தல் வேண்டும் உருத்திரன், திருமால் முதலியவர்களுக்கு நைவேத்தியம் செய்ததைப் புசிக்கக்கூடாது. புசித்தால் சாந்திராயணவிருதம செய்யவேண்டும். ஆசிரியன் உச்சிஷ்டம் புரோடாசத்துக்குச சமானமாகும். அதை உண்டால் சகல பாபங்களும் ஒழியும் தாழ்ந்த வருணாசிரம ஜனரிடம் பழகக் கூடாது. தேவர்கள், மனிதர்கள், மிருகாதி ஜந்துக்கள் இவற்றின் வேஷம் தரிப்பதும கூடாது. இப்படி வேஷம தரிசிக்கிறவன் வேத புராணஸ்மிருதிகளுக்கு அதிகாரியாகான. அவனுக்கு நரகமே பிராபதியாகும. நல்லவாகள் அவர்களைப்பாாக்க மாட்டார்கள். அரசனும அந்த வேடதாரிகளை ஊரைவிட்டுத் துரத்திவிடவேண்டும். விதிப்படி அனுஷ்டிக்கச சக்தியுள்ளவன் விலக்குகளை யெல்லாம் ஒழித்து விட்டுச, சததியம, தருமம, நீறுபூசல, வேதாத்தியயனம, தேவ பிதிரர்களை ஆராதித்தல், மாதாபிதாக்களைப்பூசித்தல் சிரௌத ஸ்மார்த்த விதிபபடி கருமங்களைச் செய்தல இவைகளை விடாமல் செய்யவேண்டும. இநதச் சாதனசம்பத்தியுள்ளவனே சிவஞானத்தை அடைவான். சிவபெருமான் திருவடி நிழலையும் அடைவான். சர்வவிபாபகனான சிவபெருமான் எல்லாராலும பூசிக்கபபடுகிறவா. அவரது அநுக்கிரகத்தாலேயே பிரஹ்ம விஷ்ணு முதலானவர்கள் தேவரானார்கள். தெய்வத்தன்மை அவருக்குத் தான் உரியது. அவனுடைய சொரூபஞானத்தை அடைவதற்கே ஞானசாதனங்கள் அவசியம் வேண்டுவனவாம். அந்தச சொரூபஞானம் பெற்றவுடனே பந்தமொழிந்து போகும். இதுவேதத்தில கூறப்பட்ட உண்மை. சிவானுக்கிரகமில்லாதவர்கள் யானைகண்ட குருடாகளைபபோலப பலவிதமாகச்சொல்வார்கள். எந்தப பிராணியானாலும் சிவானுக்கிரகம்பெறறால் முத்தி அடைந்து விடும.

பதினாறவது அத்தியாயம்.

விராகவிளக்க முரைத்தது.

ஈசுவரனுக்கும் சிவனுக்கும்உள்ள அபேதத்தை மறைத்துக் கொண்டிருக்கிற அஞ்ஞானமாகிற மாயையினால் பல பேதங்களாகிய பிரபஞ்சம் உண்டாயிற்று. முன்னைய பழக்கத்தாலான கர்மப்படி இது நல்லது, இது கெட்டது என்றுஉண்டாகிற பிராந்தியும் அந்த மாயையினாலேயே கற்பிக்கப்பட்டது. நன்மை யுள்ளவை

களாகக் கற்பிக்கப் பட்டவைகளில் அஞ்ஞானிகளுக் கிச்சையுண் டாகும். குற்றமுள்ளனவாகக் கற்பிக்கபபட்ட விஷயங்கள் ஐஹி கம் பார லவுகிகம் என்று இருவகைப்படும். ஐகிகம் என்பது இவ் வுலக சம்பந்தமாயுள்ள போகங்கள். பாரலவுகிகம் என்பது பர லோகசம்பந்தமாயுள்ள போகங்கள். சலனசித்தமுள்ளவன் இக லோகபோகங்களையிச்சிப்பான். சாத்திரப் பயிற்சியுடையவன் இக லோக பரலோகபோகங்களை இச்சிப்பான். இகலோகவிஷயங்களில் பிரத்தி யட்சத்தினாலும் பரலோக விஷயங்களில் சாத்திரங்களி னாலும் இச்சை யுண்டாகும. இவ்விருவகைப் போகங்களினால் வெறுப்புண்டாவது எப்பொழுதோ! இதனால் தேவர்களாதியோ ரும் இராகத் துவேஷங்களால் கட்டுண்டு ஜனனமாகிற நரகத்தில் விழுவார்கள். பூமியில்விழுந்த சுக்கில சுரோணிதங்களை ஒருவரும் தீண்டுவதில்லை; பார்ப்பதுமில்லை; வெறுப்படைகிறார்கள். அப்ப டிப்பட்ட சுக்கில சுரோணிதத்தாலானவுடலை நானென்றும் எனது என்றும் சொல்கிறவன் பூமியில்கிடக்கிறதோலேயும், மாமிசத்தை யும் இரத்தத்தையும், கபத்தையும், பித்தத்தையும், மலமூத் திரங்களையும், தொடவும் பார்க்கவும் விரும்புவதில்லை. இவைக ளெல்லாம் ஒன்றாகச்சேர்ந்து கூடி வந்திருக்கிற சரீரத்தை நான் எனது என்பது அறிவீனமேயாம். நல்ல சுகந்தபரிமளம் கம ழும் சந்தனாதிகள் இந்தச சரீரத்தையடைந்தபின் அழுக்கென் று வெறுக்கப் படுகின்றன. மதுரமான போஜனவஸ்துக்கள் இந் தச் சரீரசம்பந்தம் அடைந்தபின் மலமென்று வெறுக்கபபடுகின் றன. நல்லஜலம் மூத்திரமென்று வெறுக்கபபடுகின்றது. வஸ்திரங் கள் அழுக்கடைந்து கெடுகின்றன. இப்படிப்பட்ட இழிவுள்ள சரீ ரம் மேன்மையடைவதென்பதெப்படி? இரத்தத்திலும் மாம்சத் திலும் கிருமிகள்உற்பத்தியாகின்றன. அதனால் இந்தச்சரீரம் புழு வய உடலென்றும் துக்கதுக்கே இடமானதென்றும் கூறுவது தகுதியாம். கர்ப்பத்தில் தரித்து இளக்கமாயிருக்கும்போது அங் குள்ள புழுக்கள் உண்டுவிடுகின்றன. குமிழிபோல இருக்கும் போதும் புழுக்களால் துன்பம். ஜாடராக்கினியால் தகிக்கப்படுதல், பிண்டமாகும் போது வாயுவால் அலைக்கப்படுதல், மலமூத்திரங் களில் கிடத்தல், மையினுள் கட்டுண்டு கிடத்தல்முதலான அளவி லாத் துக்கங்கள் உண்டாகின்றன. சுகமென்பதே கிடையாது. இதைவிட இரௌரவாதி நரகவாதனை நல்லது.

முனிவர்களே! கர்ப்பவாசத்திலிருக்குந் துன்பம் பொறுக்க முடியாததாகும். நரகாவஸ்தையைவிட இது அதிகபெரிது. இப்படிப்பட்ட கொடியதுன்பத்தை அனுபவித்துப் பின்பு பூமியிற் பிறந்தாலும், பாலகிரகதோஷம், கறையான் எறும்புமுதலிய வற்றால் உண்டாகும் துன்பம், வியாதி பசியால் உண்டாகும் துன்பம் கல்வியபிலுந்துன்பம், விதிவிலக்குகளை அனுஷ்டிப்பதனு லுண்டாகும்துக்கம் ஆக அளவிலாத் துன்பங்க ளிருக்கின்றன. ஆகையால் சுகமென்பதேயில்லை. யௌவனபருவம் வந்தபின் விவாகம்புரிதல் சம்சாரத்தைக் காப்பாற்றல், அதற்காகப்பொருள், அணி, ஆடைகள், தேடுதல், அவைகளைக் காப்பாற்றுதல், ஆகியஅளவிலாத்துன்பங்களுண்டு. மூப்பிலே புத்திர பௌத்திராதிகளால் உண்டாகும் துயரம், அசக்தியினு லுண்டாகும் துன்பம், அரசர்களால்துன்பம், வேலைக்காரர்களால் துன்பம், வைதிக இலவுகிக நடைகளால் துககம், ஐசுவரியம் தரித்திரம் முதலியவற்று லுண்டாகும் துன்பம், அயல்வீட்டவர்கள் நமக்குச் சமான ஸ்திதியி லிருந்தாலும மேற்பட் டிருந்தாலும் துன்பம், பூதப்பிரேத பைசாசங்களாலும் காற்று தீ நீர் முதலியவற்றாலும் துன்பம் உண்டாகும்; பிரம விஷ்ணு இந்திரனாதியர் பதவியைபெற்று வாழ்வதும்துன்பமாம். நான் எனது என்கிற பற்றுள்ளவரைக்கும் இத்துன்பமும் உண்டாம். சீவர்கள் துன்பங்களைத் துன்பமென்றும் அறிகிறார்கள். அதனையே சுகமென்றும் எண்ணுகிறார்கள். பாசத்தின் வலிமை அளவுகடந்தது. அதனையென்னென்று கூறுவது! சிவசொரூபமே சுகசொரூபமாகும். அதை அறிந்தாலன்றித் துக்கமொழியாது என்றுஉணர்ந்துகொள்ளுங்கள்.

⟵<⊕*⊕>⟶

பதினேழாவது அத்தியாயம்.

அநித்தியவஸ்து விசாரமுரைத்தது.

முனிவர்களே! அநித்தியவஸ்து விசாரத்தினாலே சம்சாரத்தில் விராகமுண்டாகும். சிவத்தைத்தவிர மற்றுள்ள பொருள்களெல்லாம்அநித்தியமாம். அவைகளெல்லாம்ஜடமாதலால்; ஆன்மாவில்லாத மற்றைய ஜடவஸ்துக்களெல்லாம் ஆராய்ச்சியினால் அநித்தியமாகவே காணப்படும். சரீரம் பால யௌவன விருத்த முதலிய வாகமாறுகிற அனுபவமேநிதரிசனமாம். சிலர்செய்யப்படுதல்மாத்

திரமே அநித்தியமென்று சொல்வாரும் உண்டு. ஒருவரால் செய்யப்படாமல், முன்னில்லாததாயுள்ளதும் அநித்தியமாயிருத்தலினால் அது தகுதியில்லாததாம். திசை, காலம், வானம் முதலாக ஆன்மாவுக்கு வேறாயுள்ளனவெல்லாம் அநித்தியமேயாம் என்று வேதங்கள் கூறுகின்றன. தார்க்கிகர் அறியாத சிலவற்றை நித்தியமென்பார்கள். வேதசம்மதமான தருக்கமே பிரமாணமாம். மற்றைய சுதந்திரமான தருக்கங்கள் பிரமாணமாகா. ஏனென்றால் சுதந்திரதருக்கம் அநுபவம் அநுமான முதலியவற்றையே சொல்லும். வேதமோசுதந்தர முடையதாய் எல்லா வற்றையும் அறிந்து கூறும். பிரத்தியட்சம் முதலான ஐவகைப் பிரமாணங்களுக்கும் எட்டாததாய் உள்ளபிரமம், தருமம, அதருமம் முதலான வற்றை வேதப் பிரமாணத்தினாலேயே அறியவேண்டு மென்று அறிஞர் கூறுகின்றார்கள். வேதத்தை விட்டுப பிரமத்தையறிய முயல்பவன் கனிகளைச் சுவைத்தறியாமல் பரிசித்துஉணர முயல்பவனையொப்பான்.

பூர்வகாலத்தில் சங்கிரன் என்று ஒரு பிராமணனிருந்தான். அவன் வேதத்தை ஆராயவிரும்பாமல் தருக்கநூல் ஒன்றையே பயின்றுவந்தான். இந்திரியாதிகளுக்கு எட்டாத பிரமப்பொருளைத் திருக்கத்தினாலேயே அறியமுயன்றான். புத்திக் குறைவினால் அவனுககு ஒவ்வொரு விஷயத்திலும தவறுதலான தருக்கயுத்திகள் தோன்றின. அதனாலே மோகமுண்டாயிற்று. அதனால் பாஷாண்ட மதத்தை அநுசரித்தான். அதனால் அஞ்ஞானம் மேலிட்டது. பிறகு அம்மதத்தையும் விட்டுத் தன் இச்சைப்படி நடக்கலானான். தன்மாதாவையும் தங்கையையும் புணர்ந்து காலங்கழித்தான். பிறகு மரணம்அடைந்தான். அப்போது எமதூதாகள் வந்து பாசத்தினால் அவனைக்கட்டிச, சிவசிந்தனையிலலாத மூடனே! நீ வருந்துக என்று அவனைத் தண்டித்துத் துன்புப படுத்தினார்கள். பிறகு அவனை இழுத்துக் கொண்டுபோய் எமதருமராஜன் முன் விட்டார்கள். அப்போது எமன் புருவம் நெற்றியி லேறும்படி விழித்துப் பார்த்துக் கோபித்து, இடிபோல அதட்டி, இந்தத் துஷ்டனைத்தண்டித்து, நரகங்கள் எல்லாவற்றிலும் தள்ளுங்கள் என்றுகூறினான். சொன்னவுடனே பல கிங்கரர்கள் அவனைச்சூழ்ந்து கொண்டு, சலாகையைக் காய்ச்சிக் காதுகளில் செலுத்திக், கைகால்களைத் தறித்துக், முள் தண்டித்தால் அடித்தும், கண்

கண்களைக்கிண்டியும், ஆலையிலிட்டுத திரித்தும், தண்டஞ்செய்தார்கள். பிறகு அவனைப பிடரியைப் பிடித்துத் தள்ளிக்கொண்டு போய்த் தீ நரகில் தள்ளினார்கள். அந்த நரகத்தில் கோடிவருஷங்கள் இருந்து வருந்தினான். வருந்துங் காலையில் அவன் முன் செய்திருந்த ஏதோசிறிது புண்ணிய வசத்தினாலே சிவபெருமானுடைய கருணையுண்டாக, மகா தபோநிதியான சதானந்த முனிவர் அங்கே போனார். அவர் சங்கிரன் படுகிற துன்பத்தைப் பார்த்து மனம் இரங்கிச சடாக்ஷரத்தை ஜபித்தார். அதனால் அந்த நரகம் சொர்க்கலோகம் போலாயிற்று. தேவர்கள் மலர்மாரி பெய்தார்கள். சித்தர்களும், யட்சர்களும், தெய்வரிஷிகளும வந்து கூடினார்கள். அப்பரஸ்திரீகள் நர்த்தனம் செய்தார்கள். பிரமா விஷ்ணு முதலானவர்களும் வந்து சேர்ந்தார்கள். அப்போது எமதரும ராஜனுக்குச் சிறிது அசசமுண்டாயிற்று. உடனே சதானந்தமுனியிடம்வந்து அவரைச் சிவபெருமானாகமதித்து, அவர் திருவடிகளில் வணங்கினான். சதானந்தமுனிவா அவனைநோக்கி நீ பரசிவானுக்கிரகத்தினால் பாவம் செய்தவர்களைத் தண்டிக்கின்றாய், ஆதலால் நீ அஞ்சவேண்டிய தில்லையென்று கூறினார். தர்மராஜன் மனமகிழ்ந்து அவரை வணங்கினின்றான்.

முனிவர் பின்னும் எமனைநோக்கி திருமால் முதலான தேவர்களுக்குள் சிறந்தவனாக உள்ளவன் சிவபெருமானே யென்று எண்ணுகிறவர்களையும், கோவிந்தன், நாராயணன், முதலான சொற்களை விடச் சதாசிவ சம்பு சங்கர என்கிற நாமங்கள் உயர்ந்தன என்று கருதுவோரையும், பல தேவர் வடிவங்களிலும் சிவ மூர்த்தங்களை சிறந்தனவென்று தெரிந்துள்ளவர்களையும், உமாகாந்தனே சகல வுயிர்க்குள்ளும் உயிராய் விளங்குகிறார் என்றும், அவருக்கு ஒப்புயர்வில்லையென்றும் எண்ணுகிறவர்களையும், விபூதியை உத்தூளனம் செய்துகொண்டு திரிபுண்டரம் தரிப்போரையும், கண்மணி தரித்தவர்களையும், பஞ்சாட்சரஜபம் செய்கிறவர்களையும் லிங்க பூசை செய்கிறவர்களையும், கங்கை முதலான தீர்த்தங்களில் ஸ்நானம் செய்வோரையும், சிவ ஸ்தலங்களைத் தரிசித்தவர்களையும், சிவனடியாரைச் சிவனென்றே கருதி வணங்குகிறவர்களையும், சிவபக்தி செய்வோரையும், வேதப் பொருளையுணர்ந்து சாந்தி தாந்தி முதலியன வுடையவராய்ச் சர்வகர்மங்களையும் விட்டு நிற்பவரையும், குரு சேவைசெய்து வேதாந்த சிரவணம் செய்வோரையும். அதை மனனம் செய்து சிவஞானம் பெற்றவர்களையும்.

தானம், வேள்வி, ஜபம், ஓமம், வேதாத்தியயனம் முதலியசெய்து சிவார்ப்பணம் செய்கிறவர்களையும், பல வழியாகச சிவாராதனை செய்வோரையும் நீ அணுகாதே; அவர்கள் அருகே போனால் உன் அதிகாரம் ஆயுசு முதலானவற்றை யிழந்துவிடுவாய்.

சிவனைவணங்காத பாவிகளையும், சிவனடியாரை வணங்காதவர்களையும், சிவபணிவிடை செய்யாத தனவந்தர்களையும், சிவபுராணங் கேளாதவர்களையும், திருநீறு உருத்திராட்சம் புனையாதவர்களையும், பஞ்சாட்சரஜபம் பண்ணுதவர்களையும் சிவநிந்தை செய்வோரையும், அதற்கு உடன் பட்டவர்களையும, அதைக் கேட்டவாகளையும், சிவாலயபொருளைக் கவர்ந்துள்ளவர்களையும், சிவாலயப் பொருளைத் திருடச்சொன்ன வர்களையும, வேதம் ஸ்மிருதி கூறிய கருமங்களைச் செய்யாதவாகளையும், ஊர்த்துவ புண்டரம் திரிசூலம், வட்டமுதலாகப பல சின்னங்களை அணிவோர்களையும், விபூதியைத் தொடாதவர்களையும், குருத்துரோகிகளையும், வேத நிந்தை செய்வோரையும், சரீரத்தில் தேவவடிவம், மனிதவடிவங்களை முத்திரித்துக் கொள்வோரையும், மற்றுமுள்ள பாவிகளையும், தண்டிதது நரகத்திலிட்டுத் துன்பப்படுத்து என்றுகூறிச் சதாநந்த முனிவா கயிலாசமலைக்கு எழுந்தருளினர்.

பிறகு எமன் சங்கிரனைப் பார்த்துச சங்கிரனே! வேதவிரோதமான தர்க்கநெறியை அனுசரித்துப் நெடுநாள் நரகத்தில் வருந்தினய். நீ எந்த ஜன்மத்திலேயோ செய்த புண்ணியத்தினலே சதாநந்த முனிவா இங்கே வந்து சடாட்சா ஜபம்செய்தார். அதைக் கேட்டு நீ நரகதுன்பம் ஒழிந்தாய். ஆகையால் பூலோகத்தில் பிராமண குலத்திற் பிறந்து வைதிகநெறிபற்றி யொழுகிச், சிவபிரானுக்கு அன்பனயிருந்து, முத்தி அடையக்கடவாய் என்று அவனை அனுப்பிவிட்டுத் தர்மராஜன் தன் அரண்மனைக்குப் போய் விட்டான். ஆகையினல் வேதங்கூறுகிறதே நிச்சயார்த்த மாகும். அவைதிகதருக்க நெறிதுன்பத்துக்கே காரணமாம். தர்க்கத்தை அனுசரிக்கின்ற மூடர்கள் இரவுரவாதி துன்பங்களை அனுபவிப்பார்கள். வேத விரோதமான தருக்கநெறியைப் பற்றினவர்கள் பழிகளே யாவார்கள். அவர்களோடு சேர்தல், பந்திபோஜனம் செய்தல் இவையெல்லாம் கெடுதியேயாம். ஆகையால் வேதத்தை அனுசரித்துப் பரமசிவனுக்கு வேறுயுள்ளவைக ளெல்லாம் அநித்தியமேயாமென்று அறிந்து கொள்ளுங்கள். இதுவே பெரியோர்கள்

கொள்கையாம். சிவனுக் கன்னியமானவை யெல்லாம் அநித்திய மென்கிற ஞானம் எப்போது உண்டாகுமோ அப்போதே சமுசாரத்தில் வெறுப்புண்டாகும். துக்கமெல்லா மொழியும். இன்பமுண்டாகும். இராகத்தால் துக்கமுண்டாகும். விராகத்தால் துக்கம் நீங்கும். விராகத்தால் சராசரமெல்லாம் அநித்தியமே யென்கிற ஞானமுண்டாய்ப் பரசிவ உண்மையை அறியவேண்டும்.

வீடாதிகளும் மாடமாளிகை முதலானவைகளும் அநித்தியமேயாம். பெண் போக முதலானவை மின்னலைப்போல அழிந்துபோகும். உலகம் முழுவதையும் ஒரு குடை நிழலில் அரசாளுகின்ற அரசனும் துன்பத்தினால் வருந்துவான். இந்தச் சுகங்களெல்லாம் அநித்திய மென்று தெரிந்தும, சிவனடிக்குப் பக்தி செய்யாமல் இந்த அற்ப போகத்தையே விரும்புகிறார்கள். பரலோக வின்பம் கருமத்தால் அடையப்படுகின்றது. ஆதலால் அதுவும் அநித்தியமேயாம். பூமியும் அதிலுள்ள பொருள்களும் சமுத்திரத்திலொடுங்கும். சமுத்திரம் வடவாமுகாக்கினியில் ஒடுங்கும். அது மகாக்கினியில் ஒடுஙகும். அநதத் தீ வாயுவில் ஒடுங்கும். அந்த வாயு ஆகாயத்தில ஒடுங்கும். ஆகாயம் அவ்வியக்தத்தில் ஒடுங்கும். இப்படி பூதங்களெல்லாம் அழிவதால் பௌதிகங்களும் ஒடுங்கும். பிரமா விஷ்ணு முதலானவர்களும் அழிவார்கள். ஜோதி சொரூபனான சிவபெருமான் ஒருவரே எந்நாளும் அழியாமல் இருப்பார். இபபடி உணர்ந்தவன் முத்தியடைவதிற் சந்தேகமில்லை.

பதினெட்டாவது அத்தியாயம்
நித்தியவஸ்து விசாரம் கூறியது.

சுத்தமாய் அவிகாரமாய்ச் சிற்சொரூபியா யுள்ள பரசிவமே நித்தியவஸ்துவாகும் இப்படியே வேதம் சொல்லுகின்றது, ஜடத்துக்கு மாத்திரந்தான் அநித்தியத்துவம் உண்டு. சித்துக்கு அநித்தியமே கிடையாது. அந்தக்கரண விருத்தியாலே தான் அநித்தியம் கூறப்படுகிறது. பரமார்த்தத்தில் இல்லை. பிரத்தியேயத்தில் சிதாகாரம்,விருத்தியாகாரமென்று இரண்டுண்டு. சிதாகாரம் பாவ்யாகாமென்று கூறப்படும். விருத்தியாகாரம் கரணபாவமென்று கூறப்படும். விருத்தியாகாரம் ஜடமாதலால் நசிக்கும். சிதாகாரம்

நசியாது. அந்தக்காணவிருத்தி நசித்தலாலே பிரத்தியேயமும் நசித்தது போலத் தோன்றும். அறிவில்லாதவர்கள் அந்தக் காண விருத்தி தோன்றும் போது சிதாகாரம் தோன்றிற்றென்றும், அது நசிக்கும் போது சிதாகாரவிருத்தி நசித்ததென்றும் கருது வார்கள். சர்வ சாட்சியாயுள்ள சித்துருவனான பரமசிவமே உற்பத்தி நாசம் இரண்டுக்கும் சாட்சியா யிருக்கிறார். ஆகையால் அவருக்கு உற்பத்தி நாசங்களில்லை. கிரியையமாய் ஜடமாயிருத்த தலால் உற்பத்தி நாசங்கள் தானாகவே உண்டாகமாட்டா. ஒருவனாலே, உண்டாக்கப் பட்டாலன்றிக் கடாதிகள் தாமாகவே உண்டாவதில்லை. அது போலத் தனக்கு வேறான வஸ்துவில்லாத பரசிவனுக்கு உற்பத்தி நாசங்க ளுண்டாக மாட்டா. சாட்சியாயுள்ள சிவபெருமானே கடசாட்சி படசாட்சியென்று காணபபட்டாலும் அவன் ஒருவனேயாம். அனுவிருத்திவகையால் அவனுக்குப் பேதமில்லை. சிலர் சாட்சிக்கு விசேஷ ஆகாரமாகப பேதமுண்டு என்பாாகள். அது தவறு. அந்த விசேஷ சாட்சி ரூபம் ஜடமாதலால் ஒளிக்கு இருள் போல ஒவ்வாது. சிதது ரூபசசாட்சிககு ஜடத்துவம் உண்டாகாதாகையால் சித்ரூபமே யென்றால் சாட்சி தன்னியத்திற்குப் பேதமாக மாட்டாது. விசேஷ ஆகாரத்தை ஒப்புக் கொண்டு பேதம் கூறுவது குற்றமேயாம். பரமசிவன் நித்தியன், ஏகன், ஆனந்த சொரூபன், சர்வசாட்சியாயுள்ளவன் என்று வேதாகம புராணங்களெல்லாம் கூறுகின்றன. இப்படியே பிரமா, விஷ்ணு, ருத்திரர் முதலியவரும் சொல்லுவார்கள். ஆகையினால் பரமசிவனைத் தவிர நித்தியவஸ்து மற்றொன்றுமில்லை.

பத்தொன்பதாவது அத்தியாயம்.

விசிஷ்ட தருமம் கூறியது.

முன்னொரு காலத்தில் காவமேயர் என்று ஒரு முனிவர் இருந்தார். அவர் ஒரு சத்திரயாகம் செய்தார். அப்போது முனிவர்கள் எல்லாரும் கூடி விசிஷ்ட தருமம் எது என்று ஆராயத் தொடங்கினார்கள். அவர்களுக்கு உண்மை தோன்றவில்லை; ஆகையால் இமயமலைக் கருகிலிருந்து மூன்று வருஷம் தவம் செய்தார்கள். அப்போது பரமசிவன் அருளினாலே சுப்பிரமணியக் கட

வுள் அவர்களுக்குப் பிரசன்னராய் மயில் வாகனத்தின் மேல் காட்சி கொடுத்தார். முனிவர்கள் அவரைக் கண்டு மனமகிழ்ந்து எதிர் சென்று வணங்கிப் பூசித்துத் துதித்து, அன்பருடைய இதயாரவிந்தத்தி லெழுந்தருளி யிருக்கும தெய்வமே? எங்களுக்கு விசேஷ தருமம் யாதென்று கூறி யருளவேண்டும் என்று வணங்கினார்கள். சுப்பிரமணியர் கருணை கூர்ந்து சொல்கின்றார்.

முனிவர்களே! விசேஷ தருமத்தைச சுருக்கிச் சொல்கிறேன் கேளுங்கள். சாத்திர ஆதார மில்லாமல் தன் புத்தியைக் கொண்டே செய்கிற தருமம் நிர்மூல தருமமாம். அது பக்தியினால் செய்யப்படுமானால் அதுவும் தருமமாம். அது நிர்மூலமானாலும் தெய்வ பூசையின் சொரூப மாதலால் சிறந்ததாம். மூலமுடைய தருமம் இதைவிடச் சிறந்ததாம். அதைவிடப் புத்தாகம தருமம் சிறந்தது. அதைவிட அருகர் கூறிய ஆகமதருமம் சிறந்தது. அதைவிடப் பிரமன் கூறிய ஆகம தருமம சிறநதது. அதைவிட விஷ்ணு கூறிய ஆகம தருமம் சிறந்தது. அதைவிடச் சைவாகமதாமம் மேலானது. இந்தச சைவாகமம் அதச்சுரோதசு, ஊர்த்துவ சுரோதசு என்று இருவகைப்படும். காபால முதலிய சைவாகமங்கள் அதசசுரோதசாம். காமிகாதி இருபத்தெட்டு ஆகமங்கள் ஊர்த்துவ சுரோதசு என்னப்படும். இந்த ஊர்த்துவ சுரோதஸ் சிறந்தது. இதைவிட வைதிகதர்மம் சிறந்தது. அவற்றில் சாந்தி தாந்தி முதலிய தருமங்கள் விசேஷமாம். அதைவிடச் சிவநாமத் தோத்திரம், சிவலிங்க பூசை சிவபாவனை செய்தல், சிவனடியார்க்குத் தொண்டு செய்தல், வேதாந்தப பொருளை ஆராய்தலாகிய சிவஞான தர்மம் உத்தமம்.

எல்லாத் தருமங்களையும்விட முத்திசாதனமாகிய சிவஞான தர்மமே சிறந்ததாகும். அதைத்தவிர வேறுகிடையாது. இப்படியே வேதம் சொல்லும்! ஞான காரணங்கள் எல்லா வற்றிலும் வேதமே சிறந்தது. வேதாந்தப் பொருளை ஆராய்ந்து பெறப்படும் சிவஞானமே உண்மை ஞானமாகும். பரமசிவனுக்கு நிகரான தெய்வமும், பிராமணனுக்கு ஒப்பான மனிதனும், அன்னத்துக்குச் சமானமான உணவும், கங்கைக்குச் சரியான நதியும், குருவுக்குச் சமானமான துணைவனும், சிதம்பரத்தை ஒத்த க்ஷேத்திரமும், பஞ்சாட்சரத்துக்குச் சமானமான மந்திரமும் இல்லை. அதுபோல வேதங்களுக்குச் சமானமான நூல்களு மில்லை. வேதமே சிறந்த

பிரமாணம். பரமசிவனே தெய்வம். திருநீறே உத்தமம். சிவஞான மே சிறந்த முத்திசாதனம் என்று ரிஷிகளுக்குச் சுப்பிரமணியர் உபதேசம் பண்ணினார்.

இப்படிச் சுப்பிரமணியக் கடவுளின் உபதேசத்தைக் கடைப் பிடித்து ஒழுகும் முனிவர்களுக்குச் சிவபிரான் பிரத்தியட்ச மானார். ரிஷிகள் பரமசிவனை வணங்கிப பஞ்சாட்சர மந்திரத்தால் பூசை செய்தார்கள். சிவபெருமான் கருணை கூர்ந்து ஆத்ம ஞானத் தை அவர்களுக்கு அருளிச் செய்து கைலைக்கு எழுந்தருளினார். அதனால் அந்த முனிவர்கள் சிவஞானத்தை அடைந்து, விஷய விராக*முடையவர்களாய், இமயமலைக் குகையில் புகுந்தார்கள். ஆகையால் முனிவர்களே! இதுதான் விசேஷ கருமமென்று அறிந்து கொள்ளுங்கள். பந்த மொழிப்பதற்குரிய சாதனம் இதைத்தவிர வேறில்லை.

இருபதாவது அத்தியாயம்.

முத்திசாதனம் கூறியது.

பூர்வகாலத்தில் தெய்வமுனிவர் என்று ஆயிரத்திருநூறு பேர்கள் இருந்தார்கள். அவர்கள் சிவபெருமானைத் தவிர வேறு ஒரு தெய்வத்தை மறந்தும் நினைப்பதில்லை. அவர்கள் தட்சிண கயி லாச க்ஷேத்திரத்தை அடைந்து தவம் புரிந்தார்கள். பரமசிவன் அவர்களுடைய தவசுக்கு மகிழ்ந்து உமாதேவியாரோடு காட்சி அருளினார். முனிவர்கள் கண்டு மகிழ்ந்து எதிர் கொண்டுபோய் வணங்கிப் பூசித்துத் துதித்து, முத்தி சாதனத்தை எங்களுக்கு உபதேசித் தருள வேண்டுமென்று கேட்டார்கள்.

சிவபெருமான் கருணை கூர்ந்து முனிவர்களை நோக்கித் தெய் வ*முனிவர்களே! இரகசியமாக இதை உரைக்கிறேன் கேளுங்க ளென்று கூறுகின்றார். வருணாசிரம ஆசாரத்தினாலேயே நல்ல முத்தியுண்டாகும். ஆகையால் ஒவ்வொருவரும் தத்தம் வருணத் துக்குரிய தருமத்தைத் தவறாமல் செய்யவேண்டும். எப்படியென் றால், பிராமணகுலத்திற் பிறந்து சாதகர்ம முதலிய சம்ஸ்கா ரம் செய்யப்பட்ட பிராமணன் உபநயனம் பெற்றுச் சற்குருவை அடைந்து வேதாத்தியயனத்தை முறைப்படி செய்ய வேண்டும். பிறகு விதிப்படி விவாகம் செய்துகொண்டு யாகம், தானம், தவம்,

யரன்று அநந்தகோடி ஜன்மங்களிற் செய்துள்ள மஹா பாபங்களை நீக்கி யிஷ்டகாமியங்களையும், அந்தத்தில் மோட்சத்தையுங் கொடுக்கும். தேவர்களிலும் மனிதர்களிலும் அசுரர்களிலும் சிவனைப் பூஜித்துப் பேறுபெறாதவர்கள் ஒருவருமில்லை. இத்தகைய மகிமையுள்ள சிவபூஜையைத் தாந்திரிகர் ஆகமநெறி வழுவாமலும், வைதிகர் வேதங்கூறிய நெறிதவறாமலுஞ் செய்யவேண்டும். ஷோடசோப சாரங்களோடு நிவேதனமு மளித்துப் பூசித்துத் தோத்திரஞ்செய்தால் அவன் நிர்மலமாய்த் தேவர்களும் வணங்கும்படி பெருமையாக வாழ்வான். இவ்விதமாகச் சிவ பூஜை செய்து பேறுபெற்ற ஒரு மஹா பாதகனுடைய சரித்திரஞ் சொல்லுகிறேன் கேளுங்கள்.

பூர்வத்தில் ஒரு காட்டில் ஒரு வேடனிருந்தான். பிரமஹத்தி சிசுஹத்தி ஸ்திரீஹத்தி கோஹத்தி முதலிய பாபங்களில் அவன் செய்தவற்றை அளவிட முடியாது. வழிப்பிரயாணஞ் செய்பவர்கள் எவரானாலும் அவர்களை முன்பின் யோசியாமல் கொன்று அவர்களுடைய பொருள்களை யெல்லாங் கவர்வான். இப்படியாக நாள்கடோறும் அளவில்லாத மஹா பாதகங்களைச் செய்து வாழுநாளில் காமுகனென்கிற ஒரு பிராமணனிடத்தில் சிநேகஞ் செய்துகொண்டான். அவனும் இவனும் ஒருவருக்கொருவர் பிரியாநட்பினரா யிருந்தார்கள். ஒருநாள் பிராமணன் அந்த வேடனைப்பார்த்து நீ மஹா பாதகங்களை யெல்லாந் துணிந்து செய்து வருகின்றாய். உன் பாபத்திற் கெல்லை கிடையாது. ஒரு தருமங்கூடச் செய்யவில்லை. நீ யிறந்து போனால் எமதண்டனைக் கென்ன செய்வா யென்று கேட்டான். பின்னும் நீ செய்த பாபங்களை நினைக்குந்தோறும் எவருடைய மனமும் நடுங்கும். கேட்டாலும் ஆவி பதைக்கும். நீ சிறிதுங் கவலையில்லாமல் இருக்கிறாயே யென்று சொன்னான். இப்படியாக அந்தணன் பலதடவை சொல்ல அந்த வேடனுக்கும் அது மனதில் பதிந்தது. புத்தியுங் கொஞ்சந் தோன்றியது. தோன்றவே ஐயோ மூடத்தனத்தினாலே நான் மஹா பாதகங்களை யெல்லாம் அபரிமிதமாகச் செய்துவிட்டேன். இந்நரகாக்கினைக்குத் தப்பும் வழியில்லை. நான் என்னசெய்வேன். ஐயா பிராமணோத்தமா! நான் கடைத்தேறும் மார்க்கமிருந்தால் எனக்கு அதைச் சொல்லியருளவேண்டும் சுவாமீ என்று அவ்வந்தணன் பாதங்களில் வணங்கிக்கேட்டான். பிராமணன் இதனால் மனமகிழ்ந்து சொல்லுகிறான்.

இவைகளை நிஷ்காமியமாய்ச் செய்ய வேண்டும். இதனால் பரிசுத்தனாய், பனமாக ஒழிந்து, குடீசகம், பகூதகம், ஹம்ஸம், ஆகிய மூன்று வகையான சந்நியாசத்தில் தனக்கு ஒத்த ஒன்றை அடைய வேண்டும். நமது கருணையால் மிகுந்த சக்தி யுள்ளவன் பரம ஹம்ஸத்தை அனுஷ்டிக்கலாம். முறையே குடீசகம் முதலாகிய சந்நியாசத்தை அனுஷ்டித்து முத்தியடைய வேண்டும். சத்தியம், கொலை செய்யாமை, சவுசம், ஸ்நானம், சமம் தமம், சிவலிங்கபூசை செய்தல், எப்போதும் குரு பணிவிடை செய்தல், வேதாந்த சிரவணம் செய்தல், அதை மனனம செய்தல், தியானம் செய்தலாதி தருமங்கள் சந்நியாசிகள் எல்லாருக்கும் உரிய தருமங்களாம். தெய்வ முனிவர்களே! நாம் சுருக்கிச்சொன்ன இவற்றைக் கூர்ந்து உணர்ந்து கொள்ளுங்கள் என்று கூறிச சிவபெருமான் மறைந்தருளினார். நைமிசவாசிகளே! நீங்களும் இந்த முத்தி சாதனத்தைப் பரசிவானுக் கிரகத்தால் என்னைக் கொண்டு தெரிந்து கொண்டீர்கள். தென் கயிலையானது எல்லா ஸ்தலங்களையும விடச் சிறந்தது என்று தெரிந்து கொள்ளுஙகள். தென் கயிலாயமாகிய காளத்தியை வணஙகாத வர்களும், பரமசிவனே சகல தேவர்களுக்கும் மேலானவா என்று அறியாதவாகளும், வருணாச்சிரம தருமத்தின்படி நடவாதவர்களும், சிவஞானம் பெறாதவர்களும், முத்தியை அடையமாட்டாாகள். இப்படியே வேதமும சொல்கின்றது. திருமாலாதி தேவர்களும், முனிவர்களும் கூறுவாாகள். ஆகையால ஜனன ரோய்க்குச சிவஞானமே சிறந்த மருநதாகும். முனிவர்களே! பலவாறு கூறுவதில் பயனில்லை. வேத மூலமாக அடையப் படுகிற ஞானமே முத்தி சாதனமாம. மறறைய வழியால் அடையப படுகிறஞானம் முத்தி சாதனமாகாது.

இருபத்தோராவது அத்தியாயம்.

பிரமாணவியல் கூறியது.

வேதங்கள், தரும சாஸ்திரங்கள், புராணங்கள், வேதாங்கங்கள், உபவேதங்கள், ஆகமங்கள், காபாலம், லாகுளம், பாசுபதம், பைரவம் இவற்றின் பேதங்கள், வைணவாகமங்கள், பிரமணாகமங்கள், அருகாகமம், புத்தாகமம், லோகாயுதம், சாங்கியம், தருக்கம், மீமாம்சை யிவைகள் எல்லா வற்றையும், பரமசிவனே உண்டாக்கி

ஞர். அவருடைய அநுக்ஞையால் விஷ்ணு, பிரமன், தேவர், சித்தர், வித்தியாதரர், இராட்சதர், ரிஷிகள், மனிதர்கள் இவர்களும் தத்தம சக்திக்கேற்றவாறு பரமசிவனருளிய நூல்களை விரித்தும் சுருக்கியும் பல நூல்களைச் செய்தார்கள். அவற்றைச் செய்தவர்களுடைய பேரும் அவ்வந் நூல்களுள் இருக்கும். பல பிரவாக நீர்களுக்கும சமுத்திரம ஒன்றே முடிவிடமாயிருப்பதுபோலச் சகல மார்க்கங் களுக்கும சிவபெருமான் ஒருவரே முடிவிடமா யிருப்பார். குற்றமுடையன வான புத்தர் முதலிய மதங்களும் கண்டிக்கத் தக்கன வல்ல. ஒருவன் ஒரு சமையத்தை அனுஷ்டித்தாலும், அதற்கும் இறைவனாகிய சிவபெருமான் கருணையால் அவனும் படிப்படியாக மேலான மார்க்கத்தை அடைவான். வைதிக மார்க்கத்தில் முக்கியமாகச் சொல்லப் பட்ட தெய்வமாகிய நமது பரமசிவன், ஒருவனே முத்தி அருள்கிறவன். கரும காண்டத்துக்கு இறைவனாகக்கூறப்பட்ட சிவபெருமான் ஞானத்தில் விருப்பம் அருள்வார். ஞானகாண்டத்தில் ஓதப்பட்ட பரமன் ஞானம் காரணமாக முத்தியை அருள்வர். முத்தி ஒன்றா யிருப்பதினால் அது பல மார்க்கங் களால் சித்திப்பதில்லை. வேதாகத நெறியானது நிராகாரமாய் அபேதமாயுள்ள சிவனையே கூறும். ஆகையால் இந்த மார்க்கத்தா லுண்டாகும் ஞானத்தை வித்தையென்று சொல்வார்கள். இதர மார்க்கங்களா லுண்டாகும் ஞானம் வினைகளை யொழியாது. அதனால் அவை அவித்தையென்று கூறப்படும். இந்த நூல்களுக்கு முத்தி விஷயத்தில பிராமாணிய மில்லை. அதனால் இந்த மார்க்கங்களைப் பற்றி நடப்பது கூடாது. வேதமார்க்கத்தாலேயே புத்தி முத்திகளிரண்டு முண்டாகும். சிவசொரூபத்திலும், பந்த சொரூபத்திலும, பிரபஞ்ச காரணத்திலும், முத்தி சொரூபத்திலும், ஞான சொரூபத்திலும, வேதாந்தத்துக்கு மாறுபடக் கூறியிருந்தனெனில், கூறுவாம். மந்த புத்தியுடைய பத்தர்களாய் மாயையால் மறைக்கப் பட்டவர்களுக்கு அநுகுணமாகவே கூறப்பட்டது. பரமார்த்தமாகக் கூறப்பட்டதில்லை. ஓடுகிற பசுவுக்குப் புல்லைக்காட்டி அதைப்பற்றிக் கொள்வதுபோல், பாசத்தால் மறைக்கப் பட்டுள்ள வர்களுக்குப் பிரியமான விஷயங்களைக் காட்டிப் பரிபாகம் வருவித்து ஞானத்தைக் கொடுத்தருளுகின்றார் அநாதி மலமுத்த ராகிய சிவபெருமான். சிவபெருமான் உண்மையையே யெடுத்துச் சொல்வார். ஆதலால் இதர மார்க்கங் களையும் குற்றங்

சொல்லப படாது. அம்மார்க்கங்கள் எல்லா வற்றுக்கும் வேத நெறி சிறந்தது என்று உணர்ந்து கொள்ளுங்கள்.

இருபத்திரண்டாவது அத்தியாயம்.

பிரசாதமுறை கூறியது.

பூர்வத்தில் முற்று முணர்ந்த சனற்குமார முனிவர் பிரம தேவனிடம் சென்று பிரசாதக்கிரமத்தை உரைத்தருள வேண்டு மென்று கேட்டார் பிரமதேவர் சனற்குமாரரை அழைத்துக் கொண்டு வைகுண்டம் சென்று, திருமாலை நோக்கிப பிரசாதத் தைச் சொல்ல வேண்டுமென்று கேட்டார். திருமால் அவ்விரு வரையு மழைத்துக் கொண்டு கயிலாய வெற்பை அடைந்து சிவ பெருமானை வணங்கிப பிரசாதக் கிரமத்தைச சொல்ல வேண்டு மென்று கேட்டார். சிவபெருமான் அவாகளுக்கு உபதேசித் தரு ளினர். சனற்குமார முனிவர் வியாசருக்குச் சொன்னர். வியாசர் எனக்கு உபதேசித்தார. அதை நான் உங்களுக்குச் சொல்கிறேன்.

நித்திய நைமித்திக கர்மங்களைப் பக்தியுடன் நிஷ்காமியமா கச் செய்தால் பாவங்க ளெலலாம் ஒழியும். அதனலே சித்த சுத்தியுண்டாகும். பிறகு உருத்திர மூர்த்தியி னுடைய பிரசாதத் தால் சமுசாரத்தி லுள்ள குற்றம் தோன்றும். அதனலே வைராக் கியம் உண்டாகும். அதனல கர்மங்களில்லாத சந்நியாசம் கிடைக் கும். அதன் பின் பிரமாவினுடைய பிரசாதத்தால் சாந்தி தாந்தி முதலானவைகள் உண்டாகும். பிறகு திருமாலின் அனுக்கிரகத் தால் முத்தியில் இச்சை யுண்டாகும். இப்படி சாதன சதுஷ்டய சம்பத்திகள் ஒத்தடைந்த பிறகு விநாயக ருடைய கருணை உண் டாகும். அதனல் குருவின் கடாட்ச முண்டாகும் குருவின் பிரசா தத்தால் யோகசித்தி யுண்டாகும. அதன் பின் பராசத்தியின் அனுக் கிரகத்தால் ஞான மாகிற பிரமவித்தியா சித்தி யுண்டா கும். ஞான சித்தியுண்டான அப்பொழுதே சிவபெருமா னுடைய கருணை யுண்டாகும் பாசிவானுக் கிரகத்தால் பாசம் நசிக்கும் முத்தியுண்டாகும்.

எல்லாச் சீவர்களும் பந்த மொழிந்து முக்தி யருளும் முதல் வன் சிவபெருமான் ஒருவரே; மற்றைய தேவர்கள் அதற்குச் சா

தகமாக இருப்பார்கள். ஸ்மிருதிகளில் கூறப்பட்ட கர்மங்களைச் செய்து கரும சித்தியை அடைந்து சோபான முறைப்படி உயர்ந்து, சிவபெருமான் திருவடியை அடைவார்கள். இப்படி வேதங்கள் கூறுகின்றன. தேவாகள் எல்லாரிலும் சிவபெருமான் மேலானவர். பிரசாத காரணங்களுள் பிரணவமந்திரம் உயர்ந்தது. தருமங்களுக்குள் விஷ்ணு ருத்திர மூர்த்திகளின் ஆராதனை சிறந்தது. பிரணவத்தினுலும், மாயவன் அருளாலும், உருத்திர மூர்த்தியாராதனையில் இசசை யுண்டாகும். உருத்திர மூாத்தியை ஆராதித்தால் அவருடைய கருணையினல் பரசிவ ஐககிய முத்தியடைவார்கள். உருத்திர தேவருடைய கருணையை அடைநதவர்கள் முத்தி சாதனமான ஞானத்தை அடைவது நிசசயமேயாம.

திருமால், பிரமன், சந்திரன், சூரியன், அக்கினி, எமன், இந்திரன், மருத்துக்கள், விநாயகா, முருகர், சரஸ்வதி, இலட்சுமி, துர்க்கை, யிவர்கள் காமிய கருமிகளுக்கு அனுககிரகிப பார்கள். இவர்கள் முறையே தெய்வவடிவம், வலிமை, கீாத்தி, ஆரோககியம், செல்வம், பிதிா உலகவாழ்வு, காரியசித்தி, நினைத்த போகஙகள், வாககு, ஐசுவரியம், வெற்றி முதலிய வற்றைக் கொடுப்பார்கள். நிஷ்காமிய கர்மிகளாயிருந்தால சித்த சுத்தியை அடைந்து அதன் மூலமாகச சிவ பெருமானுடைய கருணைக்குப் பாத்திரராவாாகள். சிவபெருமான் ஒருவரே காமிய கருமிகளுக்குப் போகங்களையும், நிஷ்காமிய கருமிகளுக்கு முத்தியையும கொடுப்பார். மற்றைய தேவர்கள் தம்மை அடைந்தவர்களுக்குத் தமககுத் தகுதியான போகங்களை மாத்திரம் கொடுபபார்கள். முத்தி யளிக்க மாட்டார்கள். முத்திக்குச சாதனங்களைக் கொடுப்பார்கள். ஆதலால் சிவபிரான் கருணையைப் பெற முயல்வதே தகுதி. பிரம தேவன் சத்திய லோகத்தை அடைந்ததும, திருமால் வைகுந்தத்தைப் பெற்றதும, மற்றைய தேவர்கள் தத்தம் பதவிகளில் வாழ்வதும் சிவபெருமான் கருணையினலேயே என்று வேதங்கள் சொல்லும். வேதம் முதலான எநத மார்க்கத்தை அடைந்தவ ராஞலும் சிவபெருமா னுடைய கருணையைப் பெறுவாராஞல் முத்தியை நிச்சயமாகவே அடைவார்கள்.

பிராமணர்முதலான நாலு வருணத்தவர் களாலும்,பாஷாண்டமார்க்க முடையவ ராஞலும், ஸ்திரீக ளாஞலும், மிருகங்கள் விருட்சங்க ளாலும், பாலர், விருத்தர், கழுதை, எ[illegible]

பட்ட ஜீவர்களானாலும், மஹாதேவன் கருணை யுண்டானால் முத்தி யடைவதில் தடையேயில்லை. சிவபிரசாதம் பெற்றவர்களுக்குச் சமான மானவர்கள் எவ்வுலகத்திலு மில்லை. அப்படிப் பட்டவர்களுடைய கட்டளையாலே மேருவும் அணுவாகும். அணுவும் மேருவாகும். அவர்கள் பிரம விஷ்ணுக்களை உற்பத்தி யாக்கவும் அழிக்கவும் வல்லவ ராவார்கள். சிவபிரசாதத்தின் மகிமையைத் தேவர்களும அறியமாட்டார்கள். வேதமும உணராது. உமாதேவியும் சிவ பெருமானும் அறிவாரோ அறிய மாட்டார்களோ தெரியாது. சிதம்பரம், தெட்சணகயிலாயம், காசி முதலான இடங்களில் சிவபெருமானைத் தரிசித்தல் முதலான வற்றால் சிவபிரசாதத்தை அடையலாம். சிவப்பிரசாதம பெறாதவர்களுககுப்போகமுமில்லை, மோட்சமு மில்லை. சிவன் அருளுடைய வர்களுக்கு தருமம் செய்வதாலும் பலனில்லை. அழிவுமில்லை பிறப்புமில்லை. ஆகையால் சிவபெருமான் கருணையை அடைவதற்குக் குருவின் திருவடிகளுக்குச் சேவை செய்ய வேண்டும. இங்ஙனம குரு பக்தி தவறாமல் செய்தால் சிவப்பிரசாத முண்டாகும.

இருபத்துமூன்றவது அத்தியாயம்.

துர்க்கடன் முத்தி அடைந்தது.

முன்காலத்தில் சூத்திர குலத்தில் துர்க்கடன் என்று ஒரு மஹாபாவி யிருந்தான். வன்னெஞ்ச முடையவன். எல்லாருக்கும் தீமையையே செய்து வந்தான். அநேக பிரமஹத்திகள் செய்தான். பல பசுக்களைக் கொன்றான். அநேக வீடுகளை நெருப்பிட்டுக் கொளுத்தினான். அநேகஸ்திரீகளைக் கற்பழித்தான். கிணறு குளங்களை அழித்தான். வருணச் சிரம தருமங்களைக் கெடுத்தான். இப்படிப் பட்ட பாவி பல ஜன்மங்களுக்கு முன்னால் ஒரு சிவயோகிக்கு ஒரு நிஷ்கம் பொன் கொடுத்திருந்தான். அந்தப் புண்ணியத்தால் ஒரு நாள் சிறிது நல்லறிவு தோன்றிற்று. நல்லறிவுதோன்றவே ஐயோ! எத்தனை கோடி கற்பமானாலும் அனுபவித்துத் தீராத நரகாவஸ்தையை அடைவதற் குரிய அளவில்லாத மஹா பாதகங்களைச் செய்து விட்டேன். ஐயோ! இந்தப் பாவம் ஒழிவதற்கு உபாயம் என்ன இருக்கின்றது என்று யோசித்துக் கொண்டிருந்தான்.

இப்படி யோசித்துக் கொண் டிருக்கையில் அவனுடைய பூர்வ ஜன்ம புண்ணிய வசத்தினாலே ஒரு பிராமணன் அவனிடம் வந்து சேர்ந்தான். அந்தப் பிராமணனைத் துர்க்கடன் வணங்கிச் சுவாமீ இதற்கு ஒரு உபாயம சொல்லவேண்டும் என்று தன் கருத்தைவெளியிட்டுச் சொன்னான். வேதியன் துர்க்கடா! புண்டரிக புரம் என்று ஒரு சிவஸ்தலம் இருக்கிறது. அதில் சிற்சபையிலே சிவபெருமான் உமாதேவியார் களிக்கும்படி ஆனந்தத் தாண்டவம் செய்தருளுவார். உலகை இரட்சிக்கின்ற திருமால் அந்தத் தலத்தில் பரசிவப் பிரபுவை ஆராதித்துககொண்டு இலட்சுமியுடன் வசிக்கின்றார்.பிரமன்,இநதிரன், மற்றத் தேவாகள், கின்னரர், யட்சர்,ரிஷிகள், எல்லாரும் அந்தத் தலத்தில் பரமசிவனை ஆராதனை செய்து திருவருள்பெற்றாகள். நீயும் அநதத் தலத்துககுப போய் நடராஜ மூர்த்தியை ஆராதித்துக் கொண்டு சில நாள் அங்கிரு உன் பாபங்கள்எல்லாம ஒழிநது முத்தி பெறுவாய் என்று சொன்னான்.

துர்க்கடன இப்படி உபதேசித்த வேதியனை வணங்கி மகிழ்ச்சியுடன் அப்படியே செய்கிறேன் என்று கூறிச சிதம்பரம் போனான். அன்புடன் சிவகங்கையில நீராடி விபூதி ருத்திராட்சம் தரித்து, ஆலயத்தை மும்முறை பிரதட்சிணம் செய்து, நியோகந்தமாகப் பஞசாட்சரததை ஜபித்து, காமமாதிக் குறறங்களைக் களைந்து, நடராஜ மூர்த்தியைத் தரிசித்துச, சிவனடியாருககுச் சொர்ண முதலான அநேக தானங்கள் கொடுதது, உண்மை யுடையவனாய்ப் பக்தி செய்து கொண்டு, அந்தத் தலத்தில் வாசம் பண்ணினான். இப்படி மூன்று வருஷம் ஆராதித்தான். பரமசிவன் அவனுக்குக கருணை செய்தார. அவனுடைய பாதகங்கள் எல்லாம ஒழிந்தன. அவன் பல போகங்களை யெல்லாம் அனுபவித தொழித்துப் பின் மோட்ச மடைநதான். ஆகையால் முனிவர்களே! சிவப்பிரசாதமே ஒபபுயர் வற்றது என்று உணர்நது கொள்ளுங்கள்.

இருபத்துநான்காவது அத்தியாயம்.

சத்தியசந்தன் முத்தியடைந்தது.

பிராமணர் குலத்தில் சத்தியசந்தன் என்று ஒருவன் இருந்தான். அவன் விஷ்ணு பக்தன். வைதிக ஸ்மார்த்த தர்மங்களை

நூறை தவறாமல் செய்து கொண்டு குற்றமற்றவனாக வாழ்ந்தான். விஷ்ணுவையே பூசித்தல், விஷ்ணு மந்திரத்தையே ஜபித்தல், விஷ்ணு மூர்த்தியைப் பிரதிஷ்டை செய்தல், விஷ்ணுவாலய தரிசனம் செய்தல், விஷ்ணு பக்தர்களுக்கு வேண்டியவற்றைக் கொடுத்தல் இவைகளைத் தவறாமல் செய்து கொண்டு வந்தான். திருமால் அவனுக்குப் பிரத்தியட்சமானார். சத்திய சந்தன் அவர் திருவடியில் வணங்கிப் பூசித்துத் துதித்தான். விஷ்ணு மனம் மகிழ்ந்து அவனை நோக்கிச் சத்திய சந்தனே! முத்தியருளும் முதல்வன் பரமசிவனே யென்று நிச்சயமாய்த் தெரிந்து கொள். நானும் பிரமா முதலானவர்களும் முத்தி கொடுக்கும் சத்தியுள்ளவர்களல்ல. அந்தச் சிவபெருமான் எனக்குந் தேவன். சர்வ சக்தியுள்ளவர். சர்வக்ஞர், ஒப்புயர் வில்லாதவர், தூலம் சூட்சுமம், காரண முதலிய சரீரங்களில்லாதவர், பராசக்தியும் சிவ பெருமானுக்கு அபேதமாயுள்ளவ ளென்று வேதங்கள் சொல்கின்றன. ஞானம், வலிமை, கிரியை இவைகள் எல்லாம் அவருக்கு இயல்பான குணங்களாம். எனக்கும் பிரமன் முதலியவர் களுக்கும் அந்த மூன்றும் சொந்தமல்ல. அந்தப் பரசிவ மூர்த்தியின் கருணையால் எங்களிடமும் சிறிதுண்டாகும். ஆகையால் நாங்கள் முத்திக்குச் சாதனங்களாக இருப்போமேதவிர முத்தியுதவ மாட்டோம் பரசிவானுக் கிரகத்தினாலே ஜீவர்கள் விரும்பின போகங்களைக் கொடுப்போம். நாங்கள் சுதந்திர முடையவர்க ளல்ல. சிவபெருமானே புக்தி முக்தி இரண்டையும் கொடுக்கும் சுதந்திர முடையவர். சிவபெருமானை மறந்துவிட்டு என்னைமாத்திரம் ஆராதிப்பவர்கள் எத்தனை ஜன்ம மெடுத்தாலும் முத்தியடையமாட்டார்கள். ஆகையால் என்னையும் மற்றத் தேவர்களையும் விட்டு, அன்புடன் சிவபெருமான் திருவடிகளைப் பூசித்து, அவன் கருணையால் முத்தியை அடையென்று சொன்னார். சத்திய சந்தனும் அப்படியே மஹாதேவரை யாராதித்து, அவர் கருணையைப் பெற்று, முத்தியடைந்தான். ஆகையால் சிவானுக் கிரகத்தினாலேயே அழியாத முத்தியை அடையவேண்டும். வேறொன்றினாலும் அடைய முடியாது. இந்த இரகசியத்தை வேதநெறி கெட்ட மூடர்களுக்குச் சொல்லக்கூடாது.

இருபத்தைந்தாவது அத்தியாயம்.

சிவபக்தி கூறியது.

சிவபக்தியானது சகல போகங்களையும் கொடுக்கும் வல்லமையுடையது. மோக மயக்கங்களை விலக்கத் தக்கது. முத்தியை விரும்புவதும் சிவபக்தியே. அது பலவகையாம். சாலோக முதலிய பதமுத்திகளை விரும்புவதும் சிவபக்தியே. வேதாகம சிரவணாதிகளிலும், சிவஞானத்திலும், விபூதியிலும், பஞ்சாட்சர ஜபத்திலும், ருத்திராட்சம் தரித்தலிலும், சிவலிங்க பூசையிலும், சிவனைத் தரிசித்தல், சிவபூசைக்கு வேண்டிய உபகரணங்களைக் கொடுத்தல், சிவபூசையில் அன்பு வைத்தல் இவையெல்லாம் சிவபக்தியேயாம். சிவன் திருவிழாவைத் தரிசிக்க விரும்புதல், திருவிழாவைத் தரிசிப்பவர்களுக்குப் போஜனாதிகள் கொடுத்தல், சிவநாமங்களில் விருப்பமுண்டாகுதல், நந்தவனம் வைத்தல், சிவாலயத்துக் குரிய தடாகம் முதலிய உண்டாக்குதல், சிவாலயப் பணிவிடை செய்தல், ஜீரணமான வற்றைப் பழுதுபார்த்தல், கோபுரம மதிள் மண்டபம் முதலியகட்டுதல் இவைகளும் சிவபக்தியேயாம். சிவனடியாரை வணங்குதல், நித்திய கர்மங்களைச சிவார்ச்சனை யென்று கருதித் தினந்தோறும் தவறாமல் செய்தலும் சிவபக்தியேயாம். வேத முதலானவற்றை ஓதுதல், ஓதுவித்தல், அவற்றை யெழுதுதல், அவற்றைக் காப்பாற்றல், சிவபக்தர்களுக்கு அந்தப் புஸ்தகங்களைத் தானங்கொடுத்தல், சிவஞானியர்க்குப பக்திசெய்தல், அவர்களுக்கு போஜனாதிகள் கொடுத்தல், மடம் கட்டுவித்தல் இவைகளும் சிவபக்தியேயாம். சிவமந்திர தியானம் பண்ணுகிறவர்களுக்குப் பணிவிடை செய்தல், சிவஸ்தலந் தோறும் போய்த் தரிசித்தல், திருநீற்றைத் தூஷித்தவர்களைத் தண்டித்தல், சிவாபராதங்கள் செய்தவரையும், சிவஞானியையும், சிவஞானத்தையும் நிந்திப்பவர்களையும் தண்டித்தல். விஷ்ணு முதலான தேவர்களை நிந்திப்பவர்களையும், சிவாலய திரவியங்களைத் திருடின வர்களையும் தண்டித்தலாதிகளும் சிவபக்தியேயாம். ஏழைகளை ஆதரித்தல், பயந்தவர்களுக்கு அபயம் கொடுத்தல், இனியுரை கூறல், எல்லாப் பிராணிகளிடத்திலும் அன்பா யிருத்தல், நன்மையைச் செய்ய விரும்புதல், ஒருவர் மேலும் குற்றம் கூறாதிருப்பது, பிறருடைய குணங்களையே சொல்வது, குருமொழி கடவாது நடக்குந் தன்மையும், குரு பணிவிடை செய்ய

விரும்புகிற அன்புடைமையும், இவைகள் எல்லாம் சிவபக்தியென்று தெரிந்தோர் கூறுகின்றார். பக்தியைப் பெறுவதற்கும் பந்தம் ஒழிவதற்கும், முத்தி அடைவதற்கும் சிவபக்தியே காரணமாம். பக்தியுள்ளவரது இதய பங்கய பீடத்தில் சிவபெருமான் உமாதேவியாரோடு பிரியாமல் வீற்றிருப்பார்.

இருபத்தாறவது அத்தியாயம்.

பரசிவசொரூப முரைத்தது.

எல்லா உலகமும் எந்தச் சிவ சம்பந்தத்தால் சத்துப் போலவே தோன்றுமோ அந்தச சிவத்தினுடைய சொரூபத்தைக் கேளுங்கள். கிரிசியமான பிரபஞ்சத்தைவிட, ஆகாய முதலிய பூதங்கள் சிறந்தன. அவைகளை விடச் சேதன வுயிர்கள் சிறந்தன. அவைகள் சமஷ்டி, வியஷ்டி, என்று இரண்டு வகைபபடும். வியஷ்டியாகிய சீவர்கள் சங்கற்ப பேதங்களுககு ஒததவாறு பலவகையாய், தேவர், நரர், திரியகருஜந்துக்கள் முதலிய சரீர வேறுபாடுகளை அடைந்துள்ளன வியஷ்டியை விடச சமஷ்டியான இரணிய கருப்பன் சிறநதவன். அவனைவிடப் பிரம தேவருடைய வியட்டி அவதாரங்கள் சிறந்தன. அவையும் சங்கற்ப பேதத்தால் ஒன்றநகொன்று உயர்வா யிருக்கும். இவைகளை விடச சமஷ்டியான பிரமதேவன் மேலானவன். பிரமனைவிட விஷ்ணு சிறந்தவர். அவரைவிட உருத்திரமூர்த்தி மேலானவர். இம்மூவரும் பாதந்துவ வியஷ்டிகளே யாவார்கள். இம்மூவரையும விடக் காரண வுபாதியுடைய மகேசுவரர் சிறந்தவர். இவரைவிட நிருபாதிக யாகிய பரசிவனே மேலானவர். இப்படியே பரசிவத்துக்கு மேன்மையை வேதமுரைக்கின்றது. சாம்பிராஜ்ய மடைந்த அரசனுடைய ஆனநதத்தைவிடக் கந்தர்வர் முதலான வர்களுடைய ஆனந்தம் நூறுபங்கு மேலானதா யிருக்கும், இபபடியே பிரமா வரைக்கும் உள்ளவர்களுககு அவரவர்கள் ஏற்றத் தாழ்வின்படி நூறுநூறு பங்கு ஆனந்தம் அதிகமாகும். பிரமாவைவிட விஷ்ணு மூர்த்தியினுடையது சிறந்தது. அதைவிட ருத்திரமூர்த்தி யானந்தம் மேலானது. அதைவிடக் காரண சிவனுடைய ஆனந்தம் சிறந்தது. பரசிவத்துக்கு அகண்டானந்தமாம். இம் முறையே ஞானமும் உயர்வும தாழ்வுமாகக் கருதப்படும்.

ஒரு பெரியமரம் கிளை கொம்பு முதலிய பேதங்களாக இருப்பதுபோலப் பரசிவனும் உருத்திரன் முதலிய சொரூப முடையவராயிருப்பர். மரத்தின் கிளைகளில் ஒன்றற் கொன்று உயர்வு தாழ்வு கூறப்படுவது போலச் சிவபேதங் களான உருத்திரா முதலானவர்களும் ஒருவரில் ஒருவர் உயர்ந்தவர். நித்தியவஸ்து ஒன்றாக விருக்கவும் அவற்றுள் உயர்வுந் தாழ்வுமான வைகளைக் கற்பித்துக் கொண்டு விவாதமிடுகின்றார்கள். அவர்கள் புத்தியில்லாதவர்களேயாவர். உருத்திரனும் காரணசிவனும் எல்லாரையும்விட மேலானவர்கள் என்று உணரமாட்டாதவர்கள் நிருதராய்ப் பிறந்து வருந்துவார்கள். சிவபெருமானுடைய மகிமை மூடர்களுக்கு வெளிப்படுவதுஇல்லை. பல ஜன்மங்களில் சுருதி ஸ்மிருதிகளில் கூறியபடி கன்மங்களைச் செய்துள்ள புண்ணிய வசத்தினாலே சிவமகிமை விளங்கும். ஆகையால் மற்றத் தேவர்களை விட்டுச் சிவபெருமானையே பக்தி புரியவேண்டும். பரசிவ ஞானத்தைப் பெற்றவனே முத்தன்.

பரசிவனுக்கு நாமரூபங்கள் இல்லை. ஆயினும் மாயையாலே சொரூபங்கள் கற்பிக்கப் பட்டன. சிவன், மஹாதேவன், பரப்பிரமம் முதலியன சிவநாமங்கள். விஷ்ணு முதலியன சிவனுக்குக் காரணப் பெயர்கள். சிவம அரூபியாயிருந்தும், உபாசிப்பவர்களுக்கு அனுக்கிரகம் செய்யும பொருட்டுச் சந்திரசேகரம், நீலகண்டம், அர்த்த நாரீசுவரம், ஆனந்த தாண்டவம முதல் பலவடிவங்கள் உண்டாயின. சொரூபமில்லாதவனாகவும், சொரூபமுள்ளவனாகவும், உள்ள பரசிவனுக்கு முற்கூறிய சொரூபங்கள் சிறந்தனவென்று வேதங்கள் கூறும. குணமூர்த்தியாகிய உருத்திரன் எல்லா விதங்களாலும் பரசிவத்துக்கு அபேதமானவர். ஆகையால் விஷ்ணு முதலானவர்கள் அவருக்கு ஒப்பாக மாட்டார்கள். முன்கூறியபரம் முதலியபெயர்கள் உருத்திரர்க்கு இடுகுறிநாமங்களாம். விஷ்ணு வாதியர்க்குக் காரணப் பெயர்களாம். பரசிவன் சொரூபத்தினாலே சிவஞானம் அருள்புரிவார். அந்த அனுக்கிரகம் சிவபூசை தியானம் முதலியவற்றால் உண்டாகும். அவருடைய அனுக்கிரகத்தை அடையாமையாலேயே சிவம் எங்கும் நிறைந்திருக்கவும் அச்சிவத்தை உயிர்கள் உணர்வதில்லை. பரசிவ னொருவனே சகல ஜீவர்களுக்கும் முத்தி புத்தி யிரண்டையும் கொடுத்தலால் அவரையே பூஜிக்க வேண்டும்.

தெட்சணதிசையில் பூலோக கைலாயமென்றும் சிவலோகமென்றும் பெரியோர்களால் புகழப்படுவது. கண்டமாத்திரத்திலே மஹா பாதகங்களைப் போக்குவது. தேவகந்தர்வ யட்ச கின்னரர்களும் வணங்கித் துதிப்பது. பாபிகளுக்கு எட்டாதது. இத்தன்மை நிறைந்த சிதம்பரமென்னும் ஒரு திவ்ய க்ஷேத்திரமிருக்கிறது. சித்கனானந்த சொரூபியாகிய சிவபெருமான் அதில் ஆனந்த நடனஞ் செய்தருளுகின்றார். நீ அந்தத்தலத்திற்குப் போய்ப் பரிசுத்தனாய்க் காலை மத்தியானம் சாயங்காலமென்கிற முப்பொழுதிலும் பிரதட்சண நமஸ்காரங்கள் செய்து சிற்சபேசனை வணங்கித் துதி; கொஞ்ச நாட்களில் உன் பாபங்கள் தொலைந்து நீ நற்கதி பெறுவாயென்று கூறினான்.

அதைக் கேட்ட வேடன் நாமின்று கடைத்தேறினோமென்று உள்ளங்களித்து, அந்தப் பிராமணனை வணங்கி அவனையும் அழைத்துக்கொண்டு பிரயாணப்பட்டான். பிராமணன் முன்னாலே வழிகாட்டிக்கொண்டு செல்ல வேடன் அவனைப் பின் பற்றிச் சென்றான். சிதம்பர க்ஷேத்திரத்தை யடைந்து நாடோறும் பரிசுத்தனாய்த் திரிகாலங்களிலும் சிவ தரிசனஞ் செய்து வந்தான். வெகுதூரத்தில் நின்று சிற்சபேசனை வணங்கித் துதித்தான். சிவார்ச்சனை செய்பவர்களையும் சிவபக்தர்களையும் பக்தியோடு வணங்கி அவர்களுக்குத் திரவியங்களைத் தானஞ் செய்தான். இவ்வாறாகப் பல நாள் செய்துகொண்டு வந்தான். அவனுடைய பாதகங்களும் நாளுக்குநாள் மெலிந்து குறைந்து கெட்டொழிந்தன. சிலநாட்களுக்குப்பின் அந்த வேடனும் தேகவியோகமானான். உடனே திவ்ய சரீரம் பெற்றான். சிவகணங்கள் கொண்டுவந்த தெய்வ விமானத்தின்மே லேறிக்கொண்டு சிவலோகம் போய்ச் சேர்ந்தான். அவனுடைய தோழனாகிய பிராமணனும் சிவதரிசனபலத்தினாலே சிவலோகம்சேர்ந்தான். திருக்கேதாரம் சோமநாதம் சீசைலம் கோபர்வதம் திருக்காளாஸ்திரி அக்கினீசுவரம் ஸ்ரீதரதீர்த்தம் வன்மீகக்ஷேத்திரம் ஆலாஸ்யபுரம் இராமேசுவரம் காந்தாரநகரம் முதலிய பல க்ஷேத்திரங்களிலும் சிவபெருமானை ஆராதித்துப் பேறுபெற்றவர்கள் கணக்கிலடங்கார். மஹா பாதகங்களை நாடோறும் புரிந்த வேடனும் முத்தி யடைந்தானென்றால், மற்றையவர்க்குச் சொல்ல வேண்டுவதென்ன விருக்கிறது என்று கூறிப் பின்னும் சூதபுராணிகர் சொல்லுகிறார்.

இருபத்தேழாவது அத்தியாயம்.

சிவலிங்க விசாரம் கூறியது.

சிவலிங்கம் என்னும் வாசகத்துக்குப் பிரகாசம் என்பது பொருளாகும். சிவமே சிவலிங்கமாம். சிவம் சுயம் பிரகாசமாயிருப்பதால் ஜடத்தைபபோல மற்றொரு பொருளால் பிரகாசிப்பிக்கப படுவது அல்ல. சகல வஸ்துக்களையும பிரகாசிக்கச் செய்கிறதினால் சிவம் ஜடமென்பது கூடாது. அபபடிச் சொன்னால் எவ்வுயிர்க்கும் பிரதீதி யில்லாமல் சூனியமாய்விடும. சூனிய மானாலும் நல்லதேயென்றால், பிரமாண மில்லாமல் சூனியசித்தி கிடையாது. ஆகையால் சிவமே எல்லாவற்றையும் பிரகாசிக்கச செய்கின்றது. என்று தெளியுங்கள். சிவனுடைய இலிங்கமே சிவலிங்க மென்பர். அதை ஆரும் வேற்றுமை உடமைப பொருளாகக் கொள்ளக் கூடாது. ஏனென்றால் வேதாந்த ஞானமே சிவலிங்கமாகும் என்று சிலா சொல்வார்கள். சிலர் சததியமே சிவலிஙகமென்பார். ஸ்மிருதி புராணாதி நூல்களினா லுண்டாகும ஞானமே சிவலிங்க மென்பார். நல்லமனமே சிவலிங்கமென்று சிலா சொல்வார்கள். சித்தமே சிவலிங்க மென்பார. சிலர் புத்தியே சிவலிங்க மென்பர். அகங்காரமே சிவலிங்க மென்று சிலர் சொல்வார்கள். சிலர் பிராணனை சிவலிங்க மென்பார். சரீரமே சிவலிங்கமென்று சிலர் சொல்வார்கள். சிலர் இநதிரியங்களை சிவலிங்க மென்பார. சப்தாதிகளை சிவலிங்கமென்று சிலா சொலவார்கள். சிலர் ஆகாயாதி பூதஙகளை சிவலிங்கம் என்பார். சிலர் உலகமெல்லாம் சிவலிங்கமே யென்பார. இவற்றுள் ஜடபபொருள் சிவலிஙகமாகா. ஏனென்றால் சிவசொரூபம் ஞானமேயாம். பரசிவததுக்கு ஆதாரமா யிருப்பது சிவலிங்கமென்று சிலா சொல்வார்கள். அந்தசசிவம் நித்திய சைதன்னியமாய் விளங்குகிற படியால் அதுவே எல்லா வற்றுக்கும் ஆதாரமாயிருக்கும். அதறகு ஆதாரம் வேண்டுவதில்லை. ஆகையால் சிவமே இலிஙகமென்பது தான் சநதேகமற்றது. உயிர்களின் பரிபாகப்படி பூசைதியானம் முதலிய செய்வதற்கு உபகாரமாக ஆதாரம் கற்பிக்கப் பட்டதாகும். சகல வுலகஙகளும் சிவத்தில் இலயித்தலால் அதற்குச சிவலிங்கமென்று பேர் உண்டாயிற்று என்பார்கள். சுத்தியில் தோன்றுகிற வெள்ளி அதிலேயே இலயித்துச் சுத்தியே சத்தியமாவது போலச் சிவனிடத்தில் ஆரோபிதமான உலக மெல்லாம் அச்சிவத்தில் ஒடுங்கும் போது சிவமே நிலைத்

திருக்கும். அதனால் எல்லா வுலகங்களும் சிவலிங்கமேயாம் சில யோகிகள் சரீர ஆதாரங்களில் விளங்கும் சிவலிங்கங்களைத் தொழுவார்கள்.

ஆதியந்த மில்லாததாய், நெருப்புப் போன்ற நிறமுடையதாய், கீழ்முகமாய், அக்கினிமத்தியில் விளங்குகிற சிவலிங்கத்தையும், கோடி சூரியர்களைப்போலப் பிரகாசிப்பதாய்ப், பந்தத்தை ஒழிப்பதாய்க், கோமளமாய், ஊர்த்துவ முகமாய், மூன்றாந் தானத்தில் உள்ள சிவலிங்கத்தையும், கோடி சந்திரர்களைப்போலப் பிரகாசிப்பதாய்ப், புருவ மத்தியில் பராசத்தியோடு வசிக்கிற மஹாலிங்கத்தையும், குருவருளால் தெரிந்து கொண்டபிறகு, ஆராதித்தல் வேண்டும். பல இலிங்க வடிவமாகப் பராசத்தியோடு இருத்தலால் எல்லாராலும் துதிக்கப்படுவது அந்தச சிவமேயாம். சிவலிங்கத்தின் உண்மையைத் தெரிந்து கொண்டு, மலர்நீர் முதலியன கொண்டு ஆராதிப்பவர் பந்தம்ஒழிந்து முத்திபெறுவார்கள்.

இருபத்தெட்டாவது அத்தியாயம்.

சிவத்தலமகிமை கூறியது.

திருமாது கொழுநனாகிய நாராயணமூர்த்தி கயிலையங்கிரிசாரலை அடைந்து கொடிய தவஞ்செய்தார். அப்போது சிவபெருமான் காட்சிகொடுத் தருளினார். திருமால் எழுந்திருந்து வணங்கித் துதித்தார். சிவபெருமான் திருமாலைநோக்கி உனக்கு வேண்டுவதென்ன வென்று கேட்கச் சிவத்தல மகிமைகளை உரைத்தருள வேண்டுமென்று வேண்டினார். சிவபெருமான் கருணை கூர்ந்து கூறுகின்றார்.

புத்திமுத்திகளைக் கொடுக்கும் தலங்கள் ஆதியாத்மிகம் ஆதிபௌதிகம் என்று இருவகைப்படும். ஆதியாத்மிகம யோகிகளால் வணங்கப்படும். பிரமரந்திர ஸ்தானமும், கண், காது, நாசி, கபோலம், உதடு, சிரசு, சந்தியக்கிரங்களுடன் கூடின பாதம், கை, வயிறு, நாபி, இருவிலாப்பக்கம், ஆதாரங்கள் ஆறும், கைலாயமலையும், காளத்தி, வாரணாவாசி, சோமநாதம், கேதாரம், ஸ்ரீசைலம், விருத்தாசலம், கோபருவதம், சிதரக்ஷேத்திரம், ஆதிபுரம், சுவேதாரணியம், திருநித்தானம், திரிகோடிகா, திருவிடைமருதூர், கும்பகோணம். கட்செணவர்த்தம், சச்சபேசவரம், வன்மீகக்ஷேத்

திரம் கஜாரணியம், வேதாரணியம், மதுரை, இராமேசுவரம், புண்டரீகபுரம், என்பனவும், இவைபோல் வனவுமாம். இவைகளுள் சிதம்பரம், பலவகைப் போகங்களையும் கொடுக்கும்; பாவங்களையெல்லாம் அழிக்கும்; சிவஞானத்தைக் கொடுக்கும். ஆதலால் சிதம்பரம் எல்லாவற்றுள்ளும் உத்தமமானது. சகல உயிர்களும் வணங்கிக் கதியடைவதற் காகவே அந்தத் தலம் நம்மால் நியமிக்கப்பட்டது. அந்தத் தலத்தில் நாம் ஆனந்தத் தாண்டவஞ் செய்வோம். அந்த நடனத்தைத் தேவர்களும் கண்டு தரிசிப்பார்கள். நூல்களாலும், தருக்கத்தாலும் மனமயங்கி யிருப்போர்கள் அந்தத் தலத்தைத் தரிசிக்க முடியாது. நம்மிடம் உண்மையான பக்தியுடையவர்களே அந்த நடனம் கண்டு தரிசிக்கத் தககவராவார்கள். அந்தத்தலத்தைத தரிசியாதவன் வேள்விகள்செய்தாலும் சொர்க்கம் அடைய மாட்டான். ஞானம பெற்றவனானாலும் சிதம்பர தரிசனம் செய்யாதவன் கதிபெற மாட்டான். அவன் செய்கிற தர்மமும் பாவமாகும். உயர்ந்த பிராமணனானாலும் இழிந்தவனேயாவன். அந்தத தலம நமக்கு மிகவும் பிரியமுள்ளது. முத்தியடைபவர்களுக்குத் தரிசிக்கக் கிடைக்கும. இதை உணர்ந்து கொள்என்று திருமாலுக்கு உபதேசித்துச சிவபெருமான் மறைந்தருளினர்.

இருபத்தோன்பதாவது அத்தியாயம்.

திருநீற்றின் மகிமை கூறியது

மஹாபஸ்மம, பஸ்மம்என்று விபூதி யிருவகைப்படும். பாவங்களை யெல்லாம் நாசம் பண்ணுவதால் அதற்குப் பஸ்மம் என்று பேர். ஞானத்தைக் கொடுத்து மஹாபாவங்களை யெல்லாம் நாசப்படுத்துகிறதினால் சிவபெருமானை மஹாபஸ்மமென்னப் படுவார். அந்த மஹாபஸ்ம சொரூபத்தை அடைந்தவர்களுக்குத் தவம் முதலியவற்றினால் யாதும் பலனில்லை. மஹாபஸ்மசொரூபம் விளங்கப் பெற்றவன் சிவனே ஆவான். மஹாபஸ்ம ஞானமடைவதையே பெறும்பயன் என்று வேதாதிநூல்கள் கூறுகின்றன. பஸ்மம், சிரௌதம், ஸ்மார்த்தம், இலவுகிகம் என்று மூன்று வகைப்படும். முன்கூறியசிரௌதம், ஸ்மார்த்தம் என்னுமிரண்டும் பிராமணர்களுக்கே யுரியனவாம். இலவுகிகம் மற்ற எல்லார்க்கும் ஆகும். ஜாபாலோபநிடத மந்திரங்களினால் உத்தூளனம்செய்துகொண்டு,

டஞ்சபிரம மந்திரங்களால் நீர் விட்டுக் குழைத்துத் திரிபுண்டரம் தரித்துக் கொள்ளவேண்டும. மேதாவி முதலிய மந்திரங்களால் பிரமசாரி யணியவேண்டும். சந்நியாசி பிரணவ மந்திரத்தால் அணிவது தகுதி. மந்திரங்களுக்கு அதிகார மில்லாதவன் மந்திரமில்லாமலே தரித்தல் வேண்டும. விபூதியை உத்தூளன மாகவும் திரிபுண்டரமாகவும் தரிததல் ஞானங்கமாகும் என்று வேதங்கள் சொல்லும். பாசுபதவிரதம அனுஷ்டிப்பவன் மெய்ஞ் ஞானத்தை அடைநதவனவான் என்று கைவல்ய உபநிடதம் கூறுகின்றது. முத்தியை விரும்பினவர்கள் விபூதியை எபபோதும் தரிக்க வேண்டும். உயிரைக் காபபாற்றல், சுபம், ஸ்நானம், தானம், தவம், யாகம, எல்லாம் திருநீறேயெனறு வேதங்கள் கூறுகின்றன. திருமால, பிரமன், இந்திரன், தேவர்கள், இலட்சுமி, சரஸ்வதி, இந்திராணி, அரம்பையர்கள், யட்சர், கநதர்வர், இராட்சதர், அசுரர், முனிவாகள், இவர்களில் விபூதியை உததூளன மாகவும் திரிபுண்டரமாகவும் தரியாதவர் யாா? நீறணியாதவர்க்கு ஞானமில்லை; கோடி ஜன்ம மெடுததாலும் சமுசார பநதமொழியார். பாவிகளாவார்கள். நரகத்தில் விழுநது வருந்துவார்கள. வருணாசிரம தரும பலனையும் அவாகள் அடைய மாட்டார்கள். அவாகள் செய்கிற புண்ணியமும் பாவமாகும. பல ஜன்மங்களிலும் பாவம் செய்தவர்களுக்குக் விபூதியில் வெறுப் புண்டாகும். விபூதியை விரும்பாதவர்கள் எலலாருமு மஹாபாவிகள் என்று தெரிநதுகொள்ள வேண்டும். திருநீற்றின் மகிமையை ஒருவராலும் சொல்ல முடியாது.

முப்பதாவது அத்தியாயம்.

சிவப்பிரீதிகர முரைத்தது.

வேதத்தினு லுண்டாகிற துவிதஞானமுமு, வேதாந்த வாக்கியத்தால் பெறபபடும் எல்லாம் சிவமென்கிற அத்துவித ஞானமும், அர்த்த நாரீசுவரம் ஆனந்தத் தாண்டவம் முதலிய மூர்த்தங்களிலும் செய்யப்படுகிற தியானமும், சம்பு, சங்கரன், முதலிய திருநாமங்களை உச்சரித்தலும், இடைவிடாமல் உண்டாகிற சிவபக்தியும், குரு பக்தியும், வேதாகம புராணங்களில் விருப்பமும், வேத மோதுவதும், வேதாகமங்களை ஓதுவித்தலும், வேதாகமப் பொருளை நிச்சயித்தலும, ஜாபாலம் கூறியபடி திருநீறு

தரிப்பதும், ருத்திராட்சம், புனைதலும், சிவலிங்க பூசையும், சிவனடியாரைப் பூசிப்பதும், காசிமுதலான ஸ்தலங்களுக்கு யாத்திரை செய்வதும், சாந்தி முதலிய குணங்களை விரும்பலும், அழியும் பொருளை அறியும் ஞானமும், விராகமும், யாகம், தவம், தானம் முதலான வைகளும், அறமும, பரிசுத்தமும், விதியை அனுசரித்தலும், விலக்கை ஒழித்தலும், துஷ்டருடன் சிநேகிதம் பண்ணுதிருத்தலும், பிறா புகழைப் பேசுதலும், நிந்தை கூறுதிருத்தலும், ஆலயப பணிவிடை செய்தலும், பந்தத்தை ஒழிக்கமுயனுதலும் சிவப்பிரா மணர்களைத் தெய்வமாகப் பாவித்தலும், ஆகிய இவைக ளெல்லாம் சிவப்பிரீதி கரமாமென்று பெரியோர் சொல்வார்கள்.

சிவயோகிக்குப் பணிவிடை செய்வது இவை எல்லா வற்றையும் விடச்சிறந்தது. பூர்வத்தில் குசவர்குலத்தில பிறந்த ஒரு பெண் இருந்தாள். மஹாரூபவதி. அவளுடைய அழகுக்குப்பூலோகத்தில் ஒப்பே கிடையாது. அவள் தன்இசசைப படியே நடந்தாள். தன்னுடைய அழகினலேயே பலபேரையும் மயங்கச் செய்து பொருள் பறிப்பாள். மஹாபாவி. பொருளாசையால் மூவாயிரம் வேதியர்களைக் கொன்றுள். இபபடிப் பட்ட மஹாபாவியான அவளுக்கு ஒரு சிவயோகியின் தரிசனம் கிடைத்தது. அந்தச் சிவயோகி தன் வீடுவந்ததும் அவள் அவருக்குப் பல உபசாரமும் செய்து கலவியாலும் மகிழ்வித்தாள். அவளோடு புணர்ந்துகளித்த அந்தணன் தெட்சண கயிலாயம் போகப் புறப்பட்டார். அவளும் அவரைத் தொடர்ந்தாள். இது தகாததென்று அறிந்திருந்தும் அவளிடத்திலுள்ள மோகத்தால் அவளையும் அழைத்துக்கொண்டு சென்றுர். சீகாளத்தி போய்ச் சேர்ந்து அவளுடன் அங்கே வசித்தார். அந்தக் குசப்பெண்ணும் யோகிக்குப் பணிவிடை செய்துகொண்டு அவரை விட்டுப் பிரியாமல் நெடுங்காலம் இருந்தாள். சிவயோகிக்குப் பணிவிடை செய்ததனலே பரமசிவன் மகிழ்ந்து அவளுக்கு மோட்சம் கொடுத் தருளினர். சிவயோகி பணிவிடை மிக்வும் உத்தமமாகும். இதைப்போலச் சிவபெருமான் மற்றெதிலும் விரும்புவதில்லை.

முப்பத்தோராவது அத்தியாயம்.

மறையவர்க்குச் சிவபக்தியில்லாமைக்குக் காரணம்கூறியது.

முன்னொரு காலத்தில் துவாதசவருஷ க்ஷாமம் உண்டாயிற்று. ஜீவாத்மாக்கள் பசியால் மெலிந்தன. உண்ணத் தகாதவைகளையும் உண்டுகாலம் கழித்தன. அப்போது பசியால வருந்தின சில பிராமணாகள் கௌதமமுனிவரை அடைந்தாாகள். கௌதமர் அவாகளை அஞ்சாதீாகள என்றுகூறித் தமது தபோ மகிமையால் அந்த ஆச்சிரமத்தை மிகச செழிப் புள்ளதாகச் செய்தார். சகல வஸ்துக்களும் அங்கே நிறைந்தன. கௌதமர் தமமை அடைந்த பிராமணர்களுக்கு ஆடையாபரணங்கள் உணவு முதலிய எல்லாம் கொடுத்து ஆதரித்தார். இப்படி நெடுங்காலமாயிற்று. பிறகு மழை பொழிந்து பூமியெங்கும செழித்துத் தழைத்தது. பிராமணர்கள் கௌதமரை நோக்கித தமது நாடுகளுக்குச செல்ல விடை கேட்டார்கள். கௌதமா விடை கொடுக்கவில்லை. ஆதலால் வேதியர்கள் கௌதமர் கோஹத்தி செய்தார் என்று ஒரு அபவாதம் உண்டாக்கினார்கள். அதனால அவருடன் கூடியிருப்பது தகாது என்று கூறினார்கள். அந்த அபவாததைதக் கேட்ட கௌதமர் "சிவ சிவ" என்ன சொன்னார்கள்! என்று மஹா கோபம கொண்டு, நன்றி கொன்ற அவர்களைச சபித்தார். உஙகளுக்குச சிவசூாத்திரங்களிலும், சிவபக்தியிலும், சிவநாமத்திலும, சிவஞானத்திலும், சிவாலயத்திலும், விபூதி ருத்திராட்சங் களிலும், சிவசம்பந்தமான மற்ற எவ்விஷயங் களிலும் விருப்ப மில்லாமல் போகக்கடவது. நித்திய நைமித்திக கன்மங்களிலும, சாந்தி தாந்தி முதலிய ஞானசாதனங் களிலும், வேதாத்தியயனம், ஜபம, யாகம, யோகம், தருமங்களிலும் உங்களுக்கு விருப்ப மிலலாமற் போகக் கடவது. திருமால் முதலான தேவாகள் சிவனைவிட மேலான தெய்வம் என்கிற துர்ப்புத்தி உஙகளுக்கு உண்டாகக் கடவது. அந்தத் திருமால் முதலான தேவர்களுடைய அனுக்கிரகமும் உஙகளுக்குக கிட்டாமற் போகக் கடவது. சங்கு சக்கரம் முதலிய சின்னஙகளை மேனியில் தரித்துக் கொண்டு, நெற்றியில் அரசிலை போலவும், அர்த்த சந்திரனைப்போலவும், தீபச்சுடர் போலவும் உள்ள சின்னங்களை அணிந்து, பாவவழியில் சஞ்சரித்துக் கெடுவீர்களாக. புத்திரர், சகோதரர், மனைவி மற்றுமுள்ள சுற்றத்தார் எல்லாரையும் விற்றும், வேதம், நீர், தருமும், கள், மாம்சம், மீன், முதலியவற்றை

விற்றும் ஜீவிக்கக் கடவீர்கள். பாஷாண்ட மதத்தைக் கைக்கொண்டு துஷ்டர்களாகிப் பாஞ்சராத்திரம், பௌத்தம், ஆருகதம் முதலிய நெறிபற்றி ஒழுகக் கடவீர்கள். உங்கள் வம்சத்தாரும் நாமிட்ட சாபவசப் பட்டுக்கெடுவோர்களாக. சிவபக்தி சிறிதும் உங்களுக்கும் உங்கள் சந்ததிகளுக்கும் இல்லாமற் போகக் கடவது என்று சபித்தார் சிவபக்தர்களில் சிறந்த கௌதமர்.

முப்பத்திரண்டாவது அத்தியாயம்.

சிவநாமமகிமை யுரைத்தது.

சிவன், ருத்திரன், சந்திரகலாதரன், ஸ்ரீகண்டன், மஹாதேவன், பவன், உமாபதி, சங்கரன், விசுவன், பாவநாசகன், சாட்சி, பரம், சம்பு, சத்து, பிரமம், ஈசானன், அகோரன், சத்தியோஜாதன், ஈசன், சூலி, உக்கிரன், பசுபதி, அரன், ஈசுவரன், பூதேசன், கபர்த்தி, சர்வக்ஞன், பிரசாந்தன், கிரீசன், திரிபுராந்தகன், நித்தியானந்தன், ஆகாசன், தட்சஎக்ஞவிநாசகன், அந்தகாரி, பிரபு, ஸ்தாணு, வாமதேவன், தற்புருஷன், பவாரி, காமாரி விசாலாட்சன், சோமன், திரிநேத்திரன், கபாலி, சுகோரன், மஹாமாயி, பீமன், மூலகாரணன், வன்னிரேதசு, பிநாகி, ரிஷபாங்கன், மேருதரன், மஹேசுவரன், சுராட், சர்வாத்மா, முத்தன், பூரணன், அநந்தரூபன், பர்க்கன், சர்வாதாரன், நித்தியன், வரப்பிரதன், நிராமயன், நிர்க்குணன், வேதாந்தன், சத்தியன், பரதேவதை, வியோமகேசன், புவனேசன், தேவதேவன், தகரன் பரமான்மா, இருத்திவசனன், புவனேசன், கிராதன், பயிக்கன், சாம்பன், சம்சாரவர்ஜிதன், சம்சார வைத்தியநாதன், மஹாரிஷி, விநாயகன், அப்பிரமேயன், நிர்மலன், விரூபாட்சன், விரூபன், கணேசன், சர்வேசன், புராதனன், சருவநிதி, புராணபுருஷன், அசங்கன், ஞானசுகன், சுதந்தரன், சுயம்பிரகாசன், ஜோதி, பிரகாசன், சுவானுபவன், ஜகந்நாதன், பிராணன், விசுவரூபன், நிர்ப்பயன், சபாபதி, முருகதேசன், காலகாலன், விசுவாதிகன், சநாதனன், மூலகுரு, பவமானன், அந்தரியாமி, திரிசியநாயகன், அதிரிசியன், சதாசிவன், நிரஞ்சனன், கொன்றைசூடி, இவைபோன்ற பல நாமங்களுண்டு. இவைகளெல்லாம் இடுகுறி நாமமாகப் பரசிவனையே உணர்த்தும். முராரி, நாராயணன், அரிமுதலான நாமங்கள்

காரணமாத்திரையாலே சிவனையே சொல்லும். காரணப் பெயர்களை விட்டு இடுகுறி நாமங்களைத் தோத்திரம் செய்தால் மோக மொழியும். சிவஞானமுண்டாகும். முத்தியும் சித்திக்கும். இது சத்தியம்.

முப்பத்து மூன்றவது அத்தியாயம்.

குருவினிடத்தில் உபதேசம் கேட்குமுறை.

சத்தியம், திருடாமை முதலிய தருமங்களையுடையவனும் காமமுதலிய குற்றங்களில்லாதவனும், சிறந்த பகதியுடைய மாணாக்கன் குருவினிடம் போய்த், தினந்தோறும் மலர் முதலிய வற்றால் அவரைப் பூசித்து, மூவாயிரம், இரண்டாயிரம், அல்லது ஆயிரமாவது அல்லது சக்தியின் அளவாவது தங்கக் காசுகளைப் பாதகாணிக்கையாக வைத்து, அவர் பாதத்தில் சிரசுபடும்படி, பலதரம்பணிந்து, முன்னாலே வணக்கத்துடன் நின்று கொண்டு, மெய்யான குருபரனே ! பரமசிவ சொரூபத்தை உமது அடியவனாகிய எனக்கு உபதேசம் செய்தருள வேண்டும் என்று பிரார்த்திக்க வேண்டும்.

குருவானவர், ஜனங்களில்லாததாய், பயமில்லாததாய், கோமயத்தால் மெழுகப்பட்டதாய், எட்டுதிசைகளிலும் பூரண கும்பங்கள் வைக்கப்பட்டதாய், தோரணம், விதானம், தூபம் தீபம் முதலியவற்றால், அலங்கரிக்கப்பட்டதாய், அழகாயுள்ள ஒருஇடத்தில் அரிசியால் மண்டலமிட்டு, மலர் புஷ்பங்களால் அர்ச்சித்து, அஞ்சலி செய்து கொண்டு வணக்கமொடு நிற்கிற மாணாக்கனை அந்த மண்டலத்தின் மத்தியிலுட்காரவைத்துச, சிவதியானத்துடன் மாணாக்கனை நோக்கிப் பரசிவதியானம் செய்யச சொல்லித் தாமும் தியானித்து, உபதேசம் பெறுகிறவனைச் சிவமாகக் கருதி, அந்த மந்திரத்தைத தாமும் சிந்தித்துத், தமது குரு தமக்கு உபதேசித்தபடியே உபதேசித்துப் பரிச்சேதனம்பண்ண வேண்டும். இப்படி குருவுபதேசம் பெற்ற பின், கருமபரிபாகம் வந்த மாணாக்கனுக்குச் சத்திநிபாதம் உண்டாகும். சத்திநிபாதமுண்டானவுடனே சஞ்சிதம் ஒழியும். பிராரத்த கர்மமபுசித்து உடலோடு ஒழியும். ஊழ்ஒழியுங்கால் உடல் விடுபடும். அப்போது தேவர்கள் வணங்கும்படி முத்தி சேர்வான். சத்திநிபாதம்பதியாதவர்களும், சத்திய வந்தர்களாய்க் குருபணிவிடை

செய்து வேதாந்த சிரவணம் செய்து வரில் கிரமமாகப் பரிபாக மடைந்து முத்தி பெறுவார்கள்.

முப்பத்து நாலாவது அத்தியாயம்.

குருபாரம்பரை கூறியது.

உமாசகாயனுகிய சிவபெருமானே முதற்குரு. அவருடைய மாணுக்கன் திருமால். அவருக்குப பிரமதேவன மாணுக்கன். பிரமனுடைய மாணுக்கன் சனற்குமாரன். அவருடையமாணுக்கா வியாசமுனிவர். வியாசருடைய மாணுக்கன் நான. என்னுல் வேதாநத உண்மையை நீங்கள் உணர்ந்து கொண்டீர்கள். முறைப படி ஆசானிடம உபதேசம் பெறறவன் தன் பாரம்பரியத்தை யிப்படியே தெரிநதவாக்குச சொலவான். அதனுல் அவனுடைய அஞ்ஞானம் ஒழியும. மெய்ஞ்ஞான முண்டாம. அதனுலே பேரினபமுததி சித்திக்கும். குருமரபு தெரியாமல் உபதேசம செய்கிற ஆசான் மாணுக்கனுடைய பாசத்தை ஒழிக்கமாட்டான். அதை உணாநது உபதேசம் செய்கிறவன நிசசயமாகவே மாணுக் கன் பாசத்தை ஒழிப்பான. குருவானவன் தன கோத்திர ரிஷி யைத், தன் குருசொன்ன குருமார்களை, விநாயகரை, சுபபிரமண்ய தேவரை, உமாதேவியாரை, விஷ்ணுபிரமர்களை, மற்றத் தேவர் களையும வணங்கி, தன்னிடம் வநத மாணுககனை ஒரு வருஷம் சோதித்து, அவனுடைய பரிபாகத்துக்கேறறபடி பாசநாசம்பண் ணி, வேதாநதத்தை உபதேசிககவேண்டும. கல்வியினுல் இறுமாபபு உண்டானுல் தீஙகு உடனே வரும. குருவுக்குத தவறு செய்தவர் களும், அயோக்கியாகளுக்கு உபதேசம செய்தவாகளும் நரகில் விழுந்து வருநதுவாாகள். கோத்திரஞானம் விவாகத்துக்கு உபயோகபபடுவது போலக் குரு பாரம்பரிய ஞானம் ஞானத்துக் குச சாதகமாகும்.

முப்பத்தைந்தாவது அத்தியாயம்.

காளத்திமகிமை கூறியது.

முன்னொருகாலத்தில் உமாதேவியார் பரமசிவனைப் பணி ந்து, ஆண்டவனே எல்லாப்பிராணிகளுக்கும் எளிதில் முத்தி தரு கிற ஒரு க்ஷேத்திரத்தைச் சொல்லியருளவேண்டுமென்று வினவி,

ஞர். பரமசிவன் அப்படிப்பட்ட ஒருதலத்தைச் சொல்கிறேன் கேள் என்று சொல்லுகிறார்.

அணுவளவு தருமம் செய்தாலும் மேருவாகச் செய்யும். நினைத்தாலும் கேட்டாலும் உடனே பலன்தரும். பாவிகளால் அடையப்படாதது தென் கயிலாசமேயாம். உயர்ந்த குலத்தில் பிறந்தவரானாலும், இழிந்த குலத்தில் பிறந்தவரானாலும் ஒருவருஷம் அந்த ஸ்தலத்தில் வசித்தல் வேண்டும். சித்திரைமாதம் சித்திரை நட்சத்திரத்திலும், வைகாசிமாதம் விசாகத்திலும், ஆனிமாசம் மூலத்திலும், ஆடிமாசம் பூராடத்திலும், ஆவணி மாசம் திருவோணத்திலும், புரட்டாசிமாசம் பூரட்டாதியிலும், ஐப்பசிமாசம் அசுவினியிலும், கார்த்திகை மாசம் கார்த்திகையிலும், மார்கழிமாசம் புனர்பூசத்திலும், தைமாசம் பூசத்திலும், மாசிமாசம் மகத்திலும், பங்குனிமாசம் உத்திரத்திலும் சொர்ண முகிநதியில் நீராடி நீறணிந்து, அங்குவசிக்கிற நமமிருவரையும் பூசித்துச், சக்திக்கேற்றபடி தானம்கொடுத்து, இரவில் மாத்திரம் புசித்து, இப்படி ஒருவருஷம் வசித்தால் அவர்கள் சகல பாவங்களினின்றும் விடுபட்டு முத்தியடைவது நிச்சயம் என்று சொன்ஞர். உமைகேட்டு மகிழ்ந்தார். ஆகையால் உலகத்தில் காளத்தி மிகச் சிறந்தது. எல்லாப் பிராணிகளுக்கும் முத்திதரு மியல்புடையதென்று உணர்ந்து கொள்ளுங்களென்று சூதர் சொன்ஞர்.

முப்பத்தாறாவது அத்தியாயம்.

முத்தியடைவதற்கேது கூறியது.

ஜயிமினிமுனி வியாதரிடம் போய் முத்தி யடைவதற்கு உரியகாரணம் யாது? எனக்குச் சொல்லவேண்டும். என்று கேட்டார். வியாசர் மகிழ்ந்து, இதைக் குறித்து நான் பிரமாவைக் கேட்டேன். பிரமதேவருக்குச் சந்தேகமுண்டாய் விஷ்ணுவை யடைந்து கேட்டார். விஷ்ணு கயிலாய மலைபோய்ச் சிவ பெருமானை வணங்கிக் கேட்டார். சிவபெருமான் திருமாலே! பூலோகத்தில் அநேக சிவக்ஷேத்திரங்களுண்டு. சிதம்பரம், காளத்தி, விருத்தாசலம், கோபருவதம், வன்மீகம், கஜாரணியம், சோமநாதம், ஆதிபுரம், கோகாணம், பரமேசுவரம், வேதாரணியம், சுவேதாரணியம், கேதாரம், காசி, கும்பகோணம், திருவிடை மருதூர்,

நால்காவது
தேவிபூசை யுரைத்த
அத்தியாயம்.

நைமிசாரணிய வாசிகளே! தேவிபூசையையுங் கேளுங்கள். தேவிபூசை பாகியம் அப்பியந்தர மென்று இரு வகைப்படும். பாகிய பூசையாவது யந்திரம விக்கிரகம முதலியவற்றில் தேவியை ஆவாகனஞ் செய்து பூசித்தல்; அப்பியந்தரமாவது இதயத்தில் தேவி சொரூபத்தை ஸ்தாபித்து பூசை செய்தல்; இந்தப் பூசை வைதிகம் தாந்திரிகம் என்று இருவகைப்படும். வைதிகமாவது வேதங்கூறிய முறைமையிற் பூசிப்பது; தாந்திரிகமாவது ஆகமநெறியில் பூசை செய்வது. வைதிகா வைதிக விதிப்படியே பூசிக்கவேண்டும்; தாந்திரிகா ஆகமப்படியே பூசிக்கவேண்டும். வைதிகர் ஆகமநெறிப்படியும் தாந்திரிகா வைதிகமுறைப்படியும் பூசிக்கலாகாது. மாறிச்செய்தால் அவாகள பாவிகளாய் விடுவார்கள். ஆகையால் அவர்கள் தத்தம் நெறிப்படியே ஷோடசோபசாரங்களுடன் ஆராதிக்கவேண்டும். அகாராதி வாண சமூகங்ளாலாகிய மாதுருகா மந்திரத்தினாலேயே யாவுஞ் செய்தல வேண்டும். சகலமான மந்திரங்களிலும் மாதுருகா மந்திரம் பரமசிலாக்கிய முடையது. இதனை யல்லாமல் ஏனைய மந்திரங்கள் நிலைபெறு. அந்த மந்திரமும் ஸ்தூலம் சூட்சுமம் அதிசூட்சுமமென மூவகைப்படும. இம்மந்திரசொரூபமும் அதிக இரகசியமானதால், அதனைக் குருவை வழிபட்டுத் தெரிந்துகொள்ள வேண்டுமே யல்லாமல் வேறெவ்வகையாலு முணர்ந்துகொள்ள முடியாது. பாகியபூசை செய்து மனம் நிர்மலமாய் நிலைபெற்ற பிறகு அப்பியந்தர பூசைசெய்ய வேண்டும்.

இந்தப் பூசையானது ஸாதாரம் நிராதாரமென் றிருவகைப்படும். ஸாதார பூசையாவது அட்சரங்களாலே செய்யப்பட்ட விக்கிர சொரூபத்தில் குருவுபதேசப்படி பூசைசெய்தல்; நிராதாரமாவது ஸம்வித சொரூபமாகிய தேவியினிடத்து மனதையிலயிக்கச் செய்தல். சம்வித் சொரூபமானது தேவியினியற்கை ரூபமென்று வேதங்கள் கூறுகின்றன. சிவனும் தேவியும் தனித்தனி வேறுவகைப் பொருள்களல்ல. சிவனே தேவி தேவியே சிவன; ஆதலால் தேவி பூசையை வழுவாமற் செய்கிறவா சிவனைப

இராமேசுவரம், மதுரை, இவைகளுள் எதிலாவது நம்மைப் பூசித்துப், பஞ்சாட்சர ஜபம் தினம் பன்னீராயிரம் ஜபித்துச, சிவபக்தர்களைப் பணிந்து வசிக்கிறவர்கள் நிச்சயமாகவே முத்தி யடைவார்கள்.

ஒரு துஷ்ட னிருந்தான். அவன் மஹாபாவி. கள் குடித்துத் தாயைப புணர்ந்து, தந்தையையும் கொன்றான். அவன் பிரமராட்சதன் பற்றி வருந்தினன். இதற்கு என்ன செய்வதென்று விசனத்துடன் திரிகையில் மதுரையை அடைந்தான். உடனே பிரமராட்சத மொழிந்துபோயிறறு. அதனல் அவன் மகிழ்ந்து, இந்தத் தலத்திலேயே நாம் எந்நாளும் வசிப்போ மென்று கருதி அங்கே தங்கினன். அப்பொழுதே அவனுடைய பாவங்கள் ஒழிந்தன. அவனுக்கு ஒரு பிராமணன் பஞ்சாட்சர மந்திரத்தை உபதேசித்தான். அந்தப்பஞ்சாட்சரத்தை நித்தம் பன்னீராயிரம் ஜபிததான். அதனல் அவன் நமது திருவடி நிழலையடைந்து பேரின்ப மடைந தான். ஆகையால் நமது ஸ்தலவாசம பண்ணுவதே முத்தி அடைவதற்குச சிறந்த உபாயமென்று சொல்லி யருளினர். ஆகையால் ஜயிமினி! இதை நீ அறிந்துகொள் என்று வியாசர் கூறினர்.

முப்பத்தேழாவது அத்தியாயம்.

சர்வசாதன முரைத்தது.

குற்றமற்றகுணங்களையுடையவன்! காமாதிகள இல்லாதவன! தலத்தினல் மேம்பட்டவன், என்னை அடிமை கொண் டருளியவன்! அந்த வியாச முனிவர் பரமசிவன் திருவடியைச் சிந்தித்துக் கொண்டு அருந்தவம் புரிந்தார். ஒருநாள் சிவபூசைசெய்து தேவ தேவா! எனக்கு இரங்க வேண்டு மென்று துதித்தார். பரசிவன் அவர்க்குப் பிரசன்னரானா! வியாதா மகிழ்ந்து எனக்குச் சர்வசாதனத்தைச் சொல்ல வேண்டுமென்று கேட்டார். எல்லாராலும் விரும்பப்பட்ட புருஷார்த்த மென்பது புத்திமுக்திரண்டுமாம். முத்தி பலவகைப்படும். அவற்றுள் சாயுஜ்ய முத்தியே சிறந்தது அதை அடைவதற்குச் சாதனம் நம்மை அறியும் ஞானம. அந்த முத்தி நித்தியமாய் ஆன்ம சொரூபமா யிருக்கும். அப்படியிருந்தும் பிராந்தியினலே உயிர்கள் உணர்வதில்லை. மெய்ஞ்ஞானத்தால் அஞ்ஞானம் அழிந்தால் பிராந்தியும் நீங்கும். அபபோது

விளங்கும். அந்தமுத்தி பரசிவ சொரூபமன்று என்றால், பிராப்பியம், அப்பிராப்பியம் என்ற இரண்டினுள் அடங்கும். பிராப்பியமென்றால் பிராத்த பிராத்தியாம். சாத்தியம் என்றாவது, நித்தியமென்றாவது சொல்ல வேண்டும். சாத்தியம் என்றால் சாத்திய பாவவஸ்து அழிவது போல அழியும். நித்தியம் என்றால் கதியும் நித்தியமேயாம். அப்பிராப்த பிராத்தியபேத பாவமெனில் பேதம் நசியாமையாலும், பேதமுள்ளபோது ஏகத்துவ மில்லாமையாலும் அது சரியன்று. ஆகையால் வேதாந்த வாக்கிய ஞானத்தால் கிடைப்பதே சாயுஜ்ய முத்தியாம். வேதம் கூறிய கரும சாதனங்களால் சாரூபாதி பத முத்திக ளடையப்படும் என்று கூறிச் சிவபிரான் மறைந் தருளினார்.

முப்பத்தேட்டாவது அத்தியாயம்.

வேதாவிரோதம் கூறியது.

வேதம் அத்துவித பரமென்றும், கற்பிக்கப் பட்ட துவித பரமென்றும் இரண்டாம். துவிதப்பிரபஞ்சம் காணப்படுவதாலும் பரத்தினிடத்தில் ஆரோபித மாதலாலும் கற்பிதமேயாம். அத்துவிதத்துக்கு வேறொரு அத்துவிதமான அதிஷ்டானப் பொருளில்லாமையாலும், மயக்கத்தினாலுண்டான கற்பிதமான துவிதவஸ்துவினிடத்து அத்துவிதப் பொருள் ஆரோபித மென்று சொல்லக் கூடாமையாலும் அத்துவிதமே யுண்மையாம். அத்துவிதம் சூனியத்தில் ஆரோபித மென்றால், அந்தச் சூனியம் இப்படிப் பட்ட சொரூப முடைய தென்று சொல்ல முடியாமையால் அந்தச் சூனியம் அதிஷ்டான மாகாது. அதனால் அது பொருந்தாது. அத்துவித பரமான வேதத்துக்கும் கற்பித துவிதபரமான வேதத்துக்கும் விரோதம் உண்டா யிருப்பது போலக் காணப் பட்டாலும், பரமார்த்தத்தில் அவிரோத மேயாம். அத்துவிதம் காட்சி முதலிய ஐவகைப் பிரமாணங்களுக்கும் அகோசர மாயிருந்தாலும், அது முக்கியப்பிரயோசனமாதலாலும், பிரமாணங் களுள் முக்கியமான வேதமே அதற்குப் பிரமாணமாகும். துவிதம் வேதப் பிரமாணத்தை விரும்பாமல் காட்சி முதலிய வற்றிற்குகோசரமாயிருப்பதாலும், முக்கியப் பிரயோசன மில்லாமையாலும் துவிதத்துக்கு வேதம் முக்கியப் பிரமாணமில்லை. ஆயினும் அந்தவேதம் முதலிய

வைதத்தை அநுவதஞ் செய்த முடிவில் அத்துவிதத்தையே சொல்லும், ஸ்மிருதி, புராணம், சைவாகமம், தருக்கம், பாரதம் முதலாகச் சொல்லப்பட்ட நூல்கள் அத்துவிதத்தையே சொல்கின்றன. சில சுருதி அஞ்ஞான நிவிர்த்தி காரணமாகவும், சில சுருதி விதி முன்மொழிவும் அத்துவிதத்தைக் கூறுகின்றன. சில சுருதி சீவர் சிவசொரூபம் என்று சொல்லும். சீவத்துவம் தேகிக்கு இயற்கையா மென்பர் சிலர். இயற்கையென்றால் தீயில் வெம்மை போல ஒழியாது. அது மணிமந்திர மாதிகளால் நாசமுண்டானது போலத் தோன்றும். ஆதலால் அது உண்மையல்ல. புளி முதலானவைகளால் தாம்பிரத்தி லுள்ள களிம்பு நீங்குதல் போல ஒரு சாதனத்தால் துக்கம் முதலிய நீங்கு மென்பர். தாம்பிரத்தில் மறுபடியும் களிம்பு உண்டாகும். அதுபோலத் துக்கம் நீங்கினாற் போலத் தோன்றி மறுபடியும் உண்டாகும். ஆதலால் அதுவும் பொருந்தாது. இரும்பு இரசத்தால் பொன்னாவது போல யாதேனும் ஒரு சாதனத்தால் சீவன் சிவன் ஆவான் என்பார். பாலோடு கலந்த நீரைப் பாலென்பது போலவும், தங்கத்தொடு கலந்த வெள்ளியைத் தங்கமென்பது போலவும், இரசவீரியத்தாலும் அக்கினி சம்பந்தத் தாலும் இரும்பு பொன் னிறமாம். அது பொன்னாகாது அந்தப் பொன்னிறம் அநித்தியமேயாம். இரசவீரியம் ஒழியும் போது அந்த நிறமும் மாறும். பிராந்தியினாலே இரும்பைப் பொன் என்று கருதுவார்கள். சூட்சும புத்தி யில்லாதவர்களுக்குப் பிராந்தி யென்பதுண்டு. அக்கினி சம்பந்தத்தால் தண்ணீர் வெம்மையாகக் காணப் பட்டாலும் அது நெருப்பு ஆகாது. சீவன் பரமசிவனைப்போற் காணப் பட்டாலும் அது சிவனாகாது. முத்தி தசையில் சீவன் சிவனுக்குச் சமானமாம். என்பார் சிலர்; அதுவும் பொருந்தாது. ஏகதேசத்தில் சமனும் என்றால் மிக்கபாச முள்ளவனும் உத்தமனே யாவான். எல்லா விஷயத்திலும் சமனு மென்றால் அவனைப் பரசிவனே யென்று சொல்லலாம். சிவசமானன் என்பது வேண்டுவ தில்லை. முத்தி காலத்தில் உண்டான சமத்துவம் மறுபடியும் ஒருகாலத்தில் போய்விடக் கூடும். ஆதலால் அந்த முத்தி அநித்தியமே யாம். ஆதலால் அந்தக்கரண வுபாதியாலே சீவனாய்த் தோன்றிய ஆன்மா பரம ஞானத்தாலே மாயை ஒழிந்து பூரண சிவமாகவே யிருப்பான்

முனிவர்களே! சுத்திவெள்ளி சுத்தியை அறிதலினாலே ஒழிந்து சுத்திமாத்திரமா யிருப்பது போலச் சிவஞானத்தாலே

ஆரோபிதமான பிரபஞ்ச மெல்லாம் சிவமாகவே யிருக்குமென்று வேதம் கூறுகின்றது. முத்தி காலத்தில் சகத்துக்கு அபாவம் உண்டாகும் என்பார். இப்படிச் சொல்வது பிராந்தியி ஞலேயே. அது பரவஸ்துவா யிருந்தால் அபாவமும் கூறலாம். ஜகம் பாவாபாவத்திற்கு வேறுயிருப்பதாலே அபாவம்கூறுதல் தகாது; ஜகம் அதிஷ்டான சிவசொரூப மாகவே யிருக்கும். ஜகம் என்கிற பிராந்திக்குச் சிவமே அதிஷ்டானமாம். ஜகம் ஆரோபிதமே யென்று யுத்தி அளவைகளால் தீர்மானிக்கப் படும். இப்படியே வேதமும் சொல்கின்றன. நானும் சத்திய மாகவே சொல்வேன். ஏகவஸ்து என்று கூறுகிற வேதவாக்கியத்துக்கு விரோதமான வாக்கியங்கள் எல்லாம் சேஷமே கூறும். சிவம் ஒன்றின் சேஷ மாகாதது போல வேதமும் மற்றொன்றின் சேஷ மாகாது. அது உண்மையையே எடுத்துச சொல்லும். பரசிவம் திருநீறு வேதம இவற்றில் வெறுப்புண்டாகுதல் வேதவிரோதத்தை யுணராமை யாலேயே. விஷ்ணு முதலான தேவர்கள் மஹாதேவனுக்குச சமான மென்று கூறுதலும், வேதத்துக்குச் சமானம் எடுத்துச் சொல்லுதலும் மஹா பாவிகளுக்கே யுரிய வையாம. புண்ணியான் மாக்கள் சிவ முதலாகச் சொல்லப் பட்ட வற்றில் சிரத்தை யுள்ள வர்களா யிருப்பார்கள். அவைகளைச் சர்வோத்தம மென்று கருது வார்கள். அவர்களே பெரியோர் என்னப் படுவார்கள். இவற்றின் மகிமைகளை யெடுத்துச் சொல்ல என்னுலாகாது.

சிலர் ஞான காண்டத்தைக் கரும காண்டத்தின் சேஷம் என் பார்கள். கர்த்திருத்துவ போக் திருத்துவமே கருமங்களின் பல மாம். அவ்வ கொஞ்சங் கூடக் கலவாத வஸ்துவையே ஞானகாண் டம் கூறும். கருமம் அற்பமான பலனைத்தரும். ஞானமானது பிர காசமான பூரணபலனைத்தரும். ஆதலால், ஞானத்தைக் கொடுக் கிற கருமகாண்டம் ஞானகாண்டத்துக்கு வேறேயாம். ஞானமும் கரும சேஷமாகமாட்டாது. கருமஞானங்களுக்கு அதிகாரி பேதங் களுமுண்டு. கருமஞான முண்டானபோது பரமஞானம் தோன்று கிறதில்லை. கருமம் ஒளியற்றது. ஞானம் ஒளிமயமான உண்மைப் பொருள். இவற்றிற்குப் பெயர்களும் வேறே. இவ்வித காரணங் களால் ஞானம் கரும சேஷமாவதில்லை. கரும காண்டமும் ஞான காண்டத்துக்குச் சேஷமாவதில்லை. சாந்தி,தாந்தி, சிரவணம்,மன

னம், தியானம் என்பவை ஞானசாதனங்களாம். இருளை நீக்குவதற்குச் சூரியனுக்குச் சகாயம்வேண்டுதில்லை. அதுபோல அஞ்ஞானத்தை ஒழிப்பதற்காக ஞானத்துக்குஉதவி வேண்டுவதில்லை. கருமத்துக்குத் தர்மார்த்தகாமங்களே பலன்களாம். அதர்மத்தாலேதுன்பத்துக்கு இடமான நரகமும், தர்மத்தாலே பாதகங்களை ஒழிக்கிற சித்தசுத்தியும் உண்டாகும். சித்தசுத்தியினாலே பந்தத்தினாலாகும் குற்றங்கள்தோன்றும். அதுகாரணமாக விராகம் உண்டாகும். அதனாலே முத்தியிச்சை உண்டாகும். ஆதலால் கருமத்தை ஞானசேஷமென்று கூறலாம். இப்படிக் கிரமமாய் அறிந்துகொள்ளாதவர்கள் வேதார்த்தத்தை வேறாகக்கருதி மோகத்தால் சமுசாரபந்தத்தில் விழுவார்கள். இந்த வேதாவிரோதம் சிவப்பிரசாதத்தினாலும், சிவபக்தியினாலும் விளங்கும்.

முப்பத்தோன்பதாவது அத்தியாயம்.

சர்வசித்திகர முரைத்தது.

சர்வசித்திகரமானது காயிகம், வாசகம், மானசம் என்பவற்றினாலே உண்டாகும். காயிகமானது திருநீறணிதல், ருத்திராட்சம் தரித்தல், சிவலிங்க பூசைசெய்தல், அடியார் பணிவிடை செய்தலாதிகளாம். வாசகமானது பிரணவமந்திரம், அஜபாமந்திரம், மாதுருகாமந்திரம், பஞ்சாட்சரம், காயித்திரிமந்திரம் இவைகளை ஜபித்தல்; வேதாகமபுராணங்களைப் பாராயணம்செய்தல் முதலியவாம். மானசமானது சிவத்தியானம், சிவசக்தியான உமாதேவி தியானம், வேதாந்த விசாரம், விரகம், பரசிவமே தெய்வமென்று கருதுதல், சிவ அத்துவிதபாவனை செய்தலாதியவாம். விஷ்ணு முதலான தேவர்களுக்கும் உமாகாந்தனை பரசிவப்ரசாதத்தினாலேயே சத்தாசித்தி யுண்டானபடியால் இந்தச் சிவதருமங்களே சர்வசித்தி தருவனவாம். வேறு தருமங்கள் பயன்தருவதில்லை, பரமசிவன் ஒப்புயர்வற்று விளங்குவதுபோலச் சிவதருமங்களும் ஒப்புயர் வில்லாதவைகளாம்.

நாற்பதாவது அத்தியாயம்.

பாதக விசாரம் கூறியது.

பாதகம் பத்துவகைப்படும். அவை மஹாபாதகம். அதிபாதகம், பிராசங்கிகம், பாதகம், உபபாதகம், சாதிப்பிரஞ்சகரம், சங்கீர்ணகரணம், ஆத்திரீகரணம், லாகவம், பிரகீர்ணகம் என்பவைகளாம். கட்குடித்தல், பொன்திருட்டு, பிராமணரைக்கொல்லுதல், தாயோடுசேர்தல், குருவுக்குத் தீங்கு செய்தல், இவை செய்பவரோடு பழகுதல் என்பன மாபாதகமாம். தன்தாய்க்குச் சமானமான ஸ்திரீகள், மருமகள், புத்திரி, தங்கை இவர்களைக்கூடுதல், தெய்வ விக்கிரகங்களைக் கெடுத்தல் இவை அதிபாதகமாம். அரசர் வணிகர் இவர்களை வதைத்தல், கர்ப்பஸ்திரீகளை வதைத்தல், சிநேகத்துரோகம் செய்தல், பொய்ச்சாட்சி சொல்லுதல், பிதா சகோதரன் மாமன் இவர்கள் பத்தினிமாரோடு கலத்தல், பூமியை அபகரித்தல், சரணமடைந்தவர்களைக் கொல்லுதல் இவை பிராசங்கிக பாதகமாம். தாயோடு கூடப்பிறந்தவள், தந்தையுடன் பிறந்தவள், அவள் புத்திரி, இவர்களோடு புணர்தல், விபூதிருத்திராட்சம் தரியாமை, சங்கு சக்கரம் சூலம் முதலிய சின்னங்களை உடலில் தரித்தல் இவை பாதகமாம். உபபாதகம் முக்கியம் கௌணம் என்று இருவகையாம். முக்கியமாவது சுரோத்திரியன், ரித்துவிக்கு, அத்தியாபகன், மித்திரன் இவர்கள் பத்தினிகளுடன் கூடல்; சூத்திர ஸ்திரீ, சகோத்திர ஸ்திரீகள் இவர்களைச் சேர்தல், ருதுவாயிருக்கும் ஸ்திரீயைச் சேர்தல், பாஷண்டமதத்தை அநுஷ்டித்தல், துர்க்கைமுதலிய தெய்வவடிவங்களைச் சிதைத்தல் இவைகளாம். கௌணமாவது வேதநிந்தை, குருநிந்தை, வேதம் தாய் தந்தை அக்கினி சகோதரி மனைவி இவர்களைக் காப்பாற்றாமல் விடுதல், பொய்கூறல், அரசரை நிந்தித்தல், விலக்கப்பட்ட உணவுகளைப் புசித்தல், கூலி வாங்கிக்கொண்டு வேதமோதுவித்தல், குருபணிவிடை செய்யாமல் வேதார்த்தத்தை ஆராய்தல், பிராமணகுலத்தில் பிறந்தும் அரசனிடத்தில் உத்தியோகம் செய்தல், வேள்வியைநிந்தித்தல், குற்றமுள்ள நூல்களைக்கற்றல், தன்மனையாளை மதியாமலிருத்தல், நாஸ்திகனாகுதல், கட்குடிக்கிற பெண்களை விரும்புதல் இவைகளானாகும். பிராமணர்களுக்குத்துன்பஞ்செய்தல், மாம்சம் முதலியவற்றை மோந்துபார்த்தல், புருஷனைக்கலத்தல் இவை சாதிப் பிரஞ்சகரமாம். வனத்திலும் நாட்டிலுமுள்ள

ஐந்துக்களைக் கொல்லுதல் சங்கிரணகரணமாம். நல்லொழுக்கமில்லாதவர்களுக்குத் தானங்கொடுத்தல், பொய்சொல்லி வாணிபம் செய்தல், வட்டிவாங்கி ஜீவித்தல், ஈனர்களுக்கு அவர்கள் செய்யத்தகாத கருமங்களைச்செய்வித்தல்இவைகள் ஆத்திரீகரணமாம். நீர்முதலான இடங்களில் வசிக்கிற பட்சிகளைக் கொல்லுதல்; கள் சம்பந்தமான பொருள்களைப் புசித்தல் இவை லாகவ பாதகமாம். இப்பொழுது கூறிவந்தவைகளல்லாத மற்றைய பாவங்களெல்லாம் பிரகீர்ண பாதகமாம்.

இவற்றுள் குற்றமற்றவர்களைத் தண்டிப்பது, யுத்தத்தில் புறங்கொடுத்தல் இவை அரசர்களுக்கு மஹாபாதகமாம். நிறை முதலிய அளவில் மோசம செய்தல், கள் ஊன்முதலிய இழிந்த பொருள்களை விற்பது வணிகருக்கு மஹாபாதகமாகும். தன் குலத்துக்கு மேற்பட்ட மூன்று குலமாதரைப் புணருதல், காராவின்பாலை அருந்துதல் இவை சூத்திரர்களுக்கு மஹாபாதகமாம். சங்கரஜாதிஜனங்களுக்கு,வேதியர்முதலான மேன்குலத்தாரை நிந்தித்தல் மஹாபாதகமாகும். இவ்வாறு கூறப்பட்ட பாவங்கள் எல்லாம் ஸ்திரீ புருஷா இருவர்க்கும் சமமாகும்.

பெண்களுக்குக் கருவழித்தல், கணவனைக்கொல்லுதல், இழிந்தவர், மாணுக்கர், குரு இவர்களைப் புணர்வது ஸ்திரீகளுக்கு மஹா பாதகமாம். வேதம் ஆகமம் ஸ்மிருதி இவைகள் விதித்த கருமங்கள் அல்லாதவைகளெல்லாம் மஹாபாதகங்களே யாகும்.

நாற்பத்தோராவது அத்தியாயம்.

பிராயச்சித்த முறைத்தது.

பிராயச்சித்தங்கள் எல்லாவற்றுள்ளும் வேதாந்த சிவஞானமே சிறந்ததாம். அது அறிந்துசெய்த பாதகங்களையும் எரிக்கும். சர்த்திருவாதிகளை யுடையவர்களுக்கே கர்மபந்தம் உண்டாகும். சிவஞானிகளுக்கு இல்லையாம். இந்திரியம், பிராணன், தேகம், விஞ்ஞானம், சங்கற்பம், அந்தக்கரணங்கள், ஜாக்கிராதி அவஸ்தைகள், இவற்றிற்குச் சாட்சியாய்ச் சின்மாத்திர சொரூபமா யுள்ள பூரணானந்தப் பரசிவம் தன் இருதய கமலத்தில் பிரகாசிக்கிறதைத் தரிசித்து மகிழ்கின்ற சிவஞானிக்கு ஒருபோதும் பந்தமில்லை. அவன் பந்தங்கடந்தவனே

யாம். தேகாதிகளை நான் என்று எண்ணுகிறவனுக்கே பந்தமுண்டாகும். குருவின் அனுக்கிரகத்தினாலே வேதாந்தப் பொருளைத் தெரிந்துகொண்டு, ஒருநாழி அந்தச் சிவஞானத்தில் நிலைத்து நின்றால் அறியாமல் செய்த பாதகங்கள் ஒழியும். பல நாள் நிலைத்து நின்றால் அறிந்துசெய்த மஹா பாதகங்கள் ஒழியும். ஆனந்தத் தாண்டவ மூர்த்தியின் பாதகமலங்களை ஒரு முகூர்த்த காலம் தியானித்தால் அறியாமல் செய்த பாவங்கள் தீரும். ஒரு இரவு தியானித்தால் அறிந்து செய்த பாவங்களெல்லாம் நீங்கும். உருத்திர மூர்த்தியை ஒருநாள் தியானித்தால் அறியாமல் செய்த பாவங்கள் நீங்கும். மூன்று நாள் சிந்தித்தால் அறிந்து செய்த பாவங்கள் ஒழியும். விஷ்ணுவை மூன்றுநாள் தியானித்தால் அறியாத பாதகங்கள் அழியும். ஏழுநாள் சிந்தித்தால் அறிந்து செய்த பாவங்கள் தீரும். பிரமதேவரை ஏழுநாள் சிந்தித்தால் அறியாமல் செய்த பாவங்கள் ஒழியும். ஒருமாதம் தியானித்தால் அறிந்து செய்த பாவங்களொழியும்.

ஞான மந்திரத்தைப் பக்தியுடன் பதினாயிரம் உருச்செபித்தாலும், கழுத்தளவு ஜலத்தில் நின்றுகொண்டு அஜபா மந்திரத்தை இலட்சம் ஜபித்தாலும், நாபி அளவு ஜலத்தினின்றுகொண்டு பஞ்சாட்சரத்தை இலட்சம் ஜபித்தாலும், கழுத்தளவு ஜலத்திலிருந்து வியாகிருதி மூன்றையும் இலட்சம் ஜபித்தாலும், மௌன விரதத்துடன் சாவித்ரி மந்திரத்தை இலட்சம் ஜபித்தாலும் சகல பாதகங்களு மெரிந்துபோம். வியாகிருதிகளுடனும் பிரணவத்துடனும் கூடின பிராணாயமத்தை நாள் ஒன்றுக்குப் பதினாறுதரமாக ஒருமாதகாலம் செய்தால் சிசுஹத்தி தோஷம் நீங்கும். பிச்சையெடுத்துண்டு பசுத்தொழுவத்திலிருந்துகொண்டு ஒருநாளுக்குப் பத்துத்தடவையாக ஒருவருஷகாலம் சூக்தங்களைச் செபித்தால் பலவகை செய்த பாதகங்கள் நீங்கும். மூன்றுநாள் உபவாசமிருந்து கழுத்தளவு தண்ணீரிலிருந்துகொண்டு மூன்றுதரம் அகமருஷண மந்திரஜபம் செய்தால் பலகாட்களிற்செய்த பாவங்கள் எல்லாம் அழியும். பிச்சையெடுத்துப் புசித்துக்கொண்டு நாள் ஒன்றுக்கு எண்ணாயிரமாக ஏழுநாள் காயத்திரி ஜபம் செய்தாலும், மூன்றுநாள் உபவாசமிருந்து கூச்மாண்டமந்திரத்தால் அக்கினியில் நற்பசுநெய் ஆகுதிகொடுத்தாலும் கொடும்பாதகங்கள் தீரும். அஸ்யவாமீய சூக்தத்தை

அன்புடன் ஜபித்தால் சொர்ணத்தைத் திருடின பாவந்தீரும். புருஷசூக்தம், அவிஷ்யந்தியசூக்தம் இவைகளை விதிப்படி ஜபித்தால் குருமனைவியைச் சேர்ந்த பாவந்தீரும். மூன்றுநாள் உபவாசமிருந்து புருஷசூக்த மந்திரத்தால் நெய்கொண்டு ஓமஞ்செய்தால் எல்லாப்பாவங்களும் ஒழியும். மூன்றுநாள் உபவாசமிருந்து சரீரமுழுதும் நீறுபூசிக்கொண்டு சிவபெருமானைத் தியானித்தால் கள் உண்டபாவந்தீரும். "திரிபதை" என்கிற காயத்திரியை ஜலத்துக்குள் முழுகியிருந்து ஐந்துதரம் ஜபித்தாலும், "அவேதி"யெனும் மந்திரத்தையும், "யத்கிஞ்சிசதம்" என்றமந்திரத்தையும்ஒருவருஷம்ஜபித்தாலும் சகலபாவங்களும் நீங்கும். தரசமந்தியசூக்தத்தைத்தவிரு மல்ஜபித்தால்உண்ணத்தகாதவைகளை உண்ட பாவம் போம். இக்திரசூக்தத்தை ஆறுமாசம் ஜபித்தால் எவ்வகைப்பட்ட மஹாபாதகங்களுந்தீரும். ஆயிரம்பிராணாயாமஞ் செய்தாலும் வியாகிருதிபிரணவம் சிரசுகளுடன் கூடின காயத்திரியைத்தண்ணீருக்குள் முழுகிக்கொண்டு மூன்றுதரம் ஜபித்து அம்மந்திரத்தினாலே ஆயிரம் எள் ஓமஞ்செய்தாலும் மஹாபாதகங்கள் எல்லாம் நீங்கும். தினந்தோறும் பிராமமுகூர்த்தத்தில் மஹாதேவனுடைய நாமசங்கீர்த்தனம் செய்தாலும், கங்கை, காசி, வேதம், சிவம், திருநீறு இவ்வைந்தையும் உதய காலத்தில் ஸ்தோத்திரம் செய்தாலும் சகல பாதகங்களும் விலகிப்போம். கிரகணம், அயனம், விதிபாதம், இந்தத் தினங்களில் சிவ சங்கீர்த்தனம் செய்தாலும், பூரணை, அபரபட்ச அட்டமி, சதுர்த்தசி, ஞாயிற்றுக்கிழமை திருவாதிரை இந்நாட்களில் சிவ சிந்தனையுடன் பிராமணர்களுக்கு அன்னம் படைத்தாலும் மஹா பாதகமெல்லாந் தீரும். மஹாமக தினத்தில் சிவ பெருமானுக்கு நெய் அபிஷேகம் செய்தாலும், மாசிமாசம் அபரபட்ச சதுர்த்தசியில் பக்தியுடன் வில்வத்தால் பூசித்தாலும், பங்குனி மாசம் ஆதிவாரத்தில் பலாச மலரால் அர்ச்சித்தாலும், சித்திரை மாசம் சித்திரை நக்ஷத்திரத்தில் சுகந்த புஷ்பங்களால் சிவபிரானை அர்ச்சித்தாலும், மஹாபாதகங்களெல்லாம் ஒழியும். கங்காநதியில் ஸ்நானஞ்செய்து விசுவநாதரைப் பூசித்தாலும், சிங்காரசியில் குரு இருக்கிறபோது கோதாவிரியில் ஸ்நானம் செய்தாலும், மாசி மகத்தில் சொர்ணமுகி நதியில் ஸ்நானம் செய்தாலும், சோமவாரம் அமாவாசை ஞாயிற்றுக்கிழமை சப்தமிதிதி இவைகளில் காவேரி நதியில் ஸ்நானம் செய்தாலும் சகல பாதகங்களும் விலகும். கந்த மாதனத்தில் க்ஷிப்பிரா

நதியில் நீராடி, இராமேசுவரத்தைத் தரிசித்துப், பிராமணர்களுக்கு அன்னதானம் செய்தாலும், பத்துநாள் சிற்சபேசனைத் தரிசித்தாலும், சகல பாதகங்களும் ஒழியும். சகலபாவங்களுக்கும் பிராயச்சித்தம் சந்நியாசமே. அதுநாலுவகையாகும். பாதகங்களைச் செய்தவன் பிராணனை விடுதலே சரியான பிராயச்சித்தம். சந்நியாசியாய் விட்டால் பிராணனை விடவேண்டுவதில்லை. அதனால் சிவானுக்கிரகத்தைப பெற்று அவன் முத்தியை அடைவான்.

முனிவர்களே! பலபல பேச்சு என்னத்திற்கு; சிவஞானம், சிவத்தியானம், சிவநாமகீர்த்தனம், விபூதி ருத்திராட்சம் புனைதல் இவைகளால் நீங்காத பாதகங்கள் ஒன்றும் கிடையாது. சகல பாவங்களும் இவ்வைந்தாலும் தகிக்கப் பட்டுப்போம். இவை வேதங்கூறிய பிராயச் சித்தங்களாம். இதை இரகசியமானதென்று உணர்ந்து கொள்ளுங்கள்.

நாற்பத்திரண்டாவது அத்தியாயம்.

சிவக்ஷேத்திரங்களைக் கூறியது.

முனிவர்களே! பூலோகத்தில் சிவபெருமான் எழுந்தருளியிருக்குந் திவ்விய க்ஷேத்திரங்களையும் அந்தந்த க்ஷேத்திரத்திலுள்ள பரமசிவன் உமாதேவியார் இவர்களுடைய திருநாமங்களையும் சொல்லுகிறேன் கேளுங்கள்.

அமரேசுவரமென்று ஒரு திருப்பதியுண்டு. அதில் எழுந்தருளிய சிவபெருமானுக்கு ஓங்காரேசுவரர் என்றுபேர். உமாதேவியாருக்குச் சண்டிகேசுவரி என்றுபேர். பிரபாச க்ஷேத்திரத்தில் சிவபெருமானுக்குச் சோமநாதர், தேவியார் புஷ்கரேட்சணி. நைமிசாரணியத்தில் சிவபெருமானுக்குத் தேவேசுவரன் என்றுபேர். தேவியாருக்கு இலிங்கதாரிணியென்று பேர். புஷ்காம் என்று ஒரு க்ஷேத்திரமுண்டு. அதில் எழுந்தருளிய சிவபெருமான் பேர் இரஜோகந்தியீசன்! தேவியார் புருகூதை. ஆடாடி நகரத்திலீசன்பேர் ஆடாடீசுவரன், தேவியார் இரதி. சண்டமுண்டியென்னும் தலத்தில் சிவபெருமான் பேர் தண்டீசுவரன். அம்மையார் தண்டினி. பாரபூதி க்ஷேத்திரத்தில் ஈசன் பாரபூதிகன், அம்மையார் பூதி. நகுலேசத்தில் ஈசன்பேர் நகுலேசன்! தேவியார் நகுலை. அரிசசந்திர தலத்தில் ஈசன்பேர் ஹரான்; தேவியார் சண்

பூசித்தவர்களே யாவார். சிவபூசைக்கும் தேவிபூசைக்கும் பயன் ஒன்றேயாம். இதனைக் கொலைபாதகர் கட்குடியர் காமிகள் வேத நிந்தகர் சிவனையும் சிவனடியாரையும் நிந்திப்பவர் முதலியகொடியோர்க்குச் சொல்லலாகாது; சொன்னால் பாவம்வரும்.

ஐந்தாவது

சிவனடியார் மகிமை யுரைத்த

அத்தியாயம்.

நைமிசாரணியவாசிகளே! சிவபூசையைவிடச் சிவனடியாரைப்பூசிப்பது மஹாவிசேஷம். சிவனடியாரைப் பூசிக்காவிட்டால் சிவபூசை பயன் தராது. சிவபூசை செய்பவரும் சிவத்தியானம் பண்ணுகிறவர்களும் நீறு கண்டிகை பூண்டு பஞ்சாட்சர மந்திரத்தை ஜபிக்கின்றவர்களும் சிவஸ்தலயாத்திரை செய்பவர்களுமாகிய சிவபக்தர்களைக் கண்ணினாற்கண்டால், வர்ணாசிரம உயர்வு தாழ்வுகளை யோசியாமல் அவர்களை வணங்கி, அர்க்கிய பாத்திய ஆசமனாதி ஷோடசோபசாரங்களும் செய்து, அறுசுவைகளோடு கூடிய நால்வகை யுண்டிகளை யுபசாரத்தோடு முகமலர்ந்து ஊட்டி அவர்களை மகிழ்விக்கவேண்டும். பூதானம் கோதானம் முதலிய ஷோடச மஹா தானங்களையும் எவ்வகையிலும் சிவனடியார்களுக்கே செய்யவேண்டும். அது ஒன்றே, கோடி மஹாகோடிகளாகப் பலன் தரும். உமாசகாயரான சிவபெருமானும் அவர்களிடத்தில் சதா வசித்துக்கொண்டிருப்பார். இது விஷயமாக ஒரு சரித்திரம் சொல்லுகிறேன் கேளுங்கள் என்று சூதர் சொல்லுகிறார்.

முன்காலத்திலே வைசியர் குலத்திற்குத் திலகம் போன்ற ஒரு தனவந்தனிருந்தான். அவனுக்கு நாலு புத்திரர்களுண்டு. அவர்களிலே மூத்தவன் சகல ஜீவன்களையும் தன்னுயிர்போலக்கருதும் ஜீவகாருண்ய முள்ளவன். அவனுக்கு ஜனனமரண சமுசார துக்கங்களொழிந்து மோட்சமடைய வேண்டுமென்கிற விருப்பமிருந்தது. அதனாலே தன்னுடைய பொருள்களையெல்லா மெடுத்துக்கொண்டு காசிமாநகரம் போய்ச் சேர்ந்தான். தினந்தோறும் கங்கையில் நீராடி முப்போதும் விசுவேசனைப்பணிந்து, சிவனடியார்களைக் கண்டவுடனே சிவனே

டிகை. சிபருவதத்தில் ஈசன்பேர் திரிபுராந்தகன்; தேவியார் பேர் மாயாவி. செபேசுவரத்தி லீசன் பேர் திரிசூலிகன், அம்மையார் திரிசூலினி. ஆமிராதகேசுவரத்தில் ஈசன்பேர சூட்சுமேசன், அம்மைபெயர் சூட்சுமை. மகாளக்ஷேத்திரத்தில் ஈசன்பேர் மாகாளன் அம்மைபேர் சங்கரி. மத்தியமநகரில் ஈசன்பேர் சர்வன், அம்மையார் சர்வாணி. கேதார பர்வதத்தி லெழுந்தருளிய பரசிவன்பேர் ஈசானன் தேவியார்பேர் மார்க்கதாயினி. பயிரவத் தலத்தில் ஈசன் பைரவன், தேவியார் பைரவி. கயையில் ஈசன் பிரபிதாமகேசன். அம்மையார் மங்களேசுவரி. குரு க்ஷேத்திரத்தில் ஈசன் ஸ்தாணு. தேவியார் ஸ்தாணுப்பிரியை. விமலேசுவரத்தில் ஈசன் விசுவேசன். அம்மை விசுவேசுவரி. கனகலத தலத்தில் ஈசன் உக்கிரன். அம்மை உக்கிரேசுவரி. அட்ட காசத்தில் ஈசன் மஹாநந்தேசன். தேவி மஹாநந்தேசுவரி. இத்தலத்தில் தேவியார்கையில் கரும்புவில்லும புஷ்பபாணமும் தரித்திருப்பார். மஹேந்திர க்ஷேத்திரத்தில் ஈசன்மஹாநந்தகேசன், தேவியார்மஹாநந்தகேசுவரி. பீம க்ஷேததிரத்தில ஈசன் பீமேசுரன், அம்பை பீமேசுவரி. வத்திராபதக்ஷேத்திரத்தில் ஈசன்போபவன், அம்மைபவானி. அர்த்தகோடியில் ஈசன்யோகீசுவரன், அமமைஉருத்திராணி. அவிமுக்த(காசி)க்ஷேத்திரத்தில் ஈசன் மஹாதேவன்(விசுவநாதர் என்பது பிரசித்தம்), தேவியார் விசாலாட்சி; மஹாலயஸ்தலத்தில் ஈசன் பேர் உருத்திரன், தேவியார் மஹாபாலை. கோகருணத்தில் மஹாபலேசன், தேவியார் பத்திரகாணிகை. பத்திரகாண நகரில் ஈசன் பேர் சிவன், அம்மைபேர் பத்திரை. சுவர்ணாட்சத்தில் ஈசன்பேர் ஸஹஸ்ராக்ஷேசுவரன், அம்மையார் உத்பலாட்சி. ஸ்தாணுக்ஷேத்திரத்தில் ஈசன் ஸ்தாணு வீசுவரன் அம்மை ஸ்தாணுவீசுவரி. கமலாலயத்தில் ஈசன் கமலேசுவரன், அமமை கமலேசுவரி. சாகண்டல நகரில் ஈசன் கபர்த்தீசுவரன், தேவியார் பிரசண்டேசுவரி. குராண்டஸ் தலத்தில் ஈசன் ஊர்த்வரேதலேசுவரன், தேவியார் திரிசந்தியை. மாகோட ஸ்தலத்தில் ஈசன் மஹோத்கடன், தேவி மகுடேசுவரி. மண்டலேசுவர க்ஷேத்திரத்தில் ஈசன் ஸ்ரீகண்டேசுவரன், தேவியார் சாண்டகீசுவரி. காலஞ்சரத்தில் ஈசன் நீலகண்டேசுவரன், தேவியார் காளி. சங்குகர்ண நகரில் ஈசன் மஹாதேஜசேசன், தேவியார் தொனி. தூலேசநகரில் ஈசன் தூலேசன், அம்மை தூலேசுவரி. வியாக்கிர புர (சிதம்பர) த்தில் ஈசன் சபாபதி, தேவியார் சபாபதீசுவரி (சிவகாமி என்பது பிரசித்தம்.)

இப்படிப்பட்ட மஹிமை பொருந்திய க்ஷேத்திரங்களில் ஏதாவது ஒன்றிலிருந்து இருமுதுகுரவர் பெயரால் சிவனை அருச்சித்துத் தரிசித்தால் சகல பாபங்களும் ஒழியும். இந்த ஸ்தலங்கள் எல்லாவற்றுள்ளும் வியாக்கிரபுரம சிறந்தது. அந்த ஸ்தலத்தில் சிவகங்கைத் தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து, சபாநாதரைத் தரிசித்துப பஞ்சாட்சரத்தை ஆயிரத்தெட்டுத் தரம் ஜபித்தால் சகல பாபங்களுங் ஒழியும். சித்திரை மீ திரு ஆதிரை, பருவங்களிலும், வைகாசி மாசம் அபரபட்ச அட்டமியிலும், ஆடி மாசம் அபரபட்ச சதுர்த்தசியிலும், ஆவணிமாசம் பூரணையிலும், புரட்டாசி மாசம் ஜன்ம நட்சததிரம, ஞாயிறுக் கிழமையிலும், ஐப்பசிமாசம் உத்திர நட்சத்திரத்திலும், கார்த்திகை மாசம் கார்த்திகையிலும், மார்கழி மாசம் திருவாதிரையிலும், தை மாசம் பூசத்திலும், மாசி மகத்திலும், பங்குனி உத்திரத்திலும், விதிப்படி சிவகங்கையில் நீராடித் திருநீறு தரித்துச் சிதம்பரநாதரைத் தரிசித்தால் சகல பாபங்களும அழியும். அந்த ஸ்தலத்தில் வேதியர்களுக்கும் ஞானிகளுக்கும வீடுகளும் மடங்களும் கட்டிக்கொடுத்துப் போஜனமும் கொடுத்தால் சகல பாபங்களி னின்றும் விடுபட்டு முத்தியும் அடைவார்கள். வேதங்களால் புகழப்பட்ட அந்த ஸ்தலத்துக்கு ஒப்பானதொன்றுமில்லை. அந்தஸ்தலத்தில் வசிப்பதே சிறந்தது. நிறைந்த புண்ணியமுடையவர்களுக்கே அந்த ஸ்தலவாசம் கிடைக்கும் என்று அறிந்துகொள்ளுங்கள்.

நாற்பத்து மூன்றாவது அத்தியாயம்.

திரவியசுத்தி கூறியது.

பொருள் ஆத்மா அநாத்மா என்று இரண்டு வகைப்படும். ஆத்மாவாவது சத்துசித்து ஆனந்த சொரூபம் உடையதென்று கூறப்படுவதாம். சுபம், சுத்தம், சத்து என்று கூறப்படுவற்றுள் சத்து அசத்துடன் சம்பந்தப் படாமையால் சுயமே சுத்தமாம். ஆகையால் ஆத்மாவுக்கு அசுத்தம் கிடையாது. மாயா சம்பந்தத்தால் அசுத்தமுள்ளது போலத் தோன்றும். கருமத்தால் [illegible] சுத்தமடையாது. கருமத்தால் பாவமொழிந்து மெய்ஞ்ஞானம் உதிக்கும்போது ஆத்மா சுத்தமாகவே பிரகாசிக்கும். [illegible]யும் ஆத்தியாத்மிகம், ஆதிபௌதிகமென்று இரு[illegible]

படும். ஆத்தியாத்மீகமாவது தேகேந்திரியாதிகள். மற்றது பூதபெளதிகமாம். நற்கர்மம் செய்வதாலும், சிவதியானத்தாலும், ஜீவவதம் செய்யாமையாலும், உடலுக்குச் சுத்தியுண்டாகும். சிவதியானத்தால் இந்திரியங்களுக்கும் பிராணனுக்கும் சுத்தியுண்டாம். தேகாதி சுத்தியால் நான் சுத்தனானேன் என்று கருதுதல் வியாவகாரிக சுத்தியாம். சிவபாவனையால் எல்லாம் சுத்தியாகும். பெளதிகப் பொருள்களுக்கு அசுத்தமுண்டு. அவற்றிற்குத்தான் சுத்தி கூறவேண்டும்.

சுட்ட மண்பாண்டங்களைச் சண்டாளர் முதலானவர் தொட்டால் அதனை உடனே எறிந்து விடவேண்டும். சுடாத பச்சை மண் பாண்டமானால் நீரால் கழுவித் தர்ப்பை ஜலத்தால் புரோட்சணம் செய்தால் சுத்தியாம். ஆண்டபின் மண்பாண்டத்தைச் சூத்திரர் முதலானவர் தொட்டால் எறிந்து விடவேண்டும். அதற்கு முன்பானால் நெருப்பில் காட்டித் தர்ப்பை ஜலத்தால் புரோட்சித்தால் சுத்தியாம். சுட்டபாண்டம் மலசம்பந்தப்பட்டால் எறிந்து விடவேண்டும். சுடாத பாண்டமானால், தர்ப்பை நீரால் சுத்தி செய்து தீயிலிட்டுச் சுட்டால் சுத்தியாம். யாகத்துக்குரிய மர பாத்திரத்தை ருதுவான ஸ்திரீயாதியோர் தொட்டால், அது பழையதானால் எறிந்துவிடவேண்டும். புதியதானால் தர்ப்பை நீரால் சுத்திசெய்து தீ முன் காட்டினால் சுத்தியாம். பதக்கு அரிசி சமைத்த சோற்றைத் தாழ்ந்தவர் தொட்டாலும் பார்த்தாலும் ஆபத்துக் காலமானால் குற்றமில்லை. நீராலும் தர்ப்பை ஜலத்தாலும் சுத்திசெய்ய வேண்டும். பதக்குக்குக் குறைந்திருந்தால் எறிந்துவிடவேண்டும். பக்குவமான தானியம் ஒரு குத்துக்கு மேற்பட்டதை ஈனர் தொட்டால் தர்ப்பை நீரால் புரோட்சிக்க வேண்டும். ஒரு பாரத்துக்குக் குறைந்திருக்க ஈனர் தொட்டால் எறிந்துவிடவேண்டும். ஒரு பாரம் முதல் இரண்டு பாரம் வரையிலிருந்தால் நீரால் கழுவிச் சுத்திசெய்யலாம். இரண்டுபாரத்துக்கு மேற்பட்டால் தர்ப்பை நீரால் சுத்திசெய்க. ஆறுபார வரிசிச் சோற்றைப் பூத்தமங்கையர் சண்டாளர் தொட்டால் கழுவவேண்டும். அதற்கு மேற்பட்டால் தர்ப்பை நீரால் சுத்தியாம். உடுத்த வஸ்திரத்தைச் சண்டாளர் தொட்டால் நனைத்துத் தோய்த்தால் சுத்தியாம். புதியவஸ்திரம் கம்பளம் முதலானவற்றைச் சண்டாளர் தொட்டால் தர்ப்பை நீரால் புரோட்சிக்கச் சுத்தியாம். அரிசி முத

லிய தானியங்கள், வெல்லம் பால் தயிர் இவற்றைக் காக்கை முதலிய பட்சிகள் தொட்டால் தொட்ட விடத்தில் உள்ளதை எடுத்தெறிந்துவிட்டுத் தர்ப்பை நீரால் புரோட்சிக்கச் சுத்தியாம். எண்ணெய் நெய் இவற்றிற்கும் அதுவே சுத்தி. அருமையான பொருள் கிடைத்தால் அதைப் புரோட்சணஞ்செய்தே வாங்கவேண்டும். நகம், மயிர், புழுக்கள் முதலானவை விழுந்தால் அவ்விடத்திலுள்ளதை யெறிந்துவிட்டுத் தர்ப்பை நீரால் சுத்திசெய்ய வேண்டும். மாவினால் செய்யப்பட்ட பண்டங்களை விலைக்கு வாங்கினால் நெய்யினால் சுத்திசெய்து புசிக்கலாம். உலோகபாத்திரங்கள் சமடாங்தப்பட்டால் தீயில் காட்டினால் சுத்தியாம். நாய்கள் தொட்டால் தேய்த்துக் கழுவச் சுத்தியாம். தாமிரம் புளியிட்டுத் தேய்த்தால் சுத்தியாம். உலோகபாத்திரங்கள் எல்லாம் விபூதியாலும், மண்ணினாலும் நீரினாலுஞ் சுத்தியாம். சூத்திர ஸ்திரீகள் தொட்ட வெண்கலப்பாத்திரம் மண்ணினால் தேய்த்துக் கழுவினால் சுத்தியாம். தீர்த்த யாத்திரை, சில உற்சவகாலம், இவைகளில் தாழ்ந்தவர்கள் தொட்டாலும் குற்றமில்லை. அநுலோம பிரதிலோமர்களால் தொடப்பட்ட பாத்திரத்தை நீரினால் நாற்பது தரம் கழுவினால் சுத்தியாம். கற்பாத்திரங்களை நீற்றினால் இருபத்தொரு தடவை தேய்த்துக் கழுவச் சுத்தியாம். சங்கு முதலியவற்றைச் சாம்பலில் தேய்த்துக் கழுவச் சுத்தியாகும். திரவியங்களெல்லாம் காரணரூபமாகவும், அந்தக்காரணம் சிவரூபமாம் எனவும் உணர்ந்துகொண்ட சிவஞானிகளுக்கு, அசுத்தமென்பதே யில்லை.

நாற்பத்து நாலாவது அத்தியாயம்.

புசிக்கத்தகாத வஸ்துக்களைக் கூறியது.

ஆகாரசுத்தியினாலேயே சித்தசுத்தி யுண்டாகும். அதனால் சிவஞானம் உண்டாகும். அப்போது மோகம் முதலிய பந்தங்கள் நீங்கும். ஆகையால் ஆகாரசுத்தி யில்லாவிட்டால் இவைகள் உண்டாகா. ஆனபடியால் தேவர்களால் விலக்கப்பட்டவைகளைப் புசிக்காமல் விலக்கிவிடவேண்டும். இதுவும் கருமிகளுக்கே யல்லாமல் ஞானிகளுக்கு இல்லை. சிவஞானி உலகமெல்லாவற்றையும் சிவமாகவே காண்கிறபடியால் அவர்கள் புசிக்கத் தகாதது ஒன்றுமில்லை. மாயையின் வசப்பட்டவர்களுக்குச் சொற்பன உலகம்

எப்படியோ அப்படியே ஞானிகளுக்கு ஜாக்கிர உலகம் சம்பந்தப் படுவதில்லை. ஜாக்கிர உலகமெல்லாம ஞானிகருத் தானாகவே தோன்றுகிறபடியால் அவன் புசிக்கத்தகாதது ஒன்று மில்லை. உள்ளதென்று கூறப்படுகிற சத்தையானது சிவசொரூபமாம். சத்தைக்கு வேறானவை யாவும் சூனியமாம். ஆகையினால ஞானிக்கு வேறான போக்கிய பதார்த்த முண்டென்பது கூடாது. மாயை கூட ஞானிகருச சிவமாகவே தோனறும. ஆகையால் ஞானிகளுக்கு விலக்குகள் கிடையாது. ஆதமஞான மில்லாத வேதியாகளுக்காகவே இது சொலலப்பட்டது.

கஞசா, வெண்காயம, உள்ளிப் பூண்டு, முள்கால் கோழி, கரியபன்றி, பசு, சேவல், கோழிமுட்டைபோனற கத்தரிக்காய், முருங்கைக்காய், மண்ணுப்பு, பாடீனம, இராசிகம், உரோகிதம் என்ற மீன்கள், கொககு, குயில், மற்றும் பல நகரப் பறவைகள், இந்திரியம், மலஜலம், பன்றி, கள் சம்பநதமான பொருள்கள் பழஞ்சோறு, முயல், காகம், நாய், பூனை, பலலி, பாம்பு, கீரி இவைகள் தொட்டப பதார்த்தங்கள், வேதபாகியன் தொட்ட பொருள்கள், பிளபுள்ள குளமபு இல்லாத மிருகம், மாமசபட்சணியான மிருகம, ஊர்க்குருவி, அன்னம், சக்கரவாகம், சாரசம், கழுகு, கிளி, நாகணவாய்ப பறவை, குதிரை, தவளை, புனிதர், யானை, ஐந்து நகமுளள மிருகம், செமமறியாடு, வெளளாடு, கள் சம்பநதபபட்ட மீன், நெய், பால, பணங்கள், தென்னங்கள், பூமியில் விழாத மழைநீர், கனறை யீன்று சூதகம் நீங்காமலிருக்கிற பசுவின் பால், கழுதை, எருமை அலலாத மிருகங்களின் பால், கன்றிலலாத பசுவின்பால, கோவாதியான மிருகஙகள் மிதிதத பால், மோநத பொருளகள், அநுலோமப் பிரதிலோமாகள் தொட்ட பொருள்கள், இவைகள் எலலாவற்றையும் பிராமணர்கள் புசிககப்படாது. இவற்றை உண்டால் நரகில் விழுவார்கள். க்ஷத்திரியர் முதலானவர்கள் இவற்றுள் சிலவறறைப் புசிக்கலாம். புசியாமலிருத்தலே நல்லது. சூத்திரர்களுககு இந்த நியமமில்லை. பிராமணர்களுக்குரிய இந்த விதியைச சூத்திரர்களும் கொள்வது நல்லது. அற்ப ஜநதுக்களைக்கூடக் கொல்லாமலிருப்பதே நல்லது. அதுவே பெரியதவமுமாகும். மாம்சாதிகளை விலக்கிச் சுத்தமான உணவு கொள்வதினாலேயே ஞானமுண்டாகுமென்று வேதங்கூறுகின்றது. வேதாந்தத்தினாலே மெய்ஞ்ஞானம உண்டாகுமேயன்றி

வேறெதனுலும் உண்டாக மாட்டாது; பதினன்குவித்தைகளையும சொல்வது வேதம். ஆதலால் வேதம் பூரணமாம். பூரணமாகிய வேதமே பிரமாணமாம். வேதத்துக்கு விரோத மில்லாத ஆகமங்களினுலும் ஞான முண்டாகு மென்று வேதங்கூறுகின்றது.

நாற்பத்தைந்தாவது அத்தியாயம்.

மரணத்தை யறியும் ஆறு கூறியது.

துருவ் நடசத்திரம் தெரியாமற் போனுலும, சந்திரனுடைய சாயை தெரியாமற் போனுலும, நட்சத்திர வீதி தோன்ருமற் போனுலும், அருந்ததி தெரியாதிருநதாலும், ஒரு வருஷத்தில மரணம வரும். வெள்ளிபோலவும பொன்போலவும, நீராகவும மலம் வெளிப்படடும, இப்படி வாநதி யுண்டானுலும், நித்திரையில் அடிககடி துர்க்கனவு கண்டாலும, பத்து மாதத்தில் மரணம் வரும. பூதபபிரேத பைசாசங்கள், கந்தர்வ நகரம் பொன்மரம் இவற்றுள் எதையாவது கனவிலகணடால் அவன் ஒன்பது மாதங்களில் மரணமடைவான். யாதொரு காரணமு மிலலாமல் சரீரம் பெருத்தாலும, அலலது இளைத்தாலும, மிகக் கறுத்தாலும் அவன் எட்டு மாசத்தில் மரணம் அடையான். சேற்றிலாவது புழுதியிலாவது கால அகபபட்டுககொண்டு ஒடிநததுபோலக் கனவுகண்டால ஏழுமாதஙகளில் மடிவான். காககையாவது,கழுகாவது, புருவாவது தலைமேல வநது உட்காாநதால் ஆறுமாதங்களில் இறபபான். தனநிழல் விகாரமாகக காணபபட்டாலும, நடநது போகும்போது பெருங்காற்றடிகக அதன் வழியாகக் காக்கை தொடர்ந்து வநதாலும், நாலுமாதம அலலது ஐநது மாதங்களில் மரணம் அடைவான். மேக மிலலாத போது ஆகாயத்தில் தனககு வலப்புறமாக மின்னல் உண்டானுலும், இநதிரதனுசு தோன்றினுலும், ஒருமாதம், இரண்டு மாதஙகளில் மரணமடைவான். கண்ணுடி தண்ணீர் ஒருவருடைய கண்ணிலாவது, தன் நிழல் சிரசில்லாமல் முண்டமாகத் தோன்றினுல், ஒருமாதத்தில் மரணம் அடைவான். வேம்பின் வாசனை பிணவாசனை, குஷ்டவாசனை இவற்றுள் ஏதாவது ஒரு வாசனை தன் தேகத்தில் தோன்றினுல், பதினைநது நாட்களில மரணமடைவான். இருதயம் உலர்ந்து சிரசில் புகை தோன்றுவதுபோலக் கண்டாலும், எப்போதும் சரீ

ரத்தில் நடுக்க முண்டானாலும், பத்து நாளில் மரணமடைவான். குரங்கு கழுதைகள் கட்டினதேரிலாவது, கரியவஸ்திரம் உடுத்த ஸ்திரீகளுடன் கூடியாவது, குதிரையின்மேல் ஏறிக்கொண்டாவது தலையைவிரித்து ஆட்டிக்கொண்டாவது, தென்திசைநோக்கிப் போகக் கனவுகண்டால் சீக்கிரத்தில் மரணமடைவான். தன் வஸ்திரம் கிழியக் கனவுகண்டாலும், தன் வஸ்திரம் கருநிறமாகக் கண்டாலும், தான் நிர்வாணமாகக் கண்டாலும், தன் வீட்டில் யாராவது சாவார்கள். பகற்காலத்தில் நட்சத்திரம், இந்திரதனுசு, சந்திரன், சூரியன், இவற்றில் கருநிறம், செந்நிறம், உண்டாகக் கண்டாலும், சந்திர சூரிய மண்டலங்களில் துளை, ஆகாயத்தில் சிவந்தமாலை யிவைகளைக் கண்டாலும் உடனே மரணமடைவான். சுடுகாட்டுச் சாம்பல், புழுதி, மயிர்க் குவியல், ஜலமில்லாமல் வறந்த காய்ந்த நதி யிவைகளில் எதையாவது கனவில்கண்டால் சீக்கிரத்தில் மரணமடைவான். கறுத்த நிறமுடையவர்களாய், மொட்டைத்தலை யுடையவர்களா யுள்ளவர்கள் கல்லால் எறிந்து வருத்தப் படுத்தக் கனாக்கண்டால் சீக்கிரத்தில் மரணமடைவான். சூரியன் உதிக்கிறகாலத்தில் சூரியனுக்கு எதிர்முகமாக நரிகள் நின்று ஊளையிட்டால் சீக்கிரத்தில் மரணமடைவான். அடிக்கடி, நடுக்கம், அஞ்ஞானம், பயம், கோபம் இவற்றில் எது உண்டானாலும் வீட்டி லுள்ளவர்கள் சாவார்கள். நாக்கு உலர்ந்தாலும், பல்கறுத்தாலும், இருதயம் கொதித்தாலும், அவன் வீட்டி லுள்ளவர்களாவது சீக்கிரத்தில் மடிவார்கள். காது, கண், இவைகள் கீழ்மேலாக மாறினாலும், மூக்கு விகாரமானாலும், கன்னம் நாக்கு இவைகள் கறுத்தாலும், கன்னம் சிவந்து முகம்விகாரமானாலும் சீக்கிரத்தில் மடிவான். குருடனைப்போலவும், செவிடனைப்போலவும், கிணற்றுக்குள் விழுந்தாற்போலவுங் கனாக்கண்டாலும், மேல்பார்வை யுண்டானாலும், சரீரம் குளிர்ச்சி அடைந்தாலும், சிற்சில நெருப்புப் போல உஷ்ணமாயிருந்தாலும், சீக்கிரத்தில் மடிவான். நாபி, இதயம், துவாரம் உண்டாகக் கண்டாலும், கனவில் ஒருவன்வந்து அடிக்கக்கண்டாலும் சீக்கிரத்தில் சாவான். தன்னுடைய வெண்மையான வஸ்திரத்தில் கருநிறமுண்டானதாகக் கனவுகண்டாலும் உடனே மரணம் வரும்.

இப்படிப்பட்ட பயங்கரமான குறிகள் உண்டாகும்பொழுது, அச்சத்தை விட்டு, மோகாதிகளை ஒழித்து, ஞானமுண்டாகும்

படியான நன்னெறியி லொழுகி, அம்மையுடன் கூடின தேவ தேவனை நினைந்து, காசி நகரத்துக்குப் போய்க், கங்கா நதியில் ஸ்நானஞ் செய்து, விசுவநாதனைத் தொழவேண்டும். அல்லது சோமநாத க்ஷேத்திரம் போய்ச் சோமதீர்த்தத்திலாவது, வீரை தீர்த்தத்திலாவது முழுகிச் சோமநாதனைத் தொழ வேண்டும். ஸ்ரீசைலம், காளத்தி, கோபர்வதம், விருத்தாசலம், இராமேசுவரம், மதுரை, வேதாரணியம், திருவாரூர், கெஜாரணியம், (திருவானைக்கா), இராமேசுவரம், கும்பகோணம், திருவிடைமருதூர், அக்கினீசவரம், ஆம்பிரவனம், சீர்காழி, திருவெண்காடு இவற்றில் ஏதாவது ஒன்றில் போய்ச் சேர்ந்து விதிப்படி சிவபிரானை ஆராதிக்கவேண்டும். சிதம்பரம் மகாவிசேஷமானது. சிதம்பர நாதனைத் தரிசித்தவர்கள் நிச்சயமாய் முத்திபெறுவார்கள். அந்தத் தலத்துக்கு ஒப்பு உவமை கிடையாது. அந்தத்தலத்தில் ஆநந்த நடனத்தைத் தரிசித்துச் சரீரத்தை விட்டவர்கள் முத்தி அடைவது சத்தியம். காசியைவிட இது சிறந்தது.

நாற்பத் தாறாவது அத்தியாயம்.

பாவபரிபாகங் கூறியது.

முனீந்திரர்களே! பிரமஹத்திசெய்தவன் க்ஷயரோகியாய் ஜனிப்பான். கட்குடித்தவனுக்குத் தந்த ரோகமுண்டாகும். சொர்ணத்தைத் திருடினவன் நகரோகியா யிருப்பன். குருபாரியையை விரும்பினவன் தோல்முற்றும் கெடுதலான வியாதியை யுடையவனாவான். குருவை நிந்தித்தவன் கை கால் முடம், குருடு, செவிடு, முதலிய வியாதிகளு முள்ளவனாவன். பரநிந்தை செய்கிறவன் கழுதை யாவன். குரு மனம் வருந்தும்படி அவமானம் செய்தவன் பித்தம் பிடித்தவனாவன். குரு கட்டளையை மீறினவன் பலந்தர நோயுடையவனாவன். குரு திருவடிப் பணிவிடை செய்யாதவன் மந்த வறிவுள்ளவனாய் நிந்தை யடைவான். விஷ்ணுவை நிந்தித்தவன் ஒணானாய்ப் பிறப்பான். வேதம், வேதாந்தம், வேத ஞானம் இவைகளை நிந்தித்தவன் பறையனாய்ப் பிறப்பான். பூத்த பெண்களைச் சேர்ந்தவனும் பறையனாவன். வீட்டில் தீயிட்டவன், பசுவதை செய்தவன், விஷமிட்டவன் இவர்கள் குஷ்ட வியாதி யுள்ளவராவார்கள். வெள்ளியைத் திருடினவன் காசநோ

யுடையவ னுவன். இகழப்பட்ட காரியங்களைச் செய்தவனும், பொய்ச்சாட்சி சொன்னவனும், இவர்களுக்கு யுக்தி சொல்லிக் கொடுத்தவனும், சகாயம் செய்தவனும புழுச சொரியும்படியான வாய்நோ யுடையவ ராவார்கள். மாதாபிதாக்களையும மனைவியையும் காப்பாற்றாதவன் கண்ணோ யுடையவனுவன்; தருகிறேனென்று சொல்லிப பிறகு கொடாமலிருநதவன அற்பாயுசுடையவனுவன். அழகிய பதிவிரதைகள் பலரிருககையில, அவாகளுள் ஒருத்திமேல மாத்திரம பிரியமவைததவன் நபுமஸகனுய்ச சனிப்பான். ஒருவன்புஜிககிற அன்னததை அபகரித்தவன் பசியில்லாமலும், நாக்கில நோயுடையவனுகவும் பிறப்பான். வநதவிருந்து பசித்திருக்கையில் தான் புசிததவனும், பலபோகளுடன் புசிககையில் பதாாத்தங்களையெல்லாம தானே புசிபபவனும், கண்டமாலையுடையவர்க ளாவாாகள். பஞசமஹா யகஞஙகளைச செய்யாதவன் ஊர்ப்பன்றியாகப பிறபபான். பருவகாலததிலே (அமாவாசை பூரணைகளில்) பெண்போகமஅருநதினவனும, அதிதிகளை உபசரியாதவனும, கன்னநோயுடையவனுவன. தன்னையே புகழ்ந்து பேசுகிறவன், குள்ளனுகவும், முடமாகவும ஜனிப்பான். பசுக்கொலை செய்தவனும, உபகாரம செய்தவர்களுக்கு அபகாரம் செய்தவனும் பிறககும்போதே குருடராய் ஜனிபபார்களா. விலக்கப்பட்ட உணவுகளைப புசிததவனும, விருபபமுள்ள மனைவிககு வருத்தமுண்டாகுமபடி பாதததையரைச்சேர்ந்தவனும் கண்டமாலையாலும், பீஜவியாதியாலும் வருநதுவாாகள். 'பிறர்குற்றங்களையெடுத்துச சொல்கிறவனும்,தாம்பிரததை விற்று ஜீவிப்பனும் முகவியாதி யுடையவராவர். பானை முதலிய விற்பவாகளும மிருகங்களைக் கொன்று ஜீவிககும வேடராவர்கள். மந்திர புஸ்தகம், ஞானசாஸ்திர புஸ்தக மிவைகளைத் திருடினவர்கள் ஊமையாவார்கள். எழுத்தாணி திருடினவன குருடனுவன். புண்ணிய கதைகளை வாசிக்கும்போது தர்க்கம் செய்கிறவன், மூக்கு வியாதி உடையவனுவான். தருமநிநதை செய்தவன் இராட்சதனுவன். ஞானத்தையும் சிவயோகத்தையும், குரு தெய்வங்களையும் நிநதித்தவன் வக்கிரமுக முள்ளவனுவன்.தருமநிந்தைசெய்கிறவன் மலப்புழுவாவான். தெய்வ திரவியங்களைத் திருடினவன் விஷப்பாம்பாவான். குளம் நந்தவனங்களைக் கெடுத்தவன் அங்க ஈனனுவான். குற்றமற்ற இதரபெண்களை விரும்புகிறவன வாதநோயுடையவனுவன்.

மிருகப்புணர்ச்சி செய்தவன் மகாமேகவியாதி யுள்ளவன். கற்புள்ள ஸ்திரீகளை யிச்சித்தவன் பன்றியாவான். சிவத்துரோகிக்கு உண்டாகுந் துன்பம் சொல்லில் அடங்காது. மஹாபாதகங்களைச் செய்தவன் பன்றி யாவான். உபபாதகஞ் செய்தவன் நாயாவான். அதிபாதகம் செய்தவன் பலப் புழுவாவான், மற்றப் பாதகங்களைச் செய்தவன் ஈனஜாதியில் பிறப்பான்.

ஆத்ம சொரூபத்தை அறியாதவனைத்தான் இந்தப் பாதகங்கள் தொடரும். அவற்றின் துன்பங்களையும் அடைவான். சுய சொரூபமானது பரிசுத்தமான சின்மாத்திரமே யாதலால் சிவஞானிக்கு இவை சம்பவிக்கமாட்டா. தேகாதிகள் எல்லாம் திருசியங்களாகையால் அவைகள் ஆத்மா வாகமாட்டா. திரண்ட சித்தும் உருவமாகத் தோன்றுதலால் திருசியமென்று சொல்லக் கூடாது. சொன்னால் கடாதிகளுக்கும் அது உண்டாகும். பரிபாக பேதங்களால் திரிசிய சொரூபம், திருக்கு உருத்துவம் இரண்டுக்கும் உண்டாகுமென்றால், பாகத்தினாலே திரிசியமாவதால் பாகத்தோடு கூடுகிற எல்லாம் நிலைபெறுவதில்லாமையால் கடாதிபோலாகும்; அப்போது அநாத்மாவாம். ஆகையால் திருசியமல்ல. சித்து திருக்குருவேயாம். கருத்திருத்துவம் சித்துக்குள்ளதாமென்றால் அது பரிணாமமாதலால் மண்ணாதிகளைப் போல் அழியும். அப்போது அநாத்மாவாய்ச் சித்தாக மாட்டாது. ஜடமானவைகளெல்லாம் சுயம் பிரகாசமல்லாமையால், அருட்சித்து இல்லாதபோது ஒன்றுக்கும் பிரகாசமில்லாமல் போய்விடும். ஆகையால் சிற்சொரூபத்திற்குத் தரிசன கர்த்திருத்துவமானது திரிசியாபிவியக்திக்காக வந்ததேயல்லாமல் சுயமாக வந்ததில்லை என்று தெரிந்துகொள்ளுங்கள். சிற்பிரகாசமான ஆத்ம சம்பந்தத்தினாலே சைத்தியம் பிரகாசிக்கும் எனல் கூடாது. ஏனென்றால், அந்தச் சம்பந்தமில்லாமையினாலே அந்தச் சித்தே சைத்தியரூபமாய்ப் பிரதீதியைக் கலந்திருக்கிறது. சுயம்பிரகாசத்துக்கு வேறொன்றினால் ஒளி உண்டாகவேண்டுவதில்லை. வேதமும் இப்படியே சொல்கின்றது. ஒருகாலத்தில் பிரகாசமாயும், ஒருகாலத்தில் அப்பிரகாசமாயும் சித்து விளங்குவதில்லை. சாட்சி பூதமாய் விளங்குகின்ற ஆத்மா தேகாதிகளுக்குச் சம்பந்தியாகமாட்டான் என்று வேதங்கள் கூறுகின்றன. ஆத்மசொரூபத்தை அறிந்தவன் கரும சம்பந்தியாகான். இந்தப் பிரமவித்தை (வேதாந்தஞானம்) பரா

கண்டாற்போல வுள்ள மகிழ்ந்து உருகி அடி பணிந்து, அவர்கள் விரும்பினவற்றைத் தடையில்லாமல் கொடுத்துப்பூசித்துக் கவலையின்றி வாழ்ந்திருந்து பின்னர் பிறப்பிறப்பில்லாத மோட்சத்தை யடைந்தான்.

இவனுடைய இளையசகோதரனுக்கும் அளவு படாத செல்வமிருந்தது. ஆயினும் அவனுக்கு அதில் விருப்பமில்லை; பந்த மொழிந்து விடுபெறும் விருப்பமே மிகுந்திருந்தது. ஆகையால் தன் திரவியமெல்லாவற்றையுமெடுத்துக்கொண்டு சோமநாதபுரம் போனான். அவ்விடத்தி லெழுந்தருளிய பரமசிவ மூர்த்தியை வணங்கிக்கொண்டு சிவனடியார்களை யுபாசித்துப் பூசித்து வழிபட்டுத், தன் பொருள்களை யெல்லாம் அவர்கள் விஷயமாகச்செலவிட்டுக் கன்ம பந்த மொழிந்து அந்தத்தில் சிவபதமடைந்து வாழ்ந்தான்.

அவனுக் கிளையவனாகிய மூன்றாவது குமாரன் பொருளாசை மிகுந்து கஷ்டப்பட்டுப்பொருள் சம்பாதித்துக்கொண்டிருந்தான். இதனுலே அவனுடையசுற்றத்தாரும் இவனுக்குப்பகையானார்கள். இவ்வாறிருக்கையில் பூர்வ புண்ணிய வசத்தாலே சிறிது நல்லறிவு தோன்றிற்று. தோன்றவே உலகவாழ்வில் வெறுப்புண்டாயிற்று. உடனே தன் பொருள்களை யெடுத்துக்கொண்டு சிதம்பர க்ஷேத்திரம் போய் நடராஜ மூர்த்தி செய்தருளும் ஆனந்தத் தாண்டவதரிசனஞ் செய்து சிவனடியாரையும் பூசித்து ஆராதித்துக் கடைசியில் மீளாக்கதி யடைந்தான்.

நாலாவது குமாரன் வஞ்சகமும் பொய்யும் நிறைந்த மனமுடையவன்; பாவங்களுக் கஞ்சாத நெஞ்சம்படைத்தவன். வேத நெறி கடந்தவன். நீதி யில்லாமல் அக்கிரமங்களைக் கணக்கின்றிச் செய்துதிரவியஞ் சேர்த்தான். அப்படிச் சம்பாதித்த பொருள்களையெல்லாம் தாசிகளுக்குக் கொடுத்து அவர்கள் பாதமே கதியென் றிருந்தான். இரவும் பகலும் அவர்கள் வீட்டிலேயே கிடப்பான். இப்படி நடந்து வருகையில் கையிலுள்ள பொருளெல்லாஞ் செலவாய்விட்டது. தாசிகளுக்குக் கொடுக்கப் பொருளில்லாமல் திருடத் தொடங்கினன். அளவில்லாத பிரமஹத்தி ஸ்திரீஹத்தி சிசுஹத்திமுதலிய மஹாபாதகங்களைத் துணிந்து செய்து பொருள் சம்பாதித்துத் தாசிகளுக்குக்கொடுத்து மகிழ்ந்திருந்

சத்தியின் கருணையால் உண்டாகும். எந்தப் பராசத்தியினாலே பரைமுதலிய வாக்குள் தோன்றுமோ, எந்தப்பரை இச்சாசத்தி என்ற பேரை உடையவளோ, உலகம் முதமெதாழிற் படுங்காலம் எல்லாம் எந்தப பரை உள்ளவளோ, எந்தபபராசத்தி எம்மை இரட்சிப்பவளோ அந்தப பராசத்தியை வணங்குகின்றோம். உலக மெல்லாம் வியாபித்தும, ஐம்பத்தோரட்சர சொரூபியாயும், மாதிருகாவர்ண சொரூபமுடையவளாயும, இலட்சுமி, சரஸ்வதி முதலான பல சொரூபத்தை உடையவளாயும், பிரமாமுதலான தேவர்களும் மகத்துவாதிகளும பஞ்சபூதங்களும் ஒடுங்குகிறதற்குரிய இடமானவளாயும், பகதாகளுடைய இதயகமலத்தில் வசிக்கிறவளாயும, சிவஞானததையும முடிவிலலாத இன்பத்தையும் கொடுபபவளாயும, உள்ள அநதப பராசததியை வணங்குவோம். இநத ஸ்தோததிரததைப படிபபவாகள சிவஞானத்தைப் பெற்று வாழ்வார்கள் என்று சொல்லிச் சூதமுனிவர் சிவ தியானத்திலிருநதார பிறகு முனிவாகள சூதரை வணங்கி உத்தர பாகத்தையும எங்களுககுச சொலலவேண்டுமென்று கேடகச சூதா சொல்கிறா.

பூர்வபாகம் முற்றிற்று.

எக்ஞ வைபவ காண்டம்.

உத்தரபாகம்.

பிரமகீதை முதலாவது அத்தியாயம்.

ஐதரேய வுபநிடதார்த்த முரைத்தது

ஒரு கர்ப்பத்தில் தேவர்கள் எல்லாரும் ஓரிடத்தில் கூடி வேத அர்த்தத்தை ஆராய்ந்தார்கள். அவர்களுக்கு அர்த்தம் விளங்கவில்லை. சந்தேக முண்டாயிற்று. அதனால் நெடுநாள் தவசு செய்தார்கள். பின் மஹாமேரு பர்வத சிகரத்தில் நூறு யோசனை நீளம், நூறுயோசனை அகலமுள்ள பிரமவனத்திலுள்ள பிரமநகரத்தில் பலவித இரத்தினங்க ளிழைக்கப்பட்ட ஆயிரக் கால் மண்டபத்தில், பிரமதேவர் சரஸ்வதியோடு எழுந்தருளி யிருக்கையில் தேவர்கள் எல்லாரும் அங்கே போய், அவருடைய பாதத்தில் பக்தியுடன் பணிந்து வேதார்த்தத்தை உபதேசித் தருள வேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். பிரமதேவர் முதலில் ஐதரேயம் என்னும் உபநிஷத்தின் அர்த்தத்தைக் கூறுகின்றார்.

ஆதியில் சிவபெருமான் ஒருவரே யிருந்தார். பிரபஞ்சமெல்லாம் தன்மாத்திரமாகவே யிருந்தது. பரசிவத்துக்கு அன்னியமாக வேறொன்றும் இருந்ததில்லை. அப்போது அந்த பரசிவன் சிருஷ்டி செய்ய நினைந்தார். உடனே தமது மாயா சத்தியின் வைபவத்தால் எல்லாப் பிரபஞ்சங்களையும் சிருஷ்டித்தார். அந்தப் பரசிவன் பல மதஸ்தர்களும் தனக்கே பலபெயர்கள்வைத்து, அதற்குச் சாதகமாகப் பல தருக்க நெறிகளையும் கொண்டாட வைத்தார். வேதம், கர்ம காண்டத்தில் வியாவகாரிக சத்தியப் பிரபஞ்சத்தையும், ஞானகாண்டத்தில் பாரமார்த்திக சத்தியப் பரசிவத்தையும் கூறும். வேதத்தில் சொல்லப்பட்டதே பரமார்த்தமாய் விளங்கும். இதர மதங்களில் பௌத்தம் முதலிய சில கனவிலும், வைசேஷிகம் முதலிய சில நனவிலும் காணப்படும் உண்மைப் பொருள்களையே கூறுகின்றன அவை பரமார்த்த சத்தியப் பொருளைக் கூறுவதில்லை. ஆதலால் அவைகள் மயக்கத்தினு லுண்டானவைகளாம். சத்திய சைதன்

ஞியத்தாற் கற்பித்த சைத்தியமும், அதில் கடாதிகளும், சிப்பி வெள்ளியும் அசத்தியமானாலும், சிப்பிவெள்ளியைவிடக் கடாதி சத்தியமேயாம். கடாதிகளைவிடச் சைத்தியம் சத்தியமாம். அப்படியே நனவில் கனவு அசத்தியமாம். இதில் சத்தியம் நனவாயிருக்கும் சொற்பனாவத்தை அசத்தியமாயிருக்க, அதில் காணப்பட்ட பொருள் நனவில் எப்படிச் சத்தியமாகும், அப்படியே முத்தியுமாம் என்று அறிந்து கொள்ளுங்கள்.

அந்தபிராந்தி மூலமான மதங்கள் முத்தி சாதனமாகாதென்று கொள்ளுங்கள். ஆனாலும் அந்தந்த மதத்துக்குரிய தெய்வானுக்கிரகத்தால் வேதமார்க்கமே சிறந்தது என்னும் அறிவுண்டாகும். அதனால் வெகுகாலத்துக்குப்பின் முத்தியுண்டாகும். ஆதலால் அம்மதங்களை யிகழாமல், அவற்றிற்குரியார் அந்நெறி பற்றி யொழுகல்வேண்டும். வேதமார்க்கத்தி லுள்ளவன வேறுமார்க்கத்துக்குப் போனாலும், அவருடன் கலந்து உணவுமுதலிய புஜித்தாலும், அவருடனகூடி வேள்வியாதிகள் செய்தாலும், தானம், விவாகம், அத்தியயனம், ஞானோபதேசம் இவைகளைச் செய்தாலும் மூன்று சாந்திராயண விரதம் செய்து பரிசுத்தனாகவேண்டும். வேத விரோதமான மததீட்சை பெற்றவரும், விதிப்படி சிவபூஜை செய்யாதவரும், விபூதி ருத்திராட்சம் தரியாதவர்களும், தேவ பிதிர் அக்கினி காரியங்களைச் செய்யாதவரும், பஞ்ச யக்ஞம் செய்யாதவர்களும், வேத பாகியமாக்கப்படி திருபாலாதி தேவ பூசை செய்கிறவர்களும், பிரமா விஷ்ணு ருத்திரன் முதலியோர் முறையே ஒருவருக்கொருவர் மேலானவர்கள் என்று எண்ணாதவர்களும், அவர்கள் மூவரையும் சமனாக எண்ணுகிறவர்களும், வேதவிதிப்படி சிராத்தாதிகள் செய்யாதவர்களும், ஊப்வாசதினத்தில் உபவாசம் இராதவர்களும், சதருத்திரீயம் முதலியவற்றால் சிவனை அபிஷேகம் செய்யாதவர்களும், தில்லை காளத்தி முதலிய சிவதலம் எதிலாவது ஒருவருஷம் வசிக்காதவர்களும், ஞானாசாரியனிடத்தில் மஹாவாக்கியார்த்தம் கேளாதவர்களும், பரமஹம்ச ஆச்சிரமத்தை வெறுப்பவர்களும், திருநீறு தரியாமல் ஊர்த்துவபுண்டரம், அர்த்த சந்திர வடிவமான சின்னங்களையும் தரிப்பவரும், சங்க சக்கர சூல முத்திராங்கிதம் தரிப்பவரும், சுருதி ஸ்மிருதிகள் கூறிய ஆசாரானுஷ்டானம் செய்யாதவர்களும், பாஷண்டிகளாவார்கள். சிவப்பிரசாதம் பெற்று

மெய்யறிவுடையோர் வேத விதிப்படியே நடப்பார்கள். அவர்களே முத்தி பெறுவார்கள் என்று பிரமதேவர் அருளிச்செய்தார். தேவர்கள் அதைக் கேட்டு மனமகிழ்ந்தார்கள்.

இரண்டாவது அத்தியாயம்.

தைத்திரீய உபநிடதார்த்த முரைத்தது.

சர்வாத்மாவாகிய சிவனே எல்லா வுலகங்களுக்கும் சாட்சியானவன். ஜகம் ஜடமாதும். அதற்குச் சுயமாகப் பானமில்லை. சில மதம் விஞ்ஞானத்தாலே பானம் உண்டாகும் என்று கூறும். அது கூடாது. ஏனென்றால் விஞ்ஞானம் விகாரமற்றது. ஆனபடியால் அதற்குப் பரிணாமம் சொல்லக்கூடாது. அன்றியும் விஞ்ஞானம் ஒரு திரவியமல்ல. ஆகையால் அந்தப் பானம் என்பது அசத்தியம். ஆரம்பகத்துவமும் அதற்கு இல்லை. ஆகையால் பானம் விஞ்ஞானத்தால் உண்டாகாது. அது நித்தியமாம். விஞ்ஞானம், பானம் இரண்டிற்கும் உற்பத்தி பிரதீதி பிராந்தியாம். பான சொரூபமாயும், சர்வாத்மாவாயும் உள்ள பரசிவனே சாட்சியாம். அவனது தேஜசால் கற்பிக்கப்பட்ட அஞ்ஞானத்தாலே காரணம் இராக நிகளுக்குப் பானமும் உண்டாகும். பிராணிகள், பாகியமான சிலவஸ்துக்கள் இவைகளுக்குச் சித்தவிருத்தி மூலமாயும், இந்திரிய சம்பந்த மூலமாயும், அனுமானாதி மூலமாயும் சித்தொளியால் பானம் உண்டாகும். அன்றிச் சுயத்தில் கிடையாது. கற்பிதம்பெற்றிருக்கிற ஜீவனும் சித்தொளியாலே பத்து இந்திரியத் தொழில்களையும் செய்கின்றன.

அந்தச் சிற்சொரூப ஞானத்தைச் சிலர் இருதயமென்று சொல்வார்கள். சிலர் மனம் என்று கூறுவார்கள். சிலர் சுஞ்ஞானமென்பார்கள். சிலர் ஞானமென்று சொல்வார்கள். சிலர் விஞ்ஞானமென்பார். சிலர் பிரஞ்ஞானம் என்பார்கள். சிலர் மேதையென்பார்கள். சிலர் திருஷ்டி யென்பார்கள். சிலர் திருதி யென்பார்கள். சிலர் மதி யென்பார்கள். சிலர் வசம் என்பார்கள். சிலர் மனீடை என்பார்கள். சிலர் இருதி என்பார்கள். சிலர் கிரது என்பார்கள். சிலர் சங்கற்பம் என்று சொல்வார்கள். சிலர் ஸ்மிருதி என்பார். சிலர் காமம் என்பார்கள். இவைகள் எல்லாம் பிரஞ்ஞான சொரூப சிவனுடைய திருநாமங்களேயாம். பிரமாமுதல ஸ்தாவர

மீறுகச் சொல்லப்பட்டவைகளெல்லாம் அந்தப் பரசிவனே. பரசிவ சொரூபஞானமுள்ளவனே ஜீவன் முக்தனாவன். கருமம முதலானவைகளாலே ஜீவன்முக்தனாகமாட்டான. இது நிச்சயமே யாம.

மாயையோடுகூடிய அந்தப் பரசிவத்திலிருந்து, கயிற்றரவு போலப் பஞ்சீகிருத சூட்சும ஆகாயமும, அதிலிருந்து வாயுவும அதிலிருந்து தீயும, அதினின்று நீரும, அதினின்று மண்ணும அபஞ்சீகிருதமாக உண்டாயின. அந்தச் சூட்சுமபூதங்களைப்பஞ்சீகரணஞ் செய்து, சிவாக்கினையாலே நான் பல அண்டங்களையும உண்டாக்கினேன். காம பரிபாகத்துக்கு ஏற்றபடி, தேவர், நரர், பசு முதலியன சிருஷ்டிக்கப்பட்டன, அதில பஞ்ச கோசங்களும் ஒன்றுக்கொன்று பேதமாயிருக்கும. அன்னமயகோசம் பிராணமய கோசத்தாலும், பிராணமயகோசம மனோமயத்தாலும,மனோமயகோசம ஞானமயத்தாலும, ஞானமயம ஆனந்தமயகோசத்தாலும், பூரணமாகும. ஆனந்தமயகோசம் சித்தாலே பூரணமாகும், அந்தப் பரசிவம வேறொன்றாலும பூரணமாவதில்லை. சத்தியாதி சொரூபமுடைய பரசிவமதானே இரசமாம. அந்த இரசத்தாலே பரமானந்த மாகவே தேகிகளா யிருப்பன. தேகிக்குப் பரசிவத்தாலேயே தொழிலாதி யுண்டாகும. அபேத சிவஞானமுள்ளவனுக்கு ஒருபோதும பயமில்லை. பேத ஞானத்தாலே பயமே யுண்டாகும, அந்தப் பேரானந்த சொரூபனான பரசிவனே நாராயணன், உருத்திரன முதலானவருடைய இருதயத்தில சாட்சியா யிருக்கிறான. அந்தச் சிவஞானத்தை ஆசாரியன் மூலமாகப் பெற்றவன் பந்தத்தை அடையமாட்டான. முத்தனே யாவான். அஸ்தி நாஸ்தி என்னப்பட்ட உலகம சிவப் பிரசாதத்தாலே நிலைபெறும். இந்த ஞானத்தை உடையவன் ஆனந்த சொரூபமே ஆவான். இந்த அர்த்தத்தையே சொல்கிறதுசாமவேதமாம். இந்த வேதத்தை இலவுகிகமாகக் கானம செய்கிறவன் சிவப்பிரசாதத்தைத் தப்பாமல அடைவான், வைதிககானத்தால் பெறும்பேறு சொல்ல முடியாது. வைதிககானம செய்யச் சக்தியில்லாதவன் இலவுகிக கானத்தை நாடோறும தப்பாமல செய்யவேண்டும். அதனாலே போகஞானங்களுண்டாகும். அதனாலே முக்தி கிடைக்கும். இந்த ஞானத்தைப் பக்தியில்லாத மூடருக்குச் சொல்லப்படாது என்று பிரமதேவர் சொன்னார்

மூன்றாவது அத்தியாயம்.

சாமசாகோப நிட்டாராத்த முரைத்தது.

சுயம்பிரகாசனுய்ச, சர்வசாட்சியாய்ச, சமசார மோசகனு ய்க? கருணையை யுடையவனுய விளங்குகிற திரிலோசனன் ஒருவ னே நித்தியமாயுள்ளவன். பிராணன், மனம, காமேந்திரிய ஞா னேநதிரியங்களாகிற தசேநதிரியங்கள் எல்லாம அவனுடைய மாயையாலே பிரேரிககபபட்டு, விஷயங்களிலே பிரவர்த்தித்துக் கொணடிருககும். அநத மகேஹசுவரன் தன்னிடததில் ஆரோபித மான அநத மனம முதலானவறறைத்தானடைநது,சகல பொருள் களேயும ஸ்வருபபடியான சகதியைக கொடுத்தருள்வான். மன முதலானவைகள் பரமசிவனே அணடமுடியாது. அவைகளுக்கு அகோசரமாகவே யிருபபன பரசிவன. சகலபொருள்களேயும் பிரகாசிபபிக்கின்ற அவனைப பிரமாணங்களாலும்,குருமொழியா லும, தன் அனுபவத்தாலும் கண்டுகொள்ளவேண்டும். அவனே சீவனமுத்தன். பிரமஞானம, கடாதி ஞானம, பிராந்தி ஞானம் இவைகளில ஆத்மா செய்கிறவனும, செயப்படு பொருளு மாக மாட்டான். வியாவகாரிக நோககத்தில் வித்தை அவித்தைகள் பிரமததினிடத்தில தோனறும். பரமார்த்தமாய்த் தோன்ற மாட்டா கேவலமான தத்துவங்களே தோன்றும். இந்த அறிவு குருமொழியாலும, சிவபிரசாததத்தாலும் உண்டாகும. இநத ஞா னம உண்டானவர்களுக்கு கிரியைகளும் ஆச்சிரமத்தருமங்களும் தோனரு. அவன் சிவனே ஆவான். அவன் பெருமைப் பிரம விஷ்ணுக்களாலும அறியமுடியாது. விஞ்ஞான அதிகாரமுடைய தேகததிலுண்டாகுமே யன்றி மற்றத் தேகத்தில தோன்றாது. ஆன்மா ஒருவனே, அனேக உடல்களிலும் பிரகாசிக்கிறபடியால் முக்தன்.* மற்றெல்லாரையும் முகதன் என்றே எண்ணுவான். ஞானசாதன முள்ளவவன்பிராரபதமுள்ளவரைக்கும் பரமார்த்த ஞானம் பேதஞானம் இவ்விரண்டையும் அடைவான். பிராரப்தம் நசித்தபின் எல்லாம் பரமார்த்தமாகவே காணப்படும். அவர்க ளுக்கு விதிவிலக்கு எனபன இல்லை.

சிவனுக்கு வேறாக மாயையிலே எல்லாச் சகங்களும் உண்டு என்று சிலர் சொல்லுவார்கள். பந்தங் கடந்த மஹாதேவனுடைய மகத்துவத்திற்கு அனுபபத்தியாற் சங்கம் உண்டாகும். ஆதலால

அப்படிச் சொல்லக் கூடாது. ஆகையால் அந்த மஹாதேவன் ஒருவனே பூரணமாய் நிறைந்திருப்பான். அவனுக்கு வேறாக ஒன்றுமில்லை. அறிவுள்ளோர்களால் சொல்லப்படும் பிரமாணங்கள் எல்லாம் இந்தஅர்த்தத்திலேயேமுடிவு பெறும். இப்படிப்பட்ட அத்துவித ஞானம் சிவனுக்கும் உமாதேவியாருக்கும் சுபாவமாக உள்ளது. எனக்கும் விஷ்ணுவுக்கும் அந்தப் பரசிவானுக்கிரகத்தா லுண்டாகும். சுபாவத்திலே எங்களுக்குஇல்லை. சிவப்பிரசாதமுண்டானால் எல்லாஜீவனுக்கும் ஞானமுண்டாகும். விஷ்ணுவும் நானும் சிவஞானம் கொடுக்கும் சுதந்தரமுடையவர்களல்ல. நாங்கள் சாதகர்களாகவே யிருப்போம். அந்தப் பரமசிவனை அவன் அருளாலேயே அறியவேண்டும். மற்றொன்றனாலும் அறியமுடியாது.

முன் ஒரு காலத்தில் தேவேந்திரன் முதலான தேவர்களும் அசுரர்களும் கூடி யுத்தம் செய்தார்கள். தேவர்கள் அசுரர்களுக்கு ஆற்றாமல் தோற்று ஓடினார்கள். அதைக்கண்டு சிவபெருமான் கருணையினாலே தேவர்களுக்குப் பலத்தைக் கொடுத்தருளினார். அதன்பின் தேவர்கள் அசுரரைவென்று ஜயம்பெற்றார்கள். அசுரர்கள் தோற்று ஓடினார்கள் பிறகு தேவர்கள், பரமசிவன் அருளால் வெற்றிபெற்றதை அறியாமல், தாங்களே தங்கள் புஜபலத்தால் அசுரர்களை வென்றதாக எண்ணிக் கருவம் அடைந்தார்கள். சிவபெருமான் இதை அறிந்து, யட்சரூபங்கொண்டு அந்தத் தேவர்களுக்கு எதிரில் வந்து நின்றான். தேவர்கள் அந்த யட்சனைப்பார்த்து ஆச்சரியமடைந்து, அவன் யாரென்று தெரிந்துவரும்படி அக்கினிதேவனை அனுப்பினார்கள். அக்கினிதேவன் யட்சனிடம் போனான். யட்சன் அக்கினியைப் பார்த்து நீ யார்? உனக்கு என்ன தொழில் தெரியும்? சீக்கிரம் சொல் என்றான். அக்கினி, என்பேர் அக்கினி தேவன். சகல வுலகங்களையும் ஒரு க்ஷணத்துக்குள் நீறாக்கி விடுவேன் என்று சொன்னான். பரமசிவன் புன்சிரிப்புகொண்டு ஒரு துரும்பை எடுத்து எதிரில் நிறுத்தி அக்கினியை நோக்கி இதை எரி பார்ப்போம் என்று சொன்னான். அக்கினிதேவன் தன் முழு வல்லமையுடன் அதை எரிக்க முயன்றும் அது எரியடாமல் அப்படியே யிருந்தது. அக்கினிதேவன் வெட்கி மீண்டு போய்த், தேவர்களை நோக்கி, அவனை அறிய என்னால் முடியவில்லை. நீங்கள் போய்த் தெரிந்து கொள்ளுங்கள் என்றான். தேவர்கள் வாயு தேவனை

அனுப்பினார்கள். அவனும் யட்சனிடம்போய், அவமானப்பட்டு மீண்டான. மற்றத் தேவர்களும ஒருவரபின் ஒருவராகப் போய் வெட்கமடைந்தார்கள். கடைசியில இந்திரன வந்தான். அப் போது பரசிவன் மறைந்துபோனார். இந்திரன் பயமும் அதி சயமு மடைந்து, ஈசுவரியைத் துதித்தான்.

அப்போது உமாதேவியார், அவனுக்குப் பிரசன்னமானார். இந்திரன கண்டு மகிழ்ந்து, அம்மையை பூஜித்து, வணங்கி, யட்ச னாய்த்தோன்றி மறைந்தவன் யாரோ எனக்குத் தெரிவிக்கவேண் டும் என்று வேண்டினான். உமாதேவியார் கருணைகூர்ந்து இந் திரா! பிரம விஷ்ணுக்களாலும தேடி அறியப்படாதவனும், எல் லாவற்றிற்கும் காரணனும், எனக்கு நாயகனுமான மஹாதே வனே யட்ச ரூபமாக வந்தார் என்றார். அந்த மஹாதேவனே உங்களுக்கு வெற்றியைக் கொடுத்தருளினார். நீங்கள் அந்த மஹா தேவனைத் துதியாமல் செருக்கு அடைந்தீர்கள். அந்தச் செரு க்கை அடக்கும்பொருட்டுப் பரமசிவன யட்ச வடிவம கொண்டு வந்தார். தாமதியாமல அவரைச் சரணம் அடையுங்கள் என்று கூறி உமாதேவியார மறைந்தருளினார்.

அதன்பின் இந்திரன் முதலியோர அதிசயித்துச் செருக்கு அடங்கினார்கள். ஆகையால் சிவபெருமானே சர்வகாரணன். அவ னுடைய மகிமையை விஷ்ணு முதலானவர்களாலும சொல்லமுடி யாது. அந்தச் சிவப்பிரசாதம பரகாயப்பிரவேசம, ஆகாச கம னம, தான் கல்லாத சாஸ்திரங்களையும் தடையில்லாமல பேசுதல் முதலாக அனந்தமாகும். இவையெல்லாம சிவன் உமை யிவர்கள் அனுக்கிரகத்தா லுண்டாகும. ஆகையால முத்தியை விரும்பு கிறவன் பரமசிவன் ஒருவனையே தியானிக்கவேணடும. அவரக ளிடத்தில் மஹாதேவன் மூர்த்தி சொரூபமாகவும், ஆத்ம சொரூப மாகவும் பிரகாசித்துக் கொண்டிருப்பான். இந்த அத்துவித முத்தியால் நிச்சயமாகவே முத்தி கிடைக்கும். கௌதமர், ததீசி முதலானவர்களுடைய சாபத்தால் மயங்கினவர்களுக்கு இந்தப் பொருள் தோன்றாது. அவர்களுக்கு விபூதி, ருத்திராட்சங்களி லும் வெறுப்புத்தோன்றும. சிவஞானி பிரம விஷ்ணுக்களாலும் தொழத்தக்கவன். அவன் இருக்குமிடத்தில், முத்தி காத்துக் கொண்டிருக்கும். அந்த ஞானிக்குப் பணிவிடை செய்கிறவனு டைய பாதத்தை நான் சிரமேல தரித்துக்கொள்வேன். அவனுக்

குச் சமானம் ஒருவருமில்லை. இந்த ஞானத்தைப் பெறுவதற்கு உலகவாசனையையும் பிரதிபந்தங்களையும் ஒழிக்கவேண்டும் என்று பிரமதேவர் சொன்னார்.

நாலாவது அத்தியாயம்.

சாந்தோக்கிய உபநிடதார்த்த முரைத்தது.

பிரமதேவர் தேவர்களை நோக்கி ஓ தேவர்களே! மண்ணினால் செய்யப்பட்ட பாண்டங்கள் அந்த மண்ணுக்கு வேறாகாதது போலக், காரியங்களெல்லாம் காரணத்துக்கு அபேத மாகவே யிருக்கும். காரிய சத்தையானது காரண சத்தைக்கு வேறாகாத படியினாலே, காரியம் தனிச்சத்தாகிப பேதபபடுகிறதில்லை. நரசிருங்கம் (மனிதனுக்குக் கொம்புண்டாகுதல்) போலச் சூனியமாகாமையாலும, அசத்துவத்தில் விசேஷ மில்லாமையாலும். அந்தக் காரியம அசத்தாய்ப பேதப்படுகிறதில்லை. இந்த இருவகைத் தோஷங்களும் உண்டாகிறபடியால் சதசத்தாகப் பேதபபடுகிறதுமில்லை. பேதா பேதம் எவ்வகையிலும் வராது. இபபடியே காரியமெல்லாம காரணத்துக்கு அபேதமாயிருந்தாலும், மாயையினால் பேதமுள்ளது போலக் காணப்படும். விகாரங்களெல்லாம் பெயராலே பின்னமாக இருந்தாலும் பரமார்த்தத்தில் பிரமத்துக்கு அபேதமாகவே யிருக்கின்றன. ஜகத்துக்குக் காரணமாய் விளங்குகிற அந்தப் பிரமம, பின்னமன்று. பின்னாபின்னமுமன்று. ஏகமாகவே யிருக்கும். அசேதனமாகிற மண்ணாதிகளுக்குக் குலாலனுடைய அபேட்சையும், குலாலனுக்கு மண்ணாதிகளின் அபேட்சையும் வேண்டியிருப்பது போலவே ஜகமும் பிரமமும் என்று கொள்ளுங்கள். ஏகமாய்ச், சைதன்னியமாய், நித்தியமா யிருக்கிறபடியாலும், நிமித்த உபாதான காரணங்கள் வேதத்தில் பிரசித்தமா யிருக்கிறபடியாலும், அந்தப் பிரமத்திற்கு வேறொரு வஸ்துவின் அபேட்சை வேண்டியதில்லை. பிரமம் பிரதீதி சித்தமான முக்குணமுள்ள தன் மாயையுடன் ஒன்றாய்க் கூடியிருந்தே சிருஷ்டி முதலான தொழில்களையெல்லாம் செய்யும்; சத்தான வித்தாதிகளினாலே அங்குரோற்பத்தி யாவது போல ஜகமெல்லாம் காரணரூபச் சத்தாகவே யிருந்து உற்பத்தியாகும். ஆகையால் சூனியவாதிகள் மதம் அனுசிதமாகவே யிருக்கும். அது சரியல்ல வென்று கருதுங்கள்.

ஆதியந்த மில்லாமல் சத்தாகவே யிருக்கிற அகண்ட பிரமம், பூர்வ கற்ப பிரபஞ்ச வாசனையால், சத்துவ விருத்தியுடன் கூடியிருக்கிறதாய், அநேகவிதமான ஜக சொரூபமாய் "நானாகிறேன். நான் நிரம்ப" என்கிற இச்சையினாலே ஆகாயம் முதலிய பஞ்ச பூதங்களையும் சிருஷ்டிக்கும். அந்தப் பஞ்சபூதங்களில் ஒவ்வொன்றையும் இரண்டிரண்டு கூறாகவகுத்து, ஐந்து பாகங்களையெடுத்து ஒவ்வொரு பாகத்தையும் நாலு நாலாகப் பகுத்து, பிருதிவியின் நாலு பாகங்களை யெடுத்து மற்றைய பூதங்களின் அரைப் பங்குடன் கூட்டும். இப்படியே மற்றைய நாலு பூதங்களின் நாலு அரைப் பாகங்களையும் எடுத்து மற்றவற்றுடன் கூட்டும். இப்படிப் பஞ்சீகரணம் (கலத்தல்) செய்து பிரமாண்டமுதலானவற்றை யுண்டாக்குவன் பரமன். தீயால் காணப்படுகிற செந்நிறம், ஜல சம்பந்தமான வெண்ணிறம், மண் சம்பந்தமான கருநிறம் ஆகிய இவைகளை தீ. ஞாயிறு முதலான ஒளிரூபங்களாக விவகரிக்கப் படுகின்றன. ஆகையினாலே பிரமத்துக்கு வேறாக ஒன்றுமில்லை. பூர்வ ஜன்ம வாசனையால் தேகேந்திரியங்களில் நான் என்னும் புத்தி உண்டாகும்.

தேகாதிக ளெல்லாம் பௌதிக மாகையால் அவற்றை நான் என்கிற புத்தியை விட்டுச், சாட்சியான சித்ரூபத்தில் நான்என்னும புத்தி வைக்கவேண்டும். இப்படியே மஹாவாக்கியங்களிலும் அமைந்திருக்கின்றன. துவம்பதத்திற்கும், தத்பதத்திற்கும் இலட்சியார்த்தம் சின்மாத்திர சொரூபமேயாம். குற்றமற்ற அந்த மஹாவாக்கியமும் தத்பத துவம்பத வாச்சியார்த்தத்தை விட்டு, அவிரோதமான சின்மாத்திர சொரூபத்தை இலக்கணையாலே பிரதிபாதிக்கின்றது. துவைதமற்ற அகண்ட பரத்திற்குச் சுபாவமான ஏகத்துவமே மஹாவாக்கியத்தின் பொருளாம். அந்த ஏகத்துவமே வேதத்தில் பிரமாதமாய்ச் சுயமாகப் பிரகாசிக்கின்றதனால், அந்த மஹாவாக்கியமும் அந்த ஏகத்துவத்தையே போதிக்கின்றது என்பது கூடாது. தன்னால் உண்டாகிற வித்தையினாலே வியாவகாரிக அஞ்ஞானத்தை நீக்கும். அஞ்ஞானத்திற்குப் பானம் (இரசம்) இல்லாமையாலும், அதை இத்தன்மையுடையதென்று கூறமுடியாமையாலும், அதற்குச் சத்துவம் உண்டாகாமையாலும், அஞ்ஞானமும் அதனுடன் ஒத்துத் தோனுகிற காரியமும் பிரமமேயன்றி வேறில்லை.

தான். இப்படியிருக்கையில் கொடிய நோய்கள் உண்டாயின. பிரம ராட்சதப்பேயும் பிடித்துக்கொண்டது. அதனாலே துன்பம் அடையும்போது தாசிகளெல்லோரும் அவனைக் கைவிட்டொழிந்தார்கள். அவன் பட்ட துன்பத்துக்கு அளவில்லை.

அவன் படுகிற துன்பத்தைக் கண்டு அவன் தகப்பன் மனம் வருந்தி, அறிவிற் சிறந்த ஒரு பிராமணனிடம் போய்த், தன் புத்திரனுடைய ஸ்திதியைச் சொல்லி, இது நிவிர்த்தியாவதற்கு ஒரு உபாயஞ்சொல்லவேண்டுமென்று வணங்கிப் பிரார்த்தித்தான். அவன் சற்று யோசித்துச் சொல்லுகிறான். இதற்கு சிவானுக்கிரகத்தைத்தவிர வேறு உபாயங்கிடையாது. விருத்தாசலமென்று ஒரு திவ்ய க்ஷேத்திரமிருக்கின்றது; தேவர் தானவர் முனிவர்களும் வணங்கும் பெருமையுடையது. மஹா பாதகங்களுக்கும் இடிபோல்வது. அந்த ஸ்தலத்துக்குப் போய்ச்சேர்ந்து மணிமுத்தாநதியில் ஸ்நானஞ் செய்து, திருவாலயத்தை நூற்றெட்டு பிரதட்சிணஞ் செய்து வழிபடு; சிவனடியாரைப் பூசை செய்; இப்படியொருவருடகாலஞ் செய்தாயானால் உன்புத்திரன் துன்பமொழிந்து நற்கதியடைவான். நீயும் முத்திப்பேறு பெறுவாய்; இதுவே தகுந்த வுபாயமென்று கூறினான்.

அப்படியே அந்தவணிகன் உடன்பட்டு, அந்தப்பிராமணனை வணங்கி விடைபெற்றுக்கொண்டு, தன் புத்திரன் மனைவி முதலியவரோடும் விருத்தகிரிக்குப்போனான். தினந்தோறும் மணிமுத்தாநதியில் ஸ்நானஞ்செய்தான். மறையவன் சொன்னபடி விருத்தகிரீசனை நாடோறும் பணிந்தான்; ஒரு மடங்கட்டி ஒரு யோகிக்குக்கொடுத்தான். சிவனடியார்களுக்கு அன்ன வஸ்திர முதலிய யாவுங் கொடுத்துபூசித்தான். இப்படி ஒருவருஷமாயிற்று. அந்தப் புத்திரனுக்கும் நோய் தீர்ந்தது. பிரமராட்சதமும் பேயும்விலகின. பிறகு அந்தக்குமாரன் சகலபாவங்களுமொழிந்து நின்மலனாய்ச் சிவபதமடைந்தான். வணிகனும் சிவாராதன மகிமையாலும், சிவபக்தர்.பூசைபலத்தினாலும் தன் மனைவிமுதலியவரோடும் சிவலோகம் போய்ச்சேர்ந்தான்.

இன்னமொரு கதை சொல்லுகிறேன் கேளுங்கள். தவத்திற் சிறந்த அகத்திய முனிவருடைய சிஷ்யனாகிய சுவேதமுனியென்பவர் அகத்தியரைப்பணிந்து, "நான் கன்மபந்தமொழிந்து முத்தி

வேதமானது புருஷாது சித்த பரிபாகத்துக்கு ஏற்றபடி மாயா வியவகாரிகமான பேதத்தை எடுத்து அநுவாதம் செய்து, கன்மத்தினு லுண்டாகும் சுக விசித்திரங்களாக கூறி, அதன்பின் பக்குவர்களுக்கு அத்துவித பரசொரூபத்தை உபதேசிக்கும். ஜகஜீவபேதங்களாகத் தோன்றுகிறவைகளெல்லாம் சிவம் என்கிற ஞானம் பரமாத்துவித விஞ்ஞானமாம். இந்த ஞானம் உண்டானவர்களுக்கு எல்லாம் சிவ சொரூபமாகவே தோன்றும். இந்த ஞானம் பரசிவானுக்கிரகத்தாலும், இகபர பந்தமற்ற சற்குருவின் உபதேசமொழியாலும் உண்டாகும். வேதங்களும் இந்த அர்த்தத்தையே சொல்கின்றன. ஆகையால் சிவமே சத்தியமான பொருள். வேறொன்றுமில்லை. இதுவே உண்மை. மற்றப்பொருள்களை யெல்லாம் பூர்வபட்சமென்று பெரியோர் சொல்வார்கள். இதுதான வேதாந்தமாகும். இந்த அர்த்தத்துக்கு வேறான அர்த்தமிருக்குமானால் என்தலை வெடித்துச் சிதறட்டும். இந்த அர்த்தம் சத்தியமானதா யிருந்தால் அந்தப்பரமசிவன் இப்பொழுதே இவ்விடத்தில் எழுந்தருளவேணடும் என்று கூறிப் பிரமதேவா சும்மா இருந்தார்.

அப்போது ஸ்ரீபரமேசுவரன் சிவகணங்கள் சூழ உமாதேவியாரோடு பிரத்தியட்சமாய் ஒரு சிங்காதனத்தில எழுந்தருளியிருந்தார். பரமசிவன் அவ்விடம வந்ததை அறிந்து இலட்சுமிகாந்தனுகிய நாராயணரும் மனம மகிழ்ந்து வந்து சேர்ந்தார். தேவர்கள் பூமழை பெய்தார்கள் கந்தாவர்கள் கீதம பாடினார்கள். அரம்பை முதலிய தேவஸ்திரீகள் நடனம் செய்தார்கள். மேக முழக்கம்போல வாத்தியங்கள் முழங்கின. வேத கோஷம் எங்கும் நிறைந்தது. சமுத்திர ஒலிபோல ஸ்தோத்திர ஒலி யெழுந்தது! தேவர்களும் முனிவர்களும் பரமசிவனை வணங்கினர்கள். எல்லாரும் ஆனந்தமடைந்து மகிழ்ந்தார்கள். பரமசிவன் அவர்களைப்பார்த்துக் கையால் அமையச்செய்து, பிரமாவையும் விஷ்ணுவையும் தம் அருகில் அழைத்துச் சொல்கிறார். உலகமெல்லாம எம்மையன்றி வேறில்லை. அஸ்தி நாஸ்தி என்னும் சபதங்களால் வழங்கப்படுகிற எல்லாம் நாமே. இதையே வேதாந்தம சொல்லும். பிரமா சொன்னவை யெல்லாம் சத்தியமே. அந்த அர்த்தத்தில் சந்தேகப்படுகிறவன் பதிதன் ஆவான். அதை நம் பினவன முத்தனுவான் என்று கூறி எல்லாருக்குங் கருணைசெய்

தார். இதைபபற்றி நீங்கள் எல்லாருமெ பேரானந்தத்தை அடை யுங்கள் எனறுசொன்னார். தேவாகள பரமசிவனை கநதபுஷ்பங் களால் பூசித்தார்கள். பிரமனும விஷ்ணுவும பரமசிவனை வணங் கிப் பர்வசமானார்கள். அபபோது பரமசிவன ஆனநத நடனம் செய்தருளினார். அதனாலே விஷ்ணு, பிரமா மறறுமுள்ள தே வர்கள், முனிவர்கள் எலலாம ஆடினாகள். அபபோது பரம சிவன் உமாதேவியாரோடும கணஙகளோடும் மறைநதருளினார். விஷ்ணு பிரமதேவரை ஆலிஙகனமசெய்து மற்றத் தேவாகளுக் கும் அனுககிரகமசெய்து இலட்சுமியுடன் வைகுநதம போனார். பிரமதேவர் மனமகிழநது தேவாகளை நோக்கி,பிரம வித்தையா னது அஞ்ஞான இருளை நாசமபண்ணும. மற்ற எதனாலும் முடியாது. சோகமுண்டாகும. நாசமும உணடாகும. உலக இன்பமே உண்டாகும. அதனுவித்தை அறிநதவனுககுப பிறப புமெ இறப்பும் இலலை யென்று பிரமதேவா கூறியருளினார்.

ஐந்தாவது அத்தியாயம்.

இதுவும் அது.

பிரமபுரம் என்று கூறப்பட்டதும், ஞானதிகார மேன்மை யுடையதுமான சரீரத்தில் தகரமென்று சிறபபிக்கபபட்டு விள ங்குகிற இருதய கமலத்திலுள்ள தகராகாசமே பரமசிவன் என்று எல்லா வேதங்களும் சொல்லும். அநதப பரமசிவனே சிரவண மாதி சாதனஙகளினாலே அறியததக்கவன். அவனுக்குத் தேச கால பரிசசேதமிலலை. அவன் சர்வ வியாபகன். ஐடமாகிய ஐக த்துக்குச் சுபாவத்திலே பானமிலலாமையால, அந்தப பரமசி வனே அஸ்தி, நாஸ்தி என்று கூறபபட்ட ஜகமெல்லாவற்றையும் வியாபித்துப் பெருகச்செய்வான். அவனுக்குப் பாவசோகாதிக ளில்லை. சத்திய சங்கறபங்க ளுள்ளவன். காமங்களால் அடையப படுகிற உலகங்கள் எல்லாம அழிநதுபோகிறபடியால, இந்தத்தகர வித்தையை அறியாமல் கருமம் செய்கிறவர்களுக்குளவ்விடத்திலு மகாமசார மென்பதில்லை. இநதத்தகராகாசவித்தையை அறிந்ஞா னிக்கு எந்த உலகத்திலும் காமசாரம் உண்டு. சிறைப்பட்டவர் கள் அறியாதிருப்பதுபோலச், சுழுத்தியில் பிரமம பிராப்தமாகி யிருக்கவும் மோகத்தினால் அறிவதில்லை. சிவன் எல்லார் இருத

யத்திலும் இருக்கிறபடியால் சிவனுக்கு சிவன் என்று பேர் உண்டு. சரீராபிமானத்தை விட்டு, சுழுத்தியிலே பிரகாசிக்கும் தேஜோரூப ஆத்மாவைத் தரிசிக்கவேண்டும். அந்த ஆத்மாவைச் சோகாதிகள் அடைவதில்லை. அவன் தேகாதிகளுக்குப் பின்னாய்ச், சாக்கிர, சொற்பன, சுழுத்தி அவஸ்தைகளுக்குச் சாட்சியாய்இருக்கிறான். அந்தப்பரசிவனிடத்தில் ஆரோபிதமான பிரபஞ்சம் அவனுக்குரிய ஒளிபெற்றிருக்கும். தேகாதிகளுக்கு வேறான கேவலாத்மாவை ஒன்றுவது அணுகமாட்டாது. அந்த ஆத்மாவே நாமரூபாதிகளை நிர்மித்தவன். அவனுக்கு வேறாக ஒன்றுமில்லை. பிருதிவி முதலான பூதங்களும் தங்கள்தங்கள் விகாரப்பாட்டில் வேறாமல் அநந்த ரூபமாகத் தோன்றுதல்போலவே, சாட்சி சொரூபமும் எல்லாவற்றிலும் கலந்திருக்கும். எங்கும் வியாபித்த ஆகாயம், கடாகாசாதி விபாகப் பகுதியிலும், அவிபாகப் பகுதியிலும் எப்படியிருக்குமோ அப்படியே பரமசிவனும் தோன்றுவன். தோன்றுகிறது தோன்றாதது எல்லாம் சிவசொரூபமேயென்று அறிகிற ஞானம் சமஷித் சொரூப சக்தியேயாம். அந்தப் பானம் உடையவனுக்கு ஜனன மரணங்களாகிற எந்தத் துன்பமும் கிடையாது. இந்த ஞானத்தைப் பரமசிவன் ஒருவனே கொடுக்கவல்லவன். அவனே சுதந்தரன். விஷ்ணுவாலும் என்னாலும் முடியாது. சூரியன் ஒளியால் இருள் நீங்குவது போல, உமாகாந்தனாகிய பரமசிவனுடைய திரு அருளால் சமுசார இருள் ஒழியும். மலபந்த மொழிப்பதற்குப் பரமசிவனுடைய பாதாரவிந்த தியானத்தையும், பூசையையும் அன்றி வேறொன்றுமில்லை. பல ஆகமங்களின் முடிவும் அவனே. சுவானுபூதி சொரூபனும் அவனே. அதைக் கொடுப்பவனும் அவனே. அதனாலே அறியப்பட்டவனும் அவனே. உலக காரணனும் அவனே. எல்லாம் அவனே என்று அறிந்துகொள்ளுங்கள். சூரியன் ஒளிக்குமுன்னாலே எல்லா ஒளிகளும் மழுங்கிப் போவது போலப் பரமசிவனுடைய தேஜசுக்கு முன் என் ஒளியும் விஷ்ணுவின் ஒளியும் மழுங்கிவிடும். பரமசிவம் என்கிற பெரிய சமுத்திரத்தில் நானும் விஷ்ணுவுமாகிய இருவரும் இரண்டு துளிகளேயாவோம். அந்தப் பரமசிவனையும் என்னையும் விஷ்ணுவையும் சமமென்று சிலர் சொல்வார்கள்; அது தவறு. அஞ்ஞானம் மெய்ஞ்ஞானத்துக்கு ஒப்பானால் நாங்கள் சிவனுக்குச் சமான

மாவோம். ஞான திருஷ்டியுள்ளவன் சிவனை அறிந்து [illegible] தத்தால் சமுசார பந்தம் தீரவேண்டும. பரமசிவனுடைய திருவடி யின்பத்தை அடைய விரும்புகிற தேவர்களே! இதையறிந்து நீங்கள் க்ஷேமம் அடையுங்கள் என்று பிரமதேவர் சொன்னார்.

ஆறவது அத்தியாயம்

முண்டகோபநிடதார்த்த முரைத்தது.

அட்சர தத்துவத்தை ஆராய்ந்து பார்க்கையில் எல்லாம சுய சொரூபமாகவே தெரிதலாலும, சொற்கள் எல்லாம் அந்த தத்துவ சொரூபமே யாகையாலும் பேதமில்லை வித்தையானது அபரவித்தை பரவித்தையென்று இருவகைப்படும. வேதம வேதாங்கங்கள் முதலியன அபரவித்தை. உபநிஷதங்கள் பரவித்தை. பரவித்தையினலே தசேந்திரியங்களுக்கும் எட்டாததாயும, அந்த இந்திரியங்கள் இல்லாததாயும் இருக்கிற மெய்ப்பொருளை அறியலாகும. சிலம்பி நூலைத் தோற்றுவித்து மீண்டும் தன்னிடத்தில் ஒடுககிக்கொள்வது போலப், பரசிவமும் உலகைத் தோற்றுவித்து மீட்டுந் தன்னிடத்தில் ஒடுக்கிக்கொள்ளும். மாயோபாதி சகிதமான பரசிவததால சிருட்டியுண்டாகும். அன்னம், பிராணன், மனம், சத்தியம், உலகம், கருமத்தினல் உண்டாகும பலன், நாமம், ரூபம் முதலான எல்லாம சொற்பன உலகம்போலத் தோன்றும். அப்பர்சிவஞானத்தினல் சமுசாரமொழியும். பேரின்ப முத்தியுண்டாகும். கருமத்தையே அனுஷடிக்கிறவர்கள் கண்ணில்லாத குருடன் ஒருவன் மற்றொரு குருடனைத் துணையாகக் கொண்டு கிணற்றில் விழுவதுபோல மோகத்தாலே மயங்கிச் சமுசாரத்தில் வீழ்வார்கள். ஆகையினல் கருமத்தினல் பந்தம் ஒழியாது. ஞானத்தாலேயே ஒழியவேண்டும்.

ஆகையால் சிவஞானத்தை அடைவதற்கு நன்ருகக் குருபணிவிடை செய்யவேண்டும். குருவின் கருணையை அடையவேண்டும். நெருப்பில் உண்டாகும் பொறிகள் மறுபடியும் அந்தத்தீயிலேயே ஒடுங்குவதுபோல், சிவத்தினின்றும் உற்பத்தியான ஜீவாத்மாக்களெல்லாம் அந்தச் சிவத்திலேயே ஒடுங்கும். பிராணுதிகளில்லாத சிவன் மாயைக்கும்ஜீவனுக்கும்மேலானவன்.

அவனிடத்திலிருந்து பிராணிகள் உண்டாகின்றன. பிரமாண்டத்துக்கு அபிமானியான விராட்புருஷனும் அந்தப் பரமசிவனேயாம். உலகம், பர்ஜன்னியன், பிருதிவி, புருஷன், நாரி என்னும் ஐந்தாலும் உண்டாகிற பிரஜைகளும், காமங்களும், தேவர்களும், சமுத்திரங்களும் மற்றுமுள்ள எல்லாமும் அந்தப்பரமசிவனிடத்திலிருந்தே உண்டாகின்றன. ஆகையால் எல்லாம் சிவசொரூபமேயாம். இது விஷ்ணு முதலான எல்லாருக்கும் சம்மதமாம். மூர்க்கர்களால் இஃது அறியமுடியாது. அவர்களுக்கு மயக்கமாகவே யிருக்கும். பிரணவமாகிய வில்லை வளைத்து, ஜீவனாகிய அம்பை அதில் பூட்டி, சிவமென்கிற இலட்சியத்தில் எய்தால் அவன் சிவனே ஆய்விடுவான். அரணியைக்கடைந்து நெருப்பை எடுப்பதுபோல, இருதய ஆகாசத்தில் உள்ள அந்தப் பரமசிவனைத் தியானமாகிய கடைதலால் உணர்ந்து, சந்தேகநீங்கி முத்தியடைவார் பெரியோர்கள். அந்தப் பரசிவத்தினிடத்தில் சூரியன் முதலிய ஒளிகள் விளங்கா. அந்தசிவத்தின் ஒளியாலேயே பிரகாசிக்கும். அவன் ஒருவனே சுயம்பிரகாசமுள்ளவன். இந்தசிவத்தில் ஜீவன் ஈசுவரன் என்று இரண்டு பேர்களுண்டு. அவர்களில் காமபலனை அனுபவிக்கிறவன் ஜீவன். ஈசுவரன் கர்மத்தை அனுபவிக்கிறதில்லை. அவன் சாட்சியாக இருக்கிறான். இருவருக்கும் மாயாகற்பிதமேயல்லாமல் சொரூப பேதமில்லை. இருவரும் சிற்சொரூபிகளானகையால் பரமார்த்தத்தில் பேதம் கிடையாது. அநேக ஜன்மங்களில் செய்த புண்ணிய காமத்தாலும், தர்க்கத்தாலும், அளவைப் பிரமாணங்களாலும், சிவானுக்கிரகத்தாலும் இந்த ஏகத்துவத்தை உணர்ந்துகொண்டு, சைதன்னியப் பொருள் நானே என்கிற நிச்சயமுடையவனாய்ச், சிவஞானத்தாலே பாவ புண்ணியங்களணுகாமல் தொலைத்துப், பரசிவ அபேத சொரூபமான சிவசாமியத்தை அடையவேண்டும்.

சித்துருவத்தாலும் உபாதி சகித சொரூபத்தினாலும் சாமியம் வராது. சாமியத்தை அங்கீகரித்தபோதிலும் கருமமும் வித்தையும் அசாத்தியமாகும். சாமியம் எப்படிவருமென்றால், ஏகத்துவமான சொரூப சாமியம் ஆதியிலேயே அமைந்து கிடக்கின்றது என்று தெரிந்துகொள்ளுங்கள். அவித்தையாலே பேதம் காணப்படும். வித்தையினாலே அவித்தை ஒழியும்போது ஆதியிலேயே யுள்ள சாமியம் விளங்கும் இப்படி மாயை ஒழிந்தவர்

கள். தமது சரீரத்தில் பிரகாசித்துக் கொண்டிருக்கிற சிவத்தைத் தரிசிப்பார்கள். அந்த ஆத்மாவானது தபேசந்திரியங்களாலும், சாஸ்திரங்களாலும், கர்மங்களினாலும் அடையப்படுவதல்ல. பரசிவ தியானத்தாலுண்டாகும் ஞானத்தால் மாத்திரம் காணத்தகும். இந்த ஞானி எந்தெந்த உலகத்தை விரும்புகிறானோ அந்தந்த உலகங்களை அப்போதே அடைவான். சந்நியாச யோகத்தாலே வேதாந்த நிச்சயம் பிறக்கும். அதனாலே மாயை ஒழியும் அப்போதே அவன் முத்தியின்பத்தை அடைவான். அவனுக்குக் காலம் முதலிய எல்லாம் பரத்தினிடத்தி லேகமாயேயிருக்கும். நதிகள், சமுத்திரத்தில் கலந்து சமுத்திரமாகவே யிருப்பதுபோல ஞானியும் நாமரூபங்கள் அற்றுப் பரசிவத்தில் ஏகனாயிருப்பான். அவன் வம்சத்தில் பிறந்தவர்களும் ஞானியே யாவார்கள். இந்த ஞானம், வேதம் அறிந்தவர்களுக்குத்தான் கிடைக்கும் என்று பிரமதேவர் சொன்னார்.

ஏழாவது அத்தியாயம்.

கைவல்லிய உபநிஷதார்த்தம் கூறியது.

சிவன், ருத்திரன், ஈசானன் முதலிய பல திரு நாமங்களையுடையதாய்ப் பரதத்துவத்தை விளக்குகிற ஞானம், சிரத்தை, பக்தி, தியான, யோகங்களாலே உண்டாகுமே தவிர, கன்மம் மைந்தர் தனம் முதலியவற்றால் உண்டாவதில்லை. ஆகையால் கன்ம முதலானவைகளை ஒழித்துவிட்டு வேதாந்தசிரவணத்தினாலே நிச்சய புத்தியை அடைந்தவர்கள் முத்திபெறுவார்கள். மோட்ச இச்சையுடையவர்கள் ஞானம் உண்டாவதற்காக ஏகாந்த ஸ்தலத்தை அடைந்து, திருநீறுதரித்துச், சிரசு உடல் இவைகளைச் சமமாகச்செய்துகொண்டு, இந்திரியங்களை அடக்கிக், குருவைச் சிந்தித்து, இதயத்தின் மத்தியில் விளங்குகிற சிவத்தை ஸ்திரமான மனதுடன்தியானம் செய்யவேண்டும். பிரமா விஷ்ணு முதலானவர்களும் அந்தச் சிவமே யாவார்கள். அந்தச் சிவத்துக்கு வேறாக ஒன்றுமில்லை.

ஆகையாலே சர்வ பூதங்களிலுமுள்ள தன்னையும், தன்னிடத்திலே சர்வபூதங்களையும் தரிசிக்கிறவன் மரண பவ சம்சார

துக்கம் நீங்கிப் பரசிவத்தை அடைவான். மஹாமாயையாலே மோகிக்கப்பட்டவனைப் போலவும், சரீரத்தைப் பெற்று ஜீவத் தன்மை யுடையவனாகவும், தன் மாயா கற்பிதங்களான சாக்கிராதி அவஸ்தைகளை அடைவான் சிவன். சாக்கிரம், சொற்பனம், சுழுத்தியாகிற அவஸ்தாத் திரயங்கள் ஆனந்த சொரூபத்துக்குப் பந்த காரணமாகமாட்டா. அந்தச் சொரூபங்கள் போகத்துக் குரிய்வைகளே யாம். அந்த மூன்று அவஸ்தாதிகளிலும் சிவன் முறையே விசுவன், தைஜசன், பிராக்ஞன் என்ற பேர்களைப் பெறுவான். போக்கியமும் போக்தாவும் சிவமே யென்று அறிகிறவன் ஆயிரம் அசுவமேதங்கள் செய்தாலும், நூறு பிரம ஹத்தி செய்தாலும் அந்தப் புண்ணிய பாவங்களை யடையமாட்டான்.

குற்றமுள்ள அஞ்ஞானத்தினாலே ஜீவனென்றும், போக்தா என்றும் காணப்படும். பரமார்த்தத்தில் எல்லாம் சிவமே. அந்தச் சிவத்தில் இருந்து பிராணிகள் உண்டாகும். மஹாவாக்கியததிலும் தத்துவ சப்த இலட்சியார்த்தங்களுக்கு அபேதத்தைக் கூறிச் சுபாவ ஏகத்துவமே சொல்லப்படுகின்றது. ஆகையால் ஜாக்கிராதி பிரபஞ்ச சொரூபமாயுள்ள பிரமம் நானே; போக்கியம், போக்தா, போகம் எல்லாம் நானே; சர்வசாட்சியான சின்மாத்திரமும் நானே. எல்லாம் என்னிடத்திலேயே தோன்றி ஒடுங்குகின்றன. அணுவுக்கு அணுவாயும், மகத்துக்கு மகத்தாயும் உள்ளவன் நானே. தசேந்திரியங்கள் இல்லாதவனாய் அந்தத் தொழில்களைச் செய்கிறவனும் நானே. வேத்தியனும், வேத்தாவும் நானே. புண்ணிய பாவங்களும், உற்பத்தி லயம், பூதம் பௌதிகம் இவைகள் ஒன்றும் எனக்கு இல்லை. நான் ஏகனாய்ச, சுயம்பிரகாசனாய் விளங்குகிறேன் என்று, விரோதமில்லாத தர்க்கத்தாலும், பிரமாணங்களாலும், குரு உபதேசத்தாலும், தன் அநுபவத்தாலும் நிச்சயமாய் அறிந்தவன் சிவசொரூபத்தை அடைவான். தேவர்களே! மஹா இரகசியமான இதை உங்களுக்குச் சொன்னேன். உங்களுடைய பக்தி விசேஷத்தாலே இதைத் தெரிந்து கொள்ளுங்களென்று பிரமதேவர் கூறியருளினார்.

எட்டாவது அத்தியாயம்

பிரகதாரணியக தாற்பரியங்கூறியது.

"மனைவி, புத்திரர், தனம், இடம் இவைகளெல்லாம் ஆன்ம சுகத்துக்காகவே விரும்பத்தக்கவைகளா யிருக்கின்றன. அவை யெல்லாம் ஆத்ம சேஷமாகவே விரும்பப்படுகின்றன. அதனால் ஆத்மா பரமப்பிரேமாசிரயமாகிறபடியால் பிரத்தியகாத்மா வாகக் காணப்படுகிற சிவன் நிர்மல பரமானந்த சொரூப னென்று தெரிந்து கொள்ளுங்கள். அற்ப சுகங்களுக்குச் சாதனமான கர்மங்களை விட்டுச், சிரவணாதிகளினாலே அத்துவித ஞானத்தை அடைந்தவன் சுபாவ ஆனந்த சொரூபனாகவே விளங்குவன். பிராமணன், அரசன், தெய்வலோகம் முதலாகச சொல்லப்பட்ட எல்லாம் ஆத்மசொரூபமேயாம். பேத புத்திதான் பிறப்பைக் கொடுக்கிற சம்சாரமாம்.

வேதம், ஆகமம், புராணம் இவைகள் ஒன்றோடொன்று மாறுபட்டுப் பேசும். அவற்றிற்கு அவிரோதத்தை நிச்சயம் பண்ணுகிறதற்கு ஆயுசு போதாது. ஆகையாலே பரிசோதனை செய்வதை ஒழித்துவிட்டுக், காணப்படுகிற சொரூபங்கள் எல்லாம் சிவசொரூபமேயென்று பாவிக்கவேண்டும். கிருமி, கீடம், பதங்கங்கள் இவைகளை விடப பசுவாதிகள் மேலானவை. அவைகளைவிட மனிதர் மேலானவர்கள். இப்படி விவேகத்தினாலே உயர்வும் தாழ்வும் ஏற்படும். எல்லாருக்கும் சர்வக்ஞமுள்ள சிவனே மேலானவர். ஆகையால் அனாத்ம வித்தைகளைவிட்டுப், பிரமவித்தையை அடைந்து எல்லாவற்றையும் பிரமசொரூபமாகப் பாவிக்கவேண்டும். இப்படி அத்துவித ஞானமுண்டானபோது பயம் முதலானவை ஒழியும். சுருதி, ஸ்மிருதி, ஆகமம் இவைகளெல்லாம் அத்துவித ஞானத்தையே சொல்லும். யோகிகளும், ஞானிகளும் சொல்லுகிற நிஷ்டைகளும் அத்துவிதமேயாகும். இப்படியிருந்தும் மோகமுள்ளவர்கள் இந்த உண்மையை அறியமாட்டார்கள். சிலர் அத்துவிதம் சாமானியம், துவிதம் சிறந்தது என்பார். சிலர் துவிதம் நித்தியமானதென்று சொல்வார்கள். இவர்கள் எல்லாம் ஜடம் போல்வார்கள்.

சகத்தின் பானம், ஜகத்தை அனுசரித்த வேதம் முதலியவைகள் எல்லாம் வியாவகாரிகமேயாகும். பாரமார்த்தத்தில் எல்

லாம் சிவமேயாகும். இந்தப் புத்தி கர்மம் ஒழிந்தவர்களுக்குச் சிவ தியானத்தினாலே தோன்றும். இவ்வாறு சிவஞானத்தைப் பெற்றவனுக்கு ஜனன மரணங்கள் இல்லை. அவன் பிரபஞ்சத்தைக்கடந்து, குருவுபதேசத்தாலே சிவத்தைத் தரிசித்து, அந்தத்தரிசனத்தையும் சிவத்தில் ஒடுக்கிச் சின்மாத்திர சேஷமாய்ச் சித்ரூபமாகவே யிருப்பன். அவனுடைய பெருமையை விஷ்ணுமுதலானவர்களாலும் சொல்லமுடியாது என்று பிரமதேவர் சொல்லியருளினார்.

ஒன்பதாவது அத்தியாயம்.

உடத்த பிராமண தாற்பரியங் கூறியது.

சர்வசாட்சியான பிரத்தியகாத்மாவே சுயம் பிரகாசமான பிரமம். அந்த ஆத்மாவே பிராணாதிகளுக்குச் சத்தையும், பூரணத்தையும் கொடுப்பான். எதன் சந்நிதியில் எல்லாந் தொழிற்படும், எது நிர்வியாபாரமாய் இருக்கும், அந்த ஆத்மாவே அகம் பதார்த்தமாம். ஸ்தூல, சூட்சும சரீரம் திரிசியமாகிறபடியால் அவை அகம்பதார்த்தமாகா. திரஷ்டா, சுரோதா, மந்தா, ஞாதா, விஞ்ஞாதா யாவனோ அவனே யெல்லாமாவான். அவனுக்கு வேறாக உள்ளவை சத்தியமல்ல. பிருதிவி முதல் ஸ்தூல பூதங்களும் எப்படிச் சூக்கும பூதங்களில் கோக்கப்பட்டிருக்கின்றனவோ, அப்படியே பூமி முதல் வாயு பரியந்தம் உள்ள எல்லாம் தத்தம் காரணங்களில் கோக்கப்பட்டிருக்கும். காற்று அந்தரிட்ச லோகங்களிலும் கோக்கப்பட்டிருக்கும். கந்தர்வர், ஆதித்தர், சந்திரன், நட்சத்திரங்கள், தேவர், இந்திரன், பிரஜாபதி, பிரமன், திருமால், உருத்திரன், ஈசானன், சதாசிவன் இவர்களுடைய உலகம் வரைக்கும் இபபடியே ஒன்றோடொன்று கோக்கப்பட்டிருக்கும். இவையெல்லாம் சர்வாந்தரமான முடிவற்ற பரசிவத்தில் கோக்கப்பட்டிருக்கும். அவன் ஒருபோதும் ஒன்றிலும் கோக்கப்படுகிறவன் அல்ல. இந்தச் சர்வாதிஷ்டானமான பிரத்தியகாத்மாவே பிருதிவி முதலான பூதங்களிலும், எல்லாப் பிரபஞ்சத்திலும் உள்ளே யிருந்துகொண்டு, அவைகளுக்குத் தெரியாமல், அவைகளே தனக்குச் சரீரமாகத், தனக்கு ஒரு தொழிலுமின்றி, அவைகளையெல்லாம் தொழிற்படுத்திக் கொண்டிருப்பான். ஆகையால் அவன் அந்தரியாமியாவான்.

அந்தப் பாசிவனொருவனே மூன்று சோதிகளும் இல்லாத அந்த இருள் மூடியகாலத்தில், சுயம்பிரகாசமாய்ச், சாக்கிராதி அவஸ்தைகளிலிருப்பான். வேத்தியனும், வேத்தாவும் அவனே. இப்படி அறிகிற யோகிக்குத் துவிதம் தோன்றாது. திரிசியமும் இல்லை. திருஷ்டாவே யுள்ளது. இதுதான் பரமசுகமென்று சொல்லப்படுவது. இதை அறிந்தவன், பாம்பானது தான் உரித்த சட்டையை மறுபடியும் அடையாததுபோலத் தேகாதிகளை அபி மானிக்கமாட்டான். பேதபுத்தியுள்ளவன் ஜனன, மரணங்களை யுடையவன். ஆகையால் ஆரோபிதமான அஞ்ஞானமும், அதனுடைய்காரியங்களும் சாதனபலத்தாலே ஏகமாகவேயிருக்கும் பரசிவ சொரூபமென்று தெரிந்துகொள்ள வேண்டும். சத்தசிந்தனம்(நூல்களை யோதியுணர்தல்)வாக்குக்குவருத்தத்தை யுண்டாக்கும். ஆகையால் கருமங்களுக்கெட்டாத சருவேசுவரனான சிவனை யாகங்களினாலும், வேதத்தாலும் அறிய விரும்புகிறவன் ரிஷியாவான். ஜகத்தின் பானம், ஜகத்தை அநுசரித்த வேதாதிகள் இவைகளெல்லாம் வியாவகாரிகமேயாம் அக்கிராகியம், அசிரியம், அசங்தமுமாயிருக்கும் சிவசொரூபத்தை உணரும் அவனைக் கருமம் பற்றாது. ஆகையால் சிவ ஞான மடைவதற்காகச் சாந்திமுதலிய சாதனங்களை யுடையவனாய்த், திருநீறு தரித்துச் சிவபூஜாதிகளைச் செய்யவேண்டும். இந்தச சாதன சம்பத்தியால் சிவனை உணர்ந்து, உடல் பொருளாதிகளைக் குருவுக்குத் தத்தம் செய்யவேண்டும். அந்தக் குருவையே மாதா பிதாக்களாகக் கருதவேண்டும். அந்தக் குருபூஜை முதலானவையெல்லாம் சிவ பூசையேயாகும். அந்தக் குருவுககுச்செய்கிற துரோகமும் சிவத் துரோகமேயாகும். ஞானகுருவை அடைந்தால் ஞானத்தையும் பெறலாம். ஞானிக்குப் பூரண சச்சிதானந்த சிவ சொரூபம் பிரகாசமாகவே யிருக்கும். இந்த வுண்மையை உமக்குச்சொன்னேன் என்று பிரமதேவர் சொல்லியருளினார்.

பத்தாவது அத்தியாயம்.

கடவல்லி, சுவேதாசுர தாற்பரிய முரைத்தது.

எந்தப் பாத்தவத்தை விரும்பிப் பிரமசரியம் முதலியவைகள் செய்யப்படுகின்றனவோ, அவைகளுக்கு மேலான ஒப்பற்ற

பெறும் மார்க்கமெது? அதைசசொல்லவேண்டு" மென்று பிரார்த்தித்தான். அகத்தியர் அவனுக்கு விருத்தாசலத்தின் மகிமைகளை உபதேசித்து, அந்த ஸ்தலத்திலேயிருந்துகொண்டு சிவாராதனை செய்து முத்தியடையக்கடவாயென்று ஆசிர்வதித்துஅனுப்பினார். சுவேத முனிவர் தம் குருவினிடத்தில் விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டு விருத்தாசலம் போய் மணிமுத்தா நதியில் ஸ்நானஞ் செய்து, மணி முத்தாநதியின் திவ்யதீர்த்தத்தினால் சிவபெருமானுக்கு அபிஷேகஞ்செய்து பூசித்தான். அந்த அபிஷேக ஜலம் ஒரு ஆறாய்ப் பெருகி யோடிறது. அது சுவேதநதி (வெள்ளாறு) என்னும் பெயருடையதாய் இன்றும் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. பானுவாரம், அட்டமிதிதி, சருவா, ஆருத்திரை, மகம் முதலிய தினங்களில் அதிகமாகபூசித்தான்; சிவனடியாவரயும் பூசித்து வழிபட்டான். இப்படி நெறிதவறாமல், ஆராதிததுவருகிற நாட்களில் ஒருநாள் விருததகிரீசர் பிரத்தியடசமாய்க காட்சி தந்து மறைந்தார். சுவேத முனிவரும் பிரமானநத மடைநது மீளாக்கதிசேர்ந்தார். அந்த க்ஷேததிரத்தில் சிவனை யாராதித்து முத்தி பெற்றவர்களுக்கு அளவில்லை. ஆகையால் பாவப்பகையைக்கடந்து, பந்தமகன்று வீடுபெற விரும்புவோர் விருத்தாசலத்தையடைந்து வழிபடுவதே தகுநத உபாயமாகும.

ஆறவது

வியாசராதியோர் சந்தேகந்தெளிந்த அத்தியாயம்.

வியாச மஹரிஷியானவர், முத்திமார்க்கத்தைப்பற்றி ஒவ்வொருவரும் மாறுபட்டு வெவ்வேறுவகையாகச் சொல்லுகின்றார்கள்; இவற்றுள் உண்மை காண்பது அரிதாயிருக்கின்றது. ஆதலால் இந்த உண்மையை நான் எப்படித்தெரிந்துகொள்கிறதென்று மனக்கலக்கமுடையவராய் மஹாவிஷ்ணுவினிடம் போய் அவரை வணங்கினார். அவர் நீர் என்னிடத்திற்கு வந்த காரணமென்னவென்று கேட்டார். வியாசர், எனக்கு ஒரு பெரிய சந்தேகமுண்டாயிற்று. அதைத்தீர்த்துக் கொள்ளும்பொருட்டு வந்தேனென்று சொல்லுகிறார். மோட்சசாதன மெதுவென்றுகேட்டால் ஞானமேயென்கின்றார் சிலர்; சிலர் கருமகாண்டப்படி யொழுகுதலேயா

பரதத்துவத்தைக் கண்டறிந்தவன் இன்ப துன்பங்களை அடைய மாட்டான். பிரணவமாகிய சாதனத்தை அறிந்தவன் பிரமத்தை அடைவான். உடல் அழிக்கப்பட்டாலும் ஆத்மா அழிக்கப்படுகிறவன் அல்ல. பரமாணுவும், பரம ஸ்தூலமுமானவனும், எல்லார் இருதயங்களினும் இருப்பவனும், அசைவில்லாதவனுயிருந்தும் எங்கும் சஞ்சரிப்பவனுமாவான். சரீரமில்லாதிருந்தும் எல்லாச சரீரங்களிலும இருப்பான். எங்கும் வியாபகனுயிருப்பான். அத்தியயனுதிகளால் அறியப்பட மாட்டான். பாவிகளுக்கும், சாந்தாதிகள் இல்லாதவர்களுக்கும் அடையப்படாதவன். சர்வாகாரன். இப்படிப்பட்ட ஆத்மாவை அறிந்தவன் சம்சார பந்தத்தை அடையமாட்டான்.

சரீரத்தின் இருதய மத்திய ஆகாசத்தில் ஜீவ ஈசுவரர் இருக்கிறார்கள். அவர்களுக்குள் ஜீவனே கருமபலனை அனுபவிப்பான். ஈசுவரன் அனுபவிக்கமாட்டான். பரமார்த்தத்தில் இவர்களுக்குப்பேதம் கிடையாது. ஜீவனே இரதிகன்; உடலே இரதம்; புத்தியே தேரப்பாகன்; இந்திரியங்களே குதிரைகள்; மனம் கயிறு; விஷயங்கள் எல்லாம் சஞ்சாரம் செய்யததக்க தேசங்களாம். ஜீவன் இவற்றுடன் கூடி எல்லாவற்றையும் அனுபவிப்பான். தேர்ப்பாகனுககு அடங்காத முரட்டுக் குதிரைகளைப் போல இந்திரியங்கள் அஞ்ஞானிகளுக்கு வசப்படாமலிருக்கும். நல்ல குதிரைகளைப்போல ஞானிக்கு அடங்கி யிருக்கும். அந்த ஞானி விஞ்ஞானமே சாரதியாகவும், மனதைப் பாசமாகவுங்கொண்டு சுகமாய் வசிப்பான். அவன் முத்திப் பதத்தை அடைவான். அந்தப் பதமும் பரசிவநதான். இந்திரியங்கள், மனம், புத்தி, மகத்து, அவ்வியக்தம் புருஷன் இவைகள் முறையே ஒன்றுக்கொன்று உயர்வாகும். புருஷனுக்குப் பரமானது ஒன்றுமில்லை. சிவனே அந்தப் புருஷன். சகல ஜீவனிலும் அவனிருக்கிறன். ஆகையால் வாக்கு, மனம், புத்தி, மகத்து, ஆத்மா இவைகளை ஒன்றில் ஒன்றை ஒடுக்கி நிர்விகாரமான ஆத்ம சொரூபத்தை அறிந்தவன் சம்சாரபந்தம் ஒழிந்திருப்பான். இந்திரியங்களினுலே ஆத்மாவைப் புறவிஷயங்களில் கலக்கச்செய்து மூடர்கள் பந்தப்படுவார்கள். விவேகிகள் அவற்றோடு கலவார்கள். சின்மாத்திரத்தையே தெரிந்துகொள்வார்கள். ஜாக்கிராதி அவஸ்தாத்திரயங்களும் சிவனே. இகலோக பரலோகங்களில் இருப்ப

வனும் சிவனே. எல்லாமும் சிவனே. பரமசிவனுக்கு வேறானது ஒன்றும் கிடையாது. நெருப்பானது ஒன்றாயிருந்தாலும் பற்பல வஸ்துக்களைச் சேர்ந்து பலவகையாய்த் தோன்றுகிறது போல் ஆத்மாவும் இருப்பான்.

* சூரியன் உலகத்துக்குக் கண்ணாயிருந்தும், நேத்திரசம்பந்தமான விஷயதோஷங்களை எப்படி அடையாதோ அப்படியே சர்வாந்தரியாமியான பரமசிவனும் பிரபஞ்ச தோஷங்களை அடையமாட்டான். அந்த ஆத்மாவைத் தரிசிக்கிறவன் நித்தியானந்தத்தை அடைவான். அந்த ஆத்மாவின் சத்தையொடுகூடியிருப்பதினாலேயே ஆகாசாதிகள் நித்தியமாயும், நாராதியேர் சேதனராயும் ஆகின்றார்கள். சுக சொரூபனாகிய அவனைப்பற்றிச்சூரியன் முதலியவை பிரகாசிக்கின்றன. சம்சாரங்களுக்கும் அவனே மூலமானவன். உலகங்களெல்லாம் அவனைப் பற்றியே யிருக்கின்றன. அவனுடைய பயத்தினாலே அக்கினி முதலானவை தகித்தலாதித் தொழில்களைச் செய்கின்றன. ஆகையால் அநித்தியமான இந்திரியாதிகளை ஆத்ம சொரூபமாகவே கண்டு, பிறகு அவற்றை ஆத்மாவில் ஒடுக்கி, இந்திரியம், மனம், சத்துவம், மகத்து, அவ்வியக்தம், பரம் இவை முறையே ஒன்றனுக்கொன்று பெரிதெனத் தெரிந்துகொள்ள வேண்டும். பிறகு, கண்ணாதிகளுக்கு அகோசரமாயும், சகலலோகங்களுக்கும் காரணமாயும் இருக்கிற அந்த ஆத்மாவைக் கண்ணாடியில் தோன்றுகிற தன் பிரதிபிம்பத்தைப் பார்ப்பதுபோலத் தேகத்துக்குள் தரிசிக்கிறவனே முத்தனாவான். அப்படிப் பாராதவன் பெத்தனாவான்.

பிரம்மானது தன் மாயா சம்பந்தத்தாலே சிவன், ஜகம், ஈசுவரன் என்று மூவகையாயிருக்கும். ஈசுவரனாலே ஜீவனானது சம்சார சக்கரத்தில் சுழலும். சாதன சம்பத்திகளினாலே அந்த ஈசுவரனைத் தெரிந்துகொண்டு ஜீவன்முத்தி அடைவான். அந்தச் சிவனும் ஈசுவரனும் எப்போதும்பேதமுள்ளவர்களே. மாயையே ஜீவனுக்குப் போககாரணமாகும். ஈசுவரன் மாயா காரியங்களோடு சம்பந்தப்படுவதில்லை. மாயா சொரூபம க்ஷரம் என்னப்படும். ஜீவசொரூபம் அக்ஷரம் என்னப்படும். இந்த இருவகைச் சொரூபமான சிவசொரூப மனனத்தாலே மாயா நிவர்த்தியும் பாசநாசமும் உண்டாகும். அவன் முத்தி சேர்வான். இந்தத் தத்துவமே

அறியத்தக்கது. இதற்கு வேறானது ஒன்றுமில்லை. அரணியில் தீயும், எள் முதலியவற்றில் தைலமும் ஒவ்வொரு உபாயத்தினால் எடுத்துக்கொள்ளப் படுவதுபோல உடலுக்குள் இருக்கும் ஆத்மாவைப் பிரணவத்தினால் கண்டு அடையவேண்டும். தானம், யாகம் முதலியவைகளால் யோகம் சித்திக்கும். அந்த யோகத்தால் ஞானமுண்டாகும். அந்த ஞானத்தால் முத்தி உண்டாகும். இந்தப் பிரமவித்தையை விபூதி, ருத்திராட்சம் தரிக்கும் சாந்த குண முள்ளவர்களுக்கும், அத்தியாச் சிரமிகளுக்குமே சொல்ல வேண்டும். சாந்தமில்லாதவர், புத்திரரில்லாதவர் இவர்களுக்குச் சொல்லக்கூடாது. தெய்வபக்தியும் குருபக்தியும் உள்ளவர்களுக்குத்தான் இந்தப் பிரமவித்தை சித்திக்கும். நான் வேதப்பொருளை ஆராய்ந்து இதை உங்களுக்குச் சொன்னேன். இதைத் தெரிந்து கொண்டால் மோகமொழிந்து சிவனை அடையலாம் என்று பிரமதேவர் தேவர்களுக்குச் சொன்னார்.

பதினோராவது அத்தியாயம்.

சர்வ வேதார்த்த சங்கிரகம் கூறியது.

அகம் என்னும் பதத்தால் கூறப்படுகிறவனே ஆத்மா. அவன் சிவனாயிருந்தாலும் தன் மாயையாலே சம்சாரி யாகிறான். ஆகையினாலே வேதமார்க்கத்தால் முத்தியடையவிரும்பிச், சாந்தி முதலிய குணங்களை யுடையவனாய்ச் சிவபக்தி செய்து, சற்குருவை வணங்கி, வேதாந்த சிரவணம் செய்யவேண்டும். அதனால் பிரத்தியகான்மாவைச் சிவசொரூபமாகவே அறிய வேண்டும். பெண் மோகத்தை அடையாமல் ஒழித்துச், சிவானந்தத்தை அடைந்தால் அதனாலே ஞானமுண்டாய் அவித்தை ஒழியும். பாவாபாவ ஜக சொரூபமும் நீங்கும். வித்தியாவித்தைகளின் சொரூபமும், குருசிஷ்ய சொரூபமும் ஒழியும். பிரமம் ஒன்றே தோன்றும். வேதங்களெல்லாம் வியாவகாரிகசத்தியமானசகத்தை முதலிற் சொல்லிப், பிறகு பக்குவர்களுக்கு எல்லாம் பிரமமய மென்று கூறும். பரமார்த்தத்தில் வேறொன்று மில்லாமையால் யோகிக்கு எல்லாம் சிவமாகவே தோன்றும். அவன் அலையற்ற சமுத்திரத்தைப்போலச் சலனமில்லாமலிருப்பான். அவனுடைய

நிஷ்டையை மும்மூர்த்திகளும வேதமும் அறியமுடியாது. அந்த நிஷ்டையானது பரமசிவனுக்கும் உமாதேவிக்கும் இயல்பிலேயே உண்டு. அந்தச சிவனுடைய பிரசாதத்திலுலே பிரமாவுக்கும், விஷ்ணுவுக்கும், மற்றவாகளுக்கும அந்த நிஷ்டை கிடைக்கும. அது எபபடியென்றால சொலகிறேன் கேளுஙகள.

வினையொபபு வநதபோது குருவின் அனுக்கிரகத்தால்கிடைககும். அநதக்குருவைச சிவனுகவே பாவிககவேண்டும. சிஷ்யன் செய்கிற பணிவிடையால் குருவுககு மகிழ்சசி யுண்டாகிறபோது, பரமசிவன் பிரத்தியட்சமாவான. புத்தியிலலாமல குருவுககு விருபபமிலலாததையும், குருவுககுத் தீமையையும் செய்கிறபாவி யானவன அணையாத நிரகத்தில நித்தியமாய்க் கிடநது வருநதுவான். ஈசனுக்குக் குற்றஞசெய்தால் குருவானவர் அநதக்குற்றத்திற்குப் பரிகாரம தேடி ஒழித்துவிடுவார். குருவுககுப் பிழை செய்தால் அநதக குருவைத்தவிர வேறு எவராலும் தீர்ககமுடியாது. தன் சுகததைக் கருதாமலே குருவுக்குப பிரியமான தையே சிஷ்யன் செய்யவேண்டும. அநுதமாவான சரீரத்தைக கொடுக்கிற பிதாவைவிட ஞானகுருவே மேலானவர். இருவகைச் செல்வங்களையும், கநதாவர் முதலானவர்களுடைய செல்வமும், சார்வபௌம பதவியும, மநதிர தந்திரங்களும், இலவுகிக உபாயஙகளும் கொடுபபவர்களும சிறநத குருவல்லர். பரம அத்துவித ஞானத்தை யளித்துச சிவசொரூபத்தைத அறிவிககிறவனே மேலான குருவாம். அவனே சிவனுமாவான். சாவவேதாநத தாதபரியத்தை எனக்குப பரமசிவன் அனுககிரகித்தபடியே நான் உங்களுக்குச் சொன்னேன். வேதத்துக்கு இதைத்தவிர வேறு அர்த்தத்தைச சொல்கிறவன் அநதகூப நரகத்தில் விழுவான்.

வேதத்தின் அர்த்தம் அத்துவிதமே தவிர வேறொன்றுமில்லை. வேறொரு அர்த்தமாயிருக்குமானல் என்தலை அறுந்து விழக்கடவது. இதற்கு வேறான அர்த்தம் ஒன்று இருக்குமென்று நீங்கள் நினைத்தால தேவர்களே! உங்கள் தலைகளும் அற்று விழக்கடவன. இதுசத்தியமாகும். இநத விஷயத்தில பரமசிவன் பாதத்தைத தொடுவேன் என்று சொல்லிப பிரமதேவர் பரமசிவனுடைய பாதபஙகயங்களைச சிநதித்துக்கொண்டிருநதார். அதைக கண்ட தேவர்களும் பரமசிவனுடைய பாதஙகளைச சிநதித்துக கொண்டு அசைவறறிருநதார்கள்.

அப்போது சிவபெருமான் ஆயிரகு சூரியர்களுதித்ததுபோலத் தமது திருமேனி பிரகாசிக்கப் பரிஜனங்கள் புடைசூழ, உமாதேவியாருடன் எழுந்தருளி வந்து காட்சிதந்தருளினார். அப்போது பூமாரிபெய்தது. தெய்வ வாத்தியங்கள் முழங்கின. வேதகோஷம் பரவிற்று. சகல வுலகமும் மகிழ்ச்சியடைந்தன. அப்போது பிரமன்முதலிய தேவர்கள் பரமசிவனை உமாதேவியாரோடும் ஒரு ஆசனத்தில் உட்காரவைத்து அருச்சித்துப் பூசித்து மகிழ்ந்து வணங்கினார்கள். அக்காலத்தில் பரமசிவன் சகல ஜீவாத்மாக்களுக்கும் மகிழ்ச்சி யுண்டாகும்படி ஆனந்தத் தாண்டவமும் செய்தருளினார். உமாதேவியார் எல்லாத்தேவர்களுக்கும் மெய்ஞ்ஞானத்தை அருளிச்செய்தார். ஞானக்கண்ணை அடைந்த தேவர்கள் பரமசிவனைத் துதித்து மகிழ்ந்தார்கள். வேதவசனங்களினாலும், பஞ்சாட்சர மந்திரத்தாலும் தோத்திரம் செய்தார்கள். சிவபெருமான் அவர்களை நோக்கித் தேவர்களே! எமது கருணையால் நீங்கள் உண்மை ஞானத்தை அடைந்தீர்கள். பிரமதேவர்சொன்ன இந்தக்கீதை வேதத்துக்குச் சமானமானது. உத்தமமான குணங்களையுடைய அந்தணர்களே இதைப் பாராயணம் செய்யத்தகும்; மற்றவர்கள் தீண்டவும்படாது என்று கூறி உமாதேவியாருடன் மறைந்தருளினார். திருமாலானவர் தேவர்களைநோக்கி நீங்கள் பகதியினாலே சிவானுக்கிரகத்தை அடைந்தீர்கள் என்று கூறி, இலட்சுமி தேவியொடு வைகுந்தம் போய்ச் சேர்ந்தார்.

பிறகு தேவர்கள் எல்லாரும் பிரமதேவனைப் பலதரம் பணிந்து, தமமுடைய உலகம்போய் மகிழ்ந்திருந்தார்கள். பிரமதேவரும் பரமசிவனுடைய திருவடியைத் தியானித்துக்கொண்டிருந்தார் என்று சொல்லிச், சூதமுனிவர் சிவபெருமானுடைய திருவடிகளைத் தியானித்து ஆனந்தக்கடலில் முழுகியிருந்தார். ரிஷீசுவரர்களும் சூதமுனிவரைவணங்கித், தங்கள் இருதயத்தில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானைத் தரிசித்து ஆனந்த மடைந்திருந்தார்கள்.

பிரமகீதை முற்றிற்று.

எக்ஞவைபவகாண்டம்

உத்ரபாகம்.

சூதகீதை முதலாவது அத்தியாயம்.

சூதர் வியாசர் அனுக்ஞை பெற்றது.

சௌனகாதி முனிவர், அலையற்ற சாகரம்போல அசைவற்றிருக்கிற சூதமுனிவரைப் பக்தியுடன் பணிந்து, துதித்து, உமது கீதையாகிய சூதகீதையையும் நாங்கள் கேட்க விரும்புகிறோம். ஆகையால் அதனையும் எங்களுக்குச் சொல்லவேண்டுமென்று கேட்கச், சூதமுனிவர் மனமகிழ்ந்து தமது குருவான வியாசமுனிவரைச் சிந்தித்தார். அதையுணர்ந்த வியாசமுனிவர் அங்கே வந்தருளினார். சூதமுனிவர் எழுந்து தமது குருவாகிய வியாசமுனிவரைவணங்கிப் பூசித்துத் துதித்து அவரது ஆசீர்வாதம் பெற்றபின், அவரைநோக்கி, இந்தச் சௌனகர் முதலான ரிஷிகள் பக்தியுடன் சூதகீதையைக் கேட்க விரும்புகிறார்கள். அதை அவர்களுக்கு நான் சொல்வதற்கு அனுக்கிரகம் செய்யவேண்டும் என்று கேட்டார். வியாசர் மனமகிழ்ச்சியுடன் சூதமுனிவனை அப்படியே சொல்லக்கடவாய் என்று கூறிச் சூதருடைய இருதயத்தைத் தமது கையால்தொட்டு, அந்த இருதயத்தில் பரமசிவனை ஸ்தாபித்துவிட்டு வியாசர் மறைந்தருளினார். குருவின் அனுக்ஞை பெற்ற சூதமுனிவர், தமது குருவின் திருவடிகளையும், பரமசிவனுடைய பாதாரவிந்தங்களையும் தியானஞ்செய்து, பிறகு சொல்லத்தொடங்கினார்.

இரண்டாவது அத்தியாயம்

பரமவிஞ்ஞான முரைத்தது.

சச்சிதானந்த சொரூபனாகியும், பிரமாவினால் சிருஷ்டிக்கப்பட்ட சகல உலகங்களுக்கும் கருத்தாவாகியும், பசுபாசங்களுக்கு வேறாகியும் மேன்மையடைந்து விளங்குகிறவன் பரமசிவன் ஒருவனேயாகும். ஆகாச முதலான பஞ்சபூதங்களும் அவற்றின் குணங்கள் ஐந்தும், ஞானேந்திரியங்கள் ஐந்தும், கர்மேந்திரியங்கள் ஐந்தும், வாயுக்கள் பத்தும், மனாதிகள் நான்கும், இவைக

ளுக்குக் காரணமான அவித்தை ஒன்றும் ஆகிய இந்த முப்பத்தைந்துக்கும் அப்பாற்பட்டவன் பசுவாகும். பரமசிவன் இந்தப் பசுவுக்கு வேறாயுள்ளவன். இந்தப் பசுக்களுக்கு அனாதியிலேயே அஞ்ஞானம் கலந்திருக்கிறது. அதுவே சமுசாரவித்தாகும். சிவஞானத்தினாலே அஞ்ஞானம் நீங்கும். அந்த அஞ்ஞானம் அவித்தை, மாயை என்று இரண்டு சொரூபமாயிருக்கும். அவற்றுள் அவித்தையால் பசுபேதமும் மாயையால் பரத்துவபேதமும் கற்பிக்கப்பட்டன. தேகேந்திரியாதி வாசனாபேதத்தாலே பசுபேதத்திற்கு அவித்தையும், குணங்களுடைய வாசனாபேதத்தால் பரத்துவபேதத்திற்கு மாயையும் காரணங்களாகும். முனிவர்களே! சத்துவகுணதேகமுடையவனாகியும், சங்காரத்துக்காகத் தமோகுணமுடையவனாகவும் உள்ளவன் உருத்திரன். தாமதகுண சரீரமும் திதித்தொழிலுக்காகச் சத்துவகுணமும் உடையவன் திருமால். இராஜதகுண சரீரமும், சிருஷ்டிக்காக இக்குணத்தையே குணமாகவுமுடையவனாக இருக்கிறவன் பிரமாவாம். சத்துவகுணத்தாலே வெண்ணிறமும், இராஜதகுணத்தாலே செந்நிறமும், தாமதகுணத்தாலே கரியநிறமும் உண்டாகும். அதனாலே ருத்திரன், பிரமன், விஷ்ணு, இம்மூவரும் முறையே வெண்மை, செம்மை, கருமையான நிறங்களையுடையவர்களா யிருக்கிறார்கள் என்று அறிய வேண்டும். பரத்துவ புத்தியாலே இந்த மூவரையும் பரமென்று வேதாகமங்கள் சொல்லும். ஆயினும் சத்துவகுண தேகமுடைய உருத்திரன் மும்மூர்த்திகளுள் சிறந்தவனாவான்.

பரிசுத்தமான ஞானாதிகளெல்லாம் சத்துவத்தினாலேயே உண்டாகும். ஆகையால், சத்துவகுணம் சிறந்ததாகும். அந்தச் சத்துவகுணப் பிரதானத்தினாலே உருத்திரமூர்த்தி தன்னைப் பரத்துவமாகவே தெரிந்துகொள்வான். காரியார்த்தமாக ஒருகாலத்தில் உருத்திரரூபமாகத் தெரிந்துகொள்வான். பரத்துவபுத்தி உருத்திரமூர்த்திக்கு இயல்பிலேயேயுள்ளது. மற்ற இருவருக்கும் தங்கள் குணவிசேஷத்தால் பரத்துவம் அற்பமாதலால் தங்களை மாயவனென்றும், பிரமனென்றும் தெரிந்துகொள்வார்கள். அந்தப் புத்தி அவர்களுக்குச் சுவபாவமாகவே யுள்ளது. ஆகையால் பிரமவிஷ்ணுக்களை ஆராதிப்பவர்கள் சீக்கிரத்தில் ஞானத்தை அடையமாட்டார்கள். உருத்திரனை ஆராதித்தாலும், அவனே மேலானவனென்று கருதினாலும் சீக்கிரத்தில் கிடைக்கும். பிரமனும் மாலு

ம உருத்திரனை விட மேலானவர்களென்று எண்ணுகிற புத்தியும், மூவரும் பரதத்துவத்திற்கு மேற்பட்டவர்கள் என்கிற புத்தியும் சம்சாரபந்தத்திற்கே காரணமாகும். பிரமன், மால், சுராட், விராட் முதலானவர்களைப் பரதத்துவமாகவே கருதுகிற புத்தி மந்திரியை அரசனென்று கருதுதல்போலவே பயன்படும். எல்லாவற்றினும் பிரமத்தைக் கருதுகிற புத்தி விசேஷமாம். உருத்திரனுக்கு உள்ளே சத்துவகுணமும் வெளியில் தாமத குணமுமாம்; விஷ்ணுவுக்கு உள்ளே தாமதகுணமும் வெளியில் சத்துவகுணமுமாம்; பிரமாவுக்கு உள்ளும் புறமும் இராஜத குணமேயாகும் என்று மேலோர் சொல்வார்கள். இவற்றுள் சத்துவகுண சம்பந்தத்தால் விஷ்ணுவே மேலானவனென்றும், உருத்திரனே சிறந்தவனென்றும் சிலர் வாதிப்பார்கள். அந்தச் சத்துவகுணமில்லாமையால் பிரமாவை மேலானவனென்று வாதிப்பதில்லை. அளவில்லாத ஜன்மங்களில் செய்த புண்ணியமுடையவர்களுக்கே திருமாலைவிட உருத்திரமூர்த்தி மேலானவர் என்கிற புத்தியுண்டாகும். அளவில்லாத ஜன்மங்களில் செய்த பாவமுள்ளவர்களுக்கே உருத்திரனைவிட மால் சிறந்தவன் என்னும் புத்தியுண்டாகும்.

நிருவிகற்பமான சிற்பரதத்துவம் பரசிவனே. அந்தப் பரசிவன் வாமபாகத்தில் உமாதேவியாரையும், திரிநேத்திரங்களையும், சந்திரனை அணிந்த சிரசையும் உடையவராய், நடனப்பிரியராய், மும்மூர்த்திகளும் வணங்கவும், வணங்கும்படியான பலமூர்த்தங்களை உடையவராயும் எழுந்தருளியிருப்பார். அந்தச் சங்கரனே சத்தியமான பரதத்துவமாம். முனிவர்களே! அந்தச் சங்கரனுக்கு வேறாக ஒன்றுமில்லை. மாயாகாரியமான குணங்களுடன் கூடியிருக்கிற மும்மூர்த்திகளும் அவித்தியா உபாதியுள்ள சீவ விபாகத்தில் சேர்ந்தவர்களாகார். பரமாத்ம விபாகத்தில் சேர்ந்தவர்கள். அப்படியானால் மூவர்களும் சமனாவார்கள் என்பது கூடாது. சத்துவ குணப்பிரதானத்தால் உருத்திரமூர்த்தியே சிறந்தவர். மாலும் அயனும் தங்கள் சாதாரண சொரூபத்தாலும், விபூதி சொரூபத்தாலும் உருத்திர மூர்த்தியைச் சேவிப்பார்கள். அவர்களை உருத்திரமூர்த்தி ஒருபோதும் சேவிக்கமாட்டார். சொரூபத்தால் வாயுக்கள் ஒப்பாகத் தோன்றினும் அபானவாயுவும் உதானவாயுவும் சமமாகுமா? சரீரத்தில் ஒத்திருந்தாலும் காலுந்தலையும் சமமாகுமா? அப்படிச்சொன்னால் மூடர்கள் கூட ஒப்புக்கொள்ள மாட்

டார்கள் அல்லவா? திருமாலையும் பிரமாவையும் உருத்திரமூர்த்திக்குச் சமமாகவாவது மேலாகவாவது எண்ணுகிறவர்கள் நெடுநாள் நரகத்தில் விழுந்துகிடப்பார்கள்.

வேதாகமங்கள் உருத்திரனுக்குச் சுயசொரூபத்திலும், பரதத்துவ சொரூபத்திலும் விசேஷம் சொன்னது போலத் திருமாலுக்கும் பிரமனுக்கும் சொன்னதில்லை. தத்தம் விபூதிகளைவிட மும்மூர்த்திகளும் சிறந்தவர்கள். அந்த மூர்த்திகளுக்குள் உருத்திரன் விசேஷமானவர். அந்த உருத்திரனைவிட மாயாவிசிஷ்டனான சிவன் மேலானவன் என்று அறிந்தோர் சொல்வார்கள். சச்சிதானந்த பரசிவன் அந்தச் சிவனுக்கும் மேலானவன். அவனுக்கு வேறாக ஒன்றுமேயில்லை. வேதமும் இப்படியே சொல்கின்றது. அவனே பிரபஞ்சமெல்லாமாவான் என்று தருக்கத்தாலும், அளவைகளாலும், குரு உபதேசத்தாலும், சுவானுபவத்தினாலும் தெரிந்துகொள்ளவேண்டும். இதுதான் வேதாந்தவாக்கிய நிஷ்டையாம். இதை நிச்சயமாய்த் தெரிந்துகொண்டால் முத்தியடைதலும் எளிதாகும் என்று சூதமுனிவர் சௌனகாதி முனிவர்களுக்குச் சொன்னார்.

மூன்றாவது அத்தியாயம்

வேதப்பிராமாணிய விசார முரைத்தது.

மணிமந்திர ஔஷதங்களின் சுபாவத்தைச் செய்கிறவர்கள் அடைவதுபோல நிராவிகாரியான பரமசிவனுமிருந்து பிரபஞ்சத்தைச் சிருஷ்டிப்பான். பரமசிவன் அத்துவயன், நிர்மலன், நிராவிகாரி, சிருஷ்டி திதி சங்காரகர்த்தன், என்று அநுதிவேதங்கள் சொல்கின்றன. வேதத்தினால் அறியத்தக்க சூட்சுமப்பொருளின் அளவையை அறியாத பாகியதர்க்கம் என்னசெய்யக்கூடும். அந்த வேதமோ அநாதி. அந்த வேதத்துக்குத் தன்னாலும் பிறவற்றாலும் தோஷமுண்டாவதில்லை. சிலர் வேதம் சிவனால் சொல்லப்பட்டதென்பார். அது சுயம்புவாயிருந்தாலும் ஆப்த சம்பந்தத்தால் அப்படிச் சொல்லுவதும் கூடும் என்றும் சிலர் சொல்வார்கள். அன்னிய சம்பந்தத்தாலே தோன்றுதலானது, பளிங்கானது செவ்வரத்தம் பூவின் சம்பந்தத்தால் செந்நிறம் பெறுதல்போலவே பிராந்தியாம். ஆப்த அபேட்சையால் வேதம் பிரமாணமாவ

திலலையென்று முனிவர்களே! நீங்கள் தெரிந்து கொள்ளுங்கள். சுயம்புவான வேதத்துக்கு ஆப்தசம்பந்தத்தால பிராமாணியம் உண்டாகுமென்பது மயக்கமேயாம. பரமசிவனால சொல்லப்பட்டது என்கிற பட்சத்திலும வேதம பிராமாணியம ஆவதில தடையிலலை. கிஞ்சிக்ஞனை சிவனுக்கு உண்டாகிற தோஷமானது சிவனுடைய தியானததினாலே தொலைநதுபோமோ அநதச சர்வக்ஞனாகிய பரமசிவனுக்குத தோஷமேயிலலை. அவனே ஆப்தன் எனப்படுவான. ஆகையால் இரண்டு கட்சிகளாலும் வேதம்பிரமாணமென்பதற்குத் தடையேயில்லை. பரமார்த்தத்தில் வேதம அநாதியென்று அறியுங்கள். சிவன் அதை வெளிப்படுத்தினவனென்று பெரியோர் சொலவார்கள். வியஞ்சகததன்மையை (வெளியிடுநதன்மையை) அறிநது செய்தான் என்று சொலவாரகள். ஆகையினால வேததகில் சொல்லபபட்ட அர்த்தமே நிச்சயமானது. சிவன் சித்ரூபன்; ஜகம சைதநியம், இவவிரண்டும எப்படி ஒன்றாகும் என்கிற ஆட்சேபனைகளினறித தெரிநது கொள்ளுங்கள். சிவனே சிதது்ம் சைதநியமுமாமென்று வேதங்கள் கூறுதலால் ஆட்சேபனைக்கு இடமேயிலலை. வேதம சொல்லுகிற கருமகாண்டத்தில் ஆட்சேபனை யிலலாததுபோல் ஞான காண்டததிலும் ஆட்சேபனையில்லை.

நோயையும ஔஷததத்தையும்போலப பாத்தியபாதக பாவத்தால் சிததும சைதநியமும் எனறு வேதம கூறும. மாயாமயக்கததால் வேதப்பொருளில விரோதமும் அவிரோதமும் தோன்றும். உருவத்தைப பார்பபதற்குக கண்களைப்போல மற்ற இநதிரியங்கள் உபயோகபபடாததுபோலத் தருமம் ஈசுவரன் முதலிய பதார்த்தங்களை உணர்வதற்குத தருக்கம பயன்படாது. ஆகையால் அறிவில்லாமல வேதார்ததத்தில தருக்க மிடுகிறவன் நரகத்தையே அடைவான். ஆகையால வேதம கூறியபடியே ஜகமெல்லாம் சிவனிடத்திலேயே தோனறி ஒடுங்கும. அவனுடைய மகிமையை அறிபவர் ஒருவருமில்லை. அக்கினியாலே இரும்பு பிரகாசிப்பது போலவும், மற்றபபொருளைத் தகிப்பது போலவும், பரமசிவம் பிரகாசிக்கிற வேதம் எல்லாவற்றையும் விளக்கும். இரும்பைச்சேர்ந்த அக்கினி தகிப்பதுபோல வேதத்தைச்சார்நதிருக்கிற சிவமும சகல காரியஙகளுக்கும் சாதகமாயிருக்கும். இந்திரியங்களுக்கு அகோசரமான தருமமுதலியவைகளில் வேதத்தைவிட்டுச்

மென்கின்றார்கள்; சிலர் தானமே யென்கிறார்கள்; சிலர் பிரமச்சரியமென்றும், சிலர் இல்லறமென்றும், சிலர் வானப்பிரஸ்த தருமமேயென்றும், சிலர் சந்நியாசமேயென்றும், சிலர் தீர்த்தயாத்திரை க்ஷேத்திரயாத்திரைகளேயாமென்றும் கூறுகின்றார்கள். இவ்வாறாக ஒவ்வொருவரும் பேதப்படக் கூறுவதினால் உண்மைதெரிவது அசாத்தியமாயிருக்கிறது. ஆகையால் எதுசரியானமோட்சமார்க்கம்? அதனை யெனக்குச் சொல்ல வேண்டுமென்று கேட்டார். திருமாலும் சற்றுயோசித்து இதனுண்மையைச் சிவபிரானிடம் போய்த் தெரிந்து கொள்வோமென்று கருதிப், பிரம்மேந்திராதி தேவர்களும் வியாசர் முதலிய ரிஷிகளும் சூழ்ந்துவரக் கைலையங்கிரிக் கெழுந்தருளினார்.

கைலாயமலைக்குப்போய், நந்திதேவரை வணங்கி விடைபெற்றுக்கொண்டு உள்ளே போய், உமாதேவியாரோடும் சிங்காதனத்தின் மேல் எழுந்தருளியிருக்கும் காளகண்ட மூர்த்தியைத்தரிசித்து வணங்கிக், கண்களில் ஆனந்தமாரி பொழிய மனமுருகித் தோத்திரஞ் செய்தார்கள். சிவபெருமான் திருமாலைப்பார்த்து யாதுகாரணம் பற்றி யிங்கே வந்தீர்கள்; உங்களுக்கென்ன குறையுண்டாயிற்றென்று கேட்க விஷ்ணுமூர்த்தி சொல்லுகிறார். மஹாதேவா! காலகாலா! காமதஹனா! வியாசமுனிவர் என்னிடம் வந்து முத்திசாதனமார்க்கம் எது? அதனை யெனக்குச் சொல்லவேண்டுமென்றார். அதனை நிச்சயித்துச் சொல்ல என்னால் முடியாமையால் இங்கே வந்தேன். அதனைத் திருவுளம்பற்றி யருளவேண்டுமென்று கேட்கத் தேவதேவனாகிய மஹாதேவர் மகிழ்ந்து சொல்லுகிறார்.

நாராயணா! உமாதேவியானவள் முன்னொருதரம் இந்தக்கேள்வியைக்கேட்டாள். அவளுக்குச் சொல்லியிருக்கிறேன். அதேபிரகாரம் உனக்கும் சொல்லுகிறேன்கேள். "ஞானமொன்றே முத்திக்கு மூலமாயுள்ளது. அதைத்தவிர வேறொன்றுமில்லை. அந்த ஞானம் வேதாந்த சிரவணத்தினாலே தான் கிடைக்கத்தக்கது. அந்த வேதாந்த சிரவணமின்றி யெளிதிற்கிடைக்காது. பூர்வ ஜன்மங்களில் வேதம் ஸ்மிருதி ஆகமம் முதலிய நெறிப்படி யெம்மையாராதித்தவர்களுக்கே கிடைக்கத்தக்கது, ஆசிரமநெறிதவறாமல் நடந்துவந்து அவற்றைப் பூர்த்திசெய்த பிராமணர், க்ஷத்திரியர், வைசியரும், பிராமணப் பெண்களும் இந்த வேதாந்த ஞானத்துக்

சிவன் பிரமாணமாவதில்லை. சிவத்தைவிட்டு வேதமும் பிரமாண மாவதில்லை. சடமான சப்தம் இந்திரியங்களுக்கு எட்டாதபொரு ளில் பிரமாணமாகமாட்டாது; ஆகையால் சிவத்தினால் பிரகாசிப்பிக் கப்பட்டு, அந்தச்சிவத்துக்கு அபேதமாயிருந்து சகல விஷயங்க ளிலும் பிரமாணமாயிருக்கும். நான் பூர்வத்தில் மேருமலைச்சாரலி ல் தவம் செய்து இந்தப் பொருளைச் சிவபெருமானால் தெரிந்து கொண்டேன். அந்தச்சிவனுடைய கடாட்சத்தினாலே மேன்மையைய டைந்த இந்தச் சங்கிதையை உங்களுக்குச் சொன்னேன். அந்தச் சிவகடாட்சத்திலே அற்பனாகிய நான் மஹாதவசிகளான உங்களுக் கும் குருவாகும் தன்மையை அடைந்தேன். சிவனுடைய அனுக் கிரகத்தினாலே விஷ்ணு, பிரமா, விராட்டு, சம்ராட்டு, சுராட்டு முதலிய எல்லாத் தேவர்களும் தோன்றி ஒடுங்குவார்கள்.

இழிந்த ஜந்துக்களும் சிவபெருமான் கருணையாலே திருமா ல் பிரமன், இந்திரன் முதலியவர்களாகி வரவும் கூடும் என்று தெ ரிந்துகொள்ளுங்கள். பரமசிவனுடைய அடியார்களும், அந்த அடி யார்க்கடியார்களும் சுதந்தரமுடையவர்களாய்த் தேவர்களும் புக ழும்படியிருப்பார்கள் என்றால் சிவனுடைய சுதந்தரத்தைச் சொ ல்லவும் வேண்டுமோ? சிவன் சுதந்தரனாகையால் தான் திருப்பாற் கடலிலுண்டான விஷத்தைச் சாப்பிட்டுத் தேவர்களைக் காப்பாற் றினான். பிரமாவின் சிரத்தைக்கொய்தான். இன்னம் பல அருஞ் செய்கைகளைச் செய்தான். ஆகையால் நீங்கள் சிறப்பில்லாத தருக் கத்தைவிட்டு, வேதத்துள் விளங்கும் அத்துவித ஞானத்தை அ டையுங்கள். பேதமும் பேதாபேதமும் சிலர் சொல்வார்கள். மூட ர்களால் கொள்ளப்பட்ட பேதம் மித்தையாதலாலும் ஈசனுக்கு வேறாய் ஒன்றுமில்லை என்கிற அபேதத்தை உணர்ந்தவனுக்குப் பயம், மோகம், சோகம், இவைகள் இல்லையென்றும், மஹாவாக் கியார்த்தமும் ஏகத்துவமே கூறுவதென்றும் வேதம் சொல்லுத லாலும், அபேதார்த்தத்தையே கொள்ளவேண்டும். சிவனுடை ய அனுக்கிரகத்தால் அடையத்தக்க இந்த ஞானம் வேறொன்றா லும் அடையப்பட மாட்டாது. ஆகையாலே வேத மார்க்கத்தைப் பற்றியே சிவசொரூபத்தை அறியவேண்டும்.

நாலாவது அத்தியாயம்.

விசேஷ சிருஷ்டி கூறியது

கர்த்தாவான பரமசிவன் தன் மாயையோடு வேற்றுமையில்லாமல் கலந்து இருந்தாலும், பூர்வகற்பவாசனையாலும், காலகாமாது குணத்தினாலும், மாயைக்கும் தனக்கும் பேதம் கற்பித்துக் கொண்டிருப்பன். முனிவர்களே கற்பிதமானது உண்மையில்லாமையினாலே கற்பிதபேதம் கூறுதலால் பாதகம் உண்டாகாது. அவ்விறைவன் பூருவவேட்சண வாசனையால், தான் ஈடசித்தாவாயுமிருந்துகொண்டு, தன்மாயையோடு கலந்து, அந்தமாயாகுணபேதங்களால் மும்மூர்த்திகளைச் சிருஷ்டித்து, அவர்களுக்குள்ளும் அந்தரியாமியாயிருப்பான். அந்த மும்மூர்த்திகளும் பரதத்துவ அபேதத்தால் முத்தொழில்களையும் செய்வார்கள். விசேஷரூபத்தால் ஒவ்வொருவரும் ஒவ்வொரு தொழிலைச் செய்வார்கள். சூட்சுமபூதங்கள், அந்தக்கரணங்கள், பிராணங்கள், ஞானேந்திரியக் காமேந்திரியங்கள், இவைகளின் சிருஷ்டி உருத்திரமூர்த்தியால் நடக்கும். பரதத்துவ அபேதத்தினாலே பிரமனும் விஷ்ணுவும் சிருஷ்டி செய்வார்கள். முனிவர்களே பரமார்த்தத்தில் பரசிவனே எல்லாவற்றையும் சிருஷ்டிப்பவனாகும்.

சமஷ்டிகளிலிருந்து தேவர்கள் உற்பத்தியாவார்கள். எப்படியென்றால், அந்தக்கரண சமஷ்டியிலிருந்து ஹிரண்யகர்ப்பனும், பிராணசமஷ்டியிலிருந்து சூத்திராத்மாவும் உதிப்பார்கள். ஞானேந்திரிய சமஷ்டியிலிருந்து திக்கு முதலானவைகளுடன் தோன்றித், திக்கு சுரோத்திரத்திற்கும், வாயு தொக்கிற்கும், ஒளி நேத்திரத்திற்கும், வருணன் நாவிற்கும், பிருதிவி கிராணேந்திரியத்துக்கும், அபிமான தெய்வங்களாயிருக்கும். காமேந்திரிய சமஷ்டியிலிருந்து திரிவிக்கிரமன் முதலானவர்கள் தோன்றித், திரிவிக்கிரமன் பாதத்துக்கும், இந்திரன் அஸ்தத்துக்கும், அக்கினிவாக்குக்கும், பிரஜாபதி உபஸ்தத்துக்கும், மித்திரன் குதத்துக்கும் அபிமானிகளாவார்கள். மனம், புத்தி, அகங்காரம், சித்தம் இவைகளுக்கு முறையே சந்திரன், குரு, காலாக்கினிருத்திரன், வருணன் இவர்கள் அபிமான தெய்வங்களாவார்கள். ஸ்தூலபூதங்கள், அண்டபேதங்கள், உலகபேதங்கள், ஜீவதேகபேதங்கள், இவைகள் முன்கற்பம்போலச் சூட்சும பூதங்களிலிருந்து உண்டாகும். ஜீவர்களுக்குப் போகார்த்தமாக அநேக பேதிகங்களும் உண்டாகும்.

நிர்மல சிவன் தன் மாயையாலே சிருஷ்டிக்கப் பட்டவைக ள் எல்லாம் காரியங் காரணத்துக்கு வேறல்ல என்கிற நியாயத் தால் மாயாரூபமேயாம். அந்த மாயையும் தனக்கு அதிஷ்டான மான பிரமத்துக்கு வேறாகாது. பரசிவமே ஜகம், மாயை, ஜீவன் முதலான சொரூபமாகும். சிவத்தை ஜகத்துக்கு வேறென்று எ ண்ணுகிறவன் பந்தம் ஒழியமாட்டான். ஆகையாலே, அனைவப பிரமாணம, தருக்கம, குருவுபதேசம, தன அனுபவம் இவைகளா லும் சிவானுக்கிரகத்தாலும், எல்லாம் சிவமேயாம் என்று தெரிந் துகொள்ளவேண்டும். அப்படி அறிகிறவன் அழியாத முத்தியை அடைவான். அப்படி யறிகிற சிவஞானமும் எல்லாம் சிவம் என்று நிச்சயபுத்தியுடன் இருப்பவனுக்குச சித்தியாம். எல்லாம் சிவமா கக்காணும் அறிவுள்ள ஞானிகளுக்கு ஜகமில்லை. அஞ்ஞான ஞா னங்களுமில்லை. அவன் தேஜோமயமாகவே யிருப்பான். அவனு டைய நிஷ்டை உண்டோ இல்லையோ என்று சொல்வதற்கும், அ றிவதற்கும் ஒருவராலும் முடியாது. இது வேதமுடிவான இரக சியமாம.

ஐந்தாவது அந்தியாயம்.

ஆத்மானாத்ம விவேகம் உரைத்தது.

கடாதிகளில் இதம (இது என்கிற) புத்தியும், ஆத்மாவில் அகம (நான என்கிற) புத்தியும் சகல ஜந்துக்களுக்கும் இருக்கிற படியால, இதம் புத்திக்கு விஷயமாயிருப்பது அனாத்மாவாம். அ கம் புத்திக்கு விஷயம் ஆத்மாவேயாம் என்று தெரிந்துகொள்ள வேண்டியது. அந்த இரண்டுவகையான புத்திகளும சரீரத்திலும் உண்டாகின்றன. இதம புத்தி சரீர விஷயமாம். அகம்புத்தி அவ் வுடலுக்குள்ளிருக்கும் சிதாத்மாவின் விஷயமாகும். உடலினிடத் தில் அகமபுத்தியுண்டாதல் பிராந்தியாலேயாம். உடம்பு அசித்து ரூபமாதலால அகமபுத்திக்கு விஷயமாகாது. இந்திரியம், பிராண ன், மனம, புத்தி, சித்தம், அகங்காரம், இவைகளும் அசித்து ரூபமாதலால் அகம்புத்திக்கு விஷயமாகாவாம். பரிணாமமா யிருக கிற பால் முதலியவை யெல்லாம் அசேதனமாகவே யிருப்பது போல இந்திரியாதிகளும் அசேதனங்களே யாம்.

சர்வப் பிரத்தியேய ரூபமாய்ப் பரிணமிக்கும். அகங்காரமும் அனாத்மா ஆனால், அகம்புத்திக்கு விஷயமான ஆத்மாவே பிரத்தியகாத்மாவாம். நிர்மலமான புத்தி விருத்தியாம்பொருட்டு வியாபித்து, அந்தப்புத்தி விருத்திக்குச் சாட்சியாயிருப்பான். தன்னுடைய ஞான ஒளியால் அஞ்ஞானத்தையும் விலக்கிக் கொள்வான். ஆகையால் அவன் விருத்திக்கு உட்பட்டவனல்ல. அந்த விருத்தியில் விஷயமானவனாகத் தோன்றினாலும் அவன் சுயம்பிரகாசனேயாவான். அந்தப்புத்தி விருத்தியில் வியாபித்திருக்கும் சைதன்னிய சம்பந்தத்தால் ஜடவடிவமான கடாதிகளைப் பிரகாசிப்பிக்கிற அகம்பதார்த்தமான ஆத்மாவும் அந்தக் கடாதிகளைப்போல அநேகமாம். சுயம்பிரகாசத்தாலே ஒன்றேயாகும். எந்த ஆத்மாவின் சம்பந்தத்தாலே அகம் விருத்தி பிரத்தியேயமாய்த் தோன்றுமோ அந்த ஆத்மா பிரத்தியேயத்துக்கு எப்படி அந்நியமாவான் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். அகம் விருத்தியும் சுயம்பிரகாசச் சைதன்னியத்துடனே சேர்ந்து பிரகாசிக்கும். அந்தச் சைதன்னிய சம்பந்தத்தாலே அகங்காரமும் ஞாதாவைப் (அறிவிக்கிறவன்) போலவே காணப்படும். ஆத்மாவும் அகங்கார சம்பந்தமுடைமையால் ஆத்மாவும் கருத்தா, போக்தா, சுகி, துக்கிகளைப் போலப் பிராந்தியால் அறியப்படுவான். பரமார்த்தத்தில் ஆத்மாவுக்குச் சின்மாத்திர சொரூபத்தைத் தவிர வேறு ரூபமில்லை. பல வேதங்களிலும் காணப்படும் அகம் பதத்துக்குச் சிதாத்மாவே பொருளாம். "கோ" எனும் பதத்துக்கு கோத்துவமே (பசுத்தன்மை) பொருளாவதுபோல என்று தெரிந்து கொள்ளுங்கள். கோத்துவம் வியக்தி சம்பந்தத்தால் எப்படிப் பல பேதங்களாகத் தோன்றுமோ அப்படியே சித்ரூப பொருளும் அகங்கார சம்பந்தத்தால் பேதமாகக் காணப்படும். கோ எனும் பதம் ஒன்றாயிருந்தாலும், வியக்தி பேதத்தால் பேதமான அர்த்தங்களைத் தருவதுபோல, அகம் பதமும் ஒன்றாகவேயிருந்தும் வியக்திபேதத்தால் பேதமாகவே யிருக்கும். கோ பதத்திற்குப் பிரதீதியினால் கோவியக்தி என்ற அர்த்தமுண்டானாலும் பரமார்த்தத்தில் கோத்துவமே அர்த்தமாகும். அப்படியே அகம் என்ற பதத்துக்குப் பிரதீதியினால் அகங்காரமே அர்த்தமாகத் தோன்றினாலும், பரமார்த்தத்தில் சிதாத்மாவே அர்த்தமாம் என்று தெரிந்து கொள்ளுங்கள். சாட்சி சொரூபம் ஒன்றாயிருந்தாலும்,

அந்தக்கரண பேதத்தால் பேதவிவகார முண்டாகும். உருத்தி ராதிகளும அகம பதத்தைச் சிதாத்மாவி னிடத்தில் உபயோகப் படுத்துவார்கள.

சுழுத்தியிலிருந்து எழுந்திருந்த புருஷன் நான் சுழுத்தியிலி ருந்தேன் (ஒன்றுமறியாது தூங்கினேன்) என்று சுழுத்தியிலிருந்த ஆத்மாவின் விஷயத்தில அகம என்னும சொல்லை உபயோகப்படு த்துகிறான. ஆகையாலும அகம் பதம சிதாத்மாவையே பொரு ளாக உடையது. இரும்புடன் கூடின நெருப்பே யெரிக்கின்றது. ஆயினும இரும்பு தகிப்பதுபோலத தோனறும். அதுபோலவே அகம் பதம் ஆத்மவாசகமேயாம. சைதன்னிய சம்பந்தத்தால் அகங்காரமும் அகம பதப்பொருளாகவே தோன்றும். இப்படியே தேகம், பிராணன, அந்தக்கரணம் இவையெல்லாம் ஆத்மாவுக்கு வேறாகப்படுத்தி, சர்வசாட்சியான சச்சிதானந்த ஆத்மாவைத தியானிக்க வேண்டும் உருத்திரன, விஷ்ணு, முதலானவர்களும சின்மாத்திரமே அகம பதார்த்தமென்று தெளிந்து யாமே பிரம் மென்று சொல்வார்கள். வேதாந்தமும இப்படியே சொல்லும். ஆகையால் பிரத்தியகாத்மாவே பரசிவமாம. குருவுபதேசாதிக ளால் அனாத்மாவாகத் தோன்றுவன எல்லாவற்றையும ஆத்மாவா கத்தெரிந்து கொண்டு, அந்த ஆத்மாவையும் சுத்தபிரமமாகக் கண்டு, அந்த நிச்சயத்தையும சின்மாத்திரத்தில ஒடுக்கி, அந்த லயத்தையும சின்மாத்திரமாகத தெரிந்துகொண்டு, சுத்த கேவல சொரூபமாக இருப்பவன பிரமஞானியாவான். இந்தப்பரம நிஷ்டை சற்குரு கடாட்சத்தாலே தான் உண்டாகும்.

அந்தக் குருகடாட்சமும், சிவானுக்கிரகத்தாலேயே கிடைக் கவேண்டும். ஜீவன் முதல் எல்லாம சிவமே யென்னும ஞானமே சிவப்பிரசாதமாகும். அந்த ஞானமுடையவனே சிவஞானியாவா ன. அவனுக்கு வைதிகம தாந்திரிகம, விதிவிலக்கு, போசியம் அபோசியம என்பனவில்லை. பரமானந்த ரூபனாகவேயிருப்பான். வேதபக்தி, குருபக்தி, உமாதேவியார்பக்தி, சிவபக்தி இவைகளா லே எல்லாம சிவ சொரூபம என்கிற மெய்ஞ்ஞானம் உண்டாகும். அந்த ஞானத்தால சம்சார நிவிர்த்தி உண்டாகும். அந்த நிவிர்த்தி உண்டாகிறதற்கு ஞானமே சாதகமாகும. அந்த ஞானத்தைப் பெறுவதற்குக குருபக்தி அவசியம வேண்டும.

ஆறாவது அத்தியாயம்

சர்வசாஸ்திர சங்கிரகம் உரைத்தது

பரதத்துவமென்று சொல்லப்படுவது, உலகத்தில் எல்லார்க்கும் ஆத்ம சொரூபமாக இருந்த போதிலும், அதிசூட்சுமமாயிருப்பதினால் தேவர்களாலும் அறியப்படுவதல்ல. அந்த ஆத்ம சொரூபத்தை உருத்திரமூர்த்தியே எப்போதும் அறிந்து கொண்டிருப்பார். பிரமவிஷ்ணுக்கள் கஷ்டப்பட்டு ஒவ்வொரு காலத்தில் அறிவார்கள். சிவானுக்கிரகத்தால் திரிமூர்த்திகளும், தேவர்களுக்கும் உண்டாகும் பிரமஞானத்துக்குப் பிரமமே பிரசன்னமாகும். மும்மூர்த்திகளும் பரமகாரண பரசிவத்தை மூர்த்தி சொரூபமாக எப்போதும் தியானிப்பார்கள். திரிமூர்த்திகளின் விபூதி சொரூபமான தேவர்களும் பரசிவத்தையே தியானிப்பார்கள். தியானிப்பவர்களுடைய பாவத்தைப்போக்க வல்ல மும்மூர்த்திகளும் சிவசொரூபமேயென்று பெரியோர் சொல்வார்கள். மும்மூர்த்திகளும் அவர்களுடைய அவதார மூர்த்திகளும் சிவத்தியானம் செய்தாலும் பரமார்த்தமாவின் விபாகத்தில் சேர்ந்தவர்களேயல்லாமல் ஜீவர்களில் சேர்ந்தவர்களாக மாட்டார்கள்.

பரதத்துவமும் உபாதிபேதத்தாலே ஜீவாத்மா பரமாத்மா என்று இருவிதமாயிருக்கும். ஜீவர்கள் இருவினைச் சம்பந்தத்தால் சம்சாரிகளாயிருப்பார்கள்: மும்மூர்த்திகளுக்கும் அவர் அவதார மூர்த்திகளுக்கும் புண்ணியபாவங்களில்லை. சிவாக்ஞையால ஜீவர்களுடைய நன்மைக்காகவே ஆவிர்ப்பாவமும் (தோற்றமும்) திரோதபாவமும் (மறைவும்) உண்டாயிறதேயல்லாமல் வேறில்லை. ஆகையில் அந்த மூர்த்திகளும், அவர் அவதார மூர்த்திகளும் போகத்துக்காகவும் கதிக்காகவும் ஜீவர்களாலே உபாசிக்கத்தக்கவர்களாம் உபாசனை சமமாயிருந்தாலும் பிரமவிஷ்ணுக்களைவிட உருத்திரமூர்த்தி மேலானவர் என்று அறிஞர் கூறுவார்கள் உருத்திரமூர்த்தியைப் பிரமவிஷ்ணுக்குச் சமமாகவாவது, உயர்வு தாழ்வாகவாவது நினைக்கிறவனை கொடியநரகத்தில் விழுவான். அவ்விருவரையும் விட உருத்திரனே சிறந்தவனென்று எண்ணுகிறவன் முத்தியை அடைவான். சிவனே சர்வகாரணனாகிற படியாலும், மங்களத்தைக் கொடுப்பது அவனிடத்திலேயே பூரணமாயிருக்கிற படியாலும், சாம்பமூர்த்தியான ருத்ர சிவனே இருதயத்தில் முக்கியமாய்த்

தியானிக்கத்தக்கவன். காரிய சொரூபர்களான திருமாலாதியோர் முக்கியமாய்த் தியானிக்கத்தக்கவர்களாக மாட்டார்கள். ஆதலால் சிவனையே தியானிக்கவேண்டும். அதர்வசிகையின் முடிவும் இப்படியே யிருக்கின்றது. வேதங்களுக்கெல்லாம் அதர்வணமே முடிவாம். பரை ரூபமான பிரணவமே மூலம், விந்து, நாதம், சக்தி, அகாராதி வன்னங்கள் கந்த சாகைகளாக விளங்குதல் போல் அதர்வண வேதமென்னும் விருட்சம் பிரணவமே மூலமாகவும், வேத ஜாதியே சக்தியாகவும், மூன்று வேதங்களும் கந்த சாகைகளாகவும், ஸ்மிருதி புராணங்களை கிளைகளாகவும், வேதாங்கங்கள் [illegible]களுக்கு ஆவரணமாகவும், அந்த ஆவரணத்துக்குத் தருக்கம் காவலாகவும், சிவஞானமே மலராகவும், மோட்சமே பலமாகவும் கொண்டு விளங்கும். ஆகையால் முனிவர்களே புத்தி முக்திகளை அடைய விரும்புகிறவன் சிவனையே தியானிக்கவேண்டும் என்று தெரிந்து கொள்ளுங்கள்.

ஏழாவது அத்தியாயம்

தேவர்கள் தேகத்திலிருக்கும் வகை கூறியது.

பஞ்சபூத சொரூபமான தேகத்தில் பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் என்கிற பஞ்சபூத பாகங்களில் முறையே பிரமன், விஷ்ணு, உருத்திரர், மகேசுவரன், சதாசிவன் என்னும் தேவர் இருப்பார்கள். உடலின் புறத்தில் விராட்டும், உள்ளே சுராட்டும், மத்தியில் சம்ராட்டும், வசிப்பார்கள். சுரோத்திரம், தொக்கு, நேத்திரம், சிங்குவை, கிராணம் இவற்றில் முறையே திக்கு, காற்று, அக்கினி, வருணன், பிருதிவி இவைகள் இருக்கும். பாதம் பாணி, வாக்கு, உபத்தம், குதம், இவற்றில் முறையே திருவிக்கிரமன், இந்திரன், அக்கினி, பிரஜாபதி, மித்திரன் இவர்கள் வசிப்பார்கள். பிராணனில் சூத்திராத்மாவும், அந்தக்கரணத்தில் இரணிய கர்ப்பனும், மனதில் சந்திரனும், புத்தியில் பல தேவர்களும், குருவும், வசிப்பார்கள். அகங்காரத்தில் காலாக்கினி ருத்திரனும், சித்தத்தில் சிவனும், உரோமங்களில் பல தேவர்களும், எலும்புகளில் பூதப்பிரேதங்களும் வசிப்பார்கள். தசையில் பைசாசரும், இராட்சதரும் இருப்பார்கள். நரம்பு, தொக்கு இரத்தம் இவைகளில் கந்தர்வர் முதலிய தேவர்களும் வசிப்பார்கள். வலக்கண்ணில் பிரமாவின்

கோரகனுவும், இடக்கண்ணில் சாந்தனுவும் இருக்கும். வலக்கண் புறத்தில் சூரியனும், இடக்கண்புறத்தில் சந்திரனும் வசிப்பார்கள். கழுத்தின்புறத்தில் விஷ்ணுவின் கோரதனுவும், உள்ளே சாந்த தனுவுமிருக்கும். இருதயத்துள் உருத்திரனுடைய சாந்ததனுவும் புறத்தில் கோரதனுவும் இருக்கும். பிரமரந்திரத்தில் சச்சிதானந்த பரப்பிரமம் வசிக்கும். சிவசிரசக்தி மூலாதாரத்தில் வசிக்கும். பரா சக்தி நாதலிங்கநுனியில் வசிக்கும். நாதரூபமான பராசக்தியெநற்றிநடுவிலிருக்கும். புருவமத்தியில் விந்து சத்தியும், விந்துசத்திமத்தியில் ஜீவாத்மாவின் சூட்சமரூபமும் இருக்கும். இருதயநடுவில் ஸ்தூலரூபமும், இவ்விரண்டுக்குமத்தியில் மத்தியமரூபம் இருக்கும். நாக்குநுனியில் சரஸ்வதி வசிப்பாள். அறைக்கத்தில் இலட்சுமி வசிப்பாள். உருத்திரன் இருக்கிற இடத்தில் பார்வதி இருப்பாள். சர்வகாரணமான பரதத்துவசிவம் எங்கும் வியாபித்திருக்கும்.

இந்தத் தெய்வங்களெல்லாம் ஞானியின் சரீரத்தில் பிரத்தியக்ஷமாக சொரூபமாகவும், தனித்த தெய்வரூபமாயும் விளங்கும். சுத்தராகியும், வேதமார்க்க விருப்பமுள்ளவராயும் உள்ளவருடைய உத்தம சரீரத்தில் தேவரூபமாகவே விளங்கும். மற்றவர் சரீரத்தில் என்றும் இருந்தாலும் பிரகாசியாமலிருக்கும். எல்லாருடைய தேகத்திலும் எல்லாத்தெய்வங்களும்மறைந்திருப்பதால் எந்தப் பிராணியையும் அவமதிக்கப்படாது. கொடுஞ்சொல் சொல்லவும் கூடாது. அஸ்திர சஸ்திரங்களினாலும், நகத்தினாலும், புண் படுத்தவும் கூடாது. பிராணிகளுக்குத் துன்பமுண்டாக்குகிறவன் நிச்சயமாகவே நரகக்குழியில் விழுவான். இதரர்களுடைய சரீரத்திலாவது தன் சரீரத்திலாவது சக்கராங்கிதம் முதலியன செய்கிறவன் நரகத்தில் விழுவான். ஆகையால் போக மோட்சங்களை அடைய விரும்புகிறவர்கள் உடம்புகளெல்லாம் தெய்வமேயென்று உணர்ந்து, அவற்றுக்குத் தீமை செய்யாமல் நன்மையையே செய்யவேண்டும்.

எட்டாவது அத்தியாயம்.

சர்வ வேதாந்த சங்கிரகம் உரைத்தது.

சச்சிதானந்த பரசிவனுடைய அர்த்தநாரி சொரூபம் ஆனந்தநடன மூர்த்தி என்று சொல்லப்படும். போக மோட்சமடைய விரும்பினால் இதையே தியானிக்க வேண்டும். சிவாதி நாமங்களை

துதிக்கத்தக்கன். பிரமன், விஷ்ணு ருத்திரர்கள் பரதத்துவவிபூதிக ளாயிருந்தாலும், இவர்களுக்குள் உருத்திரமூர்த்தியே விசேஷ மானவர் என்று கருதுங்கள். சம்சாரகாரணமான மாயை பிரகிருதி யினாலே சத்தாக இருந்தாலும், பரமார்த்தமாக சத்து விலட்சண மானதேயாகும். அதுவும் பரசிவத்துக்கு வேறானதல்ல என்று பெரியோர் சொல்வார்கள். அந்தமாயை ஒழிந்த வேதாந்த தத் துவஞானம், சிவானுக்கிரகத்தால் குருகடாட்ச முண்டாய்ச் சத் தினிபாதம் உண்டானபோது கிடைக்கும். தவம், யாகம், தானம் முதலியவை அந்தச்சிவஞான இச்சை உண்டாவதற்குக் காரண மாகும். வேதவேதாங்க அத்தியயனம் செய்தல், அத்தியயனம் செய்வித்தல், வேதாந்தபக்தி, வேதத்துக்கு விரோதமான நூல் களை விலக்குதல், சாந்தி, தாந்தி முதலியவை ஞானங்களாகும் என்று கற்றோர் சொல்வார்கள். ஞானங்கள் எல்லாவற்றுள்ளும் சிவலிங்கபூசை செய்தல், சிவலிங்கப் பிரதிஷ்டை செய்தல், சிவ க்ஷேத்திரயாத்திரை செய்தல், சிவனடியாரைப் பூசித்தல், விபூதி ருத்திராட்சம் தரித்தல், ஞானசிரியன் சேவை தரிசனம் செய்த ல், பஞ்சாட்சராதி மந்திரங்களை ஜபித்தல், இவைகள் சிரேஷ்ட மென்று பெரியோர் சொல்வார்கள்.

சிவத்தலங்கள் பலவற்றுள்ளும் காசி, திருக்காளத்தி, சிதம் பரம் இவை விசேஷமாகும். அதீந்திரியமான தர்மங்களிலும், பரசிவனிடத்திலும், வேதமே உத்தம பிரமாணமாகும். ஆகையா ல் வைதிகாசாரமே எல்லா ஆசாரங்களிலும் சிறந்தது. வேதார்த் தத்தின்படி பரமசிவனே எல்லாமாவான் என்று அறிகிற ஞான மே உத்தமோத்தம ஞானமாம். இப்படிப்பட்ட வைதிகமாகா னுஷ்டான மில்லாதவர்களுக்கு, ஆகமங்களில் ஆசாரம், தருமம், வர்ண முதலியன சிவனால் சொல்லப்பட்டன. பிரமா, விஷ்ணு, மற்று முள்ள தேவர்களும் சில ஆகமங்கள் சொல்லியிருக்கின்றார்கள். முனி வர்களே! வைதிகாசாரமுடையவன் இந்த ஆகம ஆசாரங்களை அ னுஷ்டிக்கக்கூடாது. வைதிகர்களுக்கு வேத விதிப்பூசையே தவிர வேறுபூசை செய்யக்கூடாது. ஆகமப்படி பூசிப்பது கூடாது. சி வாகமதீட்சையுடையசிலர் இலிங்கதாரணம் செய்து கொள்வார்; அதுவும் கூடாது. விஷ்ணு ஆகமதீட்சையுடையவர்கள் சங்குசக்க ராங்கிதம் செய்து கொண்டிருந்திகையால் ஊர்த்துவபுண்டரம் இட்டுக்கொள்வார்கள். அதுவும் கூடாது. புத்தாகமதீட்சை பெற

றவரும அரசிலைபோல் புண்டரம் தரிப்பார். அருகாகமதீட்சை பெற்றவர்கள் சந்தம, பஸ்மம, மண் இவைகளால் நெற்றியில் மூன்று ஊர்த்துவ புண்டரம தரிப்பார்கள். சிவாகமம், வைதிகம் இந்நெறியுடையோர் விபூதியினுல் திரிபுண்டரம் தரிப்பார்கள். இவர்கள் விபூதி தாரணத்தை விட்டு வேறு தரிப்பாராஞல் நரகில் விழுவார்கள். வைணவ மார்க்கத்தார் சங்கு சக்கராங்கிதம செய்து கொள்வார்கள். அதுபோல வைதிக நெறியோர் செய்து கொண்டால நரகத்தில் விழுவார்கள். ஆகம நெறியால் பிரதிஷ்டை செய்யப்பட்ட தெய்வ சொரூபத்தை வைதிகன் வணங்கலாம். ஏனென்றால தெய்வ சொரூபம எப்போதும் சுத்தமுடையதேயாம. தாந்திரிகர்க்குத் தாந்திரிக பூசையே தகுதியுடையது. வைதிகர்க்கு வைதிக பூசையே செய்யத்தக்கது. இவர்கள் ஒருவரை ஒருவர் தொட்டுக் கொள்வதும கூடாது. அரசனுயிருப்பவன் வைதிகனையும, தாந்திரிகனையும தனித்தனியாக இருக்கும்படி செய்யவேண்டும. சந்திரகலாதரனுன மஹாதேவனுக்கு ஒப்பான தெய்வமும, சிவஞானத்துக்கு ஒப்பான ஞானமும, கங்கைக்கு ஒப்பான நதியும, பஞ்சாட்சரத்துக்கு ஒப்பான மந்திரமும், காசிக்கு ஒப்பான க்ஷேத்திரமும, அன்னத்திற்கு ஒப்பான உணவும இல்லாததுபோல வைதிகர்க்கு ஒப்பானவர்களுமில்லை.

வைதிகன் உலகத்துக்குச் சூரியனைப் போன்றிருப்பான். அவன் சிவனைப்போல எல்லாராலும வணங்கத்தக்கவன். அவன பெருமையை வேதங்களும், ஸ்மிருதிகளும், புராணங்களும் சொல்கின்றன. ஆகமவிதியை அனுசரிப்பவர்கள் வைதிகவிதியை அனுசரிப்பார்கள். வைதிக விதியையுடையவர்கள் ஆகமவிதியை எவ்விதத்திலும அனுசரிக்க வேண்டியதில்லை. இவற்றை நீங்கள் தெரிந்துகொள்ளுங்கள் என்று கூறிச் சூதமுனிவர் தமது குருவைச் சிந்தித்தார். அப்போது வியாசமுனிவர் தமது பெருங் கருணையால் அவ்விடத்தில் பிரசன்னராஞர்.

சூதமுனிவர், அங்கே எழுந்தருளிய வியாசமுனிவரை மற்ற முனிவர்களுடன வணங்கி, கந்த புஷ்பாதிகளால் அவர் திருவடியைப்பூசித்துத் துதித்து மகிழ்ந்தார். வியாசமுனிவர் அந்தச் சௌனகாதி ரிஷீசுவரர்களை நோக்கி முனிவர்களே! நான் மஹாதேவன அனுக்கிரகத்தால எல்லாப் 'புராணங்களுக்கும் கர்த்தா ஆனேன். வேதாந்த சூத்திரம் செய்யவும் சக்தியுடையவஞ

கூதிகாரிகளாவார்கள். சூத்திரர்களோ வென்றால், புராணங்களின் மூலமாக அறியவேண்டும். முக்கிய அதிகாரிகளுக்கு ஞானவிரோதமான பிரதிபந்தஞ் சாராது. அவர்களுக்கு எளிதில் ஞானம் சித்தியாம், மற்றவர்களும் ஜன்மாந்தரங்களில் முக்தியடைவார்கள். யாகாதி கன்மங்களினாலே பதமுத்தி கிடைக்குமேயன்றிச் சாயுச்சிய முத்தி கிடைக்கமாட்டாது. அந்த ஞானத்தை யெளிதி லடையும் மார்க்கமெது வென்றால், நாம் ஜீவான்மாககள் உய்யும் பொருட்டு அநேகதலங்களில் எழுந்தருளியிருக்கின்றோம். அந்தத்தலங்களி லெதையாவது அடைந்து எம்மையாராதித்தால் கிடைக்கும். அந்தத்தலங்களுள் காசி சிரேஷ்டமானது. அதில் இறக்கின்ற ஜீவன்களெல்லாம் எமது சாரூபத்தையடையும். திருக்காளத்தியென்றொரு தலமுண்டு. அந்தத்தலத்தில் சொர்ணமுகி யென்றொரு நதியிருக்கின்றது. அந்த நதியில் நீராடி என்னை வணங்குகிற வர்களுக்கு முத்திகிடைக்கும். சிதம்பரமென்னும க்ஷேத்திரத்தில் எமது ஆனந்த நடனத்தை ஒருவருஷமதரிசித்தவர்கள் முத்தியடைவது நிச்சயம். இதுவே முத்திசாதனங்களுட் சிறந்தது. இதைத்தவிர வேறுகிடையாது. இதனை யெல்லார்க்கும உபதேசஞ்செய், நீயும் அனுஷ்டானம்செய்” என்று கறைமிடற்றிறைவன் திருவாய்மலர்ந்தருளினார். அதுகேட்ட திருமால் முதலாயினோர் ஐயமொழிந்து மனமகிழ்ந்து பன்னகா பரணனது பாதங்களில் வணங்கி விடைபெற்றுப் போனார்கள்.

பிறகு திருமால் திருககாளத்தியிற் சென்று சிவபிரானை யாராதித்துப் பேறுபெற்றார். பிரமதேவர் விருத்தாசலத்தி லாராதித்து மேன்மையடைந்தார். வியாசமுனிவர் காசியி லாராதித்து வேண்டியவற்றைப் பெற்று மகிழ்ந்தார். மற்றைய தேவர்களும் முனிவர்களும் சிதம்பரத்தில் ஆனந்த நடனத்தைத் தரிசித்து விரும்பினவெல்லாமடைந்தார். நானும் இந்த க்ஷேத்திரங்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொருவருஷம் வசித்துப் பூசித்து ஞானத்தைப்பெற்றேன் என்று கூறினார் சூதமுனிவர்.

னேன். என்னுடைய அனுக்கிரகத்தால் இந்த சூதமுனி சிவானுக்கிரகத்தை அடைந்து, இந்தபுராண சங்கிதையைச்செய்து உங்களுக்கும் குருவாய் உபதேசித்தான். நீங்களும் சிவானுக்கிரகத்தாலே இவன் மூலமாக அநேக வேதார்த்தங்களைக் கேட்டுத் தெரிந்து கொண்டீர்கள். சிவஞானத்தில் மிக்க விருப்புடையவர்களாக இருந்து மகிழுங்கள் என்று சொன்னார். பிறகு சூதமுனிவருடைய தேகத்தைத் தமது கையால் தடவி, அவரை ஆலிங்கனம் செய்துகொண்டு, உடனே மறைந்தருளினார். சூதமுனிவர் சிவபெருமான் சேவடிகளையும், உமாதேவியாரின் பாதாரவிந்தங்களையும், குருநாதன் பாதங்களையும் துதித்து மகிழ்ந்து வாழ்ந்தார். சௌனகாதி முனிவர்களும் சூதரை வணங்கி, வேதங்களின் அர்த்தங்களையெல்லாம் உரைத்தருளிய உங்களுக்கு நாங்கள் என்ன கைம்மாறு செய்யத்தக்கது என்று கூறி அவரைப் புகழ்ந்து வாழ்ந்திருந்தார்கள்.

இந்தச் சூதசங்கிதையைப் படிப்போரும் பக்தியுடன் கேட்போரும், அர்த்த விசாரம் செய்வோர், கேட்பவர்க்கு அர்த்தம் சொல்வோர், எழுதிவைப்போர், அதைப்பூசிப்போர், இதைத் துதிப்போர், தெரிந்தவர்களுக்குக் கொடுப்போர், இவர்கள் எல்லாரும் தீர்க்காயுசும், பூரண ஆரோக்கியமும், நிறைந்த செல்வமும் பெற்றுச், சிவானுக்கிரகமுடையவர்களாய், மெய்ஞ்ஞானத்தை அடைந்து, பரசிவத்தோடிரண்டறக்கலந்து வாழ்வார்கள். இந்தச் சூதசங்கிதையைச் சிறந்த இடத்திலிருந்துகொண்டு பொருளாராயவேண்டும். மிகுந்த அறிவுள்ளவர்களாயிருந்தாலும் குருவின் அனுக்கிரகத்தைப் பெறுவதற்குமுன் இதன் பொருளை ஆராயக்கூடாது. இந்தச் சூதசங்கிதை மற்ற நூல்களைப்போல்வதன்று. ஒப்பும் உயர்வும் இல்லாதது. ஆகையால் குருவின் அனுக்கிரகம் பெற்றுப் பக்தி சிரத்தையுடன் இதன் பொருளை ஆராய்ந்து அறியக்கடவர்கள்.

சூதசங்கிதா சாராமிர்த வசனம்

முற்றிற்று.

ஏழாவது
கால அளவை கூறிய
அத்தியாயம்.

சௌனகாதி முனிவர்களே! அளவுபடாத காலவளவை யைச் சுருக்கிச் சொல்லுகிறேன் கேளுங்கள். பதினைந்து நிமிஷங் கொண்டது ஒரு காஷ்டை. காஷ்டை முப்பது கொண்டது ஒரு கலை. கலைமுப்பது ஒரு முகூர்த்தம். முகூர்த்தம் முப்பது இரவும் பகலுமாகிய ஒருநாள். நாள் பதினைந்துகொண்டது ஒரு பட்சம். இரண்டுபட்ச மொருமாசம். ஆறுமாசம் ஒரு அயனம். அயனம் தட்சணாயனம் உத்தராயனமென்று இரண்டுவகைப்படும். அயன மிரண்டு ஒரு வருஷமாம. அவற்றுள் தட்சணாயனம் தேவர்கட்கு ஒரு இராத்திரியாம். உத்தராயனம் பகலாகும். இந்த வகையான நாள் பதினைந்து தேவர்களுக்கு ஒருபட்சம். இரண்டு பட்சம் ஒரு மாசம். மற்றவையும் மனிதர்க்குச சொல்லியது போலக்கொள்க. இவ்வகையான தேவவருஷம் பன்னீராயிரங்கொண்டது சதுர்யுக மொன்று. இவற்றுள் கிருதயுகம் நாலாயிரம்வருஷம்; யுகசந்தி எண்ணூறு. ஆகவருஷம் நாலாயிரத்தெண்ணூறு. திரேதாயுகத்துக்கு வருஷம் ஆயிரத்திருநூறு. இந்தநாலுயுகங்களையும் ஒருசதுர் யுகமென்பர். இந்தயுகம்எழுபத்தொன்றானால் ஒருமனுவந்தரமாம். பதினாலுமனுவந்தரம பிரமாவுக்கு ஒரு பகல். இந்தப்பகல்தான் ஒரு கற்பமென்னப்படும். இரவும் இந்த அளவேயாம். இத்த கைய நாள் முந்நூற்றறுபதானால் பிரமாவுக்கொருவருஷம். இந்த வருஷம்நூறானால் பிரமனுக்கு ஆயுள்முடிவாகும். பிரமனுயுளாகிய நூறுவருஷம் விண்டுவுக்கு ஒரு நாள். இந்த நாள் முந்நூற்றறு பது ஆனால் விண்டுவுக்கு ஒரு வருஷமாம். இந்த வருஷம் நூறு ஆனால் திருமாலும் ஒடுங்குவான். இந்தபபிரமவிஷ்ணுக்களுடைய முகூர்த்தங்களும் தத்தம் காரணத்திலொடுங்கும். உலகமும் லயமாகும். இவையெல்லாமொடுங்குமிடம் மாயையாகும். அந்தமாயை அபேதமாய்ச் சிவன்திருவடியிலொடுங்கும். அபேதமானாலும் பேதமாகத்தோன்றுதலால் மாயையென்றும், ஆன்மாவின் சுய ரூபத்தைமறைத்து நிற்பதால் தமம் என்றும், வித்தையென்கிற ஞானத்தை மறைப்பதால் அவித்தையென்றும், அந்த ஞானத்துக் குக் காரணமாக விருத்தலால் மோகமென்றும், சத்துக்கு விலட்

சணமா யிருத்தலால் அசத்தென்றும், உலகோற்பத்திக்குக் காரணமா யிருப்பதால் காரணமென்றும், காரியமாகிய உலகமாயிருந்தும் அறியப்படாம லிருப்பதால் அவ்வியக்தமென்றும், மாயைக்குப் பெயர்கள் கூறப்படும். இந்தக் காலவளவை சிவபெருமான் றிருவருளால் கற்பிக்கப்பட்டது.

அளவிடப் படாத வுலகங்க ளெல்லாம் கால தத்துவத்தி லொடுங்கும். அந்தக் காலம் மாயையி லொடுங்கும். அந்தக் காலமும் மாயையும் பரசிவனிடத்தி லொடுங்கும். அந்தப்பரம சிவ னொருவனே வாதையில்லாதவன்; அவனே முக்கால சிருஷ்டிக்குங் காரணனு யுள்ளவன். ஸ்ரீ பரமேசுவரனுடைய கருணையாலே பிரம விஷ்ணுக்களுக்கு அவரவர் பதவிகள் உண்டாகும். சகல சராசரங்களும் அவனுக்குரியனவாமென்று வேதங்கள் கூறும். அளவிலாத பிரம விஷ்ணுககள் முன்தோன்றி யொடுங்கினர்கள். சிவபெருமான் அனுக்கிரகத்தினால் பிரம தேவன் இராஜசகுணவியல்புடையவனாய்ச்சிருஷ்டிப்பன். விஷ்ணு சத்துவ குண இயல்பினனாய் இரட்சிப்பன். ருத்திரமூர்த்தி தமோகுணப் பிரதானனாய்ச் சங்கரிப்பன். இந்த மும்மூர்த்திபேதங்களும் அநேகமாகும். இவ்வாறு நிலைபெற்ற ஆன்மாக்களெல்லாம் சிவ சொரூபமாம். மாயையில்மயங்கினவர்களிதனையறியமாட்டார்கள். பேத புத்தியுள்ளவர்களாகவேயிருப்பார்கள். பூர்வஜனனங்களிற் செய்த புண்ணியபலத்தினால் சிவானுக்கிரகமுண்டானால் அவன் சொரூபத்தையறிவார்கள். எந்தச் சொரூபத்தை யாராதித்தாலும் அது சிவசொரூபமே யென்று கருதி வழிபடுவோர்களே மேலானவர்களாவர்கள். எல்லாமுகூர்த்தங்களும்சிவசொரூபமானாலும் அவற்றுக்குள் உயர்வுந் தாழ்வுமுண்டு. தெளிவான கண்ணாடியில் முகமும் தெளிவாய்த்தோன்றும், அழுக்குப்படிந்த கண்ணாடியில் அப்படித்தோன்றாது. அதுபோல ருத்திரமூர்த்தியிடத்தில் சிவசொரூபம் அதிகமாய் விளங்கும். மற்ற முகூர்த்தங்களில் குறைந்திருக்கும். ஆகையால் அந்த ருத்திரனை யாராதிப்பவர்கள் சீக்கிரத்தில் பந்த மொழிந்து முத்தியடைவார்கள். வேதங்களெல்லாம் பரமசிவனையே பரம்பொருளாகக் கூறும். மற்றையவற்றைச் சிலவிடத்தில் உரைத்தாலும் முடிவிற் சிவனையே கூறும். புராணங்களு மப்படியே சொல்லும். அவ்வாறு கூறுவது சிவனுடைய பரிபாகத்துக்கேற்றவாறேயாம். சகல சீவர்களுக்கும் அருள்

செய்யும்பொருட்டே, காசி, சிதம்பரம், சோமநாதம், விருத்தாசலம், வேதாரணியம், திருவாரூர், கேதாரம, காளத்தி முதலாகிய திவ்யக்ஷேத்திரங்களில் சிவ பெருமான் முகூர்த்தங் கொண்டெழுந்தருளியதாமென்றறிவீர்களாக.

எட்டாவது

அத்தியாயம்.

பிரளயத்தில் அமிழ்ந்தின பூமியை வராகமூர்த்தி யெடுத்து நிறுத்தியது.

பூர்வமொரு காலத்தில் ஜலபிரளயமுண்டாயிற்று. அந்த வெள்ளத்தில் உலகமெல்லாம் முழுகிப்போயிற்று. சராசரங்களெல்லாமொழிந்துபோயின. ஜலத்தைத்தவிர வேறொன்றுமில்லை. அப்போது பிரமதேவர் ஆயிரங்கண்களும் ஆயிரங்கால்களும் விளங்கும்படி மஹாவிஷ்ணு ரூபங்கொண்டார். திரிநேத்திரனாகிய சிவபெருமானுடைய திருவடிகளைத் தியானம் பண்ணிக்கொண்டு அந்தப்பிரளய ஜலத்தில் படுத்துக்கொண் டிருந்தார். நரனென்றுபேர் கொண்ட சிவ பெருமானால் உண்டாக்கப்பட்ட படியால ஜலத்துக்கு நாரமென்று பேருண்டாயிற்று. அந்த ஜலத்தில் பள்ளிகொண்டிருந்த படியால் அந்தப்பிரமாவுக்கு நாராயணனென்று பேராயிற்று. அப்போது சிவபெருமான் அந்தப்பிரமனுக்குத் தகுந்தபலத்தைக்கொடுத்துப் பாதாளத்தில் அழுந்தின பூமியை எடுத்து நிறுத்து என்று கட்டளையிட்டார். அந்த நாராயணன் உடனே ஆகாயமளாவும்படியான ஒரு பெரிய வராக ரூபங்கொண்டான். பின்னர் பாதாளம்போய் அங்குள்ளபூமியையொருகொம்பினால் ஏந்திக்கொண்டான். அதைப்பார்த்துத் தேவர்களெல்லாரும், உலகங்களையெல்லாம் உள்ளங்காலுக்குள் அடக்குவாய், ஒரு கவளம் சோறுபோல் உண்டு விடுவாய்; இது உனக்கு ஒரு பெரிதாகுமாவென்று புகழ்ந்து கொண்டாடி, இத்தகைய மகிமையையுடைய உமக்கு நமஸ்காரம் பண்ணுகிறோமென்று துதித்தார்கள். திருமால் பூமியை முன்போல நிலை நிறுத்தி மறுபடியு முன்போலப் பிரமாவாய் விட்டார்.

ஒன்பதாவது
அத்தியாயம்.
பிரம சிருட்டி கூறியது.

ஸ்ரீ பரமேசுவரனுடைய திருவருளால் பிரமதேவர் முன் அழிந்துபோன பிரபஞ்சத்தைச் சிருஷ்டிக்க நினைத்தார். அப்போது அவருடைய எண்ணமில்லாமலே அவரிடத்தில் தமோமய சிருஷ்டி உண்டாகியது. அவை தமம், மோகம், மஹா மோகம, தாமிசிரம, அந்ததாமிசிரம் என்னபபடும. இவை அவித்தியா பஞ்சக மெனப்படும். அதன் பின் தொழில் அறிவில்லாத மரம முதலிய சிருஷ்டிக்கபபட்டன. இவை நன்மை தீமை யுணராமையால் வேறு சிருஷ்டி தொடங்கினன், அது திர்யக்கு சுரோத மென்னபபடும் பசு வாதிய வாம. அதுவும் பயனில்லாமையால் ஊர்த்த சுரோதமெனபபட்ட சிருஷ்டிசெய்தான். அது சத்துவ குணபிரதான தெய்வத சிருஷ்டியாம். அதையும் விட்டு மற்றொரு சிருஷ்டி செய்தான். அது வாக்குசுரோத சிருஷ்டி யென்னபபட்ட மனுஷ சிருஷ்டியாம். பிறகு பூத பிரேத பைசாச சிருஷ்டி யுண்டாயிற்று. இவ்வைந்தும் வைகிருத சிருஷ்டி யென்னப்படும். பின் சத்தாதியும, பின் இந்திரியமும் அவற்றுக் கதிஷ்டான தெய்வங்களும் சிருஷ்டிக்கபபட்டன. இம்மூன்றும் பிராகிருத சிருஷ்டி. இவை ஒன்பது வகையாம். அவை யாவன: மகத் சிருஷ்டி முதலாவது; சத்தாதி யிரண்டாவது; இந்திரியாதி மூன்றாவது; விருட்சமாதிகள் நாலாவது; மிருக சிருட்டியைந்தாவது; தேவ சிருஷ்டி யாறாவது; மனித சிருஷ்டி யேழாவது; பூதாதி யெட்டாவது; கௌமாரம் ஒன்பதாவதாம். இசசிருஷ்டி பேதங்களை விரித்துச் சொல்லின் அளவுபடாது. ஆதலால் கௌமார சிருஷ்டியை விரித்துச் சொல்லுகிறேன.

சனகன், சனந்தனன், சனற்குமாரன், ரிபு, இவர்கள் மானத சிருட்டியினுண்டானவர்கள். இவர்களும் மானசபுத்திரர் எனனப்பட்டு வைராக்கிய முடையவர்களாய்த் தவஞ்செய்து மேன்மை பெற்றார்கள். இதனால் மகிழ்ந்திருந்த பிரமதேவன் மாயையால் மயங்கி ஒருவரும் தனக்கு ஒப்பில்லையென்று நினைத்தான். ஆகையால் சிருட்டிவலி அவனை விட்டு நீங்கிற்று. அதனால் பிரமதேவன் வருந்தியிருந்தான். அவனுக்குத் திருமால் பிரத்தியட்சமாய்ப் பண்டிதகளான புத்தி மதிகளைச் சொல்லி

மறைந்து போனார். கொஞ்சம அஞ்ஞானம விலகிற்று. பிரமன் சிருஷ்டியருளும்படி திருமாலை நினைந்து பல நாள் அருந்தவம புரிந்தான். அவர் திருஷ்டியுதவுஞ் சக்தி எனக்கு இல்லை யென்று கருதிப பிரத்தியட்சமாக வில்லை. பிரமன துககத்தோடு அழு தான. இப்படிப பிரமன் வருந்துவதை யுணர்ந்த பரமசிவன் தன்னைத் தியானிக்கும்படியான அறிவைத் தாமே கொடுத்தார். அந்த எண்ண முண்டானதும் சிவ பெருமானுடைய திருவடியைப் புருவ மத்தியத்தில் சிந்தித்துக் கொண்டிருந்தான். சிவபெருமா னும அவனுடைய புருவ மத்தியத்திலிருந்து பிரத்தியட்சமானார்.

பிரமதேவன் திடுக்கென் றெழுந்திருந்து, பஞ்சாபாணனை வலம் வந்து அஷ்டாஙக சாஷ்டாங்கமாகப பணிந்து பலவாறு துதித்தான். உமாசகாயன் மனமகிழ்ந்து உன கருத்தென்ன வென்றுகேட்டார். பிரமா, நான்கருவத்தினால் உமது திருவருளை மறந்து இறுமாந்து தருக்கினேன். அதனால் என் சிருஷ்டித் தொழில் மறைந்து போயிற்று. படைப்புத் தொழிலை யெனக்கருள் புரிய வேண்டு மென்றான், ஸ்ரீ பாமேசுவரன் தமது அமசமாக அநேக ருத்திரர்களை யுண்டாககினார். பிரமன் மீண்டும பணிந்து மனித சிருஷ்டி யையுஞ் செய்தருள வேண்டு மென்று கேட்டான். காலகாலனாகிய மஹாதேவன் துககமுடைய மனிதரைச சிருட்டிக்க மாட்டோம்; நீயே சிருஷ்டித்துக்கொள்; நாம் தட்சிணா மூர்த்தி வடிவமாயிருந்து அநுககிரகம் செய்வோ மென்று, பிரமனுக்குச் சிருஷ்டி அனுக்கிரகம் புரிந்து மறைந்தருளினார்.

பின்னர் உருத்திரர் சற்குண சிருஷ்டிகளையே செய்தார்கள். பின்னர் பிரமன் அவருடைய சிருஷ்டியையுந் தன்னிடத்தில் உண்டாம்படி யடைந்து, சத்தாதிகளையும் பூதஙகளையும் பஞ்சீகரணம் (கலத்தலை) செய்து ஸ்தூலமும சூட்சமமு மாகிய வாயு, அக்கினி, அப்பு, மண், மலை, விருட்சஙகளையும், கலை, விகலை, யுகம் முதலிய காலங்களையும் சிருஷ்டித்தான். பின் மரீசியைக் கண்ணிலும், பிருகுவை இருதயத்திலும், அங்கிராவைச் சிரசிலும, கிருதுவை அபான வாயுவிலும், புலகனை வியான வாயுவிலும், புலஸ்தியனை உதான வாயுவிலும், தட்சனைப் பிராண வாயுவிலும், வசிஷ்டரைச் சமான வாயுவிலும், அத்திரியைச் சுரோத்திரத்திலும் இருந்து உண்டாக்கினன். இவர்களுக்கு நவப்பிரஜாபதிகள் என்று பேர். அநந்தமான தருமங்களையுஞ் சிருஷ்டித்தான், பிரஷ்

டத்தினின்றும் அசுரரை உண்டாக்கினான். பின்னர் அந்தச்சொரூபத்தை விட்டு மற்றொரு சொரூபத்தை யெடுத்துக் கொண்டான். விடப்பட்டது மனிதர்களுக்கு இராக்கால மாயிற்று. புதிதாக எடுத்துக்கொண்ட ரூபத்தில் சத்துவகுண மதிகமாக இருந்தது ஆதலால் அவன் முகத்திலிருந்து தேவர்களை யுண்டாக்கி விட்டு, அந்தச் சொரூபத்தையும் விட்டுவிட்டான். விடப்பட்டது மனிதர்களுக்குப் பகற்காலமாக விளங்கியது. பிறகு பிதிர்த் தேவதைகளைப் படைத்தான். அந்தத் தேகத்தையும் விட்டு விட்டான், அது சந்தியாகால மாயிற்று. வேறொரு உடலை யெடுத்துக்கொண்டு மனிதரைச் சிருஷ்டித்தான். பின் அந்த வுடலையும் விட்டான். அது சந்திரிகையாக விளங்கியது.

பிறகு இராசதகுணப் பிரதானமான வுடலை யெடுத்துக் கொண்டு இராட்சதர்கள், சர்ப்பங்கள், பூதங்கள், கந்தர்வாதிகள் எல்லோரையும் படைத்தான். பிறகு வேறொரு சரீரத்தை யெடுத்துக்கொண்டு பறவை மிருகங்க ளெல்லாம் படைத்தான். பின் யாகங்களையும் பல விதிகளையும் படைத்தான். இவற்றிற்கெல்லாம் முதலில் பஞ்சீகரணஞ் செய்யப்பட்ட மஹா பூதங்களே காரணமாகும். இவ்வாறு பிரமன் சிருட்டித் தொழிலைப் புரிந்தான்.

பத்தாவது அத்தியாயம்.

இரணியகருப்ப சிருட்டி கூறியது.

தமோமயச சொரூபத்தைக்கொண்ட பிரமதேவன், முன் படைத்தவை யாவும் அபிவிருத்தியாகக் கருதி அந்தச் சொரூபத்தைவிட்டு இரணியகர்ப்ப சொரூபத்தைக் கொண்டான். இரணியகருப்ப ரூபம், சூத்திராத்மாச் சொரூபம், அந்தர்யாமி ரூபம் இம்மூன்றையும் கேளுங்கள்.

சூட்சும பூதங்களாகிற சத்த, பரிச, ரச, ரூப, கந்தங்களென்பவற்றிலிருந்து, சத்துவகுண சமஷ்டியான ஞானேந்திரியங்களைந்தையும் ஞானசத்தி தோற்றுவிக்கும். அந்தச் சூட்சும பூதங்களில் இராஜசகுண சமஷ்டியாகிற கர்மேந்திரியங்களைக் கிரியாசத்தி யுற்பத்தியாக்கும். அந்த ஞானசத்திகளுக்குஞ் சேர்ந்து எல்லா வுயிர்க்கும் அந்தக்கரணமாம். அதிற்கலந்துள்ள பிரமதேவனுக்கு இரணியகருப்பனென்று பேர். கிரியாசத்தி [illegible]

கூடிப் பிராணாதி வாயுக்கள் ஐந்தின் சமஷ்டியான பிராணவாயு தோன்றியது. அதிலேயுள்ள விஷ்ணு சூத்திராத்மா வென்னப் படுவான். இவ்விரண்டினும் வசிக்கின்ற மகேசுவரன் அந்தர்யாமி யெனப்பெயர் பெறுவான்.

பிறகு பிரமதேவன் தன்னுடைய சரீரத்தை இரண்டுபங்காக் கிக் கொண்டான். அவற்றுள் ஒருபாகம் ஆணும் ஒருபாகம் பெண்ணுமாயின. அந்தப் பெண்ணினிடத்தில் விராட், சுராட், சம்ராட் என்று மூவர்தோன்றினார்கள். இம்மூவருள் சுராட் என்பவன் ஸ்தூலபூத பஞ்சக சொரூபமாகிய பிரமாண்டத்திற்கு அபிமானியாவான். ஸம்ராட் பிரமாண்டத்தின் சூட்சும சொரூபத்துக்கு அபிமானியாவான். விராட் காரணசரீரத்துக் கபிமானியாவன். விராட், மனு சதரூபை யென்பவர்களைப் படைத்தான். மனு சதரூபையை மணந்து பிரியவிரதன், உத்தானபாதன் என்பவர்களைப் பெற்றான். உத்தான பாதனுக்குப் பிரசூதி, ஆகூதியென்று இரண்டுபெண்கள் பிறந்தார்கள். பிரசூதியைத் தட்சன்மணம்புரிந்து சிரத்தை முதலான பதின்மூன்று பெண்களையும், கியாதி முதலான பதினொரு பெண்களையும் பெற்றான். இந்த இருபத்துநான்கு பெண்களிடமாக அளவிலாத பிரஜைகள் உதித்தன; ஆகூதியை மானசப்பிரஜாபதி மணந்து எக்கியனைப் பெற்றான். எக்கியன் பன்னிரண்டு ரிஷிகளைப் பெற்றான். இவர்களெல்லாரும் பூர்வ கன்ம வாசனையினாலே சிவர்க்கினைப்படி பிறந்தார்கள்.

உலகத்தில் உயிர்கள் தோன்றுவது இயற்கையாலென்றும் கருமத்தினாலேயே யென்றும் ஒருவரோடொருவர் மாறுபட்டுக் கூறுவார்கள். அதுவேதக்கருத்தோடு மாறுபடுகின்றது. இவ்விஷயத்திற் சந்தேக முண்டாயிற்று. ஜைமினி, வியாசர், அட்சபாதா, களாமாலி, சுமந்து, பயிலர், பதஞ்சலி, ஆங்கிரசர்முதலிய அநேக ரிஷிகள் இமயச்சாரலில் ஒருங்குகூடி இந்த விஷயத்தைப்பற்றி யோசிக்கலானார்கள். உயிர்கள் உற்பத்தியாவதுகாலத்தினாலேயோ கருமத்தினாலேயோ, மாயையினாலேயோ, பரமசிவனாலேயோவென்று சந்தேகித்து முடிவுதெரியாமல் இது சிவபிரானாலேயே யுதியத் தக்கதுமென்று நிச்சயித்து செபோன் கொடுந்தவஞ்செய்தார்கள். அப்போது சிவபெருமான் பிரத்தியட்சமானார். அதைக் கண்ட ரிஷிகளெல்லாரும் மகாதேவனை வணங்கித் துதித்துத் தங்களுடைய சந்தேகத்தைக் கூறி உண்மையிதுவென்று கூறி

யருள வேண்டுமென்று பிரார்த்தித்தார்கள். மஹாதேவன் அவர்களை நோக்கி ரிஷிகளே! ஜீவசிருஷ்டி மாயையாலுங் கன்மத்தாலும் தனித்து உண்டாகவில்லை. அநாதி கன்மம் ஆதாரமாய் நிற்க மாயையை உபாதான காரணமாகக்கொண்டு நாமே உற்பத்தியாக்குவோம் என்று கூறி மறைந்தருளினார். அதுகேட்டுச் சங்கையொழிந்து ரிஷிகளெல்லாரும் மகிழ்ந்து உமாசகாயனைப் பலவாறு துதித்தார்கள்.

பதினோராவது அத்தியாயம்.

ஜாதிவரலாறு கூறியது.

முன்காலத்தில் ஜலபிரளயமுண்டாக, உலகமெல்லாம்ஜலத்தில் அமிழ்ந்திருந்தது. இருள் மூடிக்கொண்டிருந்தது. அந்தப் பிரளயத்தில் திருமால் யோகநித்திரை செய்துகொண்டிருந்தார். அந்தத் திருமாலுடைய உந்தியிலே ஒரு பொன்மயமான தாமரை பூத்திருந்தது. அந்தத்தாமரைப்பூவிலே சிவபெருமான் திருவருளாலே பிரமதேவன் உற்பவித்தான். அந்தப்பிரமதேவனுடைய முகத்திலே பூர்வவாசனை காரணமாகப் பிராமணர்கள் பத்தினிகளோடு பிறந்தார்கள். புஜத்திலிருந்து க்ஷத்திரியர்களும் மனைவியரோடு தோன்றினார்கள். தொடையினின்றும் வணிகர் பாரியைகளோடு உதித்தார்கள். பாதத்தினின்றும் பத்தினிகளோடு சூத்திரர் பிறந்தார்கள். இந்நான்கு ஜாதிகளுடைய கலப்பினாலே பல சாதிகளுண்டாயின. இவையெல்லாம் உலகத்திற்குபகாரமாகவே யுண்டாயிற்று. உயர்ந்தகுலத்துப் புருஷனுக்கும், தாழ்ந்தகுலத்துப் பெண்ணுக்கும் பிறந்தவன் அநுலோமன் என்றுபெயர்பெறுவான். உயர்குலத்துப் பெண்ணும் தாழ்ந்தகுலத்து ஆடவனும் கூடிப்பிறந்தவனுக்குப் பிரதிலோமன் என்று பேர். அநுலோம குலவானுக்கும் பிரதிலோமகுலப் பெண்ணுக்கும் பிறந்தவன் அந்தராளனாவான். பிரதிலோமத் தந்தைக்கும் அநுலோமத் தாய்க்கும் பிறந்தபிள்ளை விராத்தியன் என்னப்படுவான், இவர்களுள் முதல் நாலு வருணமும் உத்தமம். பின்னாக்கூறிய நாலும் மத்திமம். இவர்களுடைய கலப்பினால் பிறந்த சந்ததிகள் சங்கர ஜாதியென்னப்படும். இவர்கள் தத்தம் ஜாதிகளுக்கேற்பக்கூறிய ஆசாரம் தவறாமல் நடந்தால் முத்தியடைவார்கள். ஆதலால்

வர்ண பேதங்களும் உலகுக்குபகாரமாகவே பிரமதேவனால் உண்டாக்கப்பட்டன. இந்த ஜாதி பேதங்கள் பூர்வ கன்மத்தை யனுசரித்தே உண்டாயின. இந்தச்சாதி பேதங்கள் உடலைப்பற்றியனவே யன்றி உயிருக்குச் சம்பந்த மில்லை. ஆனாலும் சீவன் உடலையே நானென்று கருதியிருத்தலாற் சம்பந்த முண்டு. உடலை நானென்று அபிமானித் திருப்பதினாலேயே பந்த முண்டாயிற்று. வேதாந்த சிரவணத்தினாலே அது விலகும். விலகப், பத்தி மார்க்கத்தினின்று தவறாமல் நடந்தால் பரமசிவன் கருணையுண்டாம். அதனாலே அநுபவஞானமுண்டாகும். அந்த ஞானத்தினாலே பந்த மறும். இந்த வேதாந்த ஞானானுபவ மில்லாதவர்கள் தத்தம் வர்ணாசிரம நெறிதவறாமல் நடந்து சிவபக்தி செய்தல் வேண்டும். மெய்ஞ்ஞான சித்தியில்லாதவர்கள் ஜாதியாசாரத்தைக் கடந்து நடப்பாரானால் நரகாவஸ்தையை யடைவார்கள். ஆதலால் முத்தி பெறும் இச்சையுள்ளவர்கள் வருணத்துக்குத் தக்க ஆசாரத்தைக் கைக்கொண்டு நடந்து, சற்கருமங்களைச் செய்து, சிவபத்தி செய்தலால் மனக்களங்க மற்று மெய்ஞ்ஞானம் பெற்று முத்தி பெறுதல் வேண்டும்.

பன்னிரண்டாவது

அத்தியாயம்.

தீர்த்த மகிமை கூறியது.

தபோ நிதிகளே! சகல பாபங்களையு மொழித்து முத்தியை அளிப்பதான மகிமையுள்ள தீர்த்த விசேஷங்களைக் கேளுங்கள் என்று சூதர் சொல்லுகிறார்.

தேவர்களும் முனிவர்களும் துதிக்கின்றதும் சகல போகங்களையும் தருவதும், உலகத்தாரால் புகழப்பட்டதுமாகிய சிங்காது வார மென்று ஒன்று உண்டு. அந்தத்தீர்த்தத்தில் சித்திரைமாசம் அசுவதி நட்சத்திரத்தில் ஸ்நானஞ் செய்து, விரதமிருந்து, பெரியோர்களுக்குச் சொர்ணம் முதலிய தானங்களைச் செய்தால் பூர்வஜன்மங்களிற் செய்த பாபங்களெல்லாம் ஒழியும், அவர்களுக்கு முத்தியும் கைகூடும். சோமநாத புரத்தில் சமுத்திரத்தில் சோம தீர்த்த மென்று ஒரு கட்ட மிருக்கிறது. அந்தத்தீர்த்தத்தில் மருவகாலம், திருவாதிரை அட்டமி, வியதீபாதம், ஞாயிற்றுக்கிழமை

சதுர்த்தசி யிவைகளில் ஸ்நானஞ் செய்து, தான தருமங்களைச் செய்து சோமநாதக் கடவுளை வணங்கித் துதித்தால் சகல பாபங்களு மொழியும். மோட்சமும் பெறலாம். காசியிலுள்ள மணி கர்ணிகையில் இதிப்படி ஸ்நானம் பண்ணி, வேதியர்களு அன்ன தானம் முதலிய செய்து சிவவேசரைப் பணிகிறவர்கள முத்தி பெறுவார்கள். பிரயாகையில் சித்திரை மாதம் பரணி, கார்த்திகை, ரோகிணி நட்சத்திரங்கள் கூடிய தினங்களில் ஸ்நானம் பண்ணித் தானங்கள்செய்தால் மோட்சமடைவார்கள். கங்கையானது சமுத்திரசங்கம மாகுமிடத்தில் மிருகசிரிஷம, மகம், திருவாதிரை நட்சத்திரங்களில் ஸ்நானம் பண்ணிச் சிவானுபூதிமான்களுக்குத் தன்னால் இயன்றவளவு தானஞ்செய்தால் புக்தி முக்தியிரண்டும் பெறுவார்கள். நர்மதா நதியில் ஸ்நானஞ்செய்து தானம்புரிபவர் பிரமதேவருலகத்தில் வசிப்பார்கள். யமுனாநதியில் வைகாசிமாசம் விசாகநட்சத்திரம், ஞாயிற்றுகிழமைகளில் நீராடி அந்தணர்க்கு அன்னதானஞ் செய்கிறவர்கள் சிவலோகத்தையடைவார்கள். சரஸ்வதிநதியில் திருவாதிரை நட்சத்திரத்தில் ஸ்நானம் பண்ணிச் சிவபக்தர்களுக்குத் தானம் வழங்கினுல் அவர்கள் பூலோகத்தில் புத்திர களத்திராதிகளுடன் பெருவாழ் வடைந்து அந்தத்தில் சொர்க்கவாழ்வும் பெறுவார்கள். கோதாவரி நதியில் ஆவணிமாசத்தில பிரகஸ்பதி சிங்கராசியி லிருக்குங் காலத்தில் ஸ்நானம் பண்ணிச சற்பாத்திரத்தில் தானம் செய்பவர் கங்கா நதியில் பன்னிரண்டு வருஷம் ஸ்நானம் பண்ணின பலனை யடைவார்கள். சையபர்வதத்தில் நின்றும் உற்பத்தியாய் வருகிற கிருஷ்ண வேணி யென்றொரு நதியுண்டு. அதில் பருவகாலத்தில் நீராடி உத்தமருக்குத் தானம் புரிபவர் நிர்மலராய் முத்தியடைவார்கள். பிரமன் விஷ்ணு இந்திரன் முதலிய தேவர்கள் இந்த நதி நீரினுலே இந்திர நீலப்பர்வதத்திலெழுந்தருளிய சிவ பெருமானுக்கு அபிஷேகம் புரிந்து ஆராதிக்கின்றார்கள். ஆதலால் அதன் மகிமை அளவு படாததாம். தெட்சணகைலாசமென்கிற திருக்காளஸ்தியில் சொர்ணமுகியென்று ஒரு நதியிருக்கிறது. இந்தப பூலோகத்திலுள்ள தீர்த்தங்களெல்லாம் மாசிமகநட்சத்திரதினத்தில் இந்தச்" சொாண முகியாற்றில் முழுகித் தங்களுடைய பாபங்க ளொழிந்து பரிசுத்தமாகின்றன. ஆதலால் மாசி மகத்தில் அந்த நதியில் ஸ்நானம பண்ணுகிறவர்கள் எவரானாலும் தாங்கள் நினைந்தபடி போகங்களை யனுபவித்து முத்தியையும அடைவார்

கள். பம்பா நதியானது பிரம விஷ்ணு வாதி தேவராலும் விரும்பப்படுவது. அதில் பருவத்திலும், ஞாயிற்றுக் கிழமையிலும் அஸ்தம் பூர நட்சத்திரங்களிலும் ஸ்நானம் பண்ணி உத்தமருக்குத் தானம் செய்தால் பாவங்களெல்லா மொழிந்து சொர்க்கத்தையும் பெறலாம். திருவதிகை நகரத்தருகில் குடிலை யென்னுமொரு நதியோடுகின்றது. அந்நதியில் ஆவணி மாசம் பூரணையில் ஸ்நானம் செய்து தானங்களுஞ் செய்பவர்கள் புண்ணியர்களாய்ப் புக்தி முக்திகளைப் பெறுவார்கள். விருத்தகிரியிலோடுகிற மணிமுத்தா நதியில் மார்கழி மாசம் ஆதிரை நட்சத்திர தினத்தில் ஸ்நானஞ் செய்து உபவாச மிருந்து தானஞ் செய்பவர்கள் போக மோட்சங்களை யடைவார்கள். சிதம்பர க்ஷேத்திரம் சிவ கங்கையில் ஸ்நானம் செய்து சிற்சபையில் ஆனந்தத் தாண்டவம் புரியும் நடராஜ மூர்த்தியைப் பணிகிறவர்கள் எப்படிப்பட்டவராயினும் சகல பாபங்களினின்றும் விடுபட்டுப் போக மோட்சங்களைப் பெறுவார்கள். தில்லைக்குச் சமீபத்தில் குய்ய தீர்த்த மொன்றிருக்கிறது. அது பிரமஹத்தி முதலிய மாஹா பாதகங்களையும் விலக்கு மியல்புள்ளது. பிரமபுர மென்னப்படும் சீர்காழியில் பிரமாவினு லுண்டாக்கப்பட்ட பிரம தீர்த்த மென்றொன்றிருக்கின்றது. அது பிரமாவுக்குச் சிருஷ்டிக்கு மதிகாரத்தைக் கொடுத்த மகிமையுள்ளது. கிரகண காலம், ஆதிவாரம், விஷுவகாலங்களில் அதில் ஸ்நானஞ் செய்தால் எல்லாப் பாவங்களும் தொலையும். அதற்குச் சமீபத்தில் சூரிய தீர்த்த மென்றொன்றிருக்கின்றது. அதில் மூழ்குவோர் முத்தி பெறுவது நிச்சயம். காவேரிசங்கமத்தில் ஸ்நானம் செய்தால் அவர்களுக்குப் பாபமே சேராது, மோட்சமு மெளிதாம். திரு வெண்காட்டில் முக்குள நீரில் முழுகுவோர் அடையும் பலன் சொல்லிலடங்காது. காவிரியாற்றங் கரையில் திருவிடைமருதூர் முதலிய பல தலங்களுள. அங்கிடங்களிலும் குறித்த காலங்களிலாயினும் எப்பொழுதாயினு மூழ்கிச் சிவதரிசனஞ் செய்கிறவர்கள் முக்தரே யாவார். கும்பகோணத்திலுள்ள மாமகதீர்த்தத்தில் மூழுகினவர் அடையும் பலன் சொல்ல முடியாது. வன்மீக க்ஷேத்திரத்தில் க்ஷீரகுண்ட மென்றொரு தீர்த்த மிருக்கின்றது. அத்தீர்த்தத்தில் பங்குனி யுத்திரம் பருவம், ஆதிவாரம், அஷ்டமி யின்னாட்களில் ஸ்நானம் செய்து தானங்களும் செய்பவர்க்கு மோட்ச மெளிதி லடையத்தக்கதாம். சேது மஹா தீர்த்தத்தை யறியாதவர்கள் யார்? ஸ்ரீராமனின்

அதில் ஸ்நானஞ் செய்து இராவண வதம் புரிந்த பாவம் ஒழிந்தா ரென்றால் அதன் மகிமை அளவிடப்படாததே யாம். அந்தச சமுத்திரத்தில் பல தீர்த்தங்களுளவாம். அவை யெல்லாம் மஹா பாதகங்களைத் தொலைத்து முத்தியளிக்குந் தன்மையுடையன.

இவ்விதமான தீர்த்தங்கள் அளவில்லாதனவுண்டு. இந்தத் தீர்த்தமகிமைகளெல்லாம் ஸ்ரீபரமேசுவரன் உமாதேவியாருக்குக கூறியருளினார். உமாதேவியார் சுப்பிரமணியருக்குச் சொன்னார். அவர் பிரமதேவனுக்குச சொல்லியருளினார். பிரமதேவர் வியாச முனிவருககுபதேசித்தார். வியாசபகவான் எனக்கு உரைத்தருளினார். நான் அவருக்குத்தொண்டு செய்து இவைகளைப்பெற்றுக் கொண்டேன். அந்த அருமையான பொருளை யுங்களுககு நான் சொல்லி விட்டேன். நீங்களும உங்களுடைய சிஷ்யர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இத்தீர்த்தமான்மியத்தை யுணர்ந்து அதன்படி நடப்பவரும், பாராயணஞ்செய்பவரும் புத்திமுத்திகளையடைவார்கள். சகலதேவர்களும அவர்களிடத்தில் விருப்பமா யிருப்பார்கள். அவர்களுககு அடையபபடாத தொன்றுமில்லை என்று சொல்லிவிட்டுச சூதமுனிவர் கயிலாசகிரிக் கெழுந்தருளினார்.

சிவமான்மியகாண்டம்

முற்றிற்று.

உ

செந்திலாண்டவன்

திருவடி துணை.

இரண்டாவது

ஞானயோககாண்டம்.

முதலாவது அத்தியாயம்.

ஞானயோகவரலாறு கூறினது.

ஸ்ரீபரமேசுவரன் உமாதேவியாரோடுங்கூடியினிது வீற்றிருக்கும் கைலாய மலையில் மலரும் கனிகளுந் தரும்படியான பலவகை மரங்களும் செடிகளும் கொடிகளும் அடர்ந்து சுகந்தங்கமழ்வதான குளிர்ந்த சோலையொன்றுண்டு. அந்தச் சோலையின் ஒரு பக்கத்தில், சூதமுனிவர், விபூதி ருத்திராட்சமணிந்து சுகாசனத்திலிருந்து பரமசிவனை நோக்கித் தவம் புரிந்து கொண்டிருந்தார். அப்போது, நைமிசாரணியத்தில் தவம்புரிந்து கொண்டிருந்த விசாலாட்சன், ஜாபாலன், ஆருணி, ஜமதக்கினி, முதலிய அநேக ரிஷிகள் கைலைக்கு வந்து அந்தச் சோலையுட்புகுந்து சூதமுனிவரைக்கண்டார்கள். அவரை நோக்கி சூதபுராணிகரே! எங்களுக்கு ஞானயோகத்தைக்கூறி யருளவேண்டுமென்று வேண்டினார்கள்.

அது கேட்ட சூதமுனிவர் முகமலர்ந்து அவர்களை நோக்கி இந்த ஞானயோகத்தை, ஸ்ரீபரமேசுவரன் பிரகஸ்பதிக்குச் சொன்னார். அப்போது சுப்பிரமணியக் கடவுள் உமா தேவியாரின் மடிமேலிருந்து கேட்டுக்கொண்டிருந்தார். அவர் தன்னை ஆராதனை செய்த வசிஷ்டருக்குபதேசித்தார். வசிஷ்டர் சத்தி முனிவருக்கும் பராசரர்க்கும் உபதேசித்தார். பராசரர் வியாசருக்குச் சொன்னார். வியாசர் எனக்கு உபதேசித்தருளினார். என் குருவா

கிய வியாசர் எனக்குச் சொன்னபடியே நான் உங்களுக்குச் சொல்லுகிறேனென்று சொல்லத்தொடங்கினார்.

இரண்டாவது அத்தியாயம்.

வர்ணாசிரமந் தவறாதிருப்பவரது பெருமைகூறியது.

முன்னொரு காலத்தில் பிரளயமுண்டாயிற்று. அப்போது உலகம் எல்லாம் தமோமயத்தில் அமிழ்ந்திருந்தது. பின் பரமேசுவரனுடைய கருணையினாலே சத்துவத்திலிருந்து மூலப்பிருகிருதிதோன்றிற்று. அதன்பின் பிரமா விஷ்ணு ருத்திராகளாகிய மும்மூர்த்திகளும், முக்குணங்களிலிருந்துண்டானார்கள். பின்னர், பஞ்சபூதங்கள், தன்மாத்திரைகள், ஞானேந்திரியங்கள், கன்மேந்திரியங்கள், பஞ்சவாயு, கரணம முதலியன பரமசிவனருளாலுண்டாயின. பின்னர் பிரமதேவன் அண்டத்தைப்படைத்தார். அவ்வண்டம் சகலவுலகங்களுக்கும் சகல சராசரங்களுக்கு மிடங்கொடுத்துக்கொண்டிருக்கும்.

பூலோகத்திலுள்ள மனிதர்கள் கடைத்தேறும் பொருட்டு வருணாசிரமதருமங்களை யுண்டாக்கினர். மனிதர்கள் தத்தமக்குரிய வருணாசசிரமந் தவறாமல் நடந்து உமாசகாயனை யாராதித்துத் தோத்திரஞ் செய்கிறவர்களே முக்திக்கருகராவார்கள். வருணாசிரம தருமங்கடந்து நடப்பவர்கள் கீழ்நிலையடைவதரிது. வருணாச்சிரமதருமந் தவறாமலொழுகிச சிவபிரானை வழிபடுதலால் ஞானமுண்டாகும். ஞானத்தினாலே அஞ்ஞானமொழியும். அஞ்ஞானநீங்கவே பந்தமொழியும். பந்தமொழியவே முத்தியுண்டாகும். இப்படிப்பட்டவர்களே சிவாராதனை செய்யத்தக்கவர். வருணாச்சிரம தருமத்தை யிழந்தவர்கள் சிவாராதனைக் கருகமாகார். இது வேத சம்மதமாயுள்ள தாகையால் வருணாசிரம தருமத்தை அவசியந் தழுவி நடக்கவேண்டும்.

மூன்றாவது அத்தியாயம்.

பிரமசரியங்கூறியது.

பிராமண குலத்தில் பிறந்த சிறு பிள்ளை உபநயனமான வுடனே வேதாத்தியயனஞ் செய்யவேண்டும். இந்த விதிமுறைப்

படாது. பலாசு, வில்வம், அரசு இவைகளில் ஏதாவதொரு தண்டம் தரிக்கவேண்டும். அந்தத்தண்டம் சிரசளவாக இருத்தல் வேண்டும். முஞ்சி, மேகலை, கிருஷ்ணாஜினம், யக்ஞோபவீதங்களாகிய சின்னங்களையும் அணிந்து கொண்டு மூன்று காலத்திலும் சந்தியோபாசனை தவறாமல் செய்து, குருபணிவிடை புரியவேண்டும். சத்பிராமணார் வீடுகளில் பிட்சையெடுத்துப் புஜிக்கவேண்டும. காமாதியகுற்றங்களில்லாதவனாய்க காலையுமாலையும் அக்கினிகாரியமாகிய சமிதாதானம் தவறாமல் செய்யவேண்டும். தேவரிஷி பிதிர்க்களுக்கும் வேதமந்திரத்தினால் தருப்பணம் புரியவேண்டும். இதுவே பிரமசரியகிரமமாகும். ஓமாக்கினி, அல்லது விராசாக்கினியிலுண்டான விபூதியினாற்சர்வாங்கமும் உத்தூளனஞ்செய்து கொண்டு, நெற்றி முதலிய குறியிட்ட ஸ்தானங்களில் திரிபுண்டரமாகத்தரித்துககொண்டு ஸ்ரீபரமேசுவரனை யாராதிக்கவேண்டும். மாதா, பிதா, தமையன், விருத்தர், ஞானிகள், இவர்களைக்கண்டால் எழுந்திருந்து அபிவாதனஞ் செய்து வணங்கி, அவர்கள் தீர்க்காயுசாய் வாழ்கவென்று கூறும ஆசீர்வாதம் பெறவேண்டும். ஆசாரியனை நமஸ்கரிக்கும்போது இடவலக்கைகளை மாறி அவரது இரண்டு பாதங்களையுந்தொட்டு வணங்கவேண்டும். சாஸ்திரங்களை வாசிக்கத் தொடங்கும்போதெல்லாம் ஆசாரியனை முறைப்படி வணங்கவேண்டும். மாதா, பிதா, குருவம்சத்தார்களிடத்தில் அடக்கமுடையவனாயிருந்து, குருவைவணங்கி வேதாத்தியயனஞ் செய்துகொண்டிருப்பவனே சிறந்த பிரமசாரியாவான்.

சத்தியம் பேசுதல், வேதத்தை மறவாமலோதல், நித்திய நைமித்திககர்மங்களிலன்புடைமை,பிட்சையெடுத்துண்ணுதலாதி ஒழுக்கங்களில் தவறாதிருத்தல் வேண்டும். பிட்சையெடுப்பதற்குத் தகுந்த பிராமண கிருகங்களகப்படாத பட்சத்தில், மற்றையவருணத்தார் வீட்டில் அரிசி பிக்ஷையெடுத்து ஆசிரியனுக்கும் கொடுத்துப் பின் தான் கிழக்கு நோக்கியுட்கார்ந்து புசிக்கவேண்டும். பிக்ஷை யெடுக்கும்போது பிராமண பிரமசாரி பவதிபிட்சாந்தேகி யென்றும், க்ஷத்திரியர் பிட்சாம்பவதி தேகியென்றும், வைசியர்கள் பிட்சாந்தேகி பவதியென்றும் கூறவேண்டும். வேதவத்தியயனத்திரவேறு மந்திரங்களை ஜபித்தல்கூடாது. இந்தப்பிரமசரிய ஒழுக்கம் தவறாமல் நடக்கும் போது பிரபஞ்சத்தில் வெறுப்புத்

தோன்றினல் சந்நியாச ஆசிரமத்தை அடையலாம். இல்லாவிட்டால் கிருகஸ்தாச்சிரமத்தை அடையலாம.

நான்காவது அத்தியாயம்.

கிருகஸ்தாச்சிரம தருமங் கூறியது.

பிரமசரிய விதிதவறாமல் நடந்து வேதமோதியபின், குருவினுடைய உத்தரவுபெற்றுக்கொண்டு சமாவர்த்தனஞ் செய்துமுடிக்கவேண்டும். பின் தன்னுடைய கோத்திரத்துக்குத்தகக உயர்ந்த குலத்திற் பிறந்து, குணங்களாலும் ஒழுக்கங்களினுலும் இல்லற தருமத்திற்குத் தகுந்த அழகிய ஒரு பெண்ணை வேதவிதிவழுவாமல் பாணிக்கிரகணம்புரியவேண்டும், ஆறு, மரம், நடசத்திரம் முதலிய பேரில்லாதவளாயுமிருககவேண்டும். அந்தமாதை மணம்புரிந்து, அவுபாசனம் தவறாமல் செய்யவேண்டும். சந்ததியை விரும்பி ருதுகாலததில சங்கமஞ்செய்யவேண்டும். தேவர்கள், அககினி, அதிதிகளை உத்தேசித்துசசமையல் செய்தல், தர்மத்துக்காகச் சம்பாதித்தல், யாகஞ்செய்தல், யாகம செய்வித்தல், வேதமுணர்ந்த வைதிகரிடததில் தானமேற்றல், இவைகளைச செய்யவேண்டும. இவ்வாறு நடப்பவன் முத்தியடைவான. இவ்விதிகளைக் கடந்து நடககிறவன் நரகததில விழுவான். இனி இல்லறத்திற்குரிய நித்திய விதிகளைக்கூறுவோம்.

விடிதற்கு முந்திய பிராமமுகூர்த்தத்தில் நித்திரையினின்றுமெழுந்திருந்து, தெய்வந்தொழுது, தருமத்தைச சிந்தித்து, சனங்கள் நடவாம லிருக்கிற இடத்தில்போய் மலஜலோபாதை நீககிக்கொண்டு சௌசம் முடித்து, ஆசமனம் செய்து, பின் தந்தசுத்திசெய்து ஸ்நானஞ் செய்யவேண்டும். பிறகு காலைச்சந்திசெய்து, பிராணாயாமஞ் செய்து காயித்திரியைஜபித்து, உபத்தானம்பண்ணிச சூரியனைவணங்கிப் பின் ஸ்ரீபரமேசுவரனைத் துதிக்கவேண்டும். இபபடித்தவறாமல்செய்பவனே கிருகஸ்ததர்மமுடையவனுவான். பின்னர் ஜீவனோபாய முயற்சியைச் செய்து மத்தியானத்தில் விதிப்படி மாத்தியானிக சந்தியும, பிரமயக்ஞ முதலிய பஞ்சமஹாயக்ஞங்களையும் செய்யவேண்டும். பிரமசாரி, சந்நியாசி யிவர்களுக்குப் பிட்சையிட்டு, அதிதி பூஜையுஞ் செய்து பின்னர்த் தானும் புசிக்கவேண்டும். ஒருநாள் அவர்களுக்கு

பிட்சையிடாமற் புசித்தால் சாந்திராயண விருத மிருக்கவேண்டும். சந்நியாசி கையிலிட்ட பிடிசை அக்ஷயபலனைத்தரும். அண்டத்தளவான முப்பத்திரண்டு கவளம் ஒரேதரமாகப புசிக்கவேண்டும். சக்தியில்லாவிட்டால் இரண்டுதரம புசிக்கலாம். மூன்றுதரம் புசித்தல் கூடவேகூடாது. உண்ணுதல், ஓமகாரியம், செபம், பெரியோரைப் பணிதல். ஆசமனஞ் செய்தலாதிகளில் உபவீதியாகவே யிருக்கவேண்டும். கையில் கமண்டலமும் மூங்கிற்றண்டமும் தரித்திருக்கவேண்டும, விபூதியை உத்தூளனமாகவும திரிபுண்டரமாகவுந தரிககவேண்டும. விபூதியை விதிப்படி தரிக்கிறவன் சகலகரும பலன்களையும் குறைவரப் பெறுவான். வேதம புகழ்ந்த விபூதியை அணியாதவன பாதகனேயாவான். விபூதி ருத்திராட்ச தாரணம செய்துகொண்டு சுந்தரமான சிவலிங்கத்தில் உமாதேவியாரோடு ஸ்ரீபரமேசுவரனை யாவாகனம செய்து பூசைசெய்யவேண்டும். அக்கினி காரியம தவறுயல் செய்தால் பாவமெல்லா மொழியும்; அந்தக்கரணங்கள் சுத்தியாகும். அதனாலே மெஞ்ஞானமுதிக்கும்.காமியமாக யாகஞ்செய்தால் போகங்களுண்டாகும். நிஷ்காமியமாகச செய்தால் மோட்சமுண்டாகும். பிதிர்ககடன் தீரபபதற்காகத் தன மனைவியிடத்தில புத்திரோத்பத்தி செய்யவேண்டும.பூததயவுளளவனாய் இல்லறமபுரியுங்காலையில் உலகஇன்பத்தில் வெறுபபுவநதால் சந்நியாசியாதல்வேண்டும்? முத்திதரும் ஹம்ஸ வாசிரம சநநியாசமே தகுதி சக்தியில்லாதவர்கள் பகூதகம் குடீசகமென்னு மிரண்டிலொன்றை அநுஷ்டிக்கவேண்டும். வைராக்கிய மில்லாதவர்கள் வானப்பிரஸ்தாசிரமத்தை யடையவேண்டும். அதுவும் முடியாதானல் இல்லறத்திலேயே ஆயுசுபரிந்தமு மிருக்கலாம. அது பிரமசாரி முதன் மூவருக்கும் ஆதாரமா யிருத்தலால் நன்மையுள்ளதேயாம்.

ஐந்தாவது அத்தியாயம்.

வானப்பிரஸ்தாச்சிரம முரைத்தல்.

இல்லற தர்மத்தை வழுவாமல் நடத்தினபின் மனைவியைப் புத்திரனிடத்தி லொப்புவித்துவிட்டாவது தன்னுடன் அழைத்துக்கொண்டாவது உத்தராயணத்தில் பூர்வபட்சம, சுபவாரம் சுபமுகூர்த்தத்தில் வனம்புகவேண்டும். இயம நியமாதிகளை

யுடையவனாய்க் கந்தமூல பலங்களால் பரமசிவனுக் காராதனை செய்து பின் புசிக்கவேண்டும். கிராமங்களிலிருந்து கொண்டு வந்த தானியங்களாற் சமைத்ததானால் அதில் பதினாறு கவளம் புசிக்கவேண்டும். சடைமுடி தரித்தல், க்ஷௌரஞ்செய்யா திருத்தல், நகத்தை வளர்த்தல், வேதமோதல், பஞ்ச மஹாயக்ஞம்புரிதல், மரவுரிதரித்தல், முப்பொழுதும் நீராடுதல், ஜீவகாருண்யம் இவைகளைத் தவறாமல் அனுஷ்டித்தல், வானப் பிரஸ்தருக் குரிய தருமமாகும். தானம் வாங்குதல், புலாலுண்ணல், மதுவருந்தல், இரண்டாந் தாரம் புசித்தலாதிய ஒருபோதுஞ் செய்யத்தகாது. பூமியிற் படுதல், பொறியடக்கல, சிவபெருமானைத் தியானித்தலாதி தர்மங்கள் அவசியமாம். காம வெகுளி மயக்கமொழிந்து, பிராஜபத்திமம், கிருசசிரமம், சாந்திராயணம் முதலிய நோன்புகளை சமர்ப்பித்தல்வேண்டும். கோடைகாலத்தில் பஞ்சாக்கினிககு மத்தியிலும், கார்காலத்தில் வெறு வெளியிலிருந்தும், பனிகாலத்தில் நீரிலிருந்தும், நனைந்த வஸ்திரமுடுத்தும் தவமபுரியவேண்டும். தேவபிதிர்களுக்கு முப்போதும் தவறாமல் தர்ப்பணஞ் செய்யவேண்டும். தவஞ்செய்யுமபோது பூர்வபட்சத்தில் வாயுபட்சணஞ் செய்தும், ஒருகாலில் நின்றும பாலையருந்தியும் தபம் செய்யவேண்டும். அமாபட்சத்தில், கோமயரச மருந்தித் தவம் புரியவேண்டும். சருகும உண்ணலாம். மான்றோலணிதல், உபவீதந் தரித்தல், வேதோபநிஷதங்களை யோதல் யோகம் பயிலுதலாதி வானப்பிரஸ்த்த தருமமாகும.

ஓமபாத்திரங்களரிதாயின், அக்கினியை ஆத்மாவிலனுசந்தானஞ்செய்து கொள்ளவேண்டும். எப்பொழுதுஞ் சிந்தியானஞ் செய்துகொண் டிருக்கவேண்டும். இவ்வாறு வானப்பிரஸ்தாச்சிரமத்தை நிறைவேற்றி விரத்திபடைந்து சந்நியாச பேதங்களுள் தனக்கிசைந்த தொன்றைப்பற்றிக் கொள்ளவேண்டும்.

ஆறவது அத்தியாயம்.

சந்நியாசம் உரைத்தல்.

முனிசுவரர்களே! வானப்பிரஸ்ததர்மத்தைச்சொன்னேன். இனி சந்நியாசதர்மத்தைச் சொல்கிறேன் கேளுங்கள் என்று சூதமுனிவர் சொல்லுகிறார். சந்நியாசமானது குடீசகம், பகூதம்,

ஹம்ஸம், பரமஹம்ஸம் என்று நாலுவகைப்படும்; குடீசகமாவது சந்நியாசம் செய்துகொண்டவன் தன் கிருகத்திலாவது பிறாமணர்களிலாவது பிக்ஷையெடுத்து மிதமாய்ப் புசிக்கவேண்டும். சிகைதரித்தல், பூணூல் புனைதல், காஷாய வஸ்திரம் அணிதல், திரிதண்டம் தரித்தல், காயத்திரி ஜபம் பண்ணுதல், சிவபூசை செய்தலாதி தர்மம் குடீசகனுக் குரியவைகளாம்.

புத்திரகளத்திராதி பந்துக்களைத் துறத்தல், திரிதண்டம் கமண்டலம் தரித்தல்; கிருஷ்ணாஜினம், உத்தரீயம், யோகபட்டை, போர்வை, கோவணம் மிதியடி, ஊசி, சூத்திரக்கயிறு, அரிவாள், மண்வெட்டி முதலியவைகளை உடையவனாயிருக்கிறது; விபூதி உத்தூளனம் செய்தல், திரிபுண்டரம் தரித்தல், சிகை, *உபவீதம் கொள்ளுதல், கோபம், காமம், மயக்கம் முதலிய குற்றங்களை ஒழித்திருத்தல், முப்பொழுதும் சந்தியாவந்தனம் செய்து காயத்திரி ஜபம் செய்தல், சிவபூஜை சிவத்தியானங்கள் செய்தல், ஏழு கிருகத்தில் பிக்ஷையெடுத்துப் புசித்தலாதி தர்மங்கள் பகூதகனுக் குரியவைகளாம்.

கமண்டலங் கொள்ளல், கந்தை புனைதல், கோவணம் தரித்தல், பிட்சாபாத்திரம் உடையவனாதல், மூங்கில்தண்டம், உத்தரீயம் தரித்தல், விபூதி உத்தூளனம் செய்துகொள்ளல், திரிபுண்டரம் புனைதல், சிரோமுண்டனம் செய்துகொள்ளுதல், எட்டுக் கவளம் அன்னம் மாத்திரம் உண்ணுதல், மூன்று காலங்களிலும் சந்தியாவந்தனம் செய்து சாவித்திரியை ஜபித்தல், ஆதமவிசாரணைசெய்தல், தீர்த்தயாத்திரை செய்தல், சாந்திராயணம் கிருச்சிரம் முதலிய நோன்புகள் செய்தல், ஓர் ஊரில் ஒரே நாளிருத்தல், சிவபூஜை செய்தல் முதலியவை ஹம்ஸனுக்குரிய தர்மங்களாம்.

பரமஹம்ஸ விதியாவது விபூதி உத்தூளனம் செய்துகொண்டு திரிபுண்டரம் தரித்தல், பசுவின் வால்மயிரால் செய்த கயிறு கொள்ளல்; கரகம், மான்தோல், அரிவாள், மண்வெட்டி, யோகபட்டை, உத்தரீயம், கந்தைவஸ்திரம், ஊசி இவைகளை உடையவனாயிருத்தல், மிதியடி, குடை, மூங்கில்தண்டம், ஜபமாலை, கோவணம், பூணூல் சிகைகளை ஒழித்தல்; மண்ணால் செய்த பாத்திரம், மரப்பாத்திரம், வெண்கலப் பாத்திரம், மூங்கில்

குழாயாகிய பாத்திரம் இவைகளில் ஒன்றை உடையவனு யிருப்பது, சிவதியானம் செய்தல் முதலியனவாம்.

பகூதகன், ஹம்ஸன் இவ்விருவரும் மண்பாத்திரமே தரித்தல் வேண்டும். பரமஹம்ஸன் பிட்சையெடுத்துண்பதே தகுதி, கறிவகை முதலியவற்றோடு புசித்தால் அவனுடைய தவநிலை கெடும். குறைந்த அன்னத்தைப் புசித்தால் சரீரம் தளர்ச்சியடையும் ஆகையால யோகத்துக்கு இடையூறு வாராதபடி தகுந்த போஜனம செய்யவேண்டும். குருசேவை செய்தல், ஞானநூல்களிற் பழகுதல், சவுசம் தியான மிவைகளைத் தவறாமல் செய்தல் வேண்டும். பொய், காமம், கோபம், மாற்சரியம், லோபம், மோகம், அகங்காரம் முதலியவற்றை ஒழிக்கவேண்டும். ஜீவ இம்சை செய்தல் கூடாது. சாதுர்மாசிய நோன்பு செய்யவேண்டும். குடீசகன், பகூதகன், ஹம்ஸன் மூவரும் காயத்திரியை ஜபிக்க வேண்டும். பிரணவமந்திரத்தால் பிராணாயாமம் ஆறுதடவை செய்யவேண்டும். பிரணவமந்திரத்தை நூற்றெட்டுதரம் ஜபிக்க வேண்டும. ஏகாந்தமான இடத்திலிருந்துகொண்டு சமாதிசெய்ய வேண்டும. இந்தத தருமங்களினின்று தவறி வேறு நெறிகளைக் கைக்கொண்டவன் பதிதனாய் நரகத்தை அடைவான்.

'உத்தம சந்நியாசி சூரியமண்டலத்தைப் பிளந்துகொண்டு போய்ப் பிரமபதத்தை அடைவான். ஆகையால் சூரியன் அவனைக்கண்டு அஞ்சுவான. அப்படிப்பட்ட சந்நியாசி தங்கினவீட்டில் இலட்சுமி நீங்காமல் வசிப்பாள். அந்த வீட்டில் சகல ஐசுவரியங்களும நிறைந்திருக்கும். சந்நியாசி விதிதவறி யிருந்தாலும், நெறி தவறி நடந்தாலும சந்நியாச வேஷத்திற்காக அவனை எல்லாரும் வணங்கவேண்டும். பிரமசாரிக்குப் பிரமதேவனே தெய்வமாகும். கிருகஸ்தாச்சிரமத்தாருக்கு விஷ்ணுதெய்வம். வானப்பிரஸ்தனுக்குச் சூரியன் தெய்வம. சந்நியாசிக்குப் பரமசிவனே தெய்வம். ஆகையால் சந்நியாசி ஆசிரமம் மிகவும் சிறந்தது. பரமஹம்ஸனாகிய சந்நியாசியின் உடலைச் சமாதிசெய்யவேண்டும். எரிக்கக் கூடாது. அவனுக்கு அபரகிரியைகள் கிடையா. அவனுடைய புத்திரகளத்திரம் முதலியவர்களுக்கு ஆசௌசமும் இல்லை. சந்நியாசியைச் சமாதிசெய்த இடத்தில் அரசுவைத்து வளர்க்கவேண்டும். அப்படிச் செய்தல் சிவலிங்கப்பிரதிஷ்டை செய்வதற்குச் சமானமாகும். சமாதிசெய்யுங்காலத்தில் அவனுடைய சரீரத்தைப் ப

சித்தாலும், தரிசித்தாலும் சகலபாவங்களும் நீங்கும். குடிசகன், பகூதகன், ஹம்ஸன் இவர்களுக்கு வேதவிதிப்படி சமாதிசெய்தவன், முறைப்படி தகனம்செய்யவேண்டும். இந்த அபரக்கிரியைகளைச் செய்கிற கிருகஸ்தன் அசுவமேதம் செய்த பலனடைவான்.

ஏழாவது அத்தியாயம்.

பிராயச்சித்த முரைத்தல்.

முனிவர்களே! இனிப்பிராயச்சித்த முறைகளைக் கேளுங்கள். பிராமணரைக் கொன்றவன், மதுபானம் செய்தவன், சொர்ணத்தைத் திருடினவன், குருதல்பகமனம் செய்தவன் இவர்கள் மஹாபாதகரென்னப்படுவார்கள். இவர்களுடன் சகவாசம் செய்தவர்களும் மஹாபாதகர்களே. அறியாமல் பிரமஹத்தி செய்தவன் தன் இழிந்த செய்கையை எல்லாருக்கும் சொல்லி, வனத்திற்குச் சென்று சருகுமுதலியவற்றைப் புசித்து, மண்டையோட்டில் பிக்ஷையெடுத்துச் சாப்பிட்டுப், பரமேசுவரன் பாதகமலங்களைச் சிந்தித்துக்கொண்டு பன்னிரண்டு வருஷம் நோற்றால் பரிசுத்தனாவான். அறிந்து பிரமஹத்தி செய்தவன் நகரத்துக்கு வெளியில் தீவளர்த்துப் பரமசிவனைச் சிந்தித்துக்கொண்டு அந்தத் தீயில் குதிக்கவேண்டும். அப்படிச்செய்ய முடியாவிட்டால் உபவாசமிருத்தல், விரதமிருத்தல், யுத்தம்செய்தல், ஆறுகளில் விழுதல், மஹாபிரஸ்தானம் செய்தல், பிராமணர் பசு இவர்களின் நிமித்தமாயாவது பிராணனை விட்டால் பரிசுத்தனாவான். கள்குடித்தவன் அந்தக்கள்ளையே கொதிக்கக்காய்ச்சிப், பரமசிவனைத் தியானம் பண்ணிக்கொண்டு குடித்துச் சீவனை விடவேண்டும். அல்லது பசுவின் சிறுநீர், கோமயச்சாறு, நெய், ஜலம் இவைகளில் ஒன்றைக் கொதிப்பித்துக் குடித்து மரணமடையவேண்டும். பொன்னைக் களவுசெய்தவன் ஒரு இரும்புத்தண்டம்செய்து அதை அரசன் கையில்கொடுத்துத் தன்பாவத்தை அவனிடம் கூறி, அந்தத்தண்டத்தால் தன்தலைமேல் அடிக்கச்சொல்லி அதனால் உயிர்விட்டால் பாவந்தீரும். இப்படிச்செய்ய முடியாவிட்டால் பிரமஹத்தி செய்தவனுக்குச் சொல்லிய விரதத்தை அனுஷ்டிக்கவேண்டும். அதுவும் செய்யமுடியாவிட்டால் இராஜாக்கள் அசுவமேதயாகம் செய்து அவபிருதஸ்நானம் செய்யும்போது ஸ்நானம் செய்யவேண்டும்.

அது முடியாவிட்டால் தன் நிறைக்குச் சரியானபொன்னை மறையவர்க்குத் தானம்செய்யவேண்டும். குருதல்பகமனம் செய்தவன், மனம் வருந்தி, இரும்பினால் குருபத்தினியின் உருவஞ்செய்து, அதைத் தணல்மயமாகக் காய்ச்சிச், சிவபெருமானைச் சிந்தனை செய்துகொண்டு அந்த உருவத்தை அணைந்து ஜீவனைவிடவேண்டும். அதுசெய்யமுடியாவிட்டால் ஆண்குறியை அறுத்துவிட்டுத் தென்திசை நோக்கிச்சென்று ஜீவனைவிடவேண்டும்; இவைகளாலன்றி வேறு எவ்வகையினாலும் அந்தப்பாவமொழியாது. இவர்களோடுகூடினவர்களும் இந்தப்பிராயச் சித்தமே செய்துகொள்ள வேண்டும். இல்லாவிட்டால் தீயிலாவது நீரிலாவது விழுந்து ஜீவனைவிடவேண்டும்.

குருவுக்குக் கெடுதி செய்தவன் பிரமஹத்தி செய்தவனுக்குச் சொன்ன பிராயச்சித்தத்தைச் செய்துகொள்ளவேண்டும். கிருச்சிரம சாந்திராயணம் முதலிய விரதம் அனுஷ்டித்தல், அசுவமேத யாகத்தில் அவபிருதஸ்நானம் செய்தலாதிகளில் ஒன்று செய்தல் வேண்டும். மகனுடைய மனைவி, தன்னுடன் பிறந்தவள், தன் மகள் இவர்களைக் கலந்தவன் தீக்குதித்துமரிக்கவேண்டும். தன் சகோதரிமகள், சகோதரன் மனைவி யிவர்களைக்கூடினவன் பன்னிரண்டு சாந்திராயணம் செய்யவேண்டும். தாயின் சகோதரி புத்திரியைக் கலந்தவன் தீக்குதிக்கவேண்டும். ஈனஜாதிப் பெண்களைக் கலந்தவன் சாந்திராயணம் கிருச்சிரம முதலிய நோற்றல்வேண்டும். கன்னிகையைக் கலந்தவன் சாந்திராயணவிரதம் அனுஷ்டிக்கவேண்டும். பிரமசாரிக்கு விபசாரதோஷம் நேர்ந்தால், அவன் கழுதையின் தோலைப்போர்த்துக்கொண்டு, தன் குற்றத்தை யெல்லார்க்குஞ் சொல்லி, ஏழுவீட்டில் பிச்சையெடுத்துப் புசித்து ஒருவருஷம் சஞ்சரிக்கவேண்டும். மாமிசம் புசித்தவர் பன்னிரண்டு நாள் உணவொழித்திருத்தல், சாந்திராயணமிருத்தல் இவைகளைச்செய்ய வேண்டும். கடவுளுக்கு நைவேத்தியம்செய்யாமல்புசித்தவர் கிருச்சிரம்செய்யவேண்டும். அக்கினியை ஆராதியாமல் புசித்தவர், ஈனகுலத்தார் வீட்டிற் புசித்தவர், சிராத்தத்திற் புசித்தவர், ஆசௌசமுடையார் வீட்டில் புசித்தவர் இவர்கள் கிருச்சிரம் செய்ய வேண்டும். சண்டாளர், கொடிய செய்கையுடையவர், பூத்தமாதர் இவர்களைப்பார்த்தவர் மூன்று நாள் உபவாசமிருந்து பஞ்சகவ்வியம் அருந்தவேண்டும். முனிவரையும், பெரியோரையும், நல்

லோரையும், கற்புடைய மாதரையும் தூஷித்தவர்கள் எரிகொள்ளியால் நாக்கைச் சுட்டுக்கொள்ளவேண்டும். சந்நியாசி பெண்களைக்கூட எண்ணினால் அவசீர்ணவிரதமிருத்தல்வேண்டும். மறதியால் அந்த எண்ணம் உண்டானால் கிருச்சிரவிரதம் செய்யவேண்டும். வேதத்தை நிந்தித்தவனும், விதிதவறினவனும், விலக்குகளைச்செய்தவனும் தபதகிருச்சிர விரதமிருக்கவேண்டும். மற்றுமுள்ள பாவங்களுக்கு ஸ்மிருதிகளிற கூறிய பிராயசித்தங்களையுணர்ந்து செய்துகொள்ளவேண்டும.

இந்தப் பிராயச்சித்தங்கள் எல்லாவற்றிற்கும் மேலான பிராயச்சித்தம் ஞானத்தையடைதல. அந்த ஞானத்தைப் பெறுவதற்குப் பக்தி, சாந்தி, தாந்திமுதலிய குணங்களையுடையவனாய்க் குருசேவை செய்து, குருபணிவிடையில சிரத்தையுடையவனாய் வேதாந்த சிரவணம் செய்யவேண்டும் வேதாந்த சிரவணத்தால் உண்டாகிற ஞானமே அக்கினியாய்ச சகலபாவங்களையும் தகித்துவிடும். மூன்று மாதம் வேதாந்த சிரவணம் செய்தால் சூட்சும பாதகங்கள் நசிக்கும். ஆறுமாதம் செய்தால உபபாதகம் ஒழியும். ஒருவருஷம் வேதாந்த சிரவணம செய்தால் மஹாபாதங்கள் தீரும். வேதாந்த நெறியை அனுஷ்டிக்கிறவன் சமுசாரக்கடலைத் தாண்டி முத்திக்கரையை அடைவான். அனுஷ்டிக்கிறபோது தவறு நேர்ந்தால அவன் சொர்க்கத்தை அடைவான். பிறகு பூமியில் ஒருதரம் உயர்ந்த குலத்தில் பிறந்து, குருவருள் பெற்றுப் பந்தம் ஒழிந்து பரசிவனுடைய திருவடி நிழலாகியமுத்தியை அடைவான்.

எட்டாவது அத்தியாயம்.

தானபலம் உரைத்தல்.

முனிவர்களே! அஞ்ஞானத்தை ஒழித்து, மெய்ஞ்ஞானத்தைக்கொடுத்து, முத்தி யின்பத்தையும் தருதலால் வித்தியாதானமே எல்லாத்தானங்களிலும் சிறந்தது. அன்னதானம், கோதானம், பூதானம், கன்னிகாதானம் இவைகளும் சிறந்தனவேயாம். சிவபக்தர்களுக்குப் பூதானம் செய்தவன் உலகத்தில் பெருமையாக வாழ்ந்து, பிறகு சொர்க்க இன்பத்தை அனுபவித்து, அதன்பின் மோட்சத்தை அடைவான். ஞானிகளுக்கு மனமகிழ்ச்சி

MAHAMAHOPADHYAYA DR. U.V.S. IYER LIB[RARY] BESANT NAGAR, MADRA[S]

யுடன் கொஞ்சமாவது பூதானம் செய்தவன் நிச்சயமாக மோட்சத்தை அடைவான். வித்தியாதானம் செய்தவனுக்குப் பிறப்பே யில்லை. சந்நியாசிகளுக்கு அன்னமும் நீரும் கொடுத்தவனும், மடம் கட்டிவைத்தவன் மேலான கதியை அடைவான்.

அமாவாசியையில் நிஷ்காமிய சித்தனாய் அந்தணர்க்கு அன்ன மிட்டவன் சிவபெருமானுடைய சாரூபமுத்தியை அடைவான். கிருஷ்ணபட்சம் சதுர்த்தசியில் பிராமணர்களைப் பரமசிவனாகப் பாவித்து அன்னமிட்டவன் கன்மபந்தமொழிந்து மோட்சம் அடைவான். திரயோதசியில் வேதியர்க்கன்ன மிட்டவன் பூலோகத்தில பெருவாழ்வு வாழ்ந்து பிறகு பிரமலோகத்தைப்பெறு வான். துவாதசியில் பிராமணர்களை விஷ்ணுவாகக்கருதி அவர்களுக்கு அன்னமிட்டவன் தேவனாய் வாழ்நது பின் வைகுந்தத்தை அடைவான். ஏகாதசிதினம் உபவாசமிருந்து துவாதசிதினம் விஷ்ணுசொரூபமாகக்கருதிப பிராமணர்களுக்கு அன்னமிட்டவன் சகலபாவங்களினின்றும் விடுபடுவான். தசமிதிதியில் பிராமணர்களை யிந்திரனாகப பாவித்து அன்னமிட்டவன் தேவனாய் இந்திர லோகத்தில் வாழ்வான். நவமிதிதியில் எமனைச் சிந்திததுப் பிராமணர்களுக்கு அன்னமிட்டால் எமன் எபபோதும் அவர்களிடம் மகிழ்ச்சி யுடையவனா யிருப்பான். அஷ்டமியில ஸ்ரீபரமேசுவரனை உத்தேசித்து வேதியாக்கு அன்னமிட்டவன் சகல பாவங்களும் ஒழிந்து ஈசன் திருவடியை அடைவான். சப்தமியில சந்திரனை உத்தேசித்து வேதியர்க்கு அன்னமிட்டவன் உலகத்தில் சிறந்து வாழ்ந்து பின் சந்திரலோகத்தை அடைவான். ஷஷ்டிதிதி யில் சூரியனைக் கருதி அந்தணர்க்கு அன்னமிட்டவன் ஒளிருப முடையவனாய்ச் சூரியலோகத்தை அடைவான். பஞ்சமிதிதியில் சரஸ்வதியைச் சிந்தித்து வேதியர்க்கு அன்னமிட்டவன் சகல பாவங்களுமொழிந்து தத்துவஞானத்தைப் பெறுவான். சதுர்த்தியில இலட்சுமியை உத்தேசிதது மறையவர்களுக்கு அன்னமிட்டவன் எந்நாளும் அழியாத செல்வத்தை அடைவான். திரிதியை யில் பிராமணர்களுக்கு அன்னமிட்டால் மும்மூர்த்திகளும் அவனுக்கு அநுக்கிரகம் செய்வார்கள். துவிதியையில் வேதியர்க்கு அன்னமிட்டால் அவனிடத்தில் சகல வேதங்களும் நிறைந்திருக்கும். பிரதமையில் அன்னமிட்டவன் மெய்ஞ்ஞானத்தைப்பெற்று மோட்சத்தை அடைவான்.

பிராமணர்களுக்குப் பசுதானம் செய்தவன் முத்தியடைவான். கன்னிகாதானம் செய்தவன் சிவலோகத்தை அடைவான். எந்தத் தேவதைக்குறித்து எவ்வகையானதானம் செய்தாலும் அந்தந்தத்தேவர்களுடைய கருணையை அவன் அடைவான். தான் எந்தத்தெய்வத்தின் கருணையைப்பெற விரும்புகிறானோ அந்தத்தெய்வ சொரூபமாகப்பாவித்து ஞானியை வணங்கவேண்டும். புழு முதலிய சீவன்களை விட மிருகமாதி ஜீவன்கள் சிறந்தன. அவற்றை விடமனிதர் மேலானவர். அவர்களுக்குள் பிராமணர்கள் மேலானவர்கள். அவர்களைவிட அறிவுள்ள அந்தணர் சிறந்தவர்கள். அவர்களைப் பார்க்கிலும் குடீசக பகூதர்கள் மேலானவர்கள். பகூதரைவிட ஹம்ஸர் சிறந்தவர்கள். பரமஹம்ஸர் அவர்கள் எல்லாரினும் அதிகமானவர்கள். இவர்களைவிட ஆத்மஞானிகள் சிறந்தவர்கள். ஆகையால் முத்திவிருப்பமுள்ளவர்கள் அந்தஞானிகளை வணங்கவேண்டும். பிரமதேஜசை அடைய விரும்புகிறவர்கள் சிவபக்தியுள்ள வேதியரை வணங்கவேண்டும். வியாதியில்லாமல் இருப்பதற்குச் சூரியனை வணங்கவேண்டும். பலத்தை அடைய விரும்புகிறவர்கள் வாயுதேவனையும், கீர்த்தியை அடைய விரும்புவோர் அக்கினிதேவனையும், நல்ல அறிவை பெறுவதற்குச் சரஸ்வதியம்மனையும், ஞானத்தை அடைவதற்கு உமாதேவியையும், கருமசித்தி அடைவதற்கு விநாயகரையும், போகத்தையடைவதற்குச் சந்திரனையும், பொறுமையை பெறுவதற்குச் சிவபெருமானையும் வணங்கவேண்டும். வைராக்கியம் அடைவதற்கு இந்திரனைத் துதிக்கவேண்டும். சிவபூசையை விதிப்படி செய்கிறவர்களுக்கு எல்லாம் எளிதில் கிடைக்கும். சோதிஷ்டோமம் முதலிய, யாகங்களைச் செய்கிறவன் தேவனாவான்.

சதருத்திரம், சமகம், புருஷசூக்தம், பஞ்சாட்சரம், இவைகளைஜபிக்கிறவன் சகலபாவங்களும் ஒழிந்து, இருபத்தொருதலைமுறைகளுடன் சிவலோகம் அடைந்து, விரும்பின போகங்களை நுகர்ந்து, அவ்விடத்தில் அநேக கற்பகாலம் வசித்துப், பிறகு பூமியிற்பிறந்து மெய்ஞ்ஞானத்தைப்பெற்றுச் சாயுஜ்ய முத்தியைப் பெறுவான். இன்பமல்லாதவைகளை இன்பமென்று கருதி அவைகளைப் பெற முயன்று வருந்துகிறவர்கள் கனியிருக்கக் காய்களைப் பெறுவார்க்குச் சமானமாவார்கள். அழியாத முத்தியின்பமிருக்க அதைவிட்டு, உலக இன்பங்களை அடைய விரும்புவது ஆச்சரியமே.

ஒன்பதாவது அத்தியாயம்.

பாவப்பயன் கூறியது.

இனி பாவத்தின்பயனைச் சொல்லுகிறேன் கேளுங்கள். பிராமணனைக் கொன்றவன் கழுதை, ஒட்டகம், பன்றி, யானை, குதிரை, மான், பறவைகள் முதலிய ஜனனங்களை யெடுத்துவருந்துவான். மதுபானம்பண்ணினவன் மலப்புசித்துச் சீவிக்கும் பிராணிகளாகவும், பட்சிகளாகவும், புழுக்களாகவும் பிறப்பான். குருதல்பகமனம் செய்தவன் அரக்கன், பேய், திருடன், பன்றி, பறவைமுதலிய ஜனனங்களை யெடுத்து வருந்துவான். வேதியருடைய பொருளை அபகரித்தவன் பிரமராட்சதனாகவும், தானியங்களைத் திருடினவன் பெருச்சாளியாகவும் பிறப்பான். நெய்யைத்திருடினவன் கீரிப்பிள்ளையாய் ஜனிப்பான். பாலைத்திருடினவன் காக்கையாய்ப் பிறப்பான். பருத்திமுதலிய நூல்களைத் திருடினவன் சிசசிலிக் குருவியாவான். புஷ்பங்களைத் திருடினவன் நாயாவான். கனிகளைத் திருடினவன் குரங்காகப் பிறப்பான், சிவனையும் குருவையும் நிந்தித்தவன் மலத்திற பிறக்கும் புழுவாவான். முயலகநோயாலும் வருந்துவான். குருவைக்கோபித்தவன் கபாலநோயுடையவனுவான். கற்புடைய மனைவியை விட்டவன் கண்டமாலையுடையவனுவான். பசித் திருப்பவர்களுக்கு அன்னமிடாமல் புசித்தவன் மாாநோயுடையவனுவான். சுற்றத்தார்க்கு வஞ்சனைசெய்து புசிப்பவன் குன்மநோயுடையவனுவான். தேவாலயப்பொருளைத் திருடினவன் பாம்பாவான், நல்லவர்களுக்குக் கொடாதவன் வலையனுவான். சோலைகளை யழித்தவன் உறும்புகள் அழுகும்படியான தொழுநோயுடையவனுவான். அன்னியஸ்திரீகளைக் கலந்தவன் நாயாய்ப்பிறப்பான். வியாதிககாரர்களை ஆதரியாதவன் கண்ணோயுடையவனுவான். பசுவை வதைத்தவன் பிறவிக்குருடனுவான். ஏழைகளை வருத்தினவன் கைகால்முடமாய்ப் பிறப்பான். சிவனடியாரைக் கோபித்தவன் தொழுநோயுடையவனுவான். கொண்டவிரதத்தை விட்டவன் விடில்லாமல் வருந்துவன். பெரியோர்க்கு மரியாதைசெய்யாதவனும் தாய்தந்தையர்களை மரியாதையின்றி அவமதித்தவனும் தரித்திரனுவான். தன் ஒழுக்கத்தைவிட்டவன் அளவில்லாத துன்பத்தை அடைவான்.

இப்படிப்பட்ட பாவிகளுக்கு ஆயுசுமுடியுங்காலத்தில் எமதூதர்கள்வந்து பாசத்தால் கட்டிக்கொண்டுபோய்ச் சூலத்தாற்

குத்தி எமனிடம் கொண்டுபோவார்கள், எமதருமராஜன் அவர்களைக் கண்டதும் மஹாகோப முடையவனாய்ப் பற்களை நெறநெறவென்று கடித்து, உதட்டை மடித்துக்கொண்டு, கண்களில் அக்கினிப்பொறி பறக்கப் பார்த்து மஹா பாவிகளே! நீங்கள் தேடின திரவியம் எங்கே? யானை குதிரை இரதங்கள் எங்கே! காணி பூமிகள் எங்கே! அடிமைகள் எங்கே! மனைவி மக்கள் எங்கே! இவைகளை எப்படி விட்டுவந்தீர்கள்! பெரியோர்கூறிய உபதேசமொழிகளை அவமதித்தீர்கள். சிவபெருமான் திருவடியை வணங்காமல் விட்டீர்கள். நீங்கள்! மனிதராய்ப்பிறந்து என்ன காரியம் செய்தீர்கள்? அநேகமான கொடியபாவங்களை மூட்டைகளாகக் கட்டிக்கொண்டீர்கள். தருமத்தைக் கொஞ்சம் கூடச் செய்யாமற் போனீர்கள் என்று சீறிச் சித்திரகுப்தன் முகத்தைப்பார்ப்பான். சித்திரகுப்தன் அந்தப் பாவிகள் தினந்தோறும் செய்த பாவங்களை வாசித்துச் சொல்லுவான். அப்போது எமன் கடுங்கோபங்கொண்டு கிங்கரர்களை நோக்கி இந்தப்பாவிகளைத் தக்கபடி தண்டியுங்கள் என்று சொல்லுவான்.

எமகிங்கரர்கள் கோபாவேச முடையவர்களாய் இருப்பு உலக்கைகளினாலே இரத்தந்தெறிக்க மோதுவார்கள். எலும்புகள் நொறுங்கக் குத்துவார்கள். தலைகீழாகக் கட்டித் தொங்கவிட்டு நெருப்பு மூட்டி வதக்குவார்கள். முட்களுள்ள கதைகளால் மண்டையி லடிப்பார்கள். நாய்களைவிட்டுக் கடித்து இழுக்கச் செய்வார்கள். வேங்கைப் புலிகளை மேலே பாய்ந்து கிழிக்கும்படி ஏவுவார்கள். புழுக்களுடன் கூடிய மலக்குழியில் தள்ளி அழுத்துவார்கள் உருகிய செம்புநீரை வாயில் ஊற்றுவார்கள். ஈயத்தை உருக்கி மூக்கில் விடுவார்கள். பழுக்கக்காய்ந்த ஈட்டியால் குத்துவார்கள். சிலரைத் துண்டுதுண்டுகளாக வெட்டிக் காய்ந்த தைலத்தில் இட்டுப் பொரிப்பார்கள். பருந்துமுதலான பறவைகளை விட்டுச் சரீரத்தைக் கொத்தச் செய்வார்கள். வாளாயுதத்தால் வெட்டுவார்கள். தீயிலே காய்ந்த இருப்புக் கம்பிகளைக் காதிலும் வாயிலும் செலுத்துவார்கள். சீழைக்கொடுத்துப் பானஞ்செய்என்று அடிப்பார்கள். கைமுட்டிகளால் புடைப்பார்கள். அன்னியஸ்திரீகளைக் கூடினபாதகனை அதிகோரம் என்கிற நரகத்தில் தள்ளுவார்கள். மதுபானம் பண்ணினவர்களுடைய நாக்கை அறுத்து அக்கினித் தண்ணீரைவாயில் ஊற்றுவார்கள். குருபத்தினியைச் சேர்

தவனை மலக்குழியில் அமிழ்த்துவார்கள். அன்னை பிதா குரு தெய்வம் இவர்களை நிந்தித்தவர்களை நிரகத்தில் அனேகநாள் வருந்தும்படித் தள்ளுவார்கள். சந்நியாசிகளுக்கு பிட்சையிடாதவர்களை கரும்பாலையில இட்டு அரைப்பார்கள், கணவனையிகழ்ந்து மறறொருவனைச்சேர்ந்தஸ்திரீயைப பழுககக்காய்ந்திருக்கிற இருப்புவடிவத்தைத் தழுவும்படி செய்வாாகள். தன்மனைவியை வருசித்துப பரதாரகமனம் செய்தபுருஷனையும இரும்பினுற்செய்து காய்ந்திருக்கிற பெண்ணுருவத்தைத் தழுவுமபடி செய்வார்கள். வேதமகூறிய கருமங்களை விலக்கிவேறுகருமங்கள் செய்வோரையும் நெடுங்காலம நிரகத்தில் கிடக்குமபடி செய்வாாகள். தடாகம கிணறு தேவாலயம முதலியவறறை அசுத்தப படுததினவாகளைக் கரும்பாலையில் இட்டு அரைத்து, கும்பிநாகததில் சூரியன் உள்ளவரைக்கும தள்ளிவைபபாாகள். பெரியோரை நிந்தித்தவர்கள் அதைக் கேட்டுக்கொண் டிருநதவர்களுடைய வாயிலும காதிலும் நெருப்பிறகாய்நத இருபபுச சலாகைகளை யிட்டுக் குடைவார்கள. இபபடிப பாவிகளைத தண்டிததது இருபதது எட்டுகோடி நரகங்களிலும தள்ளுவாாகள. பாவிகளுடைய துன்பததை யெடுத்துசசொல்ல எவராலுமாகாது. மங்கைபங்காளனுகிய சிவபெருமான் திருவடிககுப பததி செய்யாமல இபபடிபபட்ட நரகதுன்பததை அடைகிறது என்ன ஆசசரியம! கங்கைமுதலான புண்ணிய தீாத்தங்களும் இருகக, மானிடா நரகத்தில வருநதுகிறது அநியாயமேயாம். இநதப்பாவிகள் நெடுங்காலம் நரக துன்பங்களை அனுபவிததுடபின பூலோகததில பலவகை ஜனனங்களை யெடுத்து வருநதிக கடையில் மானிட ஜனமததை அடைவாாகள்.

பத்தாவது அத்தியாயம்.

சரீரோத்பத்தி கூறியது.

புண்ணியபாவஙகளைச செய்த ஜீவாத்மாககள் மறுபடியும சரீரமெடுக்குமவகையைச சொல்லுகின்றேன் கேளுங்கள். தானம் செய்து புண்ணியம் அடைந்தவர்கள் தேவராவாாகள். பாவததைசசெய்தவர்கள் மரம முதலிய ஜன்மங்களை யெடுபபாாகள். பாவபுண்ணியங்களைச சமமாக உடையவாகள் மனிதராய் பிறப்பாாகள். யாகத்தினுல் மகிழ்நத சூரியன் மழைபெய்வான். மழையி

னல் பயிர்கள்விருத்தியாகும். அப்பயிரினபலனும மழையும் சேர்ந்து பூர்வகாமத்துக் கேற்றபடி ஜீவாத்மாக்களுக்கு உணவாகும் உணவிலிருந்து சரீரத்தின் தோலமுதலியவை வுண்டாகும. பூதசாரம சூட்சுமம, ஸ்தூலம என்று இருவகையாம. சாத்துவிதபாகத்திலிருந்து பூமிதத்துவம் கிராணத்தையும அபானனையு முண்டாக்கும. அப்பு உபஸ்தம இரசமிவைகளையுண்டாக்கும. அக்கினி வாக்கையும் கண்களையும உறபத்தியாக்கும். வாயு தொக்கு பாணிகளை யுண்டாக்கும. ஆகாசம, பாதம சுரோத்திரம் இவைகளையும் உற்பத்தியாக்கும. வாயு தொக்குபாணிகளை யுண்டாக்கும. ஆகாசம, பாதம் சுரோத்திரம இவைகளை விருத்திசெய்யும. அவற்றுள் பூமி மனதையும, அப்பு பிராணவாயுவையும, அக்கினி வாக்கினையும், வாயு பிராணவாயுவின மூலத்தையும, ஆகாசம பாதமூலத்தையும முக்கியமாக உற்பத்தியாக்கும. இராஜசபகுதியாகிய இரசபாகத்தினின்று இரத்தமும, இரத்தத்தினல் மாமிசமும, மாமிசத்தில மேதையும, மேதையின மூளையும, எலும்பும் அதில் நரம்பும், சுக்கிலமும உண்டாகும ஸ்தூலபாகத்திலுள்ள ஆகாசபபகுதியால பலவகைத தாதுக்களுண்டாகும். வாயுவாற் சுக்கில முண்டாகும; அக்கினியால நரமபாகும். அப்புவால இரத்தமுற்பத்தியாகும. பூமியால மாமிசமுணடாகும. சுக்கிலம சோணிதத்தை யடைதலாற பிரஜாவிருத்தியுண்டாகும.

சரீரத்தில வாதபித்த சேத்துமங்கள் பேதபபடாமலிருக்கிறபோது சுக்கிலம் சோணிதத்தில் கலக்கக் கருபபமாகும். அதுமுதல ஏழுநாட்களில் குமிழியாகத்தோன்றும. பதினைந்து நாட்களில் பிண்டமாகும. ஒரு மாதத்தில் இறுகிக் கடினமாகும். இரண்டு மாதங்களில் தலை உண்டாகும. மூன்றும மாதத்தில் பாதங்கள் உண்டாகும. நாலாமாதம் விரல வயிறு இடுப்பு இவைகளுண்டாகும. ஐந்தாமமாதம முதுகு விலாப்புறங்களுண்டாகும். ஆறும மாதம கண் காது மூக்கு இவைகளுண்டாகும. ஏழாம மாதத்தில் ஜீவன் கலக்கும. எட்டாம மாதம அவயவங்கள் முற்றும் பூரணமாய் தொப்புளின் வழியாகத் தாய் உணவினசாரத்தைக் கிரகித்துக்கொள்ளும். அப்போது பூர்வஜன்மஅறிவுண்டாகும். அதனல மனம்வருந்தி அளவிலலாத ஜன்மங்களையெடுத்து அளவில்லாத கர்மபலனை அனுபவித்தோம்;சொர்க்கநரகங்களிற்சென்று வருந்தியிளைத்தோம.பந்தம அறுக்குமஉபாயம் தேடவில்லை. இப்பொழுது

பூமியிற்பிறந்ததும் சற்குருவின் கருணையைப்பெற்றுச் சிவபெருமானுக்கு அடிமைசெய்து பூஜித்து, அதினால்மெய்ஞ்ஞானத்தையடைந்து மோக்ஷமடைவோமென்று சிந்தித்துக்கொண் டிருக்கும். அப்போது உதானவாயு வுதைந்து தள்ளவருந்தி அவ்வெண்ணத்தை மறந்து பூமியிலபிறந்து அஞ்ஞானத்தை யடைந்திருக்கும். அந்த அஞ்ஞானத்தால், இராகத் துவேஷங்களைப்பெற்று மவற்றால் பாவம புண்ணியமும செய்யாநிற்கும. பாவபுண்ணியங்களால் ஜனனமரணங்களை யடைந்து வருந்தும். இந்த அஞ்ஞானம சிவபெருமான் திருவருளால ஞானத்தைப்பெற்றால் ஒழியும்; வேறெதனாலும் தீராது. ஆத்மஞானம பெறறாலன்றி அவித்தியா பாசம் ஒழியாது. அநாதிமலமுத்தனை பரமசிவனையறியமுயலாதவன் ஆத்மத்துரோகியாவான். அவன் மஹாபாதகங்களையும செய்வான். வேதத்தை யோதினும் அவன பாசமொழியாது. பரம சிவனை யறிந்தவன் எல்லாசசந்தேகங்களு மொழிந்தவனுவான். எல்லாக்கருமங்களையும செய்துமுடித்தவனுவான்; அவனே விதிவிலக்குகளைக் கடந்து சிவாநந்தத்தை அனுபவிப்பான். மாயாசம்பந்தம் ஒழிந்து, தத்துவமசி வாக்கியார்த்தப்படி உண்மையுணர்ந்து பிரமபாவனை செய்திருத்தலே மனிதராய்ப் பிறந்ததற்குப் பலனும். இந்த அனுபவத்தை அடைவதற்குச் சிவபக்தியே நல்ல மார்க்கமாகும.

பதினோராவது அத்தியாயம்.

நாடி நிலைமையுரைத்தல்.

மனிதர்களுடைய சரீரம தங்கள் தங்களுடைய கைகளினால் தொண்ணூற்றாறு அங்குலம் (எட்டுச்சாண்)அளவாயிருக்கும். குதத்துக்கு இரண்டு அங்குலத்திற்கு மேலும், இலிங்கஸ்தானத்துக்கு இரண்டு அங்குலம கீழாகவும மூலாதாரம் என்னும் ஆதாரம உள்ளது. பொன் வண்ணமாயிருக்கும. அதுவே அக்கினி ஸ்தானமாம. அதுவே சரீரமத்தியமான அரையென்னபபடும். அந்த மூலாதாரத்துக்கு ஒன்பது அங்குல அளவிற்கு மேல் கந்தஸ்தானமிருக்கின்றது. இது நாலங்குல அளவுள்ளது, அண்டவடிவாய் இருக்கும். இதை நரம்புகள் சூழ்ந்திருக்கும். அதினின்று எழுபத்தீராயிரம நாடிகள் பரவுகின்றன. அந்த நாடிகளுள் இடைகலை, பிங்கலை, சுழுமுனை, பூஷை, வாருணை, மத்திமை,

சிகுவை, யசசுவினி, அலமபுசை, குகு, விசுவோதரை, பயசுவினி, சஙகினி, காநதாரை என்ற பதினலு நாடிகள் சிறந்தனவாம. இவறறுள் இடைகலே, பிஙகலே, சுழுமுனை என்கிற மூன்றும் விசேஷமானவை. இநத மூனறினுளளும சுழுமுனை சிறநதது. அதற்குப பிரமநாடி யெனறும பேர். முதுகின நடுவில வீணுதண்டம போனறுளள எலுமபுடன்கூட மேலே சென்று கபாலததின் வழியாகப புருவமததியைச சேருகினறது. கந்தஸ்தானததுககு இரண்டு அங்குலததுக்குககீழே குணடலிசததி சர்பபவடிவமாய்பபடத்தினுல சுழுமுனைத துவாரததை அடைததுககொண டிருக்கும். கண்டததினுல அநதசசுழுமுனையை எடடுச சுறறுகச சூழ்நதுமேலேசெனறு வாயினுல பிரமாநதிரஸ்தானத்தை மறைததுக்கொண்டிருக்கும. குண்டலிசததி யிவவாறு சுழுமுனைததுவாரத்தை யடைத்து நிறபதால, சுவாசக் காறறும, அன்னசாரமும அதற்குட் செல்வதிலலை. அநதச சுழுமுனையின இடபபுறததில இடைகலை நாடியும, வலபபுறததில பிஙகலை நாடியும இருக்கினறன. அதன் முனனும் பினனும சரசுவதி, குகு என்னும நாடிகளிருககும. இடைகலைககு முனனிலும பினனிலுமாககாநதாரை, மத்திமை, சிகுவை என்னும நாடிகளிருககும. பிங்கலைக்கு முன்னும பின்னும் பூஷை யசசுவினி என்பன நிறகும். குகு சிகுவை என்பவற்றின் இடையில் விசுவோதரை நாடிநிறகும. யசசுவினிக்கும, குகுவிறகும் மததியில் வாருணையென்னும் நாடிசெல்லும். பூஷைககும சரசுவதிககும மத்தியில யசசுவினியிருக்கும. காநதாரைக்கும் சரசுவதிககும நடுவில சங்கினி நிறகும். காநததியில் அலமபுசை நிறகும்.

குகு இலிங்கஸ்தானத்தைப் பற்றியிருககும; வாருணை தொக்கில் பரந்து நிறகும்; இடைகலை பிஙகலை நாடிகள் வலமிடமாக மாறிக் கத்தரிபோல சென்று நாசியை அடையும். யசசுவினி வலக்கால் பெருவிரலைப்பற்றி நிற்கும. பூஷை வலது கண்ணை யடைந்து நிற்கும். பயசசுவினி வலது காதைபபற்றியிருக்கும். சரசுவதி நாடி நாவைபபறறி நிற்கும; சிகுவை யிடதுகால் அங்குஷ்டததைப் பற்றியிருக்கும; சங்கினியிடது காதைச சேர்நதிருக்கும்; காந்தாரையிடககண்ணைப பற்றியிருக்கும்; விசுவோதரை முகத்தின் மத்தியைப்பறறி நிறகும; அலமபுசை அபானத்தை அடைநதிருக்கும். பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன், நாகன், கூர்மன், கிரிகரன், தேவதத்தன், தனஞ்

செயன் என வாயுக்கள் பத்துவகையாம். இந்தப் பத்துவாயுக்களும நாடிகள் எல்லாவற்றிலும் உலாவும். இந்தப் பத்துள்ளும பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன் என்கிற ஐந்தும் விசேஷமானவைகள்! பிராணவாயு, முகம், மூக்கு, தொப்புள், இதயம் இவ்விடங்களில் தங்கியிருக்கும். அபானன் குதம், இலிங்கம், தொடை, முழங்கால், அண்டம் முதலியவற்றில் பரவியிருக்கும். வியானன் காது, கண், மூக்கு, கழுத்து இவ்விடங்களில் நிற்கும. உதானன் சந்துகள கை கால் முதலிய இடங்களில் நிற்கும வியானன் தேகம் முழுமையும பரவியிருக்கும். தொக்கு எலும்புகளில் நாகன் நின்று வேர்வையை வெளியில் தள்ளுதலாதித் தொழில்களைச் செய்யும். கூர்மன் கண் இமைத்தலாதிகளைச்செய்யும். கிரிகரன் தும்மலை உண்டாக்கும. தேவதத்தன் நித்திரையை யுண்டாக்கும. தனஞ்செயன் சோபையை யுண்டாக்கும. பிராணவாயு உசுவாச நிசுவாசங்களை யுண்டாக்கும் அபானன் மலஜலங்களைவெளிப்படுத்தும. சமானன் உடசெலவனவற்றை அந்தந்த இடத்தில சேர்க்கும். உதானன், வியானன் விவாதம செய்யும.

சுழுமுனைக்குப் பரமசிவன் தெய்வம; இடைகலைக்கு விஷ்ணு தெய்வம்; பிங்கலைக்குப பிரமன தெய்வம; சரசுவதிக்கு விராட் தெய்வம்; பூஷை வருணைகளுக்கு வாயுதெய்வம; சிகுவைக்கும வருணன் தெய்வமாம். யசசுவினிக்குச சூரியன் தெய்வம்; அலம்புசைக்கு வருணன்; குகு, காந்தாரை, சங்கினிகளுக்குச சந்திரன் தெய்வம்; பயசுவினிக்குப்பிரமன், விசுவோதரைக்கு அக்கினியும் தெய்வங்களாம். இடைகலையில சந்திரனும், பிங்கலையில சூரியனும் எப்போதும் சஞ்சரிப்பார்கள். பிராணவாயு பிங்கலையினின்றும இடைகலையைச சேருமபோது உத்தராயணம் என்றும, இடைகலையினின்றும் பிங்கலையை அடைவதைத தட்சணாயனமென்றும்சொல்வார்கள். இடைகலை பிங்கலைகளின் சந்தியைபபிராணன் அடைவது அமாவாசியையாம். பிராணவாயு மூலாதாரத்தை யடையும் காலம முதலாவது விஷ்வகாலமாம். கபாலம சேர்வது இரண்டாம விஷ்வகாலமாம். பிராணன் ஒரு நாடியிலிருந்து மற்றொரு நாடியைசசேர்ந்தால் அது சங்கிரமணகாலமாம். இடைகலையினின்று குண்டலியைசசேர்வது சந்திரகிரகணமாம். பிங்கலையினின்று குண்டலியைச சேர்ந்தால் சூரிய கிரகணமாம்.

கபாலஸ்தானம் ஸ்ரீசைலம், நெற்றி கேதாரம், புருவ மத்தியம் காசி, கண்டஸ்தானம் குருக்ஷேத்திரம், இதயம் பிரயாகை, இதயமத்தி சிதம்பரம், மூலாதாரம் திருவாரூரெனச் சரீரத்தில் க்ஷேத்திரங்கள் கொள்ளப்படும். உள்ளிலும் புறத்திலும் உள்ள தீர்த்தங்களில் முழுகி, அந்தந்த க்ஷேத்திரங்களையும் வணங்கி, மோட்சத்தையடைவது உத்தம செய்கைகளாம். மத்திமர்புறத்திலுள்ள தீர்த்தங்களையும் க்ஷேத்திரங்களையும்தரிசித்துப் போகங்களைப் பெறுவார்கள். புறத்திலுள்ள தீர்த்தங்களில் எத்தனைதரம் முழுகினாலும் பரிசுத்தமடைவதில்லை.

ஆன்மதீர்த்தத்தினாலே சரீரம் பூரணசுத்தியை அடையும். அதனால் சித்தசுத்தி உண்டாகும். உடனே ஞானயோக சித்தியுண்டாகும். சரியை கிரியைகளிலிருப்போர் சிவபெருமானைச் சொரூபங்களிற்கண்டு தரிசிப்பார். யோகிகள் இதயகமலத்தில் தரிசிப்பார்கள். ஞானிகளோ பரமசிவனையெங்கும் கண்டு தரிசிப்பார்கள் என்று வேதங்கள் கூறுகின்றன. சிவத்துடன் வேறறக் கலந்திருக்கின்ற ஞானிகளுடைய பாததீர்த்தத்தில் ஸ்நானம் பண்ணுகிறவர்களும் சித்த சுத்தியையும் ஞானயோகத்தையும் பெறுவார்கள். மெய்ஞ்ஞானத்தைப் பெற்றவர்கள் சிவபெருமானோடு கலந்தலிங்கிய சாயுஜ்யமுத்தியைப்பெறும் மார்க்கத்திலேயே நடப்பார்கள்.

பன்னிரண்டாவது அத்தியாயம்

நாடி சுத்திகூறியது.

நிஷ்காமியமான கருமங்களைச் செய்து இயமநியமாதிகளையுடையவனும் சாந்தசித்தமுடையவனும் சத்திய சீலனுமிருக்கிற ஆசாரியனுடைய பணிவிடைசெய்து ஒழுகுவோன் மூன்று காலங்களிலும் ஸ்நானம் செய்து, விரசாக்கினி அல்லது ஹோமாக்னிகளிலுண்டான திருநீற்றை அணிந்துகொண்டு பஞ்சாட்சர மஹா மந்திரத்தை ஜபிக்கவேண்டும். எப்போதும் சிவபெருமானைச் சிந்தித்துவணங்கவேண்டும். விநாயகர், சுப்பிரமணியர், சரஸ்வதி, குரு, சூரியன், சந்திரன், வாயு, அக்கினி யிவர்களை முறைப்படி வணங்கவேண்டும். பிறகு தனக்கு இசைந்த ஒரு ஆசனத்தில் கிழக்கு முகமாயாவது வடக்குமுகமாயாவது உட்காரவேண்

டும். கழுத்து தலை முதலியவுறுப்புக்களைநேராகநிறுத்திமிராதிருக்க வேண்டும். மனதில் கலக்கமில்லாமல் மூக்கு நுனியில் பார்வையைவைத்து, அமிர்த பீஜாட்சரமாகிய வகாரத்தைத்தியானித்துப் பிராணாயாமம் செய்ய வேண்டும்.

இடைகலை வழியாக வாயுவைஉள்ளேயிழுத்துநாபிஸ்தானத்தில் நிரப்பிக் கும்பித்து, அக்கினி பீஜத்தைச் சிந்தித்துப் பிங்கலை வழியாகவாயுவை மெதுவாக வெளிவிடவேண்டும். பிறகு பிங்கலையாலே பூரித்துக்கும்பித்து இடைகலைவழியாக மெதுவாய் வெளிவிடவேண்டும். இப்படி வேளைக்கு ஆறுதரம் தவறாமல் செய்யவேண்டும். காலை மத்தியான்னம் மாலை யாகிய மூன்று காலங்களிலும் தவறாமல் செய்யவேண்டும். இப்படி மூன்று வருஷம் அல்லது நாலு வருஷம் செய்தால் நாடிகள் சுத்தியாய்ச் சரீரம் வசப்படும். அப்போது ஜாடராக்கினி ஜ்வலிக்கும் நாதம் தொனிக்கும். இந்த அடையாளங்கள் உண்டான பின் ஆன்ம சுத்தி செய்ய வேண்டும். ஆன்ம சுத்தியாவது, ஆசாரியனிடத்தில் மெய்ஞ்ஞானோபதேசம் பெற்றுச், சிவபெருமானுடைய உண்மையான சொரூபத்தை யறிந்து, உலக ஆசையற்று நிற்பதே ஆன்ம சுத்தியாம். சற்கருமங்களைச் செய்து சித்திபெற்றவனுக்குத் தான், ஞானமுண்டாகும். அப்படிக்கருமஞ் செய்யாதவனுக்கு ஞானமுண்டாகாது. அந்தக் கரும சித்தி சிவபக்தியாலேகிடைக்கும். சிலர் ஞானம் அடைந்தவர்களைப் போலப்பேசிக்கருமத்தை விட்டு இருப்பார்கள். அவர்கள் மஹாபாவிகளாய் முத்தியை யடையமாட்டார்கள். அவர்கள் போகம் மோட்சம் இரண்டையும் இழந்து ஜனன மரணங்களிலே வருந்தி அலைவார்கள். ஆதலால் கருமத்தை அலட்சியம் பண்ணாமல் செய்து ஞானத்தைப் பெறமுயல வேண்டும்.

⟵⟩⟨⟶

பதின்மூன்றவது அத்தியாயம்.

அஷ்டாங்கயோக நெறியில் இயமம் உரைத்தல்.

இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம் தாரணை, தியானம்,சமாதி என யோகாங்கங்கள் எட்டாம். அவற்றுள், இயமம் பத்துவகையாம். அவையாவன, கொல்லாமை, சத்தியம், அஸ்தேயம் பிரமசரியம், தயை, ஆர்ச்சவம், க்ஷமை, திருதி மிதபோஜனம், சௌசம் என்பனவைகளாம்.

கொல்லாமையாவது, யாகம் முதலியவற்றில் அன்றி மற்றைச் சமயங்களில் ஜீவ இம்சையை மனதினாலும் எண்ணாமலிருத்தலாம். பொறிபுலனுகிகரணங்களையும் சரீரத்தையும் நான் என்று எண்ணுதல் ஆத்ம கொலையாம். ஆகையால் அவ்வாறு நினையாமல் ஆத்மாவின் இயற்கைச்சொரூபத்தை உணர்தலும் கொல்லாமையாகும். காதினால் கேட்டதையும், கண்ணால் பார்த்ததையும் உள்ளபடியே கூறுதல் சத்தியமாம். சிவபெருமானே நித்தியமானவர், மற்றவர்களும் உலகும் நித்தியமல்ல என்று கருதுவதும் சத்தியமேயாம். பிறர்பொருளை அபகரிக்க நினையாமையும், தேகாதிகளை நான்என்று எண்ணாதிருப்பதும் அஸ்தேயமாம். தன்தாரத்தையன்றிப்பிறமாதரைக்கருதாமையும், பரசிவன் அடிக்கமலங்களில் மனதைச் செலுத்துவதும் பிரமசரியமாம். தன் உயிரைப்போலவே மற்றைய ஜீவனையும் கருதுதல் தயையாகும். தன்னுடைய புத்திரமித்திரகளத்திராதிகளிடத்திலும் மற்றவர்களிடத்திலும் தன் ஆத்மாவிடத்திலும் சமபுத்தியுடையவராயிருப்பதும் ஆர்ச்சவம் என்னப்படும். பகைவர் ஆதியரால் துன்பமுண்டானகாலத்திலும் அதனைச் சகித்திருப்பதே க்ஷமையாகும். சிவபெருமான் திருவடிகளைச் சிந்தித்திருப்பதே முத்திநெறி என்று கருதுவதே திருதியாகும். ஜீவாத்மாக்களையெல்லாம் சிவசொரூபமாக எண்ணுவதும் திருதியாகும். தேவாமிர்தத்தையும் சருக்கரைகளையும் சமமாகநினைத்துப் புசிப்பதே மிதாகாரம். உணவு [illegible]லும், குறைவாலும் யோகத்துக்குக்கெடுதி உண்டாகும். ஆகையால் அரைவயிறு ஆகாரமும் கால்வயிறு தண்ணீரும் [illegible]ண்டு, மற்றைய கால்வயிற்றை வாயு சஞ்சரிக்கும்படி விடவேண்டும். சௌசம் பாகிய சௌசமென்றும், ஆத்மசௌசம் என்றும் இருவகைப்படும். மண்முதலியவற்றைச் சரீரத்தில் பூசிக்கொண்டு, விதிப்படி ஸ்நானம் பண்ணுதல் பாகிய சௌசமாம். வேதாந்தப்பொருளை உணர்ந்து பரசிவனைச் சிந்தித்துப் பஞ்சபாசத்தை ஒழிவதே ஆத்மசௌசமாகும். இந்த இருவகைச்சௌசங்களையும் உடையவனே சுத்தாத்மாவாவான். பாகிய சௌசம் மாத்திரம் உள்ளவன் சித்த சுத்தியை அடையமாட்டான். ஆத்ம சௌசமுள்ள சிவயோகி பாகிய சௌசம் செய்யாமலிருந்தாலும் குற்றமில்லை. இப்படிக்கூறிய இயமநெறியினின்று சிவபிரானைச் சிந்திக்கவேண்டும்.

பதினான்காவது அத்தியாயம்

நியமவிதிகூறியது

தவம், சந்தோஷம், ஆஸ்திகம், தானம், ஈசுவரபூசை, சித்தாந்தசிரவணம், இலச்சை, மதி, ஜபம், விரதம், என்று நியமம் பத்துவகையாம்.

இவற்றுள் தவமாவது, வேதம் விதித்த சாந்திராயணம், கிருச்சிரம் முதலிய விரதங்களை அனுஷ்டித்துச் சிவபெருமானைச் சிந்தித்திருப்பதே தவமாம். இப்படிப்பட்ட பந்தம் எனக்கு எப்படி வந்தது, எந்தத்தெய்வத்தை வழிபட்டால் ஜனனம் நீங்கும், நான் ஜீவன்முத்தனாவது எக்காலம், உண்மையான மோட்சசாதனம் எது என்று ஆராய்ச்சி செய்வதும் தவமேயாம். பேராசையைவிட்டு ஒழித்துக் கிடைத்ததைக்கொண்டு திருப்தியடைவதே சந்தோஷம். புண்ணிய புவனபோகங்களை வெறுத்துச் சிவபெருமான் திருவடியைச் சிந்தித்திருப்பதும் சந்தோஷமாம். வேதாகமம் ஸ்மிருதிகளிற் கூறிய கருமங்களில் நம்பிக்கை உடைமையே ஆஸ்திகமாம். தருமமார்க்கத்தினால் சம்பாதித்த பொருளைச் சிவபக்தியுள்ள சற்புருஷர்களுக்குக் கொடுப்பது தானமாம். வேதநெறிகடந்தவர்களுக்கும், சிவபக்தியில்லாதவர்களுக்கும், சிவபக்தர்களைப்போல நடித்துத் திரிபவர்களுக்கும், ஜனன மரணங்களுக்குப் பயப்படாதவர்களுக்கும், மூர்க்கர்களுக்கும் தானம் கொடுத்தால் அது பயன் கொடாமற்போம். சிவலிங்காதி சொரூபங்களில் சிவபெருமானை ஆவாகனம் செய்து பூசிப்பதே ஈசுவரபூசையாம். பிராமண குலத்திற் பிறந்தவன் இந்தப் பூசைசெய்யாவிட்டால் அவன் சண்டாளத்தன்மையை அடைந்து நரகத்தில் விழுவான். இராகத்துவேஷாதிகளை விட்டுச், சத்தியமுடையவனாய்ச், சதாசாரமுடையவனாய்க், கொல்லாமை முதலிய விரதானுஷ்டானமுடையவனாயிருப்பதும் ஈசுவர பூசைசெய்தலேயாம். சிவபெருமானுடைய உண்மைச்சொரூபத்தை உபதேசிக்கிற வேதாந்த உண்மை உணர்தலே சித்தாந்த சிரவணமாகும். ஸ்திரீ சூத்திரர்கள் புராணங்களைக்கேட்பதே வேதாந்த சிரவணமாகும். வைதிக இலவுகிகங்களுக்கு விரோதமான காரியங்களைச்செய்ய வெட்கப்படுதலே இலச்சையாகும். சிவபக்தியுடன் வைதிக கருமத்தில் சிரத்தையுண்டாவதே மதியாகும். ஆசாரியர் உபதேசித்த மந்திரத்தை விதிப்படி தியானிப்பதே ஜபமாகும். கல்பசூத்திரம்,

ஸ்மிருதி, புராணம், இதிகாசம் இவைகள் கூறிய விதிப்படி மந்திரங்களைத் தியானிப்பதும் ஜபமாகும்.

வேதத்துக்கு மாறுபட்ட சாஸ்திராசாரங்களை அனுஷ்டித்தால் அது சிறிதும் பலன்கொடாது. பலனில்லாத அநேக தருமங்களைச் செய்வதைவிடச்சிறந்த வைதிக தருமங்களில் கொஞ்சமாவது செய்வது நல்லது. எப்போதும் வேதம் கூறிய மந்திரங்களையே ஜபிக்கவேண்டும். அந்த ஜபம் வாசிகம், மானசம் என்று இருவகைப்படும். வாசிகம் உச்சம், உபாம்சு என்று இருவகையாம். உச்சமாவது, மந்திராட்சரங்கள் வெளிப்பட உச்சரித்தலாம். அவ்வுச்சாரணம் இழிந்தோர்காதிற்பட்டால் பயன்கொடாமல் நிஷ்பலமாகும். உபாம்சு என்பது சப்தம் வெளிப்படாமல் உச்சரித்தல். இது உச்சத்தைவிட அநேக பங்கு சிறந்ததாம். மானசமாவது மந்திரங்களை வாயினால் உச்சரியாமல் மனத்திலசிந்திப்பது. அது மனனம், தியானம் என்று இரண்டு வகைப்படும். மனனமாவது நாவசையாமல் மந்திராட்சரங்களை மனதினால் எழுத்தெழுத்தாய் எண்ணுவது. தியானமாவது, மனம் ஒருப்பட்டிருந்து மந்திர சொரூபங்களைச் சிந்திப்பது. உபாம்சுவைவிட மனனம் பதினாயிரமடங்கு உயர்ந்தது. மனனத்தைப் பார்க்கிலும் தியானம் அநேக பங்கு மேலானது.

எந்த மந்திரத்தை ஜபித்தபோதிலும் அதற்குரிய ரிஷி, சந்தசு, தெய்வம், விநியோகம் இவைகளைச் சிந்தித்து அதன் பின் ஜபிக்கவேண்டும். இப்படிச்செய்தால் சகல பலன்களும் சித்தியாகும். குரு உபதேசத்தின்படி உபவாசமுதலியன செய்வதே விரதமாகும். விதிப்படி திருநீறு, ருத்திராட்சமணிந்து விடாமற் சிவபூசை செய்வதும் விரதமாகும். சிரோவிரதமே சிறந்தது என்பாரும், மத்தியாச்சிரம விரதமேமேலானதென்பாரும், ஐசுவர்விரதமே சிறந்ததென்பாரும், சாம்பவவிரதமே சிறந்ததென்பாருமாய் உலகத்தார் பலவகை கூறுவார்கள். வேதத்திலே பாசுபதவிரதம் ஒன்றையே சிறந்ததென்று புகழ்ந்து கூறப்பட்டுள்ளது. ஆதலால் அந்தப் பாசுபதவிரதத்தை அனுஷ்டிப்பதே தகுதி. இந்தப்பாசுபத விரதானுஷ்டானத்தினால் பாசமொழியும்; முத்தியுண்டாகும். இந்த விரதத்தை விட்டவன் பதிதனேயாவான்.

பதினைந்தாவது அத்தியாயம்.

ஆசனபேதம் கூறியது.

சுவஸ்திகம, கோமுகம, பதமம, வீரம, சிங்கம, பத்திரம், முத்தம, மயூரம, சுகம என ஆசனம ஒன்பது வகைப்படும. வலது தொடை முழங்கால்களின நடுவில இடது பாதததைச செலுத்தியும, இடதுதொடை முழஙகாலகளுக்கு மததியில வலது பாதத்தைதச செலுத்தியும சரீரததைச சமனுய்சசெய்து கொண்டு நிமிர்ந்து இருபபது சுவஸ்திகாசனம எனபபடும். வலது பிருஷ்டத்தில் இடததாள பரட்டையும, இடது பிருஷ்டததில வலத தாள் பரட்டையும மாறிவைத்து இருபபதுகோமுகாசனம் எனபபடும. இடது தொடைமேல வலது பாதததையும, வலது தொடைமேல இடது பாததததையும வைத்து, இரண்டு கைகளையும மாறி இரண்டு பாதபபெருவிரலகளையும பிடித்துக்கொண்டு இருபபது பதமாசனமாம். இநதப் பதமாசனம சகலரோகஙகளையும போககும் இயலபுள்ளது. இடது தாளபரடு வலது தொடைமேலிருககுமபடி வைததுககொண்டு சரீரம சமனுமபடி நிமிர்ந்து இருபபது வீராசனமாம. இடத்தாள் பரட்டை வலது அண்டத்தின் கீழும, வலது தாள்பரடடை இடது அண்டத்தின் கீழும் பொருநதும்படி வைதது, இரண்டு கைகளையும் இரண்டு முழங்கால்களின் மேலே விரல நிமிர்நதிருககுமபடி வைததுக்கொண்டு நாசிநுனியில் பார்வையைச செலுததி யிருப்பது சிஙகாசனமாம. இருகால் பரடுகளையும இரணடு அண்டங்களின் கீழிருக்குமபடிவைத்து, இரண்டு கைகளையும் இருதொடைகளின் மேலே ஊன்றவைததுககொண்டிருபபதே பத்திராசனமாம. இது விஷங்களையும், பயஙகளையும்போக்கும். இடத்தாள் பரட்டை அண்டத்தின் கீழிட்டு, அதன் கீழ் வலக்காற் பரட்டைச சேர்ததிருப்பது முகதாசனமாம. இடததாள் பரட்டை இலிங்கத்தானத்தின் மேல் வைத்து, அதனமேல் வலத்தாள் பரட்டை வைத்திருப்பதும முக்தாசனமேயாம். இரண்டு முழங்கைகளையும் நாபிஸ்தானத்தில் வைததுக் கைகளைப பூமியில ஊன்ற வைத்துச, சிரசுமுதல் பாதம் வரையுள்ள உடல் பூமியில் படாதபடி யெழுந்து நிற்பது மயூராசனமாம். இது சகலபாபங்களையும போக்கும் என்பார்கள். எபபடியிருந்தால் சுகமாயிருககுமோ அப்படியிருப்பது சுகாசனமாம். இது சகதி யில்லாத வர்களுக்குத் தக்கது. இந்த ஆசன

பேதங்களை உணர்ந்தவன் சகல உலகங்களையும் ஜயித்தவனாவான். ஆசாரியருடைய அனுக்கிரகத்தைப்பெற்று, இந்த ஆசனங்களில் தனக்கு இசைந்தஒரு ஆசனததிலிருநதுகொண்டு பிராணாயாமம் செய்யவேண்டும்.

பதினாறாவது அத்தியாயம்.

பிராணாயாம முறைத்தல்.

பிராணாயாமம், இரேசகம பூரகம கும்பகம் என்று மூன்று பகுதியாய் அகார உகார மகார சொரூபமாயிருக்கும. இந்த மூனறும சேர்ந்தால் பிரணவமாம். ஆதலால் பிரணவமே பிராணாயாமததின் சொரூபமாகும. இடகலையால் வாயுவையிழுததுப் பதினாறு மாத்திரைபூரிதது, அகாரத்தைதசிநதிக்கவேண்டும. அப்படிப பூரிதத வாயுவை அறுபத்துநாலு மாததிரையளவு கும்பிககவும், சகதியுள்ளமட்டும கும்பகம செய்யலாம. பிறகு கும்பிதத வாயுவை பிஙகலை வழியாக முப்பததிரண்டு மாத்திரை யிரேசிக்கவும. பின் பிஙகலையால பதினாறு மாத்திரை பூரிதது அகார வடிவான சிவனைத் தியானிககவேணடும. முன சொன்னபடி அறுபததுநாலு மாததிரை கும்பிதது உகாரசொரூபமான விஷ்ணுவைச சிநதிக்கவேண்டும. பின பிரமனைத் தியானிதது இடகலை வழியாக முப்பததிரண்டு மாததிரை யிரேசகம் செய்யவும. இதுவே பிராணாயாம முறையாகும. இம்முறை சந்நியாசிகளுக்குரியது.

பிரமசாரி, கிருகஸ்தர், வானப்பிரஸ்தர் இவர்கள் முறைபபடி வாயுவைப் பூரித்து வியாகிருதிகளோடு கூடின காயத்திரியை ஜபிக்கவேண்டும். க்ஷத்திரிய வைசியர்களும் இதை அனுஷ்டிக்கலாம். ஸ்திரீ சூத்திராகள் நமோந்தமான பஞ்சாட்சரம் அல்லது அஷ்டாட்சர மநதிரங்களை ஜபிகக வேண்டும். ஒருநாளைக்குப் பதினாறு பிராணாயாமம்செய்யவேண்டும். ஒருமாசம் அளவும் இநதப் பிராணாயாமத்தை முறைப்படி செய்தால் கொலைமுதலிய பாவங்கள் ஒழியும். ஆறுமாதம் செய்தால் ஞானமுண்டாகும். ஒருவருஷம் செய்தால் அவன் பிரமஞானியாவான். தன்தருமத்தை விடாதயோகி பிராணாயாமத்தாலே முத்தியடைவான். பிராணவாயுவை யிழுத்துப் பூரித்தலே பூரகம். அந்த வாயுவை

வயிறதில் நிரப்புதலே கும்பகம். அவ்வாறு கும்பிதத வாயுவை வெளியில் விடுதலே இரேசகமாம.

பிராணுயாமஞ் செய்யும்போது வேர்வையுண்டாளுல் அதம மாகும. நடுக்கமுண்டாளுல மததிமம். உததானம (வாயுமேல எழுதல்) உண்டாளுல் உத்தமம். அது உண்டாகும அளவும விடாமற் செய்யவேண்டும். அது உண்டாய்விட்டால சுகமும சித்த சுத்தியுமுண்டாளுல் மனமானது ஞான சோதியை யடையும. அதனுல ஆத்மா சிவத்தோடு கலக்கும். சாயுஜ்யமுததியும சித்திக்கும. இரேசபூரகங்களை விட்டுக் கும்பகம ஒன்றையே அப்பியசித்தால் சகலபாவங்களும ஒழியும். மனோவேகம்போன்ற வேகத்தையும பெறுவான். ஞானமும உண்டாகும். தினம பிராணுயாமத்தை அப்பியாசம பண்ணுகிறவனுக்குத் தீங்கியாதும் நேராது. அவனுல் அடையப்படாதது, எவ்வுலகத்திலும இல்லை. ஆகையால் எவ் விதத்தாலும் பிராணுயாமத்தை அப்பியாசம்பண்ண வேண்டும. சந்தியாகாலங்களிலும், பிராம முகூர்த்தத்திலும செய்யலாம். பிராணவாயுவைப் பூரித்து நாசிநுனி, நாபிமத்தி, பாதப்பெருவிரல் இவற்றில தாரணம்செய்ய வேண்டும. அவன் எல்லாரோகங்களும் ஒழிந்து நூறுவருஷம ஜீவிப்பன். நாசிநுனியில் தாரணம பண்ணிளுல் வாயு வசப்படும். நாபிமத்தியில் தரித்தால் நோய்களொழியும். காற்பெருவிரலில் தாரணம செய்தால சரீரம் இலேசாகும. நாக்கிளுல் பிராணவாயுவை ஆகருஷித்துப் பானம் பண்ணிளுல் சகல ரோகங்களும நீங்கும. வாயுவை நாவிளுல் ஆகருஷித்துச சித்தத்தில தரித்து அமிர்தபானம செய்தால் தேவர்களைப்போலப் புகழும அகமும பெறுவான். இடைகலையிலாகருஷித்துப் புருவமத்தியில் தரித்து அமிர்தம் உண்டால் சகல வியாதிகளும் ஒழியும. இடைகலை பிங்கலையால் வாயுவையிழுத்து நாபிஸ்தானத்தில் தரித்தால் சகல வியாதிகளும நீங்கும. இதயத்திலும் நாபியிலும தாரணம் செய்தால் வாத பித்த சேத்தும தோஷங்கள் எல்லாந் தீரும. கண்களிலும் காதுகளிலும் சிரசிலும் தரித்தால் அங்கங்கே யுண்டாகும் நோய்கள் தீரும். சுவஸ்திகாசனத்தி லிருந்துகொண்டு அபானவாயுவை மெதுவாக மேலே யிழுத்து, காதுகளை அங்குஷ்டங்களாலும், தற்சனியால் கண்களையும் மூடி, மத்திமை விரல்களால் நாசியை நெருக்கி, வாயுவைக் கபாலத்தில் சேர்த்துத் தரிக்கப் பிராணவாயு பிரமரந்திரஸ்தானத்தை அடையும். அப்போது நாதம் தோன்றும்.

அந்தநாதம் பத்துவகையாகத் தோன்றும். அவை கிண்கிணி, சிலம்பு, மணி, சங்கம், யாழ், தாளம், புள்ளாங்குழல், பேரி, மத்தளம், மேகம் என்பன போல்வனவாம். வாயு கபாலமத்தியை அடையும்போது ஆதமாமலையினின்றும் இறங்கும் அருவிபோலக் கீழ்முகமாய்த் தோன்றும். அப்போது மெய்ஞ்ஞானம் தோன்றும். சமுசாரபந்தம் நீங்கும். இடக்கால் பரட்டை அண்டத்தின் கீழிருத்தி, வலக்கால் பரட்டையும் சேர்த்து நெருக்கி, விநாயகரையும் சிவபெருமானையும் சிந்தித்து, செந்நிறமான இதழ்களையுடைய மூலாதார தாமரையில் பிரணவத்தைத் தியானித்துக்கொண்டு மனோலயமுண்டாகுமளவும் வாயுவைத் தரிக்கவும். அப்போது அபானவாயு அக்கினிஸ்தானத்தை அடையும். பிராணன், அபானன் அக்கினி மூன்றையும் சேர்த்துப் பிரணவத்தியானத்துடன் அங்கே தரிக்கவேண்டும். அக்கினி ஜயமுண்டான பிறகு அக்கினி மண்டலத்துக்குமேல், கந்தஸ்தானத்துக்குக் கீழே சுவாதிஷ்டான கமலத்தில் பிராணன், அபானன் அக்கினி மூன்றையும் சேர்க்கவேண்டும். பிரணவத்தைச் சிந்தித்து நாபிஸ்தானத்தைக் கண்களாற் பார்த்துக்கொண்டு மனோலயமுண்டாகுமட்டும் தரிக்கவேண்டும். அப்போது அக்கினி சுடர்விட்டெரிதலால் குண்டலி பிரமரந்திரவழியை மறைத்துக்கொண்டிருக்கும் படத்தை அவ்விடத்தைவிட்டு எடுக்கும். அப்போது சுழிமுனையின் அடியிலுள்ள சிறுதுவாரம் வெளிப்படும். அந்தத்துவாரத்தின் மார்க்கமாகப் பிரணவ தியானத்துடன் பிராணவாயுவைச் செலுத்தவேண்டும். கூடிலம் அளவும் செலுத்தித் தரிக்கவும். அப்போது அக்கினி வாயுக்களால் அங்கமுற்றும் பூரிக்கப்படும். அப்போது சிரசில் சூரியனைப்போல ஆத்மா ஒளிவீசி நிற்கும். இப்படி அப்பியாசம் செய்ய வாயுவசப்படும். வாயு ஜயமானதற்கு அறிகுறியாக வேர்வை முதலியன உண்டாகும். இப்படி யோகம் செய்யும் யோகிக்கு மூன்றுலோகங்களிலும் எதிரில்லை. மூலரோகம் முதலியன நீங்கும். மஹாபாதகங்களும் ஒழியும். அதனால் சித்தசாந்தி உண்டாகும். சித்தசாந்தியினாலே வைராக்கியம் உண்டாகும். வைராக்கியத்தினாலே மெய்ஞ்ஞானம் உதிக்கும். ஞானத்தினாலே பாச மொழிய முக்தி யுண்டாகும்.

இந்த ஞானசாதன மிருக்கையில் அதனை அடைய முயலாமல் உலகபாசத்தில் கட்டுண்டு பந்த மொழியாமல் உலகத்தார் கெடு

வது ஆசசரியமேயாம். ஞானுமிர்தத்தில் ஒருதுளி பானம்பண்ணினாலும பிரபஞ்ச பந்தமற்றுப, பரமசிவனுடைய பாதகமலங்களைத் துணையாகபபற்றி முத்தியை அடையலாம். சிவஞானம் பெறறவாகள் பிரபஞ்சம் எலலாவற்றையும் ஞானமயமாகவே காண்பாாகள். அஞ்ஞானிகளோ விஷயவடிவமாகப பாாபபார்கள். இது பாசத்தின் வலிமையேயாம. சிவபெருமான திருவடியை அடைவதற்குப பலவகைமார்க்கங்களைச சொல்வாாகள். ஆயினும் தானத்தினாலே போகங்க ளுண்டாகும. யாகங்களினாலே தெய்வ வடிவம் பெறலாம. தவங்களினாலே பிரமபததததை அடையலாம். ஞானம் ஒன்றே முததிககுக காரணமாகும. சரியான புத்தியுள்ளவர்களுக்குத்தான இது விளங்கும். மூடர்களுககு எவ்வளவாக விளக்கிச சொன்னாலும விளங்கமாட்டாது. கருமததால முததி அடையமுடியாது. கருமத்தைச செய்யாவிட்டால ஞானமுண்டாவதிலலை. ஆகையால எபபோதும சற்கருமங்களைச செய்து அதனாலே ஞானததை அடைந்து, அநத ஞானததால் முததியடையவேண்டும. இபபடியிருககக கருமத்தை விட்டிருககும் மூடர்கள் எபபடிக்கதியடைவாாகளோ அறியோம். சூரியனுதிக்க இருள் நீங்குவதுபோல ஞானம் உதிக்கப பாச இருளும தறபோதமும் ஒழியும. சஞ்சித கனமமும் தொலையும. அதனால சிவசாயுஜ்யம் பெறுதல நிசசயமாகும். அபபடிப்பட்ட ஞானததைப பெறுவதற்குப புததியுள்ளவன நல்ல கருமங்களைச செய்தே தீரவேண்டும.

பதினேழாவது அத்தியாயம்.

பிரத்தியாகார வியல்கூறல்.

விஷயாநுபவத்திற செல்லும் இந்திரியங்களை அடக்கி அவைகளைத் தனவசமாக்கிக கொள்வதே பிரத்தியாகாரமென்பர். காணப்பட்ட பிரபஞ்ச மெல்லாவறறையும சிவசொரூபமாகப பார்பபதும் ஜனிததது முதல ஈசசாகும் வரைககும தான் செய்யுந தொழிலகளெல்லாமும் சிவன்செயலேயென்று கருதுவதும் பிரத்தியாகாரமாம். நித்திய நைமித்திகங்களான சறகருமங்களைச்செய்து சிவார்ப்பணம செய்தலும பிரததியாகாரமாம். பிராணவாயுவை ஆகருஷித்துத் நாதமூலத் தானத்திலும் அதன்பின் கண்டஸ்தானத்திலும், பிறகு இருதயத்திலும், பிறகு நாதஸ்தானத்திலும்,

பிறகு அபானத்திலும், பிறகு கடிஸ்தானத்திலும், பின் தொடைகளிலும்,பின் முழங்கால்களிலும்,பின் கணைக்கால்களிலும், அதன் பின் பாதப் பெருவிரல்களிலும் நிறுத்தவேண்டும். ஒருதானத்தில் வாயு நிரம்பும் மட்டும் சித்தத்தை நிறுத்தி, பின் மற்றொரு ஸ்தானத்துக்குச் செலுத்துவதும் பிரத்தியாகாரமேயாம். வாயுவை இடைகலை பிங்கலையால் இழுத்துச் சுவஸ்திகாசனத்தி லிருந்து, பாதம் முதல் சிரசுவரைக்கும் பூரித்துப், பிறகு இருபாதங்கள் மூலாதாரம், நாபிகந்தம், இருதயமத்தி, கண்டம், நாக்கு மூலம் புருவநடு, நெற்றி,சிரசு ஆகிய ஒன்பது இடங்களிலும் சித்தத்தை நிறுத்தவேண்டும். அகாரம், உகாரம், மகாரம், பஞ்சாட்சரங்கள் பிரணவம் ஆகிய ஒன்பது எழுத்துக்களையும் முறையே பாத முதல் சிரம்வரை ஒன்பது ஸ்தானங்களிலும், நிறுத்திச் சிந்திக்கவும். ஒரு ஸ்தானத்தை ஜபித்தபிறகு மற்றொரு ஸ்தானத்துக்குச் செலுத்தவேண்டும். இதுவும் பிரத்தியாகாரமாம். சரீராதிகளை ஆத்மா என்று கூறுகிறஞானத்தையும் பரமசிவனிடம் செலுத்துதலும் பிரத்தியாகாரமென்பர். இது பரம இரகசியமாகும்.

—<✠✠>—

பதினெட்டாவது அத்தியாயம்

தாரணை யுரைத்தல்.

சரீரமத்தியாகாசத்திலே,பிராணவாயுவிலே,ஜாடராக்கினியிலே, அப்புஸ்தானத்திலே, பிருதிவி ஸ்தானத்திலே முறையே ஆகாயத்தையும், காற்றையும், அக்கினியையும், அப்புவையும், பிருதிவியையும், அபேதமாகச்சேர்த்துத் தாரணைசெய்து, ஹகாரத்தையும், யரலவ எனகிறமெய்யெழுத்துக்களையும் விந்துவுடன் கூட்டி ஜபித்தலும் தாரணையாம். இது மஹாபாதகங்களை நீக்கும். முழங்கால்வரைக்கும் பிருதிவியின்பாகமாம். குதஸ்தானம் வரைக்கும் அப்புவின் பாகமாகும். இருதய ஸ்தானம் மட்டும் அக்கினி பாகமாகும். கண்ட ஸ்தானம் வரைக்கும் வாயுபாகம். அதன்மேல் சிரசுவரைக்கும் ஆகாசபாகமாகும். இவையே சரீரத்தில் பஞ்சபூதஸ்தானங்களாம். இந்தஸ்தானங்களில் பிருதிவிஸ்தானமுதல் முறையே பிரமன், விஷ்ணு, ருத்திரன், மஹேசுவரன், சதாசிவன் இவர்களைப் பாவிக்கவேண்டும். இது ஒருவகைத்தாரணையாம்.

வேறு ஒருவகைத்தாரணையும் உண்டு. அதாவது மனதில் சந்திரனையும், செவிகளில் திக்குகளையும், வாக்கில் அக்கினியையும், கைகளில் இந்திரனையும், பாதங்களில் உபேந்திரனையும், அபானஸ்தானத்தில் சூரியனையும், குய்யஸ்தானத்தில் பிரஜாபதியையும், தொக்கில் வாயுவையும், நேத்திரத்தில் சூரியனையும், நாக்கில் வருணனையும், மூக்கில் அசுவினிதேவர்களையும், ஜீவனில் பரமசிவனையும் தரித்துப் பாவிப்பதும், பிரமன் முதலான காரியங்களை அதனதன் காரணத்தில் ஒடுக்கி, எல்லாவற்றுக்கும் காரணமானமாயையைச் சிவத்தில் ஒடுக்குவதும் தாரணையாம். விஷ்ணுமுதலானதேவர்களின் பெருமைகளையும், சிவபெருமானுடையபெரிய புகழையும், காலவகைகளையும், விதியையும் மற்றும் சொல்லப்படுவன எல்லாவற்றையும், எடுத்துச் சொல்லுகிறபடியாலும், பரமசிவனுடைய வசனமாயிருத்தலாலும் அந்த வேதத்துக்கு ஒப்பான நூல் ஒன்றுமில்லையென்று கருதுதலும் தாரணையாம். தேவாகளும் தேகாதிகளும் நான் அல்ல, நான் பரமசிவனுக்கு வேறல்ல, என்று பாவனைசெய்வதும் தாரணையாம்.

பத்தொன்பதாவது அத்தியாயம்.

தியானமுறை கூறியது.

பரிசுத்தமான ஆகாயத்தில் குளிர்ச்சியுடைய சந்திரன் பல கிரணங்களுடன் ஒளிவீசிக்கொண்டிருக்கும்: அந்தச் சந்திரமண்டலத்தை முதலில் தியானிக்கவேண்டும். அந்தச் சந்திரமண்டலத்தினடுவில் ஸ்ரீபரமேசுவரன் உமாதேவியுடன் ஆனந்த சொரூபமுடையவரா யெழுந்தருளியிருப்பார். அந்தச் சிவசொரூபத்தை ஸோகம் பாவனையாலே தியானிக்கவேண்டும். பரிசுத்தமான அந்த ஆகாசத்தினடுவிலே இலட்சம் யோசனை விசாலமுடையதாய் விளங்குகிற சந்திரமண்டலத்தில் உமாதேவியாரோடு கூடிச் சொர்ணமயமான திருவுருவமும், தாடி முதலியவுள்ள முகமும், நகமும், சிவந்தநிறமும் உடையவராய் விளங்கும் சிவபெருமானைச் சிந்திக்கவேண்டும். சுத்தமான வைதிகாக்கினியினின்றும் தோன்றுகிற அளவில்லாத உலகங்களுக்காதாரமாகிய நிர்மல சொரூபமுடைய சிவபெருமானை, பால்போலும் வெண்ணிறமுடையவனாய், சந்திரகலாதரனாய், திரிலோசனனாய், விசுவரூபனாய்க் கருதிச

சோகம்பாவனை செய்யவேண்டும். ஆயிரம் சிரசுகள், ஆயிரம் கைகள், ஆயிரம் கால்களுடையவனும், சேதனுசேதனங்களுக்கு அதிஷ்டானனும் நாராயணனென்னும் திருநாமமுடைய திருமாலை நான் என்று ஸோகம பாவனை செய்யவேண்டும். சிவபிரானுக்கு இருப்பிடமாய், பிரணவசொரூபமான பிராணுயாமததால மலருந் தனமையுடையதாய், அணிமாமுதலிய எட்டுசசிததிகளையும் இதழ்களாகவுடையதாய், தததுவவிததைகளைக் கேசரமாகவுடையதாய் சாததிரஞானததைநாளமாகவுடையதாய், உண்ணிலைக்கருவிகளுக்கு ஆழிகினைச செய்து கொண்டு விளங்குகிற இருதயகமல மத்தியில் பலசுவாலையுடன பாதமுதல் சிரசுவரைக்கும் உஷ்ணம கொடுத்துக்கொண்டு, காறறிலலாவிடத்தில எரிகிற விளக்கைப் போல அசைவற்றுக், கரிய மேகத்துக் கிடையில் மின்னல விளங்குவது போலப் பிரகாசித்துக்கொண்டு, நீவாரதானியம போன்ற சொரூபமுடையதாய், மஞசள் நிறமுடைய தாய் விளங்குகிற அகக்கினியையும தியானிககவேண்டும். அநத அககினிசசிகையின் மததியில் சிவபெருமான் விளங்குகிறா. அநதச சிவபெருமானை வேறறக்கருதி ஸோகம் பாவனை செய்யவேண்டும். இது வேதங்களால் சொலலபபட்டதும் முத்திக்கு மாரககமாயுள்ளதுமாம.

தன்னைப புண்ணியவானுக எண்ணிககொண்டு தன்னுடைய இருதய மத்தியில சாவசாட்சியாக வீற்றிருந்தருளும் சிவபெருமானை ஸோகம பாவனையால் தியானிக்கவேண்டும். சச்சிதானந்த சொரூபமுடையவனும், நிததியனும், தத்துவாதீதனும், அத்துவாமூர்த்தியாய், சர்வவியாபகனுய்த் துரியா தீதனுயுள்ள பரமசிவனைத் தியானிக்கவேண்டும். இபபடிப்பட்ட சிவபெருமானைத் தனக்கு வேறுகாமல ஸோகம் பாவனை செய்கிறவன் சிவனேயாவான், சகல பாவங்களினினறும விடுபடுவான். அவனே முத்தியடையத் தக்கவன். இப்படித்தியானஞ் செய்யச் சக்தியற்றவன் மஹாவிஷ்ணுவையாவது, பிரமதேவனையாவது, சூரியனையாவது, அக்கினி தேவனையாவது, சந்திரனையாவது தியானிக்கவேண்டும. இப்படி இடைவிடாமல் தியானம் பண்ணிக்கொண் டிருந்தால், அவன் மெய்ஞ்ஞானத்தை அடைவான்.

இருபதாவது அத்தியாயம்.

சமாதி கூறியது.

சச்சிதானந்த சோதி சொரூபனாகிய சிவபெருமானுடைய ஒளிவடிவத்தில் சகல சீவன்களும் வேறறக்கலந்திருக்கும். அந்தக் கலப்பே சமாதியாகும். அத்துவிதமென்கிற சொல்லுக்கு வேறில்லை யென்று பொருள். எல்லாசசீவர்களும் தானாகவே சிவபெருமான் விளங்குவார். ஆதலால் அவரைத்தனக்கு வேறாகாமல் யோகம் பாவனைசெய்யவேண்டும். துவைதபாவனை செய்தால் ஒருபோதும பிறப்பு நீங்காது. அந்தச சோதி சொரூபன் ஏகனாலும் தன்மாயையாலே பல சொரூபமாகக் காணப்படுவன். மடாகாசத்தையும கடாகாசத்தையும போலப்பேதமாகக்காணப்படுகிற இந்த உண்மையைத் தெரிந்துகொண்டால் பேத பாவனை அற்றுப போகும். பிராணவாயு, பொறி, மனம், சித்தம், அகங்காரம், பஞ்சபூதம, தன்மாத்திரைகள், மாயை இவைகளைத் தான் என்று எண்ணாமல் தன் ஆத்ம சொரூபத்தின் உண்மையைத்தெரிந்து கொண்டு, ஆனந்த மயமான பரமஜோதியில் கலந்திருப்பதும் சமாதியாகும். பூதகாரியமாகிய அண்டங்கள் எல்லாவற்றையும் பூதம என்று உணர்ந்து கொண்டு, அவற்றை விவேகாக்கினியாலே தகித்துப் பின், ஸ்தூலபூதங்களைச சத்தாதி தன் மாத்திரைகளாகக்கண்டு தகித்து, பிறகு அந்தச சூட்சுமபூதங்களை மாயைமாத்திரமாகக் கண்டு தகித்து, மாயையும் அருளால் தகித்துவிட்டுப பரமானந்தமயமாகிய சிவஜோதியிலே ஒடுங்கி நிற்பதும ஒருவகைசசமாதியாம்.

பிரணவசொரூபமான சிவபெருமானை அகார உகார மகார நாதசொரூபியாக உணர்ந்துகொண்டு, அந்த அகார உகார மகார நாதமாகிய நான்கினையும் இருக்கு யஜுஸ் சாம அதர்வணவேதங்களாகவும், பிரமன் விண்டு ருத்திரன் காரணசிவமாகவும், காருகபத்தியம்,தட்சணாக்கினியம்,ஆகவனீயம்,சம்வர்த்தம் என்கிற அக்கினிகளாகவும், பூமி, அந்தரம், சொர்க்கம், சந்திரலோகமாகவும், ஜாக்கிரம் சொற்பனம் சுழுத்தி துரியங்களாகவும், நாபி இருதயம் கண்டம் சென்னிகளாகவும் கருதி, இவைகளெல்லாம் பிரணவமே யென்றுகொண்டு, அகாரத்தை உகாரத்திலும், உகாரத்தை மகாரத்திலும், மகாரத்தை நாதத்திலும், நாதத்தை மாயையிலும்,

மாயையை ஆன்மாவிலும், ஆன்மாவைச் சிவத்திலும் ஒடுக்கி நிற்பதும் சமாதியேயாம். அலை நுரை முதலியவைகள் சமுத்திரத்திலே தோன்றி அந்தச சமுத்திரததிலேயே அடங்குகிறது போல்ப் பிரபஞ்சம் சிவத்திலே தோன்றி யந்தச் சிவத்திலேயே ஒடுங்கும். அந்தசசிவததிலே ஒடுஙகிநிறகிற எனக்குப்பிரபஞ்சம் ஏது? மாயை ஏது? ஒன்றுமில்லை யென்று கருதிச சிவததில் ஒடுங்கி நிற்பதும சமாதியாகும. விகாரமறற நிர்மல ஒளியாகிய சிவஜோதி எபபோது தோன்றுமோ அபபோது சமாதியும் சித்திககும். தன் ஆன்மாவில் எல்லா ஜீவன்களையும பார்பபதும், எல்லாச் சீவன்களிலும தன் ஜீவனைத் தரிசிபபதும், எபபோது ஒருவனுக்குச சித்திக்கின்றதோ அப்போதே அவன் முததியடைந்தவனாவான். இபபடியாகச சித்ததைதச சிவபெருமானிடத்தில் நிறுத்தி அந்தச சிவததோடு அபேதமாய்க் கலந்திருக்கிறவன் முததனாவான். சிவபெருமான் திருவடியில் மனத்தைச செலுத்தி யான் எனது என்பது அறறு நிற்பவனே முத்திபெற்றவனாவான். மஹாதேவனே நிததியன்; பிரபஞ்சம் எலலாம் அவனுடைய மாயையிலே தோன்றி ஒடுங்கும் என்று தெரிந்துகொண்டவன் முததனாவான். சதா துககததையே தருவதாகும் ஜனனநோய். அந்த நோயை நீககுகிற மருந்து சிவபெருமானேயாம. அந்தச சிவத்தை உணரும மெய்ஞ்ஞானததை அறிந்தவன் சிவனே ஆவான். எத்தனை கருமங்களைச செய்தாலும் அவை ஒருகாலு நிலைபெறுன பலனைத் தருவதில்லை; சிவஞானமானது நிலைபெறற பேரின்பத்தைத் அருளும; ஒருநாளும அழியாது. அக்ஷயமாயிருக்கும் தீபச சுடரானது சிறிதாக இருநதாலும் இருட்டை ஒழிபபதுபோலவும், ஒரு சிறிய தீப்பொறியானது பெரிய வனத்தைத் தகிபபது போலவும், சிவஞானம சிறிது பெறறாலும் அது அவனுடைய பாவங்களெல்லாவற்றையும தகிககும. மநதிரசித்தி பெறறவன் பாம்புடன் சதா கூடியிருந்தாலும் அந்தபபாமபினாலே கடிக்கப் பட மாட்டான். அது போல சிவஞானத்தை அடைந்த சிவயோகி உலகத்துடன் கூடியிருந்தாலும் அவ்வுலகவாதனையை அடைய மாட்டான். தாமரையிலைத் தண்ணீரைப்போலப் பிரபஞ்சவாதனையோடு கூடாமலேயிருப்பான்.

இப்படிப்பட்ட சிவஞானியைச் சிவனென்று கருதாமல் அவமதிக்கின்ற பாவியானவன் வெகுகாலம் நாகத்தில் விழுந்து

கிடப்பான். சிவஞானி எவனுடைய வீட்டிலே காலடிவைப்பான் அவனுடைய வீடு எப்போதும் குறையாத செல்வத்துடன் கூடி விளங்கும். அவனுடைய பிதிர்களும் பாவம் நீங்கி முத்திசேர்வார்கள். சிவஞானியுடைய கடாட்சம் யாருக்குண்டாகிறதோ அவன் சகல பாவங்களினின்றும் விடுபடுவன். அந்த ஞானி பிறந்தகுலம் ஈடேறும். அவனைப்பெற்ற மாதாவும் முத்தியை அடைவாள். சிவஞானியைத் தரிசிப்பதே சிவதரிசனமாகும். அந்தச் சிவஞானி தங்கின பூமி புண்ணிய க்ஷேத்திரமாம். அவனை வணங்குதல் சிவனை வணங்குதலேயாம். அந்தச் சிவஞானிக்குச்செய்யும் பணிவிடைகளெல்லாம் சிவ பணிவிடைகளேயாகும். இப்படிப்பட்ட சிவஞானிகளுடைய மகிமைகளை யுணராமல் உலகம் நரகவேதனையை யடைகின்றது. எவனுக்குச் சிவபக்தி சிறந்திருக்கிறதோ அவனுக்குத்தான் சிவஞானமும் கிடைக்கும். மற்றவர்க்குக் கிடைக்காது. சிவஞானத்தின் பெருமை சொல்லுக்கடங்காதவைகளாம்.

ஞானயோககாண்டம்

முற்றிற்று.

22630
MADRAS-9

செந்திலாண்டவன

திருவடி துணை.

மூன்றாவது.

முக்திகாண்டம்.

முதலாவது அத்தியாயம்

சூத புராணிகர் மேருமலைக்குச் சென்றது.

சூரியன் சந்திரன் முதலிய கிரகங்களும் நட்சத்திரங்களும் பிரதட்சணம் செய்வதாய், மூன்று உலகங்களுக்கும் ஆதாரமானதாய் விளங்குகிற மஹாமேருபருவதத்தில், நாலுவகைச் செடி கொடிகளும் விருட்சங்களும் அடர்ந்து வளர்ந்து விளங்குகிற ஒரு பொழில் உண்டு. அதில் இரணியாட்சன், கிலீபன், மஹோதரன், மஹாபாகு, சங்குகர்னன், விசுவன், காலமாலி, உருத்திரபக்தன், ஆருணேயகன், சத்ருத்திரன், ஜாபாலி முதலான எழுபத்தீராயிரம் முனிவர்கள் தவசுசெய்து கொண்டிருந்தார்கள். அவர்களெல்லாரும் ஒரு மஹாசத்திரயாகம் செய்தார்கள். அந்த யாகத்தின் முடிவில் அந்த முனிவர்கள் எல்லோரும் கூடி மோட்சம் என்பது என்ன? அதை அடைகிற மார்க்கம் எது? அந்த முக்தியை அளிக்கிற தெய்வம் யார்? அந்தத் தெய்வத்தைத் தரிசிப்பிக்கிற குரு எவன்? என்று ஆலோசித்தார்கள். யோசித்தும் உண்மை அறியமுடியவில்லை. ஆகையால் இந்தச் சந்தேகத்தை நிவிர்த்திசெய்து கொள்வதற்காகத் தவம் செய்வோம் என்று தீர்மானம் செய்து கொண்டு ஸ்ரீ பரமேசுவரனை நோக்கித் தவசுசெய்தார்கள்.

அப்போது கைலாசமலையின் ஒருபக்கத்தில் தவசுசெய்து கொண்டிருந்த சூதபுராணிகர் நைமிசாரணிய முனிவர்களுடன்

சேர்ந்து அந்த யாகத்தைக் காணவந்தார். அங்கே யிருந்த ரிஷிகள் எல்லாரும் எழுந்திருந்து சூதமுனிவரை யெதிர்கொண்டு அர்க்கியம், பாத்தியம், ஆசமனீயம் கொடுத்து, ஒரு ஆசனமிட்டு அதில் எழுந்தருளச்செய்து, தாங்களும் அவரைச்சூழ உட்கார்ந்து கொண்டார்கள். பிறகு சூதமுனிவர் அவர்களை நோக்கி நீங்கள் சரீரம் மெலியும்படியாகத் தவசு செய்தகாரணம் என்ன என்று கேட்டார். முனிவர்கள், புராண இரகசியங்களை யெல்லாம் உணர்ந்த சூதமுனிவரே! முக்தி என்பது என்ன? அதைப் பெறுகிற மார்க்கம் என்ன? முக்தியைக் கொடுக்கும் தெய்வம் எது? அந்தத்தெய்வத்தைத் தரிசிப்பிக்கிற குரு யார்? என்பதைப் பற்றி ஆலோசித்தோம். எங்களுக்கு உண்மை புலப்படவில்லை. அதை உத்தேசித்தே தவசுசெய்தோம். தேவரீர் எழுந்தருளினமையால் நாங்கள் காரியசித்தி பெற்றோம். ஆகையால் எங்களுக்கு உண்டான சந்தேகத்தை நீக்கியருள வேண்டும் என்று சொன்னார்கள். சூதமுனிவர் மனமகிழ்ந்து முனிவர்களே! நீங்கள் கேட்டதைச் சொல்லுகிறேன் கேளுங்கள் என்று சொல்லுகிறார்.

இரண்டாவது அத்தியாயம்.

முக்தியின் சொரூப முரைத்தல்.

க்ஷீராபதியிலே சேஷசயனத்தின் மேல் அறிதுயில் அமர்ந்தருளும் இலட்சுமிகாந்தனாகிய திருமாலானவர், கயிலாசமலைக்குப்போய் ஒரு இடத்திலிருந்துகொண்டு, பஞ்சேந்திரியங்களையும் அடக்கி, நாசிநுனியில் பார்வையைச்செலுத்தி, உமாகாந்தனை நோக்கி நெடுங்காலம் தவம்புரிந்தார். அப்போது பரமேசுவரன் உமாதேவியாரோடும் ரிஷபவாகனத்தின்மேல் எழுந்தருளிக் காட்சிதந்தார். உடனே திருமால் எழுந்து மகிழ்ந்து சிவபெருமானை வணங்கித் துதித்துப்போற்றினார். மஹாதேவன் திருமாலைநோக்கி உன்மனதிலுள்ள விருப்பம் என்ன? என்று கேட்டார். நாராயணர் மறுபடியும் வணங்கி மஹாதேவா! முக்தியின்னதென்பதையும், அதை அடையும் உபாயமும், அதைக் கொடுக்கும் தெய்வத்தையும், அந்தத் தெய்வத்தை உணர்த்தும் குருவையும் அறிந்துகொள்ள விரும்புகிறேன். அவற்றை விளக்கியருள வேண்டுமென்று வேண்டினார். சிவபெருமான், நீ கேட்டது நல்லகேள்வியே. சொல்கிறேன் கேள் என்று சொல்கிறார்.

திருமாலே! முக்தியானது பதமுக்தி யென்றும, சாயுஜ்ய முக்தி யென்றும் இரண்டு வகைப்படும். அவற்றுள் பதமுக்தி சாலோகம், சாமீபம், சாரூபம் என்று மூன்று வகைபபடும். பிரம தேவனை ஆராதிக்கிறவர்கள் பிரம சாலோகம முதலிய மூன்று பத முக்திகளையும், நாராயணனைத் தொழுபவர்கள் விஷ்ணு சாலோகம் முதலிய மூன்றையும், ருத்திரனை ஆராதிபபவர்கள் ருத்திர சாலோக முதல் மூன்றையும் அடைவார்கள். இவை முறையே ஒன்றைவிட ஒன்று மேலானது. சதாசிவ சாலோகம, முதலிய மூன்று பத முக்திகளும் உண்டு. இவை முன் கூறியவை எல்லாவற்றுக்கும மேலானது. இபபோது சொன்ன நாலுவகையான முக்திகளில் அடையும் போகமும் ஒன்றற்கொன்று அதிகமாகும். இவைகளைத் தவிர வேறு சாலோகாதி பத முக்திகளும் உண்டு. சரியை, கிரியை, யோகங்களை அனுஷ்டித்தவர்கள முறையே சாலோக சாமீப சாரூப பத முகதிகளை அடைவாாகள. அவாகள் புண்ணிய பலனாகிய போகஙகளை அனுபவித்துத தீர்ந்த பின் பூமியில் வந்து பிறபபாாகள். அதனால் அவர்களுககு ஜனன மரணங்கள் ஒழியா. சாயுஜ்ய முக்தி ஒன்றே அழியாமல நித்தியமாயுள்ளது. அதைப பெற்றவர்கள் மீண்டும் பிறகக மாட்டாாகள்.

இப்படிபபட்ட சாயுஜ்ய முகதியை மெய்ஞ்ஞானிதான் அடைவான். ஒளிவடிவமான சிவததுடன் வேறறக கலபபதே சாயுஜ்யமாகும். இதைத் தான் மோட்சம் என்று வேதாநதம் கூறுகின்றது. இதற்கு மேற்பட்ட முக்திவேறு கிடையாது. இந்த முக்தி சிவத்துக்கு வேறானதல்ல. சித்த சுத்தியுடன் சிவபிரானை ஆராதித்து வழிபட்டு, ஞானம் பிறந்து சன்மார்ககத்தில நின்று. ஆகாமியம் ஏறாமல் ஒழித்து, பிரபஞ்சஙகளை யெல்லாம் கனவைப் போலக் கண்டு கழித்துச, சிவத்தினிடம் விழித்திருபபவனே சீவன் முத்தனாவான். அவனே சிவத்தை அடைநதவனாவான். சிவத்தின் உண்மைச் சொரூபத்தை அறியாதவன் இதை உணர மாட்டான். அறிந்தவனைப் போலப் பேசுகிற அவன் வஞ்சகனே. ஆகையால் இந்த முக்தி சொரூபத்தை மௌனமாயிருநது சிந்தித்து உன் சுவானுபவத்தால் அறிநதுகொள் என்று மங்கை பங்காளன் அருளிச் செய்தான். திருமாலும் மனமகிழ்ந்து அவ்வாறே பேரின்பத்தை அடைந்தான். ஆதலால் முனிவாகளே! இதுதான் முக்தி யென்று அறியுங்கள் என்று சூதா சொன்னார்.

மூன்றாவது அத்தியாயம்.

முத்தியுபாயம் கூறியது.

மறுபடியும் நாராயணன் சிவ பெருமானுடைய சேவடிகளில் வணங்கி, முத்தியடையும் உபாயத்தைச்சொல்ல வேண்டுமென்று கேட்கச் சொல்கிறார். திருமாலே முத்தி அடைவதற்கு ஞானத்தைத் தவிர வேறு உபாயம் கிடையாது. அந்த ஞானம் வேதாந்த வாக்கிய பொருளை அறிந்து திடப்பட்ட மனதிலே தான் தோன்றும். அந்த ஞானமே நமது சொரூபமாகும். அந்த ஞானத்தால் அஞ்ஞானம் நீங்கும். அப்போது அத்துவித பாவனையுண்டாகும். அபேத பாவனை யுண்டானால் பிரபஞ்ச மெல்லாம் ஒழிந்து போகும். அதனால் இராகத்துவேஷாதிகள் விலகும். அதனால் தர்ம அதர்மங்கள் ஒழியும். அப்போது இந்திரியங்கள் தாமே யடங்கும். அடங்கினால் ஆன்ம ஞானம் உண்டாகும். ஆன்ம ஞானத்தினாலே பாசம் அகலும்; அப்போது சமுசார பந்தமும் ஒழியும். பழுதையைப் பாம்பு என்று காண்கிற மயக்கம் பழுதையை யுணரும் ஞானத்தா லொழிந்து, பழுதையும் பாம்பும் ஒன்றாகக்காணப்பட்ட அபேதஞான முண்டானது போல, பிரமத்தில் ஆரோபிதமான சமுசார பந்தம் ஆன்ம ஞானத்தால் அழிந்து பிரமமாகவே தோன்றும். பிராந்தியால் தோன்றின சமுசார மயக்கமொழிந்து உண்மையான பிரமம் தோன்றும் என்பதாம். சிவம் வேறு நான் வேறு என்று எண்ணக்கூடாது. அப்படி எண்ணுவதால் பாச மொழியாது. கருமத்தாலே அடையப்படும் முக்தி சொர்க்க வாழ்வைப் போல அழிவதானாலும், அந்தக் கருமம் ஞானத்துக்குச் சாதகமாம். அந்தக் கன்மம் ஆந்தரம், பாகியம் என்று இரண்டு வகைப்படும். ஆந்தரம் என்பது மனத்தால் செய்யப்படுவது. பாகிய கருமம் காயிகம் வாசிகம் என்று இருவகைப்படும். எமது உண்மையான சொரூபத்தை உணர்ந்து மானத கருமத்தைச் செய்கிறவன் மெய்ஞ்ஞானத்தை அடைவான். எம்மை மனதினால் தியானிக்குந் தன்மை பெற்றவனும் மெய்ஞ்ஞானத்தை அடைவான். தியானிக்கிறவன் மனக்களங்க முடையவனாயிருந்தால் சாரூப முத்தியை யடைந்து, போகங்கள் எல்லாவற்றையும் அநுபவித்துப் பின் மெய்ஞ்ஞானத்தை அடைந்து முத்தியையும் பெறுவான். உருத்திர மூர்த்தியைத் தியானித்து ஆராதிக்கிறவன் ருத்திர சாரூபத்தை அடைந்துபின் மெய்ஞ்ஞானத்தை அடைந்து

முத்தி பெறுவான். களங்க சித்த முடையவர்கள் வைகுண்டமாதி பதவிகளை யடைந்து,போகங்களை அனுபவித்துப்,பிறகு பூமியிலே வேதப் பிராமண குலத்தில் பிறந்து ஞானத்தைப் பெற்று முத்தி அடைவார்கள். திருமாலே உன்னைப பூசிக்கிறவன் உன் சாரூபத்தைப் பெற்றுப பின் எமது சாமீபத்தை அடைந்து, பிறகு ஞானம பெற்று முத்தி யடைவான். பிரமனைத தொழுகிறவர்கள் பிரமாவின் சாரூபத்தைப் பெற்றுப் பின், பின் உனது சாமீபத்தையும், அதன பின் எமது சாலோக பதவியையும பெற்று வெகு நாள் கழிந்தபின் ஞானம்பெற்று முதது யடைவார்கள். அவர்கள் களங்க நெஞ்ச முடையவர்களானால் பிரம லோகத்திலுள்ள போகங்களை அனுபவித்துப், பூலோகத்தில் உயர்நத குலத்தில் ஜனித்து, அநதப பிரமனையே பததி செய்து அவனது சாலோகாதி பதவிகளை முறையே பெற்று, பின் மேலான பதவிகளைப பெறுவார்கள். எநதத் தெய்வத்தை வணங்கினாலும் அந்தத் தெய்வத்தின் சாலோகாதி பதவிகளை முறையே பெறுவார்கள். பிறகு நற் கருமங்களைச் செய்து ஞானம் பெற்று மோட்சத்தை அடைவார்கள். ஒரு சொரூபத்தில் நமமைப பாவனை செய்து பூசிக்கிறவன் அவனுடைய மனத் தூய்மைக்குத் தககபடி நமது சாலோகாதிகளை முறையாகப் பெற்றுப் பின, ஞானத்தை அடைந்து முக்தி பெறுவான். பாகிய கருமம செய்கிறவன் வெகு காலத்துக்குப் பின் முத்தி யடைவான். மானதகருமத்தால் சீக்கிரததில் முததி யடைவான். மனத க்ருமததாலே நாம மிகவும் மகிழ்ச்சி யடைவோம். தினந்தோறும பிரணவமந்திரத்தைப பன்னீராயிரம் தரம ஜபித்தாலும், பிரணவத்தோடு பஞசாட்சரததைப் பன்னீராயிரம் ஜபித்தாலும், சதருத்திரீயத்தைத் தினந்தோறும ஜபிததாலும், அவர்கள் மரணாநதத்தில் நமது திருவடியை அடைவார்கள். முத்தி யடைவதற்கு வேறொரு வழியும உண்டு. அதாவது காசி முதலான முத்தி க்ஷேத்திரங்களில் வசித்து, மரித்தவர்கள் முத்தி அடைவதில் சந்தேக மில்லை.

முன் ஒருகற்பத்தில் சூத்திர வருணத்திற் பிறந்தவன் ஒருவன் இருந்தான். அவன்பாவமே வடிவங் கொண்டுவந்தது போன்றவன். சிறிதாவது புண்ணியம் செய்து அறியான். மஹா கொடியவன். அவன் பெயர் கோலாகலன். காமுகன்; இரவும் பகலும் காம இன்பம் நுகர்வதையே தொழிலாக உடையவன். பாவத்

துக் கஞ்சலதில்லை. வரம்பு கடந்து பல சாதி மாதரையும் கூடு வான். அநேகரைப் பலவந்தமாய்க் கற்பழிப்பான். அநேகரைத் தன் வசமாக்கிக் கலந்தான் அவனை எல்லாரும் வெறுத்தார்கள். உறன் முறையாரும் கசந்தார்கள். ஒரு நாள் எங்கும் அலைந்து பார்த்தும் ஒரு பெண்ணும் அகப்படவில்லை. வீட்டுக்குத் திரும்பி வந்து அதே கவலையாய் நித்திரையில்லாமல் மிகுந்த துன்பட்டுக் கொண்டிருந்தான். பின் எழுந்திருந்து தன் மாதா படுத்திருந்த இடத்துக்குப் போனான். அப்போது அவனுடைய பிதாவும் அங் கில்லை. ஆகையால் வெகுசந்தோஷத்துடன் தாயாரைக் கலந்தான்; அவளும் உடன் பட்டாள். இந்த இரகசியத்தைத் தன் கணவன் அறியாதபடி பல நாள் மறைத்து வைத்திருந்தாள். கோலாகலன் தன் பிதா அறிந்தால் இரகசியம் வெளிப்படும் என்று கருதிச சமையம் பார்த்திருந்து ஒரு நாள் பிதாவையும் கொன்று விட் டான். பிறகு இவ்வூரில் இருந்தால் ஆபத்து வருமென்று எண்ணி மாதாவை அழைத்துக் கொண்டு மறுதேசம் போனான். வேதா ரணியம் என்னும் க்ஷேத்திரத்தை அடைந்து அங்கே வாசம் பண் ணிக் கொண்டிருந்தான். சில நாட்கள் சென்றபின் கோலாகலன் மரித்தான். அவன் சிவ க்ஷேத்திரத்தில் வசித்த படியால் சகல பாவமும்நீங்கிச் சிவலோகத்தை அடைந்தான். ஆதலால் சிவதலத் தில் வசிப்பதும் முத்தி யடைய ஒரு சிறந்த உபாயமாம் என்று சிவ பெருமான்கூறத், திருமால் மகிழ்ந்து பரமசிவனைப் பலவாறு துதித்து வணங்கி, அந்த வேதாரணியத்தின்மகிமையை விளங்கச் சொல்ல வேண்டுமென்று கேட்கச் சந்திரசேகரன் சொல்கிறார்.

திருவாரூருக்குத் தென் திசையில் சமுத்திர தீரத்தில் வே- தாரணியம் என்னும் க்ஷேத்திரம் இருக்கின்றது. அந்த ஸ்தலத் தில் யாம் உமாதேவியோடு எப்போதும மகிழ்ந்து வசிக்கின்றோம். ஒரு காலத்தில் பிரளயம உண்டாயிற்று. அப்போது சகல லோகங் களும் அழிந்து போயின. வேதங்களெல்லாம் எம்மிடம் வந்து எமது சரீரத்தில் சேர்ந்து வசித்தன. மறுபடி சிருஷ்டியாகும் போது நமது சரீரத்தில் இருந்து அந்த வேதங்கள் பிறந்தன. அவைகள் ஒரு தீர்த்தம் உண்டாக்கின. அதன் பெயர் வேத தீர்த்தமென்று பெயர். அந்தத்தீர்த்தம் ஒரு யோசனை அகல முடம், இரண்டுயோசனை நீளமும் உள்ளது; அந்தத்தீர்த்தத்தில், ஞாயிறுக்கிழமை, பருவதினத்தில் ஸ்நானம் செய்து வேதங்கள்

எம்மைப் பூசித்தன, சுப்பிரமணியர் அந்தத்தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து எமமைப பூசித்துத் தாரகாசுரனைச் சங்கரித்து உலகத்திற்கு க்ஷேமத்தை உண்டாக்கினர். அந்தத் தலத்தில் நாரத முனிவர் பூசித்து ஞானசித்திபெற்றார். யாக்கியவல்கியர் பருவ காலத்தில் அதில் ஸ்நானம்செய்து எம்மைப்பூசித்து யோக சித்தி பெற்றார், கார்க்கியர், மயித்திரேயர் இவர்கள் பூசித்து யாக்கிய வல்கியரிடம யோகத்தைப பெற்றார்கள். சுவேதகேது பூசித்து ஞானம்பெற்றான் வருணன் பூசித்து ஞானத்தை அடைந்தான். அவனுடைய புத்திரனும் பூசித்து ஞானமபெற்றான். திரிசங்கு முதலாக அநேகரும பூசித்து ஞானம பெற்றார்கள். இவையெல்லாம் வேத தீர்த்தத்தின் மகிமையேயாம். பருவம், திருவாதிரை நட்சத்திரம், ஞாயிற்றுக்கிழமை வியதிபாதம், உத்தராயண தட்சணாயன காலம், சூரியசந்திர கிரகணநாள் இவைகளில் அந்தத்தீர்த்தத்தில் விதிபபடி ஸ்நானஞ்செய்து, எம்மைப்பூசித்து நமது பக்தர்களையும் வணங்கி, அவர்களுககுத் தானம்கொடுத்து உபவாசமிருந்தவர்கள் பிரமஹத்தி முதலிய மஹா பாதகங்களினின்றும் விடுபடுவார்கள். அநதத் தீர்த்தக்கரையில் பூதானஞ் செய்தபேர்கள் உருத்திரலோகத்தை அடைவார்கள். தானிய தானம் செய்தவர்கள் நோயிலலா வாழ்வடைவார்கள். எள்ளைத் தானம் செய்தவர்கள் சகல பாவங்களினின்றும் விடுபடுவார்கள். கன்னிகாதானம செய்தவர்கள் உமாதேவியின் சாமீப முத்தி பெறுவார்கள். வஸ்திரதானம முதலியன செய்தவர்கள் சொர்க்கலோகத்தில் இநதிரனைப்போல வாழ்வு பெறுவார்கள். அநத வேதாரண்யத்தில் வசித்துத் தேகத்தைவிட்டவர்கள் எவ ரானாலும் முத்தி அடைவார்கள். இதில் சமுசயமில்லை என்று சிவபெருமான் திருமாலுக்கு உபதேசித்தார். இதுவே முத்தியுபாயமாம்.

நான்காவது அத்தியாயம்.

மோசகனையுரைத்தல்.

திருமால் மீண்டும சிவபெருமானை வணங்கி மோசகனை விளக்கியருள வேண்டுமென்று கேட்கச் சொல்லுகிறார். திருமாலே.! முன் ஒருகாலத்தில் சுரஸ்வதிதேவி நெடிய தவஞ்செய்து இதைக் குறித்து எம்மைக் கேட்டாள். அவளுக்குச் சொன்னபடி உனக்